1100
09·01·08

வெளியீடு : 16-8-2007 Issued : 16-8-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 3, 2007—தொகுதி 24—எண் 2

Tuesday the 3rd April 2007 —Volume 24—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

227483

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
2 9
சென்னை-600 008
எழும்பூர்

# 3-4-2007

## உள்ளடக்கம்

பக்கங்கள்

**1. தகவல் கோரல்—**

(அ) வேலூர் மாவட்டம், மோர்தானா அணை— பாசனத்திற்காகத் திறத்தல் — 229-231

(ஆ) ஊரக மின்மயமாக்கல் நிறுவனத்துடன் மின்வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது தொடர்பாக — 232-234

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 234-236

**2. விதி 110-ன்கீழ் அறிக்கை—**

பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத் தேர்வைப் புதிய வினாத் தாளுடன் 11-4-2007 அன்று நடத்துதல் – மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை — 231-232

**3. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 11 — எரிசக்தித் துறை
(ஆ) கோரிக்கை எண் 35 — பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை — 236-267

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 236-259, 261-263, 265

பக்கங்கள்

3. **மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 5 — வேளாண்மைத் துறை — 267-388

*மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் — 267,294-295,346-386

*திரு. த. பாண்டுரங்கன் — 269,295-301, 303-304

*திரு. பி.என். பெரியண்ணன் — 303,305-310

*திரு. மா. ராஜசேகரன் — 268,310-317

*திரு. பா. செந்தமிழ்ச் செல்வன் — 289,317-324

திரு. வே. மாரிமுத்து — 277,325-328, 329-332

திரு. சு. குணசேகரன் — 270-332-340

*திரு. ஆர். ஞானதாஸ் — 290,340-346

4. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 388


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 20, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 3, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த் தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### (அ) வேலூர் மாவட்டம், மோர்தானா அணை – பாசனத்திற்காகத் திறத்தல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள். சொல்லுங்கள், திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டத்தில், மோர்தானா அணை திறக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே, விவசாயிகள் இப்போது நீரின்றி மிகவும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக மோர்தானா அணையைத் திறப்பதற்கு ஆணையிடுவாரா?

வேளாண்மைத் துறையிலே விவாதம் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், விவசாயிகளுடைய வயிற்றில் பால் வார்ப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திரு. பாண்டுரங்கன், நான் சொல்லிவிடுகிறேன். மோர்தானா அணையைத் திறக்க வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் திரு சி. ஞானசேகரன் அவர்கள் இப்பொழுது கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, அதைத் திறக்க, நாளைக்கு என்னுடைய மானியக் கோரிக்கையின்போது ஓர் உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்று அவருடைய கட்சிக்காரர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். மோர்தானா அணையை என்று திறப்பது என்று இதுவரையிலே எந்தவிதமான rules-ம் போடப்படவில்லை. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், வழக்கமாக டிசம்பர் 16 ஆம் தேதிதான் திறப்பார்கள்; ஆனால், இந்த ஆண்டு திறக்கவில்லை என்றார்கள்.

Rules ஒன்றும் கிடையாது; 16 ஆம் தேதி என்கிறார்கள். ஆனால், எப்படி அன்று திறந்திருக்கிறார்கள் என்றால், 2001-லேதான் திறந்தார்கள். திறக்கிறபோது, 18-1-2001-லேதான் திறந்தார்கள். வழக்கமாக டிசம்பரில் அல்ல. 2002-லே திறக்கவேயில்லை. 2003-ல், 10-2-2003-ல் திறந்தார்கள். 2005-ல் மட்டும்தான் 16-12-2005-ல் திறந்து இருக்கிறார்கள். ஆகையினாலே, எப்போது திறப்பது என்பதல்ல; எப்போது மக்களுக்குத் தேவையோ, அப்போது திறப்பதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆகையினாலே, நியாயமாக அந்தத் தொகுதியில் மோர்தானா அணையைப் பயன்படுத்துகிற கோரிக்கையை நான் எழுப்பவேண்டும்; குடியாத்தம் எம்.எல்.ஏ. எழுப்பவேண்டும்; மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன் அவர்கள் எழுப்ப வேண்டும்; ஆனால், பொதுமக்களிடமிருந்து யாரும் கேட்கவில்லை. உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள் என்ற செய்தி நேற்று வந்த பிறகுதான், நானே கலெக்டரைக் கூப்பிட்டு [illegible] யாவது இருந்து ஏதாவது representation [illegible] என்று. இருந்தாலும், இப்போது [illegible] நண்பர் கொடுத்த [illegible]

227653
[illegible]





போனமுறை அவர் சொன்னார்; நான் திறக்கிற அன்று, துரைமுருகன் உட்கார்ந்து -"காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல" என்று சொல்லி — திறந்துவிட்டுப் போனார். நான் நினைத்துக் கொண்டிருந்தேன், ஒரு எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் திறந்தார் என்று. ஆனால், இன்றைக்கு நான் தெரிவிக்கிறேன்; அவர்கள் காட்டாத பெருந்தன்மையை நான் காட்டுகிறேன். உங்களுக்காக அல்ல; விவசாயிகளுக்காக. எனவே, அந்த முறையில், இன்று மாலை 5 மணிக்கு மோர்தானா அணை திறக்கப்படும் என்ற செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

D
V211,31 P07
P07-24.2

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத் தேர்வைப் புதிய வினாத் தாளுடன் 11-4-2007 அன்று நடத்துதல் - மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். (குறுக்கீடுகள்) விதி 110 Sir, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அப்புறம் எடுக்கலாம். உட்காருங்கள். முடிக்கட்டும். அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) தேனி மாவட்டத்தில், அல்லி நகரம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள அனைவருக்கும் கல்வி இயக்க வட்டார வள மைய அலுவலக அறை, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத்தாட்கள் கட்டுக் காப்பகமாக செயல்பட்டு வந்தது. இந்த அறையின் பின்புறத்தில் ஜன்னல் கம்பிகள் உடைக்கப்பட்டு இருந்ததாக, மேல்நிலைப் பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் மையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த தேனி முதன்மைக் கல்வி அலுவலருக்கு ... (குறுக்கீடு)

[2007 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வாசித்துக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** 2-4-2007 அன்று மாலை 6.00 மணியளவில் தொலைபேசி செய்தி பெறப்பட்டது. உடனே முதன்மைக் கல்வி அலுவலர், வினாத்தாட்கள் கட்டுக் காப்பாளர்கள் இருவருடன் வினாத்தாள் கட்டுக் காப்பக அறையைத் திறந்து, பத்தாம் வகுப்பு வினாத்தாட்கள் வைக்கப்பட்டுள்ள பீரோவைத் திறந்து பார்த்தபோது, கடைசித் தேர்வான பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தின் இரண்டு வினாத்தாள் கட்டுகள் வெளிக்கவர் மற்றும் உட்கவர் பிரிக்கப்பட்டிருந்தது. பிரிக்கப்பட்ட கட்டுகளில் இருந்த வினாத்தாட்களை எண்ணிப் பார்த்தபோது, ஒவ்வொரு கட்டிலும் ஒரு வினாத்தாள் குறைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, 5-4-2007 அன்று நடைபெறவிருந்த பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தின் வினாத்தாள் வெளியாகி இருக்க வாய்ப்புள்ளதால், அப்பாடத்திற்குப் புதிய வினாத்தாட்கள் அச்சிட்டு, 11-4-2007 புதன்கிழமை அன்று, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உட்பட, 2,634 தேர்வு மையங்களிலும், சமூக அறிவியல் பாடத்திற்கான தேர்வு நடத்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்நிகழ்வு குறித்து, தேனி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலம், காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வினாத்தாட்கள் கட்டுக் காப்பாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர்மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 9-35

## 1. தகவல் கோரல் – தொடர்ச்சி

### (ஆ) ஊரக மின்மயமாக்கல் நிறுவனத்துடன், மின்வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது தொடர்பாக

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள். உட்காருங்கள், வேல்முருகன். (குறுக்கீடு)

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டினுடைய நிதிநிலை அறிக்கை தொடங்கப்பெற்று, ஒரு வாரம் முடிந்து இரண்டாவது வாரத்தில் நாம் சென்று கொண்டிருக்கின்றோம். ஆனால், இதுவரை எதிர்க்கட்சிகளின் சார்பில் கொடுத்த எந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானமோ, ஒத்திவைப்புத்



2007 ஏப்ரல் 3] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தீர்மானமோ எடுத்துக்கொள்ளப்படவில்லை. தினமும், இரண்டு அல்லது மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படுவது வழக்கம். பட்ஜெட் விவாதத்தின்போது தேவையில்லை என்று சொன்னீர்கள்; நாங்களும் ஒத்துக்கொண்டோம். ஆனால், இன்று மறுபடியும் இரண்டாம் வாரம் ஓடிக்கொண்டிருக்கின்றது. இதுவரை எந்த ஒத்திவைப்புத் தீர்மானமோ, கவன ஈர்ப்புத் தீர்மானமோ, எடுத்துக்கொள்ளப்படவில்லை. மேலும், நேற்று, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், ஊரக மின்மயமாக்கல் நிறுவனத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும், 16,000 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அந்த ஒப்பந்தம் இருக்கும் என்றும் செய்தித்தாளில் நாங்கள் பார்க்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தது. இப்பொழுது, சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. முக்கியமான இந்த ஒப்பந்தம் குறித்து, சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, சட்டமன்றத்தில் தெரிவிக்காமல் அதைச் செய்தித்தாட்கள் வழியாக அறிவிப்பது, நல்ல நடைமுறைதானா, மரபோடு ஒட்டிய செயல்தானா, அது அவையை அவமதிக்கிற செயலாக இருக்குமா, இருக்காதா என்பதனைச் சட்டப் பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், சட்டமன்றம் நடக்கின்றபோது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்பற்றி சில கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். நேற்றையதினம் நடந்த அந்த நிகழ்வு, அரசாங்கத்தினுடைய தினசரி நடவடிக்கைகள், தொடர் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்வு. நம்முடைய மாண்புமிகு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சரி, நான் பேசி முடித்ததும் பேசலாமே? நான் பேசி முடித்தவுடன் பேசலாமே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதைச் சொல்ல வேண்டும் என்றாலும். . .

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** எனக்கு right இருக்கிறது. நான் சொல்வதற்கு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) சின்னசாமி, சும்மா துள்ளாதீர்கள், உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். "Rural Electrification Corporation, 16,000 கோடி ரூபாய் அளவில் மின் வாரியத்திற்கு ஒரு MoU போட்டிருக்கிறார்களே, சட்டமன்றம் நடக்கும்போது இப்படி ஒரு MoU போடுவது, எங்களுக்குத் தெரிவிக்காமல் செய்வது நியாயமா?" என்று ஒரு கேள்வி கேட்டார்கள். சில உண்மைகளை இந்த அவைக்கு நான் சொல்கிறேன். 16,000 கோடி ரூபாயை, இந்தியாவிலேயே, தமிழகத்திற்குத்தான் Rural Electrification Corporation-க்குக் கொடுப்பது என்று முடிவு செய்து, கடந்த மாதமே MoU செய்வதாக அவர்கள் தெரிவித்திருந்தார்கள். ஆனால், திடீரென்று அதனுடைய தலைவர் வெளிநாட்டிற்குச் சென்றுவிட்ட காரணத்தினால், அப்பொழுது அந்த ஒப்பந்தம் செய்ய முடியவில்லை. அவர் இரண்டு தினங்களுக்கு முன்னாலே, டெல்லியிலிருந்து தொடர்புகொண்டு, "இரண்டாம் தேதி நான் சென்னைக்கு வருகிறேன்; அப்பொழுது அந்த ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு முதலமைச்சருக்கு வாய்ப்புக் கிடைக்குமா?" என்று கேட்டபோது, நாங்கள் முதலமைச்சரைக் கலந்து பேசி, இரண்டாம் தேதி காலையிலே 9 மணிக்கெல்லாம் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்று தெரிவித்ததன் பேரிலேதான் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதே தவிர, இந்த அவைக்குத் தகவல் தெரிவிக்கக் கூடாது என்றோ, மறைக்க வேண்டும் என்றோ இந்த அரசுக்கு எந்தவிதமான நோக்கமும் இல்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## (இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கடந்த வாரம், சேத்னா என்கிற பொறியியல் கல்லூரி மாணவி,



தன்னுடைய அறையில் மர்மமான முறையில், இறந்துகிடந்ததையொட்டி. அங்கு படிக்கிற மருத்துவம். . .

முற்பகல் 9-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், இதுசம்பந்தமாக நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடு) Reply கேட்டிருக்கிறோம். Reply வந்ததற்குப் பிறகுதான் எடுக்கப்படும். (குறுக்கீடு) Reply வராமல் எடுப்பது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கோவிந்தசாமி, என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

***திரு. சி. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் தங்களிடத்தில் தமிழகத்தினுடைய சில முக்கியமான பிரச்சினைகள்குறித்து, கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கொடுத்திருந்தேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையில் விவாதிக்கப்பட்ட அந்த மானியக் கோரிக்கையில், அளவு கடந்து எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் நேரம் எடுத்துக்கொண்ட காரணத்தால். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன் (குறுக்கீடுகள்) குறிப்பிட்ட நேரத்தைவிட நீங்கள் அதிகமாக நேரம் எடுத்திருந்தீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மானியத்தை நேற்றையதினம் முடிக்க முடியாத அளவுக்கு விவாதம் நீடித்துவிட்ட காரணத்தால், அமைச்சர் பதில் சொல்லுவதற்காக இன்றையதினம் உள்ள கேள்வி நேரத்தையே கைவிட்டு, நீக்கி, அந்த நேரத்தை பதில் சொல்வதற்குப் பயன்படுத்துவது என்று நேற்றையதினம் தீர்மானிக்கப்பட்டது. அதற்காக நான் தீர்மானமும் கொண்டுவந்து நிறைவேறி இருக்கிறது. ஓர் அமைச்சர் நேற்றையதினம் நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் சொல்ல வேண்டும் என்றால், இடையில் வேறு எந்தப் பிரச்சினையும் எழுப்ப முடியாது. ஆகவே, தயவுசெய்து இன்றைக்குப் புது நாள் என்ற முறையில், இன்றைக்குக் காலையில் தொடங்குவது என்ற முறையில், அவரவர்களுடைய பிரச்சினைகளை எழுப்பாமல், அமைச்சர் பதில்

சொல்வதற்கு முதலில் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேள்வி நேரம் இரத்து என்று சொன்னாலே, வேறு எந்தப் பிரச்சினையும் எழுப்பக்கூடாது; எழுப்புவது முறையல்ல.

## 3. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை

### (ஆ) கோரிக்கை எண் 35 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 2-4-2007 ஆம் நாளன்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள். மானியக் கோரிக்கை எண் 14 எரிசக்தித் துறை மற்றும் 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தமிழ்நாடு மின்சார வாரியம், எரிசக்தித் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகிய மானியங்களின்மீது விவாதம் நடந்ததற்கும், பதிலுரை அளிப்பதற்கும் எனக்கு வாய்ப்புத் தந்த தமிழினத் தலைவரும், தமிழக முதல்வருமான... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மானியங்களுக்கும் சேர்த்து பதில் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய பதிலுரையை நான் அளிக்க இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்று இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. விசுவநாதன் அவர்கள், ஒரு கருத்தைச் சொன்னார்கள். அம்மா அவர்கள் ஆட்சியிலே இருக்கும்போதுதான், தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்கு, 20 மணி நேரம் மின்சாரம் வழங்கப்பட்டதாகவும்,



ஆனால் இப்போது, பகலிலே 5 மணி நேரம், 6 மணி நேரம்தான் கொடுக்கப்படுகிறது என்றும், ஆகவே, விவசாயிகள் எல்லாம், தமிழகத்திலே கொந்தளித்து இருக்கிறார்கள் என்றும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் மின்சார வாரியத்தோடு கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்புடையவன் என்ற அடிப்படையிலே, எனக்கேகூட ஆச்சரியமாக இருந்தது. எப்போது அப்படி ஓர் உத்தரவு பிறப்பித்தார்கள் என்று எண்ணிப் பார்த்தேன்.

அம்மா ஆட்சியிலே அப்படி ஓர் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. ஆனால், இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள், 1989 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோதுதான், காவிரி டெல்டா பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, காவிரி நீர் முறையாகக் கிடைக்காமல் போனால், குறைந்தபட்சம் அவர்கள் பம்பு செட்டுகள் மூலமாவது விவசாயம் செய்யவேண்டும் என்று எண்ணி, 20 மணி நேரம் மின்சாரம் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் கொடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுப் பணித் துறையில் 16-6-1989 ஆம் நாள் அன்று அரசு ஆணை எண் 1192-ன்படி, அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, ஏதோ 20 மணி நேரம் மின்சாரம் வழங்க ஆணை பிறப்பித்ததாகச் சொன்னார். அப்படி ஓர் ஆணையைக் காட்டுவாரேயானால், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், நான் 2000 ஆம் ஆண்டு மின் துறை அமைச்சராக இருந்தபோது விவசாயிகளுக்கு மின்சாரம் எப்படி வழங்குவது என்று ஓர் ஆணை எரிசக்தித் துறையின் அரசாணை (நிலை) எண் 110, நாள் 10-7-2000 அன்று பிறப்பிக்கப்பட்டது. அதன்படி, பகல் நேரத்திலே 6 மணி நேரமும், இரவு நேரத்திலே 8 மணி நேரமும், ஆக 14 மணி நேரம் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவது என முடிவு செய்து, அதன்படிதான் அப்போதும் வழங்கப்பட்டது; கடந்த காலத்திலும் வழங்கப்பட்டது; இப்போதும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, 20 மணி நேரம் தமிழ்நாட்டிலே உள்ள எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டதாகச் சொல்வது தவறு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அடுத்து, (குறுக்கீடு) கடைசியில் கேளுங்கள் சொல்கிறேன். (குறுக்கீடு) கடைசியில் கேளுங்கள், நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது கேட்கவேண்டும் என்று சொன்னால், கடைசியில் அவர் reply முடித்த பிறகு கேளுங்கள்.

பிற்பகல் 9-15

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அடுத்து, மின்சார வாரியத்தினுடைய நலன் கருதி, ஒரிசா மாநிலத்திலேயுள்ள நிலக்கரி சுரங்கத்திலிருந்து நிலக்கரியை இங்கே கொண்டுவர வேண்டும். 'நாங்கள் அப்போது ஆட்சியிலேயிருந்தபோது முயற்சித்தோம்; ஆனால், மத்திய அரசு அதைப்பற்றிக் கவலைப்படாமல் தமிழகத்தை வஞ்சித்துவிட்டது' என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த அரசு, கலைஞருடைய அரசு, மத்திய அரசாங்கத்தைக் கேட்டது. அரசுகள் கேட்கின்ற அணுகுமுறையைப் பொறுத்ததே, மத்திய அரசு கொடுப்பதும் கொடுக்காததும். அது அதனுடைய விருப்பம் என்று சொல்ல மாட்டேன்; நம்முடைய அணுகுமுறையைப் பொறுத்தது (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் கேட்டவுடனே, இப்போது இருக்கின்ற அரசு அதை ஏற்றுக்கொண்டு, ஒரிசா மாநிலத்திலே இருக்கக்கூடிய 12 சுரங்கங்களில் 3 சுரங்கங்களைக் குறிப்பிட்டு எந்தச் சுரங்கம் உங்களுக்குத் தேவை என்று கடிதம் எழுதியிருக்கிறது. 6-2-2007 அன்று, நான் 3 சுரங்கங்களைக் குறிப்பிட்டு, அவற்றிலே ஏதாவது ஒரு சுரங்கம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். இந்த ஆண்டு நிச்சயமாக அந்தச் சுரங்கத்தைக் கொடுப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சூரியகுமார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அவர்களுடைய நாட்றாம்பள்ளி தொகுதியிலே தகரகுப்பம், ஜோதி நகர், நாராயணபுரம் ஆகிய இந்தக் கிராமங்கள் எல்லாம் ஆந்திர மின்சாரத்தைப் பெற்று வந்ததாகவும், அதைக் கண்டுபிடித்த ஆந்திர அரசாங்கம் உடனடியாக அதைத் துண்டித்துவிட்டதாகவும், ஆகவே, தமிழக அரசு அக்கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தச் செய்தி வந்தவுடனேயே மின் வாரிய அதிகாரிகளுக்கு உடனடியாக ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கச் சொன்னோம். சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கினார்கள். ஆனால், காட்டு இலாகாவிற்குச் சொந்தமான மூன்று கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க முடியவில்லை. மத்திய அரசாங்கத்தினுடைய வன இலாகா அமைச்சரிடத்திலே அனுமதி கேட்டு, விரைவிலே அந்தப் பகுதிக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்கள் பேசுகின்ற நேரத்தில், "கலைஞர் ஆட்சி இருக்கும்போது, தனி நேர்வாகக் கொண்டு,



டெல்டாப் பகுதிகளுக்கு 10,000 பம்பு செட்டுகள் வழங்கப்பட்டன; அரியலூர் பகுதிக்கு 1,500 பம்பு செட்டுகள் ஒதுக்குவார்கள் என்று எதிர்பார்த்து, விவசாயிகள் எல்லாம் மின் மோட்டார்களை வாங்கி வைத்துள்ளார்கள்; ஆனால் இன்னும் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறார்கள்; அதை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். ஏற்கெனவே, நாம் விவசாயிகளுக்காக, ஆண்டு ஒன்றுக்கு 10,000 பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். கடந்த ஆண்டு நம்முடைய மத்திய நிதியமைச்சர் கேட்டுக்கொண்டதற்காக, 500 மின் இணைப்புகள் கூடுதலாகத் தந்து, இந்த ஆண்டு 10,500 மின் இணைப்புகள் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்களுடைய வேண்டுகோளையும் முதலமைச்சரிடத்திலே விவாதித்து 500 பம்பு செட்டுகள் கூடுதலாக இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்து, அரியலூர் பகுதிக்கு அந்த இணைப்புகள் தருவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஜாண் ஜோசப் அவர்கள் இங்கே உரையாற்றுகின்ற நேரத்தில், ஒப்பந்தத் தொழிலாளர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டும்; ஏறக்குறைய 20,600 பேர் மின்சார வாரியத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றி இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஒரு இலட்சம் விவசாயப் பம்பு செட்டுகளுக்கு ஆண்டுதோறும் மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்றால், மின்சார வாரியத்திற்கு 71,000 ரூபாய் செலவாகிறது. எனவே, இப்படி ஒரு இலட்சம் மின் இணைப்பு கொடுப்பது என்று சொன்னால், 710 கோடி ரூபாய் கிட்டத்தட்ட செலவாகும். இதையும் பரிசீலனை செய்து, ஆண்டு ஒன்றுக்கு 10,000 பம்பு செட்டுகள்தான் கொடுக்க முடியும் என்று ஏற்கெனவே முடிவு செய்திருக்கின்றோம்; நிதிநிலை சீராகுமானால், இன்னும் 10,000 பம்பு செட்டுகளுக்குக் கூடுதலாகக் கொடுக்க முடியுமா என்பதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அவைக்கு வந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவுறுகின்ற காரணத்தினாலே,

பொன்விழா கொண்டாட நாம் இருக்கின்றோம் என்பதைப் பல உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். நம்முடைய முதலமைச்சர் இந்த அவைக்கு வந்து, ஐம்பதாண்டுகள் நிறைவுற்றதையொட்டி பொன்விழா கொண்டாட இருக்கின்றோம். அதைப்போலவே, மின்சார இலாகா 1957 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி, பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது தொடங்கப்பட்டு, அன்றிலிருந்து இப்போது 50 ஆண்டுக் காலம் நிறைவுபெறுகிறது. ஆக, இந்த அவை, நம்முடைய முதல்வருக்குப் பொன்விழா எடுக்கிறது; நம்முடைய முதல்வர் மின்சார இலாகாவிற்குப் பொன்விழா எடுக்க இருக்கிறார் என்ற மகிழ்ச்சியான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 9-50

மின்சார வாரியத்தினுடைய வரவு-செலவு எவ்வளவு என்று பார்த்தால், பொதுவாக இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, விவசாயிகளுக்கு மின் இணைப்பு இலவசம்; அதைப்போல குடிசைகளுக்கு இலவசம்; இப்போது கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்; மற்றும் இப்போது புதிதாக நிலம் இல்லாத விவசாயிகளுக்கு நிலம் வழங்குகிறோமே, அதற்கு இலவச மின்சாரம்; அதுமட்டுமல்ல, ஏழைக் குடிசைவாசிகள், புதிதாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கினால், அதற்கும் இலவச மின்சாரம் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இப்படி இலவச மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், நமக்குச் செலவு அதிகமாகிறது. இருந்தாலும்கூட, இந்த இலாகாவினுடைய வரவு ரூ.18,165 கோடியே 90 இலட்சமாகவும், செலவு ரூ.21,279.22 கோடியாகவும், பற்றாக்குறை ரூ.3,113.32 கோடியாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்கூட, முதலமைச்சர் அவர்கள், எந்தெந்தப் பிரிவினருக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று நினைத்தார்களோ, அதை அவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்; இந்த ஆட்சி இருக்கின்ற வரையில் மட்டுமல்ல, கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்த இலவச மின்சாரத்தை எந்த ஆட்சியாலும் எதிர்காலத்திலே இரத்து செய்ய முடியாது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கலைஞர் எதைத் தொடங்குகிறாரோ, அதைத்தான் இந்தியா பின்பற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி)



இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தால்கூட நீங்கள் தெரிந்துகொண்டிருக்க முடியும். U.P. தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலின்போது, முதலமைச்சராக இருக்கக்கூடிய திரு. முலாயம் சிங் அவர்கள், ஒரு வாக்குறுதி தந்திருக்கிறார்கள். மறுபடியும் ஆட்சிக்கு வந்தால், நாங்கள் U.P.-யிலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தருவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆக, அவர்கள் அப்படி அறிவித்திருக்கிறார்கள்; பி.ஜே.பி.-யைச் சேர்ந்தவர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பெண்களுக்கு 20 சதவீத இட ஒதுக்கீடு செய்து தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கலைஞர் எதையெதை ஏற்கெனவே அறிவித்து அமல்படுத்தப்பட்டிருக்கிறதோ, அதை இன்றையதினம் இந்தியாவிலுள்ள சில அரசியல் கட்சிகள் (மேசையைத் தட்டும் ஒலி) பின்பற்ற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சுமாரக மின்மயமாக்கல் திட்டத்தின்மூலமாகத்தான், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, இன்றையதினம் 16,000 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொகையை வைத்துக்கொண்டு, ஆளுநர் உரையிலே தெரிவித்ததைப்போல, வட சென்னையிலே இருக்கக்கூடிய அனல் மின்நிலையத்தில் 500 மெகா வாட் மின்சார உற்பத்திக்கும், எண்ணூர் அனல் மின்நிலையத்தில் 500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும், அதைப்போல தூத்துக்குடி மற்றும் மேட்டூரிலும் 500 மெகாவாட் உற்பத்திக்கும், மற்றும் 500 மெகா வாட் அளவிற்கு குந்தா பகுதியிலே இருக்கக்கூடிய நீரேற்று மின்சாரத் திட்டத்தை அமல்படுத்துவதற்கும் அந்தப் பணத்தை பயன்படுத்தப் போகிறோம்.

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டிலே எப்போதும் மின்சாரம், தரமான மின்சாரமாக இருக்க வேண்டுமென்பதற்காக, 325 இடங்களிலே புதிதாக sub-station கட்டுவதற்கும், அந்தப் பணத்தைப் பயன்படுத்த இருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய மின் இணைப்புகளைப் பொறுத்தவரையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே ஆட்சியிலே இருந்தபோது, வீடுகளுக்கு 24 மணி நேரத்திற்குள் மின்சார இணைப்புகள் கொடுக்க வேண்டும்; காலதாமதம் செய்யக் கூடாது என்று சொன்னார்கள். 2000-2001-லே அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினோம்.

கோயம்புத்தூரிலே நான் முதன்முதலிலே அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டது. ஒரே ஆண்டிலே, ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு, வீடு கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கு இணைப்புக் கொடுக்க முடிந்தது. ஆனால், கடந்தகால ஆட்சியிலே, அந்தத் திட்டம் அமல்படுத்தப்படவில்லை. மீண்டும் தலைவர் அவர்கள், ஏன் அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள் என்று கேட்டு, அது தொடர வேண்டும் என்று சொன்னார். ஏனென்றால், பலர் வீடுகளைக் கட்டிவிட்டு, உடனடியாக மின் இணைப்புப் பெறாமல் கஷ்டப்படுகிறார்கள் என்ற நிலைமையை எண்ணிப் பார்த்து, இந்த 1 ஆம் தேதி முதற்கொண்டு மின்சார வாரியம், புதிதாக வீடு கட்டியவர்கள், தங்களுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால், அதற்குரிய எல்லாவிதமான சான்றிதழ்களையும் கொடுத்தால், 24 மணி நேரத்திற்குள்ளாக மின்சாரம் வழங்க வேண்டுமென்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆணையையும் பிறப்பித்திருக்கின்றோம்.

அதைப்போல தொழில்கள் ஆரம்பிக்கிறவர்களுக்கு 5 horse powers-க்குக்கூடி இருந்தால், ஒரு வார காலத்திற்குள்ளாகவும், சிறு தொழில்கள், பெருந்தொழில்களாக இருந்தால், ஒரு மாத காலத்திற்குள்ளாகவும் மின் இணைப்புக் கொடுத்தே தீர வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 9-55

13-3-2007 அன்று தலைமைச் செயலகத்தில், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின் அவர்கள், எங்களுடைய துறையோடு கலந்துபேச வேண்டுமென்றும், அந்தக் கூட்டத்திலே நான் கலந்துகொள்ள வேண்டுமென்றும் வேண்டுகோள் வைத்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு, நானும் அவரும், அவருடைய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளையும், எங்களுடைய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளையும் அழைத்து, ஒரு கூட்டத்தை நடத்தினோம். அப்போது, ஏறக்குறைய 6 மாத காலம் தமிழ்நாட்டிலேயுள்ள எல்லா மாவட்டங்களையும் சுற்றிப் பார்த்து, ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, உள்ளாட்சித் துறையிலே என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன; மின் துறையின்மூலமாக என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று அவர்கள் குறித்து வைத்துக்கொண்டிருந்த குறிப்புகளை, அதிகாரிகளுடன் விவாதித்தார்கள். அந்த விவாதத்தின்போது, வாரியத்திற்கு 261.63 கோடி ரூபாய் மின் கட்டணம், உள்ளாட்சிகளிடமிருந்து வரவேண்டிய பாக்கியாக இருக்கிறது;



இப்படிப்பட்ட நிலைமைகள் எதிர்காலத்திலே வராமல் இருப்பதற்காக, உள்ளாட்சித் துறைக்குச் சில சலுகைகள் வேண்டுமென்று கேட்டார்கள். அதை அதிகாரிகளோடு கலந்து பேசினோம். அதிலே முதல் வேண்டுகோளாக அவர்கள் வைத்தது, மின் கம்பம் நடுவதற்கு, ஒரு கம்பத்திற்கு 12 ஆயிரம் ரூபாய் மின் வாரியம் கேட்கிறது; அது அதிகபட்சமாக இருக்கிறது; அதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை ஏற்றுக்கொண்டு, 9,500 ரூபாய்க்கு உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அந்தப் பகுதிகளுக்குக் கம்பங்களை நடுவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சி மன்றங்கள் மின் கட்டணம் செலுத்துகின்ற நேரத்தில் கால தாமதமானால், 12 சதவிகிதம் வட்டி வசூலித்துக் கொண்டிருந்தோம். அதை 6 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதையும் மின்சார வாரியம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சில கிராமங்களிலே மின் மீட்டர் பொருத்தப்படாமலே இருக்கின்ற காரணத்தால், அதிகமான கட்டணத்தை மின் வாரியம் பெறுகிறது; எனவே, எல்லாப் பகுதிகளுக்கும் மீட்டர்கள் பொருத்தவேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை வைத்தார். அந்த வேண்டுகோளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 30 நாட்களுக்குள்ளாக, 16 ஆயிரம் மீட்டர்கள் தமிழ்நாட்டிலுள்ள எல்லா கிராமப் பகுதிகளிலேயும், தெரு விளக்குகளுக்குப் பொருத்த வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இதைப்போல, உள்ளாட்சித் துறையிலே குறைகளை நிவர்த்திச் செய்வதன்மூலமாக, எதிர்காலத்திலே உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தவர்கள், மின்சாரத் துறைக்குச் செலுத்த வேண்டிய பணத்தை, உரிய காலத்திலே செலுத்தமுடியும் என்ற நம்பிக்கையோடு இந்த முடிவை எடுத்தோம். அதோடு அவர்களுக்கு நான் இன்னொரு கருத்தையும் சொன்னேன். உள்ளாட்சித் துறைக்குத் தேவையான மின்சாரத்தை, நீங்களே உற்பத்தி செய்துகொண்டால், நீங்கள் ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 50 காசு கொடுப்பதற்குப் பதிலாக, 2 ரூபாய் 20 காசிலேயே நீங்களே மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ளலாம்; அதற்குத் தேவையான மூலதனம், நான்கிலே ஒரு பங்கை முதலிலே நீங்கள் கொடுத்துவிட்டால், Power Finance Corporation மூலமாக நாங்கள் கடன் வாங்கித் தருகிறோம்; நாங்களே மின்சாரத்தை உற்பத்தி செய்து, உள்ளாட்சித் துறைக்கென்று தனியாகத் தருகின்றோம்; உங்களிடத்திலே மிச்சம் இருந்தால், அந்த

மின்சாரத்தை நாங்களே வாங்கிக் கொள்கிறோம் என்றெல்லாம் பேசி, அப்படித் தனிப்பட்ட முறையிலே ஒரு மின் உற்பத்தி நிலையம் தொடங்குவதற்கும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அந்தச் செய்தியையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இதைப்போலவே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, "தமிழ்நாட்டில் ஏறக்குறைய 17,50,000 விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தருகிறீர்கள்; ஏற்கெனவே, ரூ.50 ஆயிரம், ரூ.25 ஆயிரம், ரூ.10 ஆயிரம் என்று பணத்தைக் கட்டி, Self Financing மூலமாக மின் இணைப்பைப் பெற்றவர்களுக்கு, ஒரு horse power-க்கு 250 ரூபாய் கட்டிக் கொண்டிருந்ததையும் நீங்கள் இரத்து செய்துவிட்டீர்கள்; ஆனால், எங்களுடைய தோட்டக் கலைப் பயிர்களுக்கு மட்டும் மின்சார வாரியத்திலே ஒரு யூனிட்டுக்கு 5 ரூபாய் 20 காசு என்றும், 500 யூனிட்டுக்கு மேலே போனால், 5 ரூபாய் 60 காசு என்றும் கட்டணம் வசூலிக்கிறார்கள்; இதிலேயிருந்து எங்களுக்குச் சலுகை வாங்கித் தரவேண்டும்" என்று கேட்டார்கள். நம்முடைய முதலமைச்சரும் எங்களை அழைத்துப் பேசினார். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, இப்போது LT Tariff-V(Commercial)-லேயிருந்து, LT Tariff-III (A) மூலம், ஒரு யூனிட்டுக்கு 2 ரூபாய் 20 காசுக்குத் தோட்டக் கலைப் பயிர்களுக்கு மின்சாரக் கட்டணம் வசூலிப்பது என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றையதினம், நம்முடைய முதல்வர் அவர்கள் தமிழ்நாடு பூராவும் சுற்றிப் பார்க்கிறார். சில மாநகராட்சிப் பகுதிகளுக்கும் செல்கிறார். அப்படிச் செல்கின்ற நேரத்திலே, ஒரு நாள், கோவைப் பகுதியிலே, மின்சார ஒயர்கள் தொங்குவதைப் பார்த்துவிட்டு, "இப்படிப்பட்ட மாநகராட்சிகளில் இருக்கக்கூடிய மின்சார ஒயர்களை எல்லாம், பூமிக்கு அடியிலேயே புதைத்தால் என்ன?" என்று கேட்டார்கள். "அதுபற்றி எங்களுடைய இலாகாவோடு பேசுகிறோம்" என்று சொல்லியிருந்தோம். அவர்கள் "இதற்காக எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை; குறைந்தபட்சம், முதற்கட்டமாக மாநகராட்சிப் பகுதிகளிலே உள்ள cable-களை, underground cable-களாக மாற்ற வேண்டும்" என்று ஆணை பிறப்பித்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு, 1,100 கோடி ரூபாய் செலவிலே, ஓராண்டுக் காலத்திற்குள்ளாக, கோவை, மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள, மாநகராட்சிகளில் உள்ள



cable-களை பூமிக்கு அடியிலே கொண்டு செல்வது என்று முடிவு செய்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த கட்டமாக, நகராட்சிகளிலே உள்ள cable-களையும், இந்த ஆட்சிக் காலம் இருப்பதற்குள்ளாக, பூமிக்குள்ளேயே cable-கள் புதைக்கப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-00*

இந்தியாவில் சுதந்திரம் பெற்று இவ்வளவு ஆண்டுகள் ஆனதற்குப் பிறகுகூட, இன்னும் 1,42,000 கிராமங்களுக்கு மின்சார வசதி கிடையாது. மின்சாரம் என்றால் எப்படியிருக்கும் என்றுகூட, அந்தக் கிராமத்து மக்களுக்கு இதுவரையில் தெரியாது. ஆனால், நம்முடைய தமிழகத்திலே, 1971-லே முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழகத்திலே எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து தரப்படும் என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல; காலனிப் பகுதிகளுக்கும் மின்சார வசதி செய்து தரப்படும் என்று சொன்னார்கள். 1976 ஜனவரி 30 ஆம் தேதிக்குள்ளாக 98 சதவிகித கிராமங்களுக்கும், காலனிகளுக்கும் மின்னிணைப்பை நாம் செய்து கொடுத்துவிட்டோம். ஆனாலும்கூட, மலைப் பகுதிகளிலே, நீலகிரி அல்லது கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளிலே இருக்கக்கூடிய குக்கிராமங்களுக்கு மின்னிணைப்புக் கொடுக்க முடியவில்லை. அந்தக் குக்கிராமங்களுக்கும் மின்னிணைப்புக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டபோது, நான், "மரபுசாரா எரிசக்தித் துறை மூலமாகக் கொடுப்பதற்கு எத்தனை கிராமங்கள் அப்படி இருக்கின்றன?" என்று கேட்டபோது, அவர்கள் கணக்கெடுத்து, "80 கிராமங்களுக்கு நாம் கொடுத்துவிட்டால், தமிழ்நாட்டிலே முழுமையாக அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி கொடுத்த ஒரு மாநிலம் என்ற பெயர் நமக்குக் கிடைக்கும்" என்று சொன்னார்கள். இந்த ஆண்டு, அந்த 80 கிராமங்களுக்கும், மரபு சாரா எரிசக்தித் துறைமூலமாக (மேசையைத் தட்டும் ஒலி) மின்னிணைப்புக் கொடுத்து, தமிழ்நாட்டிலேயே எல்லாக் கிராமங்களும் மின் வசதி பெற்ற மாநிலம் தமிழ்நாடுதான் என்பதையும், அதிலே தமிழகம் முதலிடத்திலே நிற்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி, இவ்வளவு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன் குறிப்பிட்டதைப்போல, நாம் மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாகத்தான் இருக்கிறோம். இந்தியாவிலேயே மின்சார உற்பத்தியிலே

உபரி மாநிலமாக இருப்பது தமிழ்நாடு மட்டும்தான். இப்போது மராட்டிய மாநிலத்திற்கு உபரி மின்சாரத்தை விற்பனை செய்கிறோம்; பஞ்சாப் மாநிலத்திற்கு விற்பனை செய்கின்றோம். ஆனால், இது போதாது என்றும் இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 75,000 மெகாவாட் மின்சாரம் இருந்தால்தான், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள், இந்தியாவிலே மின்சாரப் பற்றாக்குறை இல்லை என்ற ஒரு நிலை ஏற்படும் என்று மின் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்துச் சொல்லப்பட்டது. அதை ஏற்று நாங்களும் முதலமைச்சரோடு கலந்து பேசி, புதிதாக மின்சாரம் உற்பத்தி செய்ய வந்தால் அவர்களையெல்லாம் அனுமதிக்கலாமா என்பதுபற்றி விவாதத்தை நடத்தினோம்.

அப்போது M.o.U. -Memorandum of Understanding -மூலமாகத்தான், மத்திய அரசு அனுமதி தந்தால் அதைச் செய்யலாம் என்று நினைத்தோம். மத்திய அமைச்சரிடத்திலே பேசினோம். ஏற்கெனவே 1993 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது திரு. நரசிம்ம ராவ் அவர்கள்தான் முதன்முதலிலே M.o.U.மூலமாக, மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி வழங்கினார்கள். அதே முறையை இந்த அரசும் பின்பற்ற வேண்டுமென்று, மத்திய மின் துறை அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களிடத்திலே நாங்கள் கேட்டுக்கொண்டோம். "நீங்கள் விண்ணப்பங்களை அனுப்புங்கள்; நாங்கள் பரிசீலிக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அதிலே வேடிக்கை என்னவென்றால், தமிழகத்திலே, 26 நிறுவனங்கள்—அமெரிக்கா, ரஷ்யா, பின்லாந்து, ஜெர்மனி, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலுள்ள நிறுவனங்களெல்லாம், 26 நிறுவனங்கள்—"40,000 மெகாவாட் மின்சாரத்தை நாங்கள் தமிழகத்திலே உற்பத்தி செய்து தருகிறோம்; எங்களுக்கு அனுமதி தாருங்கள்" என்று கேட்டு விண்ணப்பித்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்னும் ஓரிரு நாட்களிலே மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, M.o.U. route மூலமாக அந்த அனுமதியை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்ளவிருக்கிறார். அப்படி மத்திய அரசாங்கம் அதைத் தருமானால், நம்முடைய தமிழகத்திற்கு மின் துறையிலே மட்டும் ஏறக்குறைய ஒரு இலட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு வெளி நாடுகளிலிருந்து தமிழகத்திற்குக் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; 40,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து, வட மாநிலங்களுக்கு நாம் அனுப்புவதன்மூலமாக wheeling charges என்ற முறையிலே 5 சதவிகிதம், மின் வாரியம் வசூல் செய்ய முடியும். அப்படி வசூல் செய்கின்ற நேரத்திலே, ஆண்டொன்றுக்கு 3,000 கோடி ரூபாய்



மின்சார வாரியத்திற்கு இலாபம் கிடைக்கும் என்ற அந்த மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மின் இழப்பைப் பொறுத்தவரையிலே இங்கே சொன்னார்கள்; இந்தியாவிலேயே மின் இழப்பு, குறைவாக இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடுதான் என்று. இன்றையதினம் அசாம் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் 45 சதவிகிதம் மின் இழப்பு. டெல்லியிலே 37 சதவிகிதம்; ஓரிசாவிலே 36 சதவிகிதம்; இப்படி எல்லா மாநிலங்களிலும் 30 சதவிகிதத்திற்கு மேலே மின் இழப்பு இருக்கிறது. ஆனால், தமிழ்நாடு மட்டும்தான், 18.3 சதவிகிதம் என்ற அளவிலே மின் இழப்பு என்று மின் இழப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இதையும் முதலமைச்சர் அவர்கள் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆண்டொன்றுக்கு ஒரு சதவிகிதம் மின் இழப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறைந்தது 15 சதவிகிதம் மின் இழப்பு ஏற்படக்கூடிய அளவிற்கு மின்சார வாரியம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஒரு சதவிகிதம் மின்சார இழப்பைக் குறைத்தாலே ஆண்டொன்றுக்கு 150 கோடி ரூபாய் மிச்சமாகும், மின்சார வாரியத்திற்கு. அந்த வகையிலேயும் இப்போது மின்சார வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-05*

அதைப்போல, எரிசக்தி மேம்பாட்டு முகமை, மரபு சாரா எரிசக்தித் துறை மூலமாக, மத்திய அரசாங்கம் சில மானியங்களைத் தருகிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு, சூரிய வெளிச்சம் அதிகமாக, தமிழகத்திலே, ஏன்? இந்தியாவிலேயே இருக்கின்ற காரணத்தினால், அதையும் நாம் பயன்படுத்தலாமே என்று முதலமைச்சர் எங்களுக்கு அறிவுரை வழங்கினார். அதை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை மேற்கொண்டபோது, அந்தத் துறையைச் சார்ந்த மத்திய அமைச்சர் அவர்கள், சென்னைக்கு வந்து, முதலமைச்சரைச் சந்தித்தார்கள். அப்படிச் . சந்திக்கின்ற நேரத்திலே, "உங்களுக்கு மரபுசாரா எரிசக்திமூலமாக என்ன உதவிகள் வேண்டுமானாலும் செய்து தருகிறேன்" என்று சொன்னார்கள். அப்படிக் கேட்ட நேரத்திலே, அவர் முதற்கட்டமாக, நம்முடைய தமிழ்நாட்டிலுள்ள அமைச்சர்களுடைய இல்லங்கள், சட்டமன்ற விடுதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகளுடைய வீடுகள் இவற்றிற்கெல்லாம் சூரிய வெளிச்சத்தின்மூலமாக, சுடுநீர் காய்ச்சித் தரக்கூடிய அந்தக் கருவிகளைப்

பொருத்துவது என்று முடிவெடுத்து, அதற்காக இரண்டு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். முதற்கட்டமாக, இந்த ஆண்டு இந்தத் துறையிலே, சூரிய வெளிச்சத்தின்மூலம் கிடைக்கின்ற மின் சக்தி இதற்குப் பயன்படுத்தப்படும். படிப்படியாக, இந்தத் திட்டத்திலும் நாங்கள் அதிகமாக கவனம் செலுத்த இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டிலே கடந்தகால ஆட்சியிலேயும், காற்றாலையின்மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்கள். தொடர்ந்து இந்த அரசாங்கமும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆசியாவிலேயே 32,000 மெகா வாட் மின்சாரம் காற்றாலைகள் மூலமாகப் பெறுகின்ற ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதை எண்ணிப் பார்த்த மத்திய அமைச்சர் இங்கே தமிழகத்திற்கு வந்தபோது, நம்முடைய முதலமைச்சரைச் சந்தித்த நேரத்தில், அவர்கள் தெரிவித்தார்கள்; உங்களுக்கு.. (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. விசுவநாதன், அமைச்சர் உரை முடிந்ததற்குப் பிறகு நீங்கள் எது வேண்டுமானாலும் கேளுங்கள். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** 32,000 மெகா வாட் அல்ல; 3,200 மெகா வாட் தான்...

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விசுவநாதன், no, உட்காருங்கள்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு விசுவநாதன் அவர்களுக்கு நன்றி. 3,200 மெகா வாட் மின்சாரம் நாம் காற்றாலைகள்மூலமாகப் பெறுகின்றோம். ஆனால், அதற்கு வேண்டிய உதிரி பாகங்கள் மற்றும் அந்தக் காற்றாலைகளை எல்லாம் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகள் இங்கே இல்லை. அதனாலே வெளிநாடுகளிலிருந்து இப்போது இறக்குமதி செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காக நம்முடைய முதலமைச்சரிடத்திலே அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் பேசுகின்ற



நேரத்தில், "தமிழ்நாட்டிலே நீங்கள், இந்தத் துறைமூலமாக அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பீர்களேயானால், அதற்காக Special Economic Zone என்ற அனுமதியைப் பெற்றுத் தருகிறேன்" என்று சொன்னார். அந்த அடிப்படையிலே இன்றையதினம் நம்முடைய எரிசக்தித் துறை, காஞ்சிபுரம் மாவட்டத்திலே 672 ஏக்கரில் கிட்டத்தட்ட 8,000 கோடி ரூபாய் மூலதனத்திலே வெளிநாடுகளுடைய உதவியோடு, அந்த மின்சார விசிறிகள் தயாரிக்கக்கூடிய அந்த பாகங்களையும் அந்த விசிறிகளையும் தயாரிப்பதற்கான தொழிற்சாலையைத் தொடங்க இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, Tamilnadu Power Finance Corporation, எங்கெங்கே நிதி இந்த இலாகாவிற்குத் தேவைப்படுகிறதோ, அங்கேயெல்லாம் அதனிடத்திலே இருக்கக்கூடிய பணத்தைக் கொடுத்து நமக்கு உதவி செய்து வருகிறது. அந்த நிறுவனம், நேற்றையதினம் முதலமைச்சரிடத்திலே இந்த ஆண்டு பெற்ற இலாபத்திலே இருந்து ரூபாய் 4.1 கோடி தமிழக அரசுக்குத் தந்திருக்கிறது. அந்தத் துறையையும் ஊக்குவிப்பதற்காக இப்போது தமிழக மின்வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

Billing of Energy Services என்ற ஒரு system; அதை இப்போது புதியதாக அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். உதாரணத்திற்குச் சொல்கிறேன்; சென்னை நகரம் இருக்கிறது; மயிலாப்பூரிலே இருக்கிற ஒருவர், எழும்பூரிலே வந்து பணியாற்றுகிறார் என்று வைத்துக்கொள்வோம்; இதற்கு முன்னாலே மயிலாப்பூரிலே இருக்கக்கூடியவர், அந்த இடத்திலேதான் பணத்தைக் கட்ட வேண்டும்; அதை மாற்றி, இப்போது சென்னைக்குள்ளே எங்கே வேண்டுமானாலும், மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தலாம் என்ற முறையிலே, Billing of Energy Services by Tamil Nadu Electricity Board என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, முதற்கட்டமாக 615 நகர்ப்புற பிரிவுகளிலே 51.23 கோடி ரூபாய் செலவிலே செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் மீதமுள்ள 1,805 ஊரகப் பிரிவுகளில், 163 கோடி ரூபாய் செலவிலே இந்த ஆண்டிலே அந்தப் பணிகள் முடிக்கப்பெற்று, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடியவர், உதாரணத்திற்குச் சொல்கிறேன்; கன்னியாகுமரியிலே இருக்கக்கூடிய ஒரு நபர், சென்னையிலே வந்துகூட மின்சாரக் கட்டணத்தைக் கட்டினால், கம்ப்யூட்டர்மூலமாக அந்தந்தப் பிரிவுகளுக்கு அந்தப் பணம் போய்ச் சேர்ந்துவிடும். அப்படிப்பட்ட ஒரு முறையை இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்திலேதான் அறிமுகப்படுத்தியிருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-10

மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், "எங்களுடைய ஆட்சியிலே எப்படியெல்லாம் இருந்தது தெரியுமா?" என்றெல்லாம் சொன்னார்கள். எல்லோருக்கும் தெரியும்; மின்சார வாரியத்திலே பணியாற்றக்கூடிய தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களெல்லாம் எப்படி வேதனைக் கண்ணீர் வடித்தார்கள்; போனஸ் 20 சதவிகிதம் வேண்டுமென்று கேட்டு, எப்படி மறுக்கப்பட்டது; அமைச்சர்கள்கூட அவர்களைச் சந்திப்பதற்குத் தயாராக இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், இந்த ஆட்சி வந்தவுடனே, அடுத்த ஒரு மாத காலத்திற்கெல்லாம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மின்வாரியம், போக்குவரத்துக் கழகம் போன்ற வாரியங்களுக்கெல்லாம் 8.33 சதவிகிதம் போனஸ் என்பது, 20 சதவிகிதமாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; ஒப்பந்தத் தொழிலாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்று சொன்னாலே, கலைஞர் ஆட்சி வந்தால்தான் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களே தவிர, வேறு எந்த ஆட்சியிலும் நிரந்தரமாக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) Khalid Commission, ஓர் உத்தரவைப் போட்டது, 10 ஆயிரம் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று. 1997 ஆம் ஆண்டு கலைஞர்தான், அவர்களை நிரந்தரமாக ஆக்கினார். அதற்குப் பிறகு, நம்முடைய C.P.I.(M), C.P.I. போன்ற தொழிற்சங்கங்கள், அனல் மின் நிலையங்களிலே இருக்கக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்று அரசை அணுகினார்கள்; போராட்டம் நடத்தினார்கள். அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, மேட்டூர், எண்ணூர், வட சென்னை, தூத்துக்குடி ஆகிய அனல் மின் நிலையங்களிலேயிருந்த 10 ஆயிரம் contract labour-களை நிரந்தரமாக்கியதும் கலைஞருடைய ஆட்சிதான் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மிச்சம் இருக்கின்றவர்கள்—distribution—விநியோகப் பிரிவிலே 20,600 பேர் இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரமாக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர், நேற்றையதினம் இங்கே எடுத்துச் சொன்னார். C.P.I.(M), C.P.I. உள்ளிட்ட எல்லா உறுப்பினர்களும் பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள், நேற்று நம்முடைய நிதித் துறைச் செயலாளரை அழைத்துப் பேசி, எங்களுடைய வாரியத் தலைவர்களை அழைத்துப் பேசி, இதை என்றைக்காவது ஒருநாள் செய்துதான் ஆகவேண்டும்; ஆனால், 20 ஆயிரத்து 600 பேரையும் ஒரே



காலக்கட்டத்திலே, ஒரே ஆண்டிலே செய்ய முடியாது; படிப்படியாகச் செய்யலாம் என்று ஒரு முடிவெடுத்து, இந்த ஆண்டு 6 ஆயிரம் பேரை நிரந்தரம் செய்வதென்றும், (மேசையைத் தட்டும் ஒலி) மிச்சம் இருக்கக்கூடிய 14 ஆயிரத்து, 600 பேரைப் படிப்படியாக நிரந்தரம் செய்வதென்றும் முடிவெடுத்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை இந்த அளவிற்குச் சிறப்பாகச் செயல்படுவதற்குக் காரணமாக இருக்கின்ற மின் இலாகாவினுடைய செயலாளர், அதனுடைய தலைவர் மற்றும் வாரிய உறுப்பினர்கள், அதைப்போலவே, T.E.D.A.-வினுடைய தலைவர் மற்றும் தொழிற் சங்கங்கள், அங்கே பணியாற்றக்கூடிய பொறியாளர்கள், தொழிலாளர்கள் ஆகிய அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இந்த அரசாங்கம் அதைச் சந்திப்பதற்கு, பிரச்சினைகளை அணுகுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையைப்பற்றி, நம்முடைய உறுப்பினர்கள் இங்கே சில குறிப்புகளைச் சொன்னார்கள். முதலமைச்சரிடத்திலே இருந்த இலாகா இது; முதன்முறையாக இதை என்னிடத்திலே இந்த ஆண்டு ஒப்படைத்திருக்கிறார்கள். இந்த இலாகா வந்தவுடனே, கோட்டையிலே இருக்கக்கூடிய தொழிற்சங்கத் தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, குறைபாடுகள் எதையெதைச் சொன்னார்களோ, அதையெல்லாம் நிறைவேற்றுவதற்காக முதலமைச்சரிடத்திலே சொல்லியிருக்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே, Service Commission, ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை இலாகாக்களுக்கு, கோட்டைக்கு அனுப்புகின்ற நேரத்தில், அவர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுக்க வேண்டுமென்பதற்காக, பவானிசாகரில் நாம் ஒரு பயிற்சி நிலையத்தை வைத்திருக்கின்றோம்; அதைப்போல, I.A.S., I.P.S., I.F.S. போன்ற துறைகளிலே படிப்பதற்காக ஏழைகள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, இந்தத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அந்த நிறுவனம் அண்ணா நகரிலே செயல்படுகிறது. இன்னொன்று, Anna Institute of Management என்று அடையாறிலே செயல்படுகிறது. இந்த மூன்று இடங்களிலே இருக்கக்கூடிய நிறுவனங்களும் மிகச் சிறப்பாகப் பயிற்சி அளித்தால்தான், எதிர்காலத்திலே நம்முடைய தமிழகத்திற்கு நிறைய I.A.S. படித்தவர்கள், I.P.S. படித்தவர்கள் கிடைப்பார்கள்

என்பதால் அந்தப் பயிற்சியைக் கொடுக்கின்றவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள், Part-II scheme-லே நிதியொதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த நிதியைப் பெற்று, அந்தத் துறையை மென்மேலும் வளர்ப்பதற்காக, அந்தத் துறை நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏறக்குறைய 12 இலட்சம் அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் பணியாற்றக்கூடிய இந்தத் துறையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலேயே வேறு யாரும் நினைக்காத அளவிற்கு ஒன்றை நினைத்துப் பார்த்து, அமைச்சர்களிடத்திலே பேசி, எங்களிடத்திலே கருத்துகளைக் கேட்டு, ஒரு முடிவெடுக்கலாம் என்று இருக்கிறார்கள். அது என்னவென்று கேட்டால், "சிலர் தவறு செய்து விடுகிறார்கள், அவர்கள் பணியிலே இருக்கின்றபோது; அப்படித் தவறு செய்துவிட்டால், அந்தத் தவறை விசாரித்து, இலாகாக்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமேதவிர, அதை விட்டுவிட்டு, அவர்கள் ஓய்வு பெறுகின்ற நேரத்திலே அவர்களுக்கு suspension order கொடுத்து, வீட்டிற்கு அனுப்புகிறோம்; 30 ஆண்டுக் காலம், 35 ஆண்டுக் காலம் உழைத்துவிட்டு, அவர்கள் வீட்டிற்குப் போகும்போது, ஓய்வு பெற்று வீட்டிற்குப் போகும்போது, கண்ணீரோடு போகவேண்டுமா?" என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டு, அவரே அதற்கு ஒரு பதில் சொல்லக்கூடிய வகையிலே, "இதற்கான ஒரு முடிவை நாம் அமைச்சரவையிலே பின்னால் எடுக்கலாம்; ஆனால், இந்த முறையை மாற்றவேண்டும்; எந்தக் காரணத்தைக்கொண்டும் ஓய்வுபெறுகின்ற நேரத்திலே, அரசாங்க ஊழியர்கள் suspend செய்யப்படுகிறார்கள் என்கின்ற நிலை இருக்கக்கூடாது" என்று சொல்லியிருக்கிறார்கள். பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-15

அண்ணா மேலாண்மைக் கழகத்தைப்—Anna Institute of Management—பற்றிச் சொன்னேன். இப்போது அந்தக் கட்டடமே, வெளிநாட்டிலே இருக்கக்கூடிய கட்டடத்தைப்போல மிக அழகான கட்டடமாகக் கட்டப்பட்டிருக்கிறது. Library இருக்கிறது; நல்ல வசதிகள் இருக்கின்றன. ஆனால், நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய I.A.S. அதிகாரிகள், அதேபோல I.P.S. அதிகாரிகள், உயர் அதிகாரிகளுக்கெல்லாம்



பயிற்சித் தர வேண்டுமென்றால், இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும். Indian Institute of Management எப்படி அகில இந்திய அளவிலே நடத்துகிறதோ, அதைப்போல ஒரு பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்கி, அந்த Anna Institute of Management-லே Dean (Academics) என்ற ஒரு புதிய பதவியை உருவாக்கி, உலகத்திலே இருக்கக்கூடிய மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களிலே என்னென்ன syllabus வைத்திருக்கிறார்களோ, அந்த syllabus-லே சிறந்தது எதுவென்று தேர்ந்தெடுத்து, இங்கே இருக்கக்கூடிய I.A.S., I.P.S., அதிகாரிகளுக்கெல்லாம் ஒரு மாதப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே அவர்களுக்கு என்ன நன்மை என்று கேட்டால், இங்கே அவர்கள் பணியாற்றிவிட்டு ஓய்வு பெற்றால்கூட, உலக வங்கி அல்லது Corporate Office போன்ற நிறுவனங்களிலே ஒரு மாதத்திற்கு இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் சம்பளம் பெறக்கூடிய நல்ல வாய்ப்புக் கிடைக்கும். அப்படிப்பட்ட வாய்ப்பை I.A.S. அதிகாரிகளுக்கும், I.P.S. அதிகாரிகளுக்கும் ஓய்வு பெற்றதற்குப் பிறகும் உண்டாக்கித் தர வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, Vigilance and Anti-corruption; அந்த இலாகாவைப் பொறுத்தவரையிலே, சிலர் தவறு செய்கின்ற நேரத்திலே அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கிறார்கள் என்று சொன்னாலும், அவர்கள் பதிவு செய்கின்ற வழக்குகளுக்கும், நடவடிக்கை எடுத்திருக்கின்ற அந்தக் முடிவுகளுக்கும் சம்பந்தமில்லை. அந்தத் துறையையும் உடனடியாக நடவடிக்கை எடுத்து, வழக்குகளை உடனடியாக முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாநில நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்றை நம்முடைய முதல்வர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். வெளிப்படையான மற்றும் ஊழலற்ற நிர்வாகத்தினை அளிப்பதற்கு இந்த அரசு உறுதிபூண்டுள்ளதை மெய்ப்பிக்கும்வகையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி, நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்களுடைய தலைமையில் 10 பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு, அன்றாட வாழ்வில் பொதுமக்கள் அணுகும் அலுவலகங்களில் நிலவும் காலதாமதம் மற்றும் ஊழலுக்கு அடிப்படையான காரணமாக இருக்கக்கூடிய சிகப்பு நாடா முறையினை அகற்றி, அலுவலக

நடைமுறையினை எளிமைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அரசுக்கு அறிவுரைகள் வழங்கும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோல, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய நல்லுறவைப்பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை; மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் தெரிந்தது. அதை மீண்டும் சொல்லி, எதிர்க்கட்சிக்காரர்களை நான் புண்படுத்த விரும்பவில்லை. என்ன இருந்தாலும், அரசாங்க ஊழியர்கள் நம்முடைய குடும்பத்தில் இருப்பவர்களைப் போன்றவர்கள்தான். அவர்கள் ஏதோ அமெரிக்காவிலிருந்து, ஜப்பான் நாட்டிலிருந்து வந்தவர்கள் அல்ல. நம்முடைய அண்ணன்கள் அரசாங்க ஊழியர்களாக இருக்கலாம்; நம்முடைய தம்பிகளிலே ஒருவர் ஆசிரியராகவும் இருக்கலாம். கடந்தகாலத்திலே அவர்கள் எப்படி நடத்தப்பட்டார்கள் என்பது இந்த அவைக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால், முன்னாள் முதலமைச்சர் சொன்னார்; வருகின்ற வரியையெல்லாம் அரசாங்க ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் செலவழித்துவிட்டால், பொதுமக்களுக்கு என்ன திட்டத்தைத் தீட்டுவது என்று ஒரு கேள்வி கேட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அது நியாயமாகக்கூட இருக்கலாம். ஆனால், எப்படிக் கலைஞராலே அதே பணத்தை வைத்துக்கொண்டு அரசாங்க ஊழியர்களுக்கு நிறைய சலுகைகளும் கொடுக்க முடிகிறது; (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட அதிகமாகப் பொதுமக்களுக்கு ஏராளமான திட்டங்களையும் அறிவித்து, அவற்றை அமல்படுத்துகிறார் என்றால், கலைஞராலே மட்டும் அது எப்படி முடிகிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் சொல்கிறேன் என்றால், மனம் இருந்தால் மார்க்கம் இருக்கிறது. எனவே, கலைஞருக்கு மனம் இருக்கிறது; மார்க்கத்தைக் கண்டுபிடித்து அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்கெனவே இருந்த அரசாங்கம் பறித்த சலுகைகளிலே எல்லாச் சலுகைகளும் இப்போது திரும்பி வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்காக உத்தரவிடப்பட்ட நாட்கள் எல்லாம்கூட இருக்கின்றன. நேரத்தினுடைய அருமை கருதி, நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை.

அது மட்டுமல்ல; மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு 1-1-2007 அன்று அகவிலைப் படி ஆறு சதவீதம் உயர்த்தினார்கள். எந்தத் தொழிற்சங்கமும் வந்து முதலமைச்சரைச் சந்தித்து, அந்த அகவிலைப் படி ஆறு சதவீதம் எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்கவில்லை. ஆனால், முதலமைச்சராகவே நிதிநிலை அறிக்கையின்மூலமாக முதன்



முறையாக, இந்தியாவிலே, அரசாங்க ஊழியர்களுக்கு ஆறு சதவீதம் அகவிலைப் படி ஏற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் கலைஞருடைய ஆட்சி. இந்த ஆட்சியை வீழ்த்திவிட்டுத்தான், நாங்கள் ஆட்சிக்கு வரப்போகிறோம் என்று யார் யாரோ பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-20

நான் ஒன்றைச் சொல்கிறேன்; கலைஞர் இருக்கின்ற வரையில், திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கின்றவரையில், இந்த ஆட்சியை வேறு ஒருவராலே, மாற்றிக் காட்ட முடியும் என்பதை என்னாலே நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதுமட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகமும், தோழமைக் கட்சிகளும் இன்று இணைந்து செயல்படுகின்ற இந்தச் சூழ்நிலையில், இந்த ஆட்சியை யார் நினைத்தாலும் அகற்றவும் முடியாது; எதையும் செய்ய முடியாது என்பதை எடுத்துச் சொல்லி, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இப்படிப்பட்ட ஓர் ஆட்சியிலே, கலைஞர் அறிவிக்கின்ற திட்டங்கள், ஏதோ தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டும் போய்ச் சேரவில்லை; எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களுக்கும் அந்தத் திட்டங்கள் போய்ச் சேருகின்றன என்பதை எண்ணிப் பார்த்து, அதிமுக-விலே இருக்கின்றவர்களிலேகூட சிலபேர் இந்த ஆட்சியே இன்னும் கொஞ்சம் நாட்களுக்கு நீடித்தால், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இப்படிப்பட்ட சலுகைகள் எல்லாம் நமக்குக் கிடைக்கும்போல இருக்கிறதே!" என்று நினைக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், ஒரு நல்ல ஆட்சி கலைஞர் தலைமையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்தத் துறைகளின் மானியத்தின்மீது இங்கே பேசிய உறுப்பினர்களுக்கு நான் நன்றி தெரிவித்து, இந்த மானியத்திற்காக உழைத்த அதிகாரிகளுக்கும், இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, . . .

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** தலைவர் அவர்களே, . . .

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, . . .

**திரு. சி. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, . . .

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சொல்கிறபோதும், கிராமப்புறங்களிலே இருக்கிற விவசாயிகளுக்கு மின்சாரத் தடை ஏற்படுகிறது; மின்வெட்டே இல்லையென், அங்கே மின்சாரத் தடை ஏற்படுவதைத் தவிர்க்கின்றவகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் மின் மோட்டாரை இயக்குகின்றபோது அதனை இயக்கிய ஐந்து நிமிடத்திற்குள்ளேயே, மின்சாரத் தடை ஏற்படுகிறது என்பதை மனசாட்சியுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து, விவசாயத்திற்குக் கொடுக்கப்படுகிற மின்சாரத்தை, அந்தக் குறிப்பிட்ட 11 மணி நேரமும் மின்தடை இல்லாமல் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, இன்னும் ஒரு 3,000 Transformer-கள் தமிழ்நாடு முழுவதும் புதிதாக மாற்றம் செய்தால், கால் மணி நேரமோ, அரை மணி நேரம்கூட தடையில்லாத மின்சாரத்தை நிச்சயம் கொடுக்க முடியும். இந்த அரசுமூலமாக, நிச்சயமாக அண்ணா பிறந்த நாள் செப்டம்பர் 15-க்குள்ளாக Transformer-கள் பொருத்தப்படும். அதற்குப்பிறகு எந்தப் பிரச்சினையும் இருக்காது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** தலைவர் அவர்களே, . . .

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.



**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரையில், அந்த டெல்டா மக்களுக்காக 500 பேர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக அறிவித்தார்கள். அதற்கு நன்றி சொல்வதோடு, அங்கு இருப்பவர்கள் வெறும் 1,500 பேர் மட்டும்தான்; ஆகவே, அறிவித்தபடி அந்த 1,500 பேர்களுக்கும் மின் இணைப்பைக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 மின் இணைப்புகள் சிறப்பு நேர்வாகக் கொண்டு, உடனடியாகக் கொடுக்கப்படும். மிச்சம் இருக்கின்ற 1,000 பேருக்கு, ஆண்டுதோறும் 40 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுக்கின்ற நேரத்திலே, அந்த மாவட்டத்திற்கு எவ்வளவு மின் இணைப்புக் கொடுக்கின்றோமோ, அதிலிருந்து முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், நல்ல அறிவிப்புகளை நிறைய அறிவித்து இருக்கிறார்கள். நாங்கள் கேட்க விரும்புவது, இன்னும் நிறைய பள்ளிக்கூடங்கள் மின் இணைப்பு இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, குழந்தைகளின் நலன்கருதி, பள்ளிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதோடு, அதை இலவச மின்சாரமாக வழங்குவதற்கும் ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கு மின் இணைப்புக் கேட்டால், 24 மணி நேரத்திற்குள்ளாகக் கொடுக்கப்படும். இலவசமாக மின்சாரம் கொடுக்கப்படுமா என்றார்கள். 3,000 கோடி ரூபாய் இழப்பிலே இருக்கிறோம்; அதை சரி செய்த பிறகு, முதலமைச்சர் பரிசீலிப்பார்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** தலைவர் அவர்களே, . . .

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) அவர் சொல்வதைக் கேட்போம், (குறுக்கீடுகள்)

***திரு. கோ. அரி:** அவருக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள். .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய recommendation வேண்டாம். (குறுக்கீடுகள்) நான் இப்போது சொல்கிறேன்.

*முற்பகல் 10-25*

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணு மின் உற்பத்தியிலே ஒரு புதிய சரித்திரத்தை உருவாக்குகின்றவகையில், ஆயிரக்கணக்கான கோடி ரூபாயிலே, கூடன்குளம் அணு மின்நிலைய விரிவாக்கப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கூடன்குளம் அணு மின்நிலைய விரிவாக்கப் பணியைத் துரிதமாகச் செயல்படுத்துவதன்மூலம், தமிழகத்தினுடைய மின் உற்பத்திக்கு நிரந்தரமான வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் கொண்டுவர முடியும் என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை.

அதுசம்பந்தமாக, சில தீய சக்திகள் அந்த அணு மின்நிலையத்தினுடைய விரிவாக்கப் பணி நடக்கக்கூடாது என்பதற்காகப் போராட்டங்கள் என்கிற பெயரிலே, அதைத் தடுக்கின்ற முயற்சிகளிலே ஈடுபட்டு வருவதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள்; நாங்களும் அறிவோம். எனவே, இந்தக் கூடன்குளம் அணு மின்நிலையப் பணியை விரிவாக்கம் செய்து, அதில் எதிர்பார்த்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு, அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளைப்பற்றியும், அதிலே எந்தவிதமான ஆபத்தும், அபாயமும் பொதுமக்களுக்கு இல்லை என்பதைப்பற்றியும் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே விளக்குவார்கள் என்று எதிர்பார்த்தேன். அதைப்பற்றிய கருத்தையும் அவர்கள் இந்த அவையிலே பதிவு செய்தால், அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு அது ஒரு பெரிய துணையாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே கூடன்குளத்திலே இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. அப்பாவு அவர்கள், அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளோடு ஒரு நாள் கூட்டம் நடத்த வேண்டும் என்று விரும்பினார். கோட்டையிலேயே திரு. அப்பாவு அவர்களையும், அந்த அதிகாரிகளையும் அழைத்துப் பேசி, எந்தவிதமான ஆபத்தும், அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்களுக்கு ஏற்படாது என்ற வாக்குறுதியை அவர்கள் தந்தது மட்டுமல்ல; அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து தருவதாகவும், வீடுகள் கட்டிக் கொடுப்பதாகவும், சாலைகள் அமைத்துத் தருவதாகவும், தெரு விளக்குகள் பொருத்துவதாகவும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஒன்றை மட்டும் இந்த அவைக்குச் சொல்கிறேன்.

பக்கத்திலே கல்பாக்கத்திலே அணு மின்நிலையம் இருக்கிறது. அது உருவாக்கப்பட்டு கிட்டத்தட்ட 35 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரையிலே எந்தச் சேதமும் ஏற்படவில்லை. உலகத்திலே பல நாடுகளில் நீர் மின்சாரம் இல்லை; அனல் மின்சாரம் இல்லை; வெறும் அணு மின்சாரத்தை நம்பியே இப்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றன. உலகத்திலே பல ஆதிக்க சக்தி படைத்த நாடுகள் எல்லாம், அப்படி வாழ்ந்துகொண்டிருக்கும்போது, நம்முடைய நாட்டிலே, ரஷ்யா 6 ஆயிரம் மெகா வாட் மின்சாரத்தை, அணு மின்நிலையம் மூலமாக உற்பத்தி செய்ய, நம்முடைய பிரதமரிடத்திலே ஒப்பந்தம் செய்து கொண்டு, அதுகுறித்து தகவல் கொடுத்திருக்கிறார்கள். அதை யார் தடுத்தாலும், நிச்சயமாக இந்த அரசு அவர்களைச் சமாதானம் செய்து, அவர்களுக்குத் தேவையான எல்லாவிதமான புள்ளிவிவரங்களையும் கொடுத்து, அவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வராது என்ற வாக்குறுதியையும் தந்து, அந்தத் திட்டத்தை அமல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றே நிறைய time எடுத்திருக்கிறீர்கள். ஒரு clarification-ஐ மாத்திரம் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** இரண்டே நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர், தன்னுடைய பதிலுரையில், இரண்டு தவறான தகவல்களை இங்கே பதிவு செய்திருக்கிறார். அவற்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒன்று, ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்த அளவிலே, இப்பொழுதுதான் இந்த அரசுதான் வந்து, முதன்முறையாக அவர்கள் 6 ஆயிரம் பேருக்குப் பணி நிரந்தரம் வழங்குவதாக முடிவு செய்யப்பட்டதாக ஒரு தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார். நான் சொல்லிக்கொள்வது (குறுக்கீடுகள்) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களைப் படிப்படியாக நிரந்தரம் செய்வது என்று கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, முதலிலே...(குறுக்கீடுகள்) சொல்ல விடுங்கள். முதற்கட்டமாக ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள், அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. விசுவநாதன்:** உங்கள் அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லுங்கள் சார்.

**திரு. இரா. விசுவநாதன்:** முதற்கட்டமாக 2,500 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தர ஆணை வழங்கப்பட்டு, அவர்கள் பணியிலும் சேர்ந்து, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அடுத்தபடியாக, அதனுடைய தொடர்ச்சியாக நீங்கள் நடவடிக்கை எடுத்ததாகச் சொன்னால், அது பொருத்தமாக இருக்கும். ஏதோ, அந்த ஆட்சியில் ஒன்றுமே செய்யவில்லை என்பதைப் போலவும், நீங்கள்தான் புதியதாக அதை அறிவித்ததுபோலவும் சொல்லி இருப்பது முதலிலே தவறு.

இரண்டாவதாக, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில், இன்றைக்கு அதைப்பற்றிக் குறிப்பிடுவார் என்று நினைத்தேன்; குறிப்பிடவில்லை; அதிலும் ஒரு தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார். தனியார் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு ஏறத்தாழ 100 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்பதை நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதிலே குறுக்கிட்டுப் பேசுகின்றபோது —இன்று 'இந்து' பத்திரிகை போன்ற பொறுப்புள்ள



பத்திரிகையிலேகூட அந்த பதில் வந்திருக்கிறது—G.M.R. Vasavi, பிள்ளைப்பெருமாநல்லூரிலுள்ள P.P.N. போன்ற மின்சாரம் உற்பத்தி செய்கின்ற அந்தத் தனியார் உற்பத்தி நிலையங்களிலெல்லாம் "எங்களுடைய அரசு இதற்கு அனுமதி கொடுத்ததால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு 900 கோடி ரூபாய் இலாபம் வரும்" என நீங்கள் பதில் சொன்னதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே, தனியார் உற்பத்தி செய்கின்ற அந்த மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு 900 கோடி ரூபாய் இலாபம் வருகிறதா என்பதை நீங்கள் விளக்கிச் சொல்ல வேண்டும். அதற்கு நீங்கள் சரியான பொறுப்பேற்றுக்கொள்வதாக இருந்தால், அதை மீண்டும் உறுதிப்படுத்துவதாக இருந்தால், அதைப்பற்றித் தனியாக நான் பிறகு ...(குறுக்கீடு)

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) Right. உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ததாகச் சொன்னார்கள்; 2,500 பேர்களுக்குச் செய்திருக்கிறார்கள். நிரந்தரம் என்றால், கலைஞர் ஆட்சியில் செய்வதைப்போல அல்ல. நாங்கள் நிரந்தரம் செய்யும்போது Time Scale கொடுக்கிறோம். அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் எவ்வளவு, ஓர் ஆண்டிற்கு எவ்வளவு increment என்றெல்லாம் போட்டு, பணி உத்தரவு தருகிறோம். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 2,500 பேரை மஸ்தூர்களாக நியமனம் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மஸ்தூர்கள் என்று சொன்னால்... (குறுக்கீடு) இல்லை, நான் தெரிவிக்க விரும்புவது, மஸ்தூர் என்று சொல்லும்போது, அவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருந்தபோது எவ்வளவு சம்பளம் பெற்று வந்தார்களோ, அதைவிட, 100 ரூபாய், 200 ரூபாய் குறைவாக அவர்கள் இன்றையதினம் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் நாங்கள் நிரந்தரம் செய்கின்ற நேரத்தில், அந்த 2,500 பேரையும் சேர்த்து Time Scale-லே அவர்களை நிரந்தரம் செய்வதாக இருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். G.M.R. Vasavi, பிள்ளைப்பெருமாநல்லூர் P.P.N.,போன்ற அந்த மின் உற்பத்தி நிலையங்களிலே 400 கோடி ரூபாய் அதிகமாகப் பணம் செலுத்தி

மின்சாரம் வாங்குவதாகச் சொன்னார்கள். அது உண்மை. ஏன் என்று கேட்டால், நாப்தாவினுடைய விலை, நாங்கள் ஒப்பந்தம் செய்தபோது, என்ன விலை இருந்ததோ, அதைப்போல உலக மார்க்கெட்டிலே இன்றைக்கு பத்து மடங்கு விலை உயர்ந்திருக்கிறது. எப்போதும் ஒரு Power Purchase Agreement செய்கின்ற நேரத்தில், fuel cost, எந்தப் பொருளை அவர்கள் பயன்படுத்துகிறார்களோ, அந்த விலை ஏறுமானால், அந்த விலையேற்றத்தை மின் வாரியம்தான் கொடுக்க வேண்டுமென்று இந்தியா முழுவதும் இருக்கிறது. நாங்கள் எடுத்த முடிவு அல்ல அது. All India Electricity Regulatory Commission எடுத்த முடிவு. அது Regulatory Commission -- அந்த Commission- உடைய உத்தரவுபடிதான், அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. யாருக்குத் தெரியும் திடீரென்று நாப்தா விலை உயரும் என்று? நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால், மின்சாரமே இல்லை என்பதைவிட, கொஞ்சம் கூடுதலாகக் கட்டணம் கொடுத்தாவது, மின்சாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்போது அதைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால், பிள்ளைப்பெருமாநல்லூரைப் பொறுத்தவரையிலே, அவர்கள், "அந்த நாப்தாவிலிருந்து நாங்கள் gas-க்கு மாறுகிறோம்; எரிவாயு பயன்படுத்தப் போகிறோம்; அனுமதி தாருங்கள்" என்று உங்களிடத்திலே, 2 ஆண்டுக் காலம், போராடிப் பார்த்தார்கள்; கொடுக்கவில்லை. இப்போது, கலைஞர் ஆட்சி வந்தவுடனே, அவர்களுக்கு அனுமதி கொடுத்து இருக்கிறோம். எரிவாயு மூலமாக அவர்கள் மின் உற்பத்தி செய்தால், ஆண்டுக்கு 900 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு இலாபம் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை உறுதியாகச் சொல்கிறேன். எங்கே வேண்டுமானாலும் அதை விவாதிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலைமூலமாக மின் உற்பத்தியைத் தயாரிக்கின்ற திட்டம் அரசிடம் இருப்பதாகவும், அதன்மூலமாக, கடற்கரைப் பகுதிகளிலே காற்று அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே, அங்கே காற்றாலைகள் அமைத்து மின் உற்பத்தியைப் பெருக்குகின்ற எண்ணம் இருக்கிறது என்று சொன்னது பதிலுரையில் இல்லை. அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலைமூலம் மின்சாரம் உற்பத்தி



செய்கின்றவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஏனென்றால், அவர்கள் நிலம் வாங்குகின்ற இடத்திலே, ஒரு ஏக்கர் 30,000 ரூபாய், 10,000 ரூபாய் என்று இருந்தது, 2 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் என்று விலையை உயர்த்திவிட்ட காரணத்தாலே, கடலோரப் பகுதிகளிலே, காற்று வேகமாக வீசுகின்ற காரணத்தாலே, ஒரு மணிக்கு 18 கிலோ மீட்டர் வேகத்திலே காற்று வீசுமானால், அங்கே காற்றாலைகள் அமைக்கலாம் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது; அதை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறோம். அந்த நிலைமை ஏற்பட்டால், முதலமைச்சர் அவர்களும், மற்றவர்களும் கலந்துபேசி, கடற்கரை ஓரமாக --- ஏனென்றால், மத்திய அரசாங்கத்திடமும் அனுமதி பெற வேண்டும் --500 மீட்டருக்குள்ளே கட்டடம் கட்டவோ, அல்லது இப்படிப்பட்ட இயந்திரங்கள் பொருத்துவதற்கு அனுமதி தர மாட்டார்கள். சிறப்பாக மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்று அந்த நடவடிக்கைகளை பிறகு மேற்கொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி. (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** Speaker Sir, அவர் கூடன்குளம் மின் நிலையத்தைப் பற்றிச் சொன்னார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், முதலில். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். திரு. கோவிந்தசாமி, பேசுங்கள்.

பிற்பகல் 10-35

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலுரையிலே பல்வேறு அறிவிப்புகளையும், சலுகைகளையும் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளையேற்று, உள்ளாட்சித் துறைக்கு மின் கம்பங்கள் மாற்றுவது உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை நீங்கள் வழங்கியதற்கு அவர் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அவர் சார்பாகவே இன்னொரு கோரிக்கையையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய கிராமப்புற ஊராட்சிப் பகுதிகளிலே மிக அத்தியாவசியமான குடிநீருக்காகப் பயன்படுத்துகின்ற மின் மோட்டார்களுக்கும், தெரு விளக்குகளுக்காகப் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கும், கடந்த ஆட்சிக் காலத்திலே யூனிட்டுக்கு

ரூபாய் 1.60-லிருந்து ரூபாய் 3.60 என ஒரே சமயத்திலே சற்றேறக்குறைய 2.00 ரூபாய் ஒரு யூனிட்டுக்கு மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டதாக உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அந்தக் கடுமையான கட்டண உயர்வின் காரணமாக அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற அந்த 8 சதவிகிதம், உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கின்ற அந்தத் தொகை, மின்சாரக் கட்டணத்திற்கே பல ஊராட்சிகளுக்குச் சரியாகப் போய்விடுகிறது. இன்னும் சொல்லப்போனால், மின்சாரக் கட்டணத்தில் வரவு வைத்துக்கொண்டு, பணம் கொடுத்ததாகக் கணக்கு எழுதுகின்ற நிலைமை இருக்கிறது. பல ஊராட்சிகளில் செயல்பட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இதைப் பரிசீலித்து, மிக மிக அத்தியாவசியமான குடிநீருக்காகவும், தெரு விளக்குகளுக்காகவும் பயன்படுத்துகின்ற அந்த மின்சாரத்திற்கு, நீங்கள் கடந்தகாலத்திலே, கலைஞர் ஆட்சியிலே இருந்ததைப்போல, ஒரு யூனிட்டு ஒரு ரூபாய் 60 காசு என்கின்ற நிலையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, அறிவிப்பார்களா என்று இங்கே அறிய விரும்புகின்றேன்.

இன்னொரு விளக்கத்தையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகின்றேன். ஒப்பந்தத் தொழிலாளர்கள் 6 ஆயிரத்துச் சில்லறை பேர்கள் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் என்ற அறிவிப்பை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை கூட்டம் நடந்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு தொழிற்சங்க மாநாட்டிலே கலந்துகொண்டபோது, அங்கே அதையொட்டிய ஒரு செய்தி; "6 ஆயிரம் பேருக்கான பட்டியல் தயாரித்து, அவர்கள் மட்டும் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் என்று செய்தி வந்திருக்கிறதே?" என்று நான் ஆதங்கத்தோடு அப்போது கேட்டேன். "அதெல்லாம் இல்லை, அது உண்மை இல்லை. அவர்கள் நிரந்தரமாக்கப்படுவது குறித்து எல்லாத் தொழிற்சங்கங்களோடும் கலந்து பேசிதான் உரிய முடிவு எடுக்கப்படும்" என்று அறிவித்தீர்கள். ஆனால், இப்பொழுது அதே 6 ஆயிரம் என்ற எண்ணிக்கையை மட்டும் அறிவித்திருப்பது, அன்றைக்கு வந்த செய்தியை ஊர்ஜிதப்படுத்துவதைப்போல அமைந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொன் விழாவை நாமெல்லாம் சேர்ந்து கொண்டாடுகின்ற இந்த நல்ல வேளையில், முதலமைச்சர் அவர்கள், மின்சார வாரியத்திற்கும் பொன் விழா கொண்டாடுவதாக ஒரு நல்ல செய்தியை அறிவித்திருக்கிறார்கள். இந்தப் பொன் விழா ஆண்டில், தயவுசெய்து மீதியுள்ள 14 ஆயிரம் பேரையும் நீங்கள் நிரந்தரம் செய்தால், முழுக்க முழுக்க மின் விநியோகத்திலே முறையாக மின்சார



வாரியம் இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்கு வாய்ப்பாக அமையும். ஆகவே, இந்தப் பொன் விழா ஆண்டிலே, அதை நிறைவேற்றித் தரவேண்டும். நீங்கள் இங்கே சொன்னதைப்போல, "கலைஞர் ஆட்சி வந்தால், நாம் நிரந்தரப்படுத்தப்படுவோம்" என்ற எதிர்பார்ப்போடு காத்திருக்கும் அவர்களுக்கு இந்தப் பொன் விழா ஆண்டிலே நீங்கள் நல்ல செய்தியை தயவுசெய்து அறிவிக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டு, அறிவிப்பீர்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆயிரம் பேர்களை நிரந்தரமாக்குவதற்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 45 கோடி ரூபாய் செலவாகும் என்ற ஒரு நிலை இருக்கிறது. ஆனால், உறுதியாகச் சொல்கிறேன்; கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே அத்தனை பேரும் நிரந்தரமாக ஆக்கப்படுவார்கள்; படிப்படியாக, seniority அடிப்படையிலே நிரந்தரமாக ஆக்கப்படுவார்கள்.

உள்ளாட்சிகளுக்கு ஒரு யூனிட்டுக்கு, ஒரு ரூபாய் 60 காசுக்கு மின்சாரம் வழங்கப்படுமா என்று கேட்டார். அதுபற்றியெல்லாம் பேசியிருக்கிறோம். அதற்காகத்தான் தனியாக ஒரு மின் உற்பத்தி நிலையத்தையே அவர்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அப்படி வந்தால், சராசரியாக 3 ரூபாய் 50 காசுக்குப் பதிலாக, 2 ரூபாய் 20 காசுக்கு அவர்களுக்கு மின்சாரம் கிடைக்கும். அதன்மூலம் உள்ளாட்சித் துறை ஆண்டொன்றுக்கு 120 கோடி ரூபாயை மீதப்படுத்த முடியும். அந்த நடவடிக்கைகள்பற்றியும் நாங்கள் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள், எரிசக்தித் துறையில் 311 வெட்டுத் தீர்மானங்களும், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் 128 வெட்டுத் தீர்மானங்களும் கொடுத்திருக்கிறார்கள். இந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) சிவபுண்ணியம், உட்காருங்கள். இன்னொரு மானியக் கோரிக்கை விவாதிக்க வேண்டியிருக்கிறது. வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை இருக்கிறது. உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14 - எரிசக்தித் துறை. 2-4-2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,158,29,68,000/-, மூலதனக் கணக்கில் ரூ.100,00,00,000/ -மற்றும் கடன் கணக்கில் ரூ.3,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

முற்பகல் 10-40

### (ஆ) கோரிக்கை எண் 35 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35- பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ரூ.32,57,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.15,82,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (இ) கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,087,96,32,000/-, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.81,28,94,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 161, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 297, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1167, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 217, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2014, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2578, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2668, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1804, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2275, திரு. சு. குணசேகரன்.

**திரு. க. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4101, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2965, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2961, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3756, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3973, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4946, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2163, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2753, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரக்கோணம் வட்டம், சோளிங்கர் தொகுதியில் உள்ள காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3378, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக விவசாயிகள் நிலத்தடி நீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தவும், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும் 90 சதவிகித மானியத்தில் சொட்டு நீர்ப் பாசன முறையைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3211, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதியில், காவேரிப்பட்டணத்தில் உழவர் சந்தை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1170, திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னையில் கடந்த 9 வருடங்களாக விழுந்து வரும் பூச்சியினைக் கட்டுப்படுத்தும் திட்டம் குறித்தும், தென்னை விவசாயிகளுக்கு வங்கிகள் தாராளமாகக் கடன் உதவி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3291, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் அரசுத் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3190, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3352, திரு. எஸ். ஜான் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜான் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில், வாழை விவசாயிகள் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு இழப்பீடு அல்லது நிவாரணம் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3339, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைத் துறையில் விவசாய மக்களுக்குப் பயன்படாத மாபெரும் விதையை அறிமுகப்படுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3532, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைத் துறையின் சார்பில் கபிலர்மலைத் தொகுதியில் உள்ள மோகனூர் ஒன்றியத்தில் தானியக் கிடங்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3157, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதியில், கரும்பு அதிகமாகப் பயிரிடுவதால் சர்க்கரை ஆலை புதியதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3477, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பெற்ற விவசாயக் கடனை, கடன் தள்ளுபடி எனத் தமிழக அரசு அறிவித்ததை அறியாமல் அக்கடனைக் கட்டியவர்களுக்கு அப்பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3,592, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குடுமியான்மலையில் செயல்பட்டுவந்த அண்ணா பண்ணை தற்சமயம் பெயருக்குச் செயல்படுகிறது; அண்ணா பண்ணை மீண்டும் நன்கு செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5,537, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, வல்லத்திராக்கோட்டை, பழப் பண்ணையில் காலியாக உள்ள மேலாளர் பதவிக்கு மேலாளரை அரசு உடனடியாக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5,521, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்தில் ஜெட்ரோபா பயிர்கள் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1600, திரு. ஆர்.டி. கணேசன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1555, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில், வாழை மற்றும் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் பாதிப்பிற்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2408, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல், இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், முள்ளுவாடி ஊராட்சி, துரைபண்ணை நகரில் நாற்பது ஏக்கரில் இயங்கிவந்த எண்ணெய் வித்துத் துறை அலுவலகத்தை மீண்டும் அதே இடத்தில் இயங்க வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2430, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினத்தில் வேளாண் கல்லூரி அமைப்பதற்கு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2151, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் முந்திரி ஏற்றுமதி வளாகம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2042, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் தோட்டக்கலைத் துறை சார்பாகப் பழவகை மரங்கள் பயிர் செய்வதற்கு மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1999, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னை மரத்திலிருந்து தேங்காய் பறிக்க, வேளாண் விஞ்ஞானிகள் குழு அமைத்து புதிய யுக்தியினைக் கண்டறிய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1949, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1909, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, காட்டுமன்னார்கோயில் வட்டம், சோழவரத்தில் புதிதாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்து, அப்பகுதி விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1859, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், நவல்பூர் அரசுப் பண்ணையில் குட்டை, நெட்டை தென்னங்கன்று ஒன்று ரூ.75/-என்று விற்கப்படுவதை விலை குறைத்து ரூ.40/-என்று விற்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1410, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் வேளாண் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4968, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4988, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதியில் உள்ள உழவர் பெருமக்களுக்குச் சலுகை விலையில் தரமான விதைநெல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4850, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம், சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, சங்கரன்கோவில், தென்காசி போன்ற இடங்களில் நிரந்தரமாக நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4787, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர் தொகுதி, திருநாவலூர் ஒன்றியத்தைச் சுற்றியுள்ள எழுபதுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடையும் வகையில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்று திருநாவலூரில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4813, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி, புவனகிரியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4736, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர் மற்றும் விவசாயக் கருவிகளை உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1163, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதியில் அடங்கிய கிராமப் பகுதி விவசாயப் பெருமக்களுக்கு விதை மற்றும் உரம் தேவையான அளவில் தட்டுப்பாடின்றிக் கிடைக்கவும், தரமான விதைகள் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1670, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பல்லடம் தொகுதியில் உள்ள கண்ணம்பாளையம் விதைப் பண்ணை அமைக்கப்படும் பகுதியின் அருகில் உள்ள குடியிருப்பு நிலங்களை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1603, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசிபாளையம் தொகுதியில் வேளாண்மையை அபிவிருத்தி செய்ய வேளாண்மை ஆராய்ச்சி மையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1527, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1621, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பரவாய் ஊராட்சியில் பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1301, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்ப, கரும்பு விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு 2 ஏக்கர் மட்டுமே கரும்பு பதிவு செய்ய ஆலை நிர்வாகம் விதிக்கும் கட்டுப்பாட்டை நீக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைகக வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4185, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் பல்வேறு இடங்களில் கட்டப்பட்டுள்ள வேளாண் அலுவலர் மற்றும் வேளாண்மை விரிவாக்க அலுவலர் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அவற்றைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3902, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் பகுதியில் தரமான விதைகளை விவசாயிகளுக்கு மலிவு விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1270, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை உழவர் சந்தைகளில் விற்பனை செய்ய ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1025, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதியில் உற்பத்தியாகும் நெல் உமியிலிருந்து உரம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3671, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளம் பேரூராட்சியில் மிளகாய் வற்றல் விளைபொருளைப் பதப்படுத்தி, பத்திரமாக வைக்கும் வகையில் குளிரூட்டப்பட்ட கிட்டங்கி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1082, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதி, நெல்லிக்குப்பம் ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3617, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்குத் தனியார் சர்க்கரை மில்களில் அரசு நிர்ணயித்துள்ள கரும்பு விலை வழங்கிடுவதை உத்தரவாதம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3699, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் சர்க்கரை ஆலை நிறுவனங்கள் அரசு நிர்ணயம் செய்யும் கரும்பு விலையை விவசாயிகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1776, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில் அரசு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1528, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல், புறநகர்ப் பகுதியில் நவீன வசதிகளுடன்கூடிய தக்காளி, கேரட் மற்றும் கனி வகைகளைப் பாதுகாக்கும் சந்தை வசதியினை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 605, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை உலர்த்துவதற்கு சிமெண்ட் களம் கட்டப்படாத அனைத்துக் கிராமங்களிலும், சிமெண்ட் களம் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 454, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 584, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 622, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் உழவர் சந்தை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 762, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த மண் ஆய்வு உதவியாளர்களின் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 811, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாய சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 815, திருமதி ரா. லீமா ரோஸ்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் பணியை வரன்முறை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 855, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோபிசெட்டிபாளையத்தில் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 959, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்க மூலிகைப் பண்ணை, தோட்டப் பயிர்கள், காய்கறிகள் பயிர் செய்ய நவீன பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1058, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி முழுவதும் விவசாயிகள் வாழும் பகுதியானதால் மேல்மலையனூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1109, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதியில் கேளூர் சமத்துவபுரம் பகுதியில் 200 ஏக்கர் நிலம் உள்ளது. அங்கு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 878, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், இலாபத்தில் இயங்கும் விற்பனைக் கூடங்களுக்கு விரிவாக்கத் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1103, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வை விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1196, திரு. இரா. துரைக்கண்ணு.



**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுகா, திருமண்டங்குடி கிராமத்தில் அமைந்துள்ள திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் வெட்டி அனுப்பிய கரும்புக்கு உண்டான கடந்த 2006-2007 பருவத்திற்கான கரும்பு நிர்ணயத் தொகையை வழங்காமல் இருப்பது பற்றியும், உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1266, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியிலுள்ள விவசாயப் பெருமக்களுக்கு உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் மானியமாக வழங்கிட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக்கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1235, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதியில் குப்பணம்பட்டி, வாலாந்தூர், நாட்டாபட்டி, செல்லம்பட்டி பகுதிகளில் நெல் கொள்முதல் நடத்தி அரசு எடுத்தாலும் விவசாயிகளுக்கு உரிய காலங்களில் பணம் பட்டுவாடா செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1373, திரு. அ. தமிழ்மாக, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1333, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டெல்டா விவசாயிகளுக்கு 3 அங்குல பி.வி.சி. பைப்புகளை மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1757, திரு. த. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1793, திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1661, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் விவசாயப் பயன்பாட்டிற்காக அனைத்துக் கிராமங்களிலும் சிமெண்ட் களம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3170, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, திருமங்கலம் தாலுகாக்களில் முந்திரி பயிரிடும் பரப்பைக் கண்டறிந்து விவசாயிகளுக்குப் பரிந்துரை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3001, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் கலசப்பாக்கம், ஆதமங்கலம், புதூர், மல்லவாடி, துரிஞ்சாபுரம் ஆகிய பகுதிகளில் வாழும் விவசாயிகளின் நலனை முன்னிட்டு புதிய ஒழுங்குமுறை வேளாண்மை விற்பனைக் கூடங்களை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3390, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் தொகுதி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு விவசாயிகள் நெல் கொள்முதல் அதிகமாக வருவதால், விளைபொருட்களை இருப்பு வைக்க சேமிப்புக் கிடங்கு கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2689, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் தக்காளி பதப்படுத்தும்

தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2726, திரு. து. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2605, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகள் விளைவிக்கின்ற விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலையினை அரசு நிர்ணயம் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,28,94,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை* நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள்,

* 389 முதல் 512 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம். ஏழு பேர் பேச இருக்கிறார்கள். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன். 15 நிமிடங்களுக்கு அதிகப்படாமல் பேச வேண்டும். கட்டாயம் 15 நிமிடங்களுக்கு மேலானவுடன் மணியடித்து உட்கார வைத்துவிடுவேன்.

***திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா
எழுவாரை எல்லாம் பொறுத்து."

என்பது வான்புகழ்கொண்ட வள்ளுவரின் வேதவாக்கு. வெண்தாடிச் சிங்கம், ஈரோட்டுத் தங்கம், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவருடைய அறிவையும், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவினுடைய ஆற்றலையும், அன்னை சத்தியா அவர்கள் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வராக, விரல் அசைவிலே விந்தை மாமனிதனாக, எண்ணற்ற தமிழ் மக்களின் இதயங்களிலே குடிகொண்டிருக்கின்ற கோமகனாக, தமிழகத்தினுடைய எங்கள் வீட்டுப் பிள்ளையாக, துப்பாக்கித் தோட்டாவுக்குக்கூட தன்னுடைய தொண்டையிலே குடியிருப்பதற்கு இடம் கொடுத்த எட்டாவது வள்ளலாக, புன்னகை மன்னனாக, பூவிழிக் கண்ணனாக, பொன்மனச் செம்மலாக, இராமாவரம் தோட்டத்து ரோஜாவாக என்றென்றைக்கும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற எங்கள் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தாய் உள்ளத்தையும் ஒருங்கே பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கின்ற பாரத தேசத்திலே, நூறு கோடியில் ஒருவராய், பாரதி கண்ட புதுமைத் தாயாய் வாழும் எங்கள் அன்னையே,

'வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி,
மக்களின் மனதில் நிற்பவர் யார்,
மாபெரும் வீரர் மானம் காப்போர்
சரித்திரம்தனிலே நிற்கின்றார்'

என்ற வைர வரிகளின் வார்ப்பிடமாக, வீரமகள் போராட, வெற்றி மகள் பூச்சூட, மானம் ஒரு வாழ்வாக, வாழ்வினிது தேனாக, மலை குலைந்தாலும் நிலை குலையாத மாதரசியாக, மக்கள் நலம் பேணிக் காக்க, தொடர்ந்து போராடுகின்ற பேரரசியாக, கடமையின் வடிவாக, கண்ணியத்தின்

உயிராக, கட்டுப்பாட்டின் பிறப்பிடமாக, அன்பு, அறிவு, துணிவு ஆகியவற்றின் இலக்கணமாக, குனிந்தால் தங்கமாக, கொதித்தால் சிங்கமாக, பார்த்தால் தென்றலாக, பகைத்தால் பிரளயமாக வாழ்ந்து வருகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஆறு மொழி பேசக்கூடிய ஆற்றல்மிக்கவரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளரும், எங்களது குடும்பத்தினுடைய குல விளக்குமான டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய பொற்பாதங்களைப் பணிவன்போடு வணங்கி. . . (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான்கு நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) நான்கு நிமிடங்கள் ஆகிவிட்டன என்று சொல்கிறேன்; வேறு ஒன்றுமில்லை.

**திரு. கு. பாண்டுரங்கன்:** அணைக்கட்டுத் தொகுதியிலே, இரண்டாவது முறை யாரும் நின்றதும் இல்லை; வென்றதும் இல்லை. ஆனால், அந்த வரலாற்றை மாற்றி, மீண்டும் அணைக்கட்டுத் தொகுதியிலே போட்டியிடுவதற்கு, கழகத்தின் சார்பிலே போட்டியிடுவதற்கு ஒரு வாய்ப்பினை வழங்கி, என்னை வெற்றிபெறச் செய்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வாக்குகளை வழங்கி, என்னை வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியையும், வணக்கத்தையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். வேளாண்மைத் துறையின்மீது பேசக்கூடிய வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய கனிவான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-55

வேலூர் மாவட்டத்திலே, பொதுவாக தொடர்ந்து பருவ மழை பொய்த்து வருகின்ற காரணத்தாலே, குடிதண்ணீர்ப் பற்றாக்குறையும், உழவுத் தொழிலுக்குத் தண்ணீர்ப் பற்றாக்குறையும் இருக்கின்ற காரணத்தாலே, வேலூர் மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை, அந்த மாவட்ட மக்களுடைய குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக, ஒரே ஒரு நிரந்தரத் தீர்வு ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் என்பது, அனைவரும் அறிந்த ஒன்று. தற்போது, தருமபுரி



மாவட்டத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியினுடைய உதவியோடு, அந்த இரண்டு மாவட்டங்களுக்கும், குடிதண்ணீர் வசதி செய்து தரப்படும் என்று அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு நிலைப்பாட்டிலே, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி அந்த நிதியுதவி கொடுக்க மறுத்தாலுங்கூட, ஓர் அறைகூவலாக அந்தத் திட்டத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. ஆகவே, வேலூர் மாவட்டத்தினுடைய குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை, வேலூர் மாவட்டத்திற்கும் நீட்டித்து, விஸ்தரிப்பு செய்து தர வேண்டும் என்று தமிழக அரசுக்கு, வேலூர் மாவட்ட மக்கள் சார்பாக நான் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்ததாக, நான் முன்னரே குறிப்பிட்டதைப்போன்று, தொடர்ந்து பருவ மழை பொய்த்து வருகின்ற காரணத்தாலே, வேலூர் மாவட்டத்திலே இருக்கின்ற திறந்தவெளிக் கிணறுகளிலும், குளங்களிலும், ஏரிகளிலும், தண்ணீர் முற்றிலுமாக வறண்டுவிட்ட காரணத்தாலே, உழவுத் தொழிலுக்குத் தேவையான தண்ணீர் போதுமானதாக இல்லாத காரணத்தாலே, அங்கே கடுமையான வறட்சி நிலவுகின்றது. அந்த வறட்சியைப் போக்குவதற்காக, வேலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடுமட்டுமின்றி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, வேலூர் மாவட்டத்திலே திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. அந்தப் பல்கலைக்கழகத்திற்கு இடத்தைத் தேர்வு செய்கிறபோது, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இறைவன்காடு என்கிற பகுதியிலே, தங்க நாற்கர சாலை அமைந்திருக்கின்ற அந்தப் பகுதியிலே, திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைவதற்குப் போதுமான இடம் இருக்கின்ற காரணத்தாலே, தகுந்த இடம் இருக்கின்ற காரணத்தாலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் அன்றைக்கு இருந்த மாவட்ட நிருவாகத்தால் இறைவன்காடு பகுதியிலே, திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைவதற்குப் பொருத்தமாக இருக்கும் என்று அரசுக்குக் கருத்துரு அனுப்பி வைத்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக, அங்கே திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைவது இயலாமல் போய்விட்டது. ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, இப்போது இருக்கின்ற தமிழக அரசு, தேர்வு செய்யப்பட்ட அந்த இடத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மாற்றி, இன்றைக்கு வேறு பல பகுதிகளைப் பார்வையிடுவதாகப் பத்திரிகைகள் வாயிலாக நான்

அறிகின்றேன். ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட இடம், மாவட்டத்தினுடைய நிருவாகத்தாலே, அது பொருத்தமான இடம் என்று அரசுக்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளபோது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, அந்த இடத்தை மாற்றி, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை வேறு இடத்திற்குக் கொண்டு செல்வது பொருத்தமாக அமையாது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள், "கையிலே வெண்ணெய் இருக்கிறபோது, நெய்க்கு ஏன் அலைகின்றீர்கள்?" என்று. அதைப்போன்று, நங்க நாற்கா சாலையிலே இறைவன்காடு பகுதியிலே பொருத்தமான இடம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைவதற்குத் தேர்வு செய்யப்பட்டதற்குப் பிறகு, ஆட்சி மாற்றம் காரணமாக, அந்த இடத்தை மாற்றுவது, அவ்வளவுப் பொருத்தமாக இருக்காது என்பதை மட்டும் அரசுக்கு இந்த நேரத்திலே கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாண்டு அவர்கள், அரசியல் காழ்ப்பின் காரணமாக. . . (குறுக்கீடு) நான் அப்படித்தான் கூப்பிடுவேன். எங்கள் ஊர்க்காரனை அப்படிக் கூப்பிட்டுத்தான் பழக்கம். வேண்டுமானால், அவரைப் பாண்டுரங்கன் என்று கூப்பிட்டுவிட்டுப் போகிறேன். உங்களுக்கு எதற்கு எங்கள் மாவட்டத்துப் பிரச்சினை? (சிரிப்பு) அவர், ஆட்சி மாற்றத்தின் காரணமாக, காழ்ப்புணர்ச்சி என்கிறார். அதையே நான் சொல்லலாம். மெடிக்கல் காலேஜைப் போன முறை போராடி, நான் கொண்டுவந்து நம்முடைய மாவட்டத்திற்கு அது காட்பாடி தொகுதியில் அமைவதற்கு, இடமெல்லாம் தேர்வு பண்ணி எல்லாம் நடந்து முடிந்த நேரம் பார்த்து, ஆட்சி மாறிப் போய்விட்டது. அதை நீங்கள் தூக்கிக்கொண்டுப் போய் உங்கள் தொகுதியில் வைத்துக் கொண்டீர்கள். அன்றைக்கு நீங்கள் மந்திரியாக இருந்தபோது அரசியல் காழ்ப்புணர்ச்சி என்று நான் சொல்லவில்லை. இப்போது பல்கலைக்கழகத்தை எங்கே வைப்பது என்று நாங்கள் நான்கைந்து இடங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால், ஏதோ அணைக்கட்டுத் தொகுதியிலே வைக்கக்கூடாது என்பதில்லை. அணைக்கட்டுத் தொகுதி எங்களுக்கு வேண்டாத தொகுதி அல்ல. ஏனென்று கேட்டால், அது என்னமோ அணைக்கட்டுத்



தொகுதியே உங்களுக்கு ஓட்டு போட்டது மாதிரியல்ல; ஏதோ ஒரு 30 ஓட்டில் நீங்கள் வந்துவிட்டீர்கள். அதைப்பற்றி ஒன்றும் பெரிய பிரச்சினை அல்ல. ஆகையால், எங்கே வைப்பது என்று நாங்கள் இன்னும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். அரசியல் காழ்ப்புணர்ச்சி ஒன்றும் இதில் கிடையாது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள், திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30 ஓட்டில் ஜெயித்தாலும் சரி, ஒரே ஓட்டில் ஜெயித்தாலும் சரி, அது தேர்தல் ஆணையம் அறிவிக்கிற தேர்தல் முடிவே தவிர, அமைச்சர் அறிவிக்கிற முடிவு அல்ல, வெற்றி என்பது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், பேசுங்கள்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலைத் தந்திருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இந்த மானியத்திலே பேசியிருந்தால் இந்த வம்பே வந்திருக்காது. வேளாண்மைத் துறை மானியத்தை ஒட்டியே நீங்கள் பேசியிருக்க வேண்டும்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** வாக்குகளின் எண்ணிக்கையைவிட மக்களுடைய எண்ணங்கள்தான் முக்கியம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், ஒரு தவறான தகவலைத் தந்திருக்கின்றார். அவருடைய தொகுதியிலே மருத்துவக் கல்லூரி அமைவதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டது என்றும், ஆட்சி மாற்றத்தின் காரணமாக அந்த இடம் மாற்றப்பட்டது என்றும், ஒரு தவறான தகவலைச் சொல்லுகின்றார். இன்றைக்கும் அவர்தான் பொதுப் பணித் துறை அமைச்சர். அவரிடத்திலே கோப்புகள் இருக்கின்றன. அவர் பார்த்த இடம் ஏரி. ஏரியிலே கட்டடங்கள் கட்டுவதற்கு உகந்த இடம் இல்லையென்று பொதுப் பணித் துறை அதிகாரிகளால் அந்த இடம் நிராகரிக்கப்பட்டதற்குப் பிறகுதான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த பொதுப் பணித் துறை அதிகாரிகள்தான் திறக்கக் கூடாது என்று சொன்னார்கள், நான் பொதுப் பணித் துறை அமைச்சராக புதிய இருந்தபோது. நான் பொதுப் பணித் துறை அமைச்சர் பதவியிலிருந்து இறங்கியவுடன், நீங்கள் வந்தவுடனே என்னவென்று கேட்டீர்கள். அது ஏரியில்லை என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே ஏரியிலே எங்கேயும் கட்டவில்லையா? விழுப்புரத்திலே இன்று கட்டப்பட்டிருக்கின்ற கலெக்டர் ஆபீஸ், ஒரு ஏரியிலே கட்டப்பட்டதுதான். பல இடங்களில், ஏரியானது உதவாத நிலையில், பாசனம் இல்லாத நிலையில் அந்தப் பகுதியிலே கட்டுவதிலே தப்பு இல்லை. அதில் இருக்கின்ற தண்ணீர், பாசனத்திற்குப் போகாமல் அங்கே கட்டினதுதான் தப்பு. அது பாண்டுரங்கனுக்குத் தெரியும். அந்த [illegible] காரணத்தால், கழிந்தோர் ஏரியிலே பாசனப் பகுதி இல்லாத காரணத்தினால்தான், அதை அன்றைக்குத் தீர்வு செய்தேன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே இருக்கின்ற பெருமளவு தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர், அங்கே இருக்கின்ற விளைநிலத்தையும் குடிதண்ணீரையும் பாதிக்கின்றது என்ற காரணத்தினாலே, தோல் பதனிடும் தொழிலாளர்களும், உழவுப் பெருமக்களும், தோல் பதனிடும் தொழிலதிபர்களும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற அந்தக் கழிவுநீரை, சென்னையிலே இருக்கின்ற வங்கக் கடலுக்குக் கொண்டு வந்து விட, குழாய்கள்மூலமாகக் கொண்டுவர வேண்டும் என்று அங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்த அடிப்படையிலே தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை... (மணியடிக்கப்பெற்றது) நான் இன்னும் ஆரம்பிக்கவேயில்லை. குழாய்கள்மூலம் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தருமபுரி மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயப் பெருமக்களுடைய வேண்டுகோளை ஏற்று, பொதுமக்களுடைய வேண்டுகோளை ஏற்று,



மோர்தானா அணை திறக்கப்பட வேண்டுமென்று நாளையதினம் கண்டன ஆர்ப்பாட்டம் அறிவித்தவுடனே, இன்றைக்கு இருக்கின்ற ஆட்சியாளர்கள் உடனடியாக அந்த அணையைத் திறப்பதற்குண்டான உத்தரவை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்தில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. என்னுடைய பெருந்தன்மையை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததினாலே நான் அதை அறிவிக்கவில்லை. பொதுவாக ஓர் அணையைத் திறக்க வேண்டுமென்றால் சில rules உண்டு. இன்னின்ன தேதியில், இந்தப் பருவத்திற்கு, இந்தப் பயிருக்குத் திறக்கப்படும் என்று இருக்கிறது.

ஓர் அணையைத் திறப்பதற்கு முன்னால்—நான் நேரம் இல்லாத காரணத்தால் அதைச் சொல்லவில்லை—மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்து அறிக்கை வரவேண்டும், இன்னின்ன பயிருக்கு இப்போது தேவை என்று. பொதுப் பணித் துறையைக் கேட்டு ஓர் அறிக்கையை அவர் அனுப்புவார். அதற்குப் பிறகுதான் திறக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே இருக்கிறார்; அவருக்குத் தெரியும். ஆனால், மோர்தானா அணைக்கு இந்தமாதிரி rules எதுவும் கிடையாது. 5 வருடங்களாக நீங்கள் அதற்கு rules எதுவும் போடவில்லை. அந்தக் குற்றச்சாட்டைக்கூட நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நீங்கள், உங்களுடைய தலைவி, "எப்போதும் நாங்கள் டிசம்பரிலேயே திறந்தோம்" என்று சொன்னார்களே, அதுவும் இல்லை என்று நான் சொன்னேன். ஆகையினால், நேற்று, நீங்கள் இரத, கஜ, துரக பதாதிகளோடு நாளைக்குப் போராட்டம் நடத்துவீர்கள்; அதனாலே நாங்கள் பயந்துவிட்டோம் என்று அல்ல. ஆனால் ஒரு பிரச்சினை, நம்முடைய மாவட்டத்திற்கு, விவசாயத்திற்குத் தண்ணீர் வேண்டும் அவ்வளவுதானே? அதைத் திறக்க வேண்டும் என்பதற்காக, இன்று மாலை 5 மணிக்கே திறப்பேன் என்று சொல்லியிருக்கிறேன். நான் அப்போது உண்ணாவிரதம் மேற்கொண்டு உட்கார்ந்ததற்குப் பிறகு, திறந்து, RDO-வை அனுப்பி, "நான் திறந்துவிட்டேன்; உண்ணாவிரதத்தை முடியுங்கள்" என்று என் உண்ணாவிரதத்தைப் பாதியில் முடிக்க வைத்தீர்கள். நான் அப்படியில்லை. நாளைக்கு நீங்கள் உண்ணாவிரதத்தை வைத்திருக்கிறீர்கள். ஆனால், இன்று மாலை 5 மணிக்கு மோர்தானா அணை திறக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227653
சென்னை-600 008

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம். (குறுக்கீடு) இருங்கள், நீங்கள் சொன்னதற்கு நான் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், பேசுங்கள். One minute. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** He is creating a bad precedent. நானும் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்திருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர், கட்சிகளுடைய தலைவர்கள் எழுந்து பேசலாம். கொறடாவுக்கு இவ்வாறு கிடையாது. நிறுத்துங்கள், அதைக் கொஞ்சம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செங்கோட்டையன், உட்காருங்கள். திரு. பாண்டுரங்கன். (குறுக்கீடுகள்) வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது இந்த ஆட்சியை யாராலும் மாற்ற முடியாது என்று சொன்னார்கள். நேற்றைக்கு அம்மா அவர்கள் அறிவித்த கண்டன ஆர்ப்பாட்டத்திலேயே இன்றைக்கு மேட்டூர் அணை திறக்கப்படுகிறது என்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விவசாய மானியக் கோரிக்கைக்குள்ளேயே வரவில்லை இன்னும்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** வருகிறேன், வருகிறேன். காட்சிகள் மாறும், காலங்கள் மாறும், ஆட்சியும் மாறும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் என்னுடைய தொகுதிக்கு வருகிறது, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்கு வருகிறது மாண்புமிகு குடியாத்தம் எம்.எல்.ஏ. தொகுதிக்கு வருகிறது. அப்படி இந்தத் தண்ணீரை திறந்தே ஆகவேண்டும் என்ற நிலை இருந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர் எனக்குத் தெரிவித்திருக்கிறாரா? அரசாங்கத்திற்குக் கடிதம் அனுப்பியிருக்கிறாரா? மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டிருக்கிறாரா? எதையும் கேட்காமல், யாரோ ஒருவர் அறிக்கை விட்டால் அதைப் பேசுகிறீர்களே! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.



***திரு. பி.என். பெரியண்ணன்:** பிறந்தாலும், வாழ்ந்தாலும் பேர் சொல்ல வேண்டும் . . .

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று குரலெழுப்பினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், யாருக்கும் அனுமதி இல்லை.

**திரு. பி.என். பெரியண்ணன்:** கலைஞர்போல் யாரென்று உலகம் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) என்று தோஹா மாநாட்டினுடைய (மேசையைத் தட்டும் ஒலி) செயலுக்கேற்ப வாழ்ந்திடும் பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) உலகிலே வாழ்ந்துவரும் பல நாடுகளுக்குத் தமிழாய்ந்த தமிழர், (மேசையைத் தட்டும் ஒலி) சமத்துவ நாயகர் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் குறள்நெறி நல்லாட்சிக்குப் பெருமை சேர்க்கும் வகையில்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், நான் முதலில் 15 நிமிடங்கள் என்று சொல்லியிருக்கிறேன். 16 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது. இதற்குப் பிறகும் நான் allow பண்ண முடியாது. (குறுக்கீடுகள்)

**திரு. பி.என். பெரியண்ணன்:** பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னை ஊக்கப்படுத்தும் வகையிலே, இளைஞர்களின் எழுஞாயிறு, என் வாழ்வின் கலங்கரை விளக்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைச் சமர்ப்பித்து என் உரையைத் தொடங்குகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியண்ணன், இருங்கள். திரு. பாண்டுரங்கன், இரண்டு நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) பெரியண்ணன், உட்காருங்கள். திரு. பாண்டுரங்கன், இரண்டு நிமிடங்கள் தருகிறேன். உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) Not allowed.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலும், மதுரையிலும், சென்னையிலும் Terminal Markets

அமைக்கப்படும் என்று கடந்த நிதிநிலை அறிக்கையிலும், மானியக் கோரிக்கையிலும் அறிவித்தீர்கள். ஆனால் இன்றைக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே, தற்போதுதான் இடம் தேர்வு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்திருக்கின்றீர்கள். அந்தத் திட்டம் எப்போது, எந்த ஆண்டிற்குள் முடிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக, இன்றைக்கு, . . . (குறுக்கீடு)

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11-11-க்கு முடிக்க வேண்டும். சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்)

**திரு. கு. பாண்டுரங்கன்:** கோவை மாவட்டத்திலே இருக்கின்ற பல்லடத்திலே வெங்காயம் பதனிடும் தொழிற்சாலை அமைப்பதற்காகவும், அதேபோன்று திண்டுக்கல் மாவட்டத்திலே மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காகவும், அதேபோன்று தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் திராட்சைப் பழங்களுக்குக் குளிர்பதனக் கிடங்கோடு வணிகக் கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும், அதேபோன்று இன்றைக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்திலே மாங்கனிக்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு வசதியுடன் கூடிய கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும், ஓசூரிலே தக்காளிக்காக குளிர்பதனக் கிடங்கு கட்டமைப்புடன்கூடிய வணிக வளாகம் அமைக்கப்படும் என்றும் அறிவித்திருக்கின்றீர்களே, அறிவித்து பல மாதங்களாகியும் இதுவரையிலும் அந்தத் திட்டங்களிலே ஒன்றையாவது நீங்கள் செயல்படுத்தியிருக்கின்றீர்களா என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தஞ்சாவூர் மாவட்டத்திலே இருக்கின்ற பட்டுக்கோட்டையிலே தென்னை வணிக வளாகம் அமைக்கப்படும் என்று சொன்னீர்களே, அமைத்தீர்களா?

எல்லாவற்றுக்கும் மேலாக, மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலைகளைத் திறப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருந்தீர்களே. அந்தத் திட்டங்கள், மதுரா சர்க்கரை ஆலையும், மதுராந்தகம் சர்க்கரை ஆலையும் இப்போது துவங்குவதற்கு ஆவன செய்யப்பட்டிருக்கின்றதா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த அறிவித்த திட்டங்களெல்லாம், இன்றைக்குக் காகிதத்திலே இருக்கின்றனவேயொழிய, என்றைக்கு அவை செயல்பாட்டிலே வரும் என்பதை நீங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன். (குறுக்கீடுகள்)

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிறந்தாலும், வாழ்ந்தாலும் பேர் சொல்ல வேண்டும்;
இவர்போல, கலைஞர்போல யார் என்று உலகம் சொல்ல வேண்டும்"
(மேசையைத் தட்டும் ஒலி)

தோஹா மாநாட்டினுடைய செயல் நிலைகளுக்கேற்ப, இந்த உலகத்திலே வளரும் நாடுகளும் வாழ்த்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தலைவர்களின் ஒப்பற்ற தலைவர், தமிழாய்ந்த தமிழர், சமத்துவ நாயகர், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) குறள்நெறி நல்லாட்சிக்குப் பெருமை சேர்க்கும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களால் இம் மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2007-2008 ஆம் ஆண்டுக்கான தமிழக நிதிநிலை விளக்கக் கூட்டத்தொடரிலே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னை ஊக்கப்படுத்திவரும் இளைஞர்களின் எழுஞாயிறு, என் வாழ்வின் கலங்கரை விளக்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், என் நெஞ்சம் நிறைந்த நன்றியைச் சமர்ப்பித்து, என் உரையைத் தொடங்குகிறேன்.

முதலிலே, ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, அன்றைய அக்கறையற்ற ஆட்சியாளர்கள், 'தருமபுரி மாவட்ட மக்கள் கவலைப்பட வேண்டாம், மாவட்ட வளர்ச்சி கருதி, சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்' என அறிவித்தார்கள். சீரழிந்ததுதான் மிச்சம். ஆனால், தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சி மீண்டும் மலர்ந்து, மிகப் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் முன்னேற்றம் காண, 100 கோடியில் அரசு மருத்துவக் கல்லூரி, 40 இலட்சத்திலே பின்னலாடைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றைத் தாயுள்ளத்தோடு வழங்கியதோடல்லாமல்,

ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தை மத்திய அரசின் பின்தங்கிய நிதியில் சேர்க்க வேண்டுமென மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, திட்டக் கமிஷனையும் வலியுறுத்திவரும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், உறுதுணையாகப் பணியாற்றிவரும் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும், தருமபுரி மாவட்ட மக்களின் சார்பில் வணங்கி, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாம் முறையாக, தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு முதல்வர் தலைவர் அவர்களைப் பார்த்து, காலியான கஜானாவை வைத்துக்கொண்டு எதுவும் செய்ய முடியாது என வஞ்சகம் பேசியவர்களின் வாய்களையெல்லாம் அடைக்கின்ற வகையில்,

**"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"**

என்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அவர் காட்டிய வழியில் அள்ள அள்ளக் குறையாத தனது அறிவாற்றலால், அனுபவ ஆற்றலால் அன்றாடம் ஒரு திட்டத்தை நிறைவேற்றி வருபவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

*முற்பகல் 11-15*

மாண்புமிகு கலைஞர் அவர்கள் அவ்வாறு நிறைவேற்றிய திட்டங்களாவன:

இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ தரமான அரிசி; சுமார் 7 ஆயிரம் கோடி கூட்டுறவு விவசாயக் கடன் தள்ளுபடி; பள்ளிக் குழந்தைகளுக்கு வாரத்தில் ஒரு முட்டை, இரண்டு முட்டையாகி; இரண்டு முட்டை மூன்று முட்டையாகி, வருகின்ற காலத்திலே ஐந்து வேலை நாட்களிலும் 5 முட்டை என ஆக்க இருக்கின்ற ஒரே தலைவர். வண்ணமயமான உலக நிகழ்வுகளை அறிய, இலவச டி.வி.-யை வழங்கியிருக்கலாம்; ஆனால், இலவச டி.வி.-யையும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியாக வழங்கிய ஒரே தலைவர். மகளிர் நலம் காக்க இலவச எரிவாயு அடுப்பு; படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை; கருவுற்ற தாய்மார்களுக்கு உதவித் தொகை ரூ.6,000/-; ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு ரூ.15,000/- உதவித் தொகை; ஊனமுற்றோர் நலம் காக்க தனி வாரியம்; 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்ற பேரறிஞர் அண்ணாவின் கூற்றை மீட்டுகின்ற வகையிலே, தொடர்ந்து தரமான இலவச சைக்கிள் வழங்கினாலும், அதற்கும் மெருகூட்டுகின்ற வகையிலே, இலவச ஒளி விளக்கையும் தருகின்ற



தலைவர் தமிழ்நாட்டிலே கலைஞர் ஒருவர்தான் என்பதோடு, இப்படி எண்ணற்ற திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வரும் தலைவர், தமிழ் இனம், மொழி வளர்ச்சிக்காகப் பாடுபட்ட முன்னோர்கள், தலைவர்கள் தொண்டினை இளைய சமுதாயத்திற்கு நினைவூட்டும் வகையில் இத்திட்டங்களுக்கு அவர்களின் பெயரைச் சூட்டியதோடு, அவர்களின் பிறந்த நாளில் அவற்றைத் தொடங்கியும் அவர்களுக்குப் பெருமை சேர்த்துவரும் தன்னலமற்ற தலைவர்தான் கலைஞர் அவர்கள்.

தன் பிள்ளைகளிடையே பாகுபாடின்றி, தன்னிடம் உள்ளதைச் சமமாக வழங்கி, வளர்ப்பது ஒரு நல்ல தாய்க்கு இலக்கணம். அதுபோல், மாண்புமிகு முதல்வர் தலைவர் அவர்கள், குழந்தைகள், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள், மகளிர், முதியோர், ஊனமுற்றோர், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள், மீனவர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள், வணிகர்கள் என சமுதாயத்தின் ஒட்டுமொத்த மக்களும் பயன்பெறும் வகையில், வரியற்ற இந்த பட்ஜெட்டில், பல்வேறு சலுகைகளைத் தாயுள்ளத்தோடு வழங்கியுள்ளார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின், 50 ஆண்டுக் கால சட்டமன்ற வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், அவரது பணிகள் யாவும், சமூக நீதி, சமதர்மம், சமத்துவம் இவற்றை நிலைநாட்டும் வகையில் உள்ளதை உணர முடியும்.

**"எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்–இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"**

என்ற இலக்கோடு தொண்டாற்றிவரும் தலைவர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதெல்லாம் வேளாண்மைத் தொழில் சிறக்க தீட்டிய திட்டங்கள், கட்டிய அணைகள், வழங்கிய, வழங்கிவரும் சலுகைகளே இதற்குச் சான்றாகும்.

உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லாத வகையில் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கிய ஒரே தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல், இலவச மின்சாரத்தைப் பறிக்க ஆதிக்க சக்திகள் முற்படும்போதெல்லாம், இட ஒதுக்கீட்டிற்கு ஆபத்தென்றால் எப்படித் தன் உயிரையும் கொடுத்துப் போராடுகிறாரோ, அதுபோல இலவச மின்சாரத்திற்குப் பாதிப்பு என்றால், "ஏர் பிடிக்கும் திருமகனே! நீ சேற்றிலே கை வைத்தால்தான், உயர்தட்டு மக்கள் சோற்றிலே கைவைக்க முடியும்" என்ற நிலைமையை முன்னிறுத்தி,

முனைப்போடு போராடி, அம்முயற்சிகளை முறியடித்துவரும் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், 2,10,000 பேருக்குத் தோட்டக்கலைத் துறை மூலம் பெற்ற பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரத்தினைத் தொடர்ந்து வழங்கி வருவது மகிழ்ச்சியளிக்கிறது. கடந்த கழக ஆட்சியில், உழவோர் உயர, நுகர்வோர் மலர, அமைக்கப்பட்ட உழவர் சந்தைகளை முடக்கிட திட்டமிட்டு முயன்றவர்களையே இன்று முடக்கிவிட்டதால், நாடெங்கும் அவை சிறப்பாக செயல்படுவதுடன் விவசாய செழிப்பிற்கும் துணைநின்று வருகின்றன.

2000-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அமைக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம், இயலாதோரால் இடையில் முடக்கப்பட்டது. தற்பொழுது, மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் அதனை அமைத்து, அதற்கென ரூ.152 கோடியை ஒதுக்கி, ஒவ்வொரு விவசாயிக்கும், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கும், சமூகப் பொருளாதாரப் (காப்பீடு மற்றும் ஓய்வூதியம்) பாதுகாப்பை ஏற்படுத்தித் தந்துள்ளார்.

இதனால், தலைவர் கலைஞர் அவர்களை, வளமார்ந்த தமிழகம் வாழ்த்துகிறது. பயன்பெற்ற குடும்பத்தினர் வணங்கி வரவேற்கிறார்கள். கிராமப்புறங்களில் நிலமற்றவனின் நிலைமையைப் பார்த்து, அந்த நிலமில்லாதவருக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கி ஒவ்வொரு விவசாயியின் வாழ்வும் வளம் பெறுகின்ற வகையிலே, இப்போது 77,117 ஏக்கர் நிலங்களை 71,750 ஏழை விவசாயிகளுக்கு வழங்கியதோடல்லாமல், இத்திட்டத்தினை வேகமாகத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். அதுமட்டுமல்ல, மீண்டும் விவசாயிகள் பயிர்க் கடனைப் பெறுவதோடு, அதனைக் குறைந்த ஐந்து ரூபாய் வட்டிக்குப் பெறும்வகையில், இப்போது தலைவர் அவர்கள், ரூபாய் 1,360 கோடியை ஒதுக்கி, விவசாயிகளின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் ஒளியேற்றி வைத்துள்ளார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பதற்கேற்ப, காலத்திற்கேற்ப விவசாயத் துறையினை நவீனப்படுத்தியதோடல்லாமல், உணவுத் துறையில் நாம் முன்னிலை அடைய முடியும் என்ற நிலைமையில், 50% மானியத்துடன் நுண்ணீர்ப் பாசன வசதிகளை அமைத்திட, ரூபாய் 101 கோடி ஒதுக்கீடும், நாட்டிற்கு முன்னுதாரணமாகத் திகழும் நீர் பயன்படுத்தும் துறைகளை ஒருங்கிணைத்து, ரூ.2,517 கோடியில் செயல்படுத்தப்படும் நிலவளத் திட்டமும், தருமபுரி மாவட்டத்தைப் போன்ற வறண்ட மாவட்டங்களுக்கு வரப்பிரசாதமாக அமையும்.



முற்பகல் 11-20

மேலும், இதைப்போன்று, வறட்சி, வெள்ளப் பாதிப்புகளிலிருந்து விவசாயிகளைக் காக்க, பயிர்க் காப்பீட்டுக் கடன், ரூ.15 கோடியை ஒதுக்கி, 1,100 நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நவீன எடை இயந்திரத்தைக் கொடுத்து, விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையிலே துல்லிய பண்ணைத் திட்டங்கள் ஆகியவற்றால், 1996-2001-ல் கழக ஆட்சியில், வேளாண்மைத் துறை முப்பெரும் சாதனை படைத்ததுபோல், தற்பொழுதும் மாபெரும் சாதனை படைத்து, இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழிகாட்டும் என்பது திண்ணம். இவ்வாறு அனைத்துத் தரப்பினரும் வரவேற்கும், பலன்பெற்றுப் பாராட்டும், நல்லாட்சி புரியும் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களை நினைக்கும்போதெல்லாம்,

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்**
**கிறையென்று வைக்கப் படும்"**

என்ற குறளே என் நெஞ்சத்தை நிறைக்கிறது.

மிகவும் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்திற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை வரவேற்கும் அதேநேரத்தில், எங்கள் மாவட்டம் மேலும் வளமாக, மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், பாப்பிநாயக்கன் அள்ளியிலே 250 ஏக்கர் பரப்பில் பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைகள் பூங்கா, சிட்கோ, சிப்காட் தொழிற்பேட்டைகள், நெடுஞ்சாலைத் துறை கோட்ட அலுவலகம், தருமபுரி-இராயக்கோட்டை-ஓசூர் சாலையை நான்கு வழிச்சாலையாக்குதல், தருமபுரியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அரூரில் சார்பு நீதிமன்றம், பாப்பிரெட்டிப்பட்டியில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள், அரூரை மையமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம், வேப்பாடி அணைக்கட்டுத் திட்டம், பெண்ணாகரத்தில் ஒருங்கிணைந்த கருவுற்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் அவசர சிகிச்சை மையம், தருமபுரி மாவட்டத்தில் வாழும் குறிச்சான், குறும்பன், லம்பாடி மக்களுக்கு எஸ்.டி. சான்றும், குறவன் மக்களுக்கு எஸ்.சி. சான்றும் வழங்குவதோடு, தலைவர் அவர்களே—

**"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேமென் பார்க்கும் நிலை"**

உழவர்கள் தங்கள் தொழிலைச் செய்யவில்லை என்றால், முற்றும் துறந்த முனிவர்கூட பாதிக்கப்படுவார் என்ற நிலையைக் கருதி,

வேளாண்மைத் துறைக்குத் தலைவர் அவர்கள், கோவை வேளாண்மைத் துறைக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார். ** தருமபுரி மாவட்டம், தருமபுரியிலே வேளாண்மைத் துறை சார்பாகச் சுற்றுலா வந்த மூன்று மாணவிகளை உயிரோடு எரித்து, ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியண்ணன் . . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள். Right. உட்காரட்டும், உட்காரட்டும். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் யாரையும் குற்றஞ்சாட்டிச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அதாவது அவர் யாரையும் mean பண்ணிச் சொல்லவில்லை. சம்பவம் நடந்ததைத்தான் சொல்கிறார். இல்லை, இல்லை, இப்படி ஒரு சம்பவம் நடந்ததைத்தான் சொல்கிறார். (குறுக்கீடுகள்) He has not gone into the facts of the case. See, he has not gone into the facts of the case. He has stated only about the incident. இருக்கைக்குப் போங்கள். Right. மாண்புமிகு திரு. மா. ராஜசேகரன்.

***திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டின் வேளாண் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி. எங்களது காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு பெரியவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும் மற்றும் இந்த அவையிலே தொடர்ந்து 50 ஆண்டுக் காலமாகச் சட்டமன்ற உறுப்பினராக, இன்று ஐந்தாம் முறை பதவி ஏற்றிருக்கின்ற டாக்டர் முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, எனது மானியக் கோரிக்கையைத் தொடங்குகின்றேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே, குறிப்பாக, விவசாயத் துறைக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே இருக்கின்ற சுமார் 55 சதவிகித விவசாய மக்களுக்காக இந்த கோரிக்கையிலே பல நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ரூ.7,000 கோடியைத் தள்ளுபடி செய்து, இந்தியாவிலேயே ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி, 22½ இலட்சம் குடும்பங்களிலே விளக்கு ஏற்றி வைத்த பெருமை, இந்த அரசைச் சாரும். அப்படித் தள்ளுபடி செய்யப்பட்ட தொகையினால், கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்து விடக்கூடாது என்பதற்காக, சென்ற ஆண்டிலே 1,135 கோடியும், இந்த ஆண்டிலே 1,028 கோடியும் என ஆண்டுதோறும் ஒதுக்கி, கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட வழிவகுத்திருக்கிறார்கள்.

கூட்டுறவு வங்கியின் மூலமாக, சென்ற ஆண்டிலே விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடனுக்கான வட்டி, 9 சதவிகிதத்திலிருந்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



7 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. இந்த ஆண்டிலே 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஐந்தாண்டுகளாக நடத்த முடியாமல் இருந்த தேர்தலை, வருகின்ற மே, ஜூன் மாதங்களிலே நடத்த உத்தரவிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் வாயிலாக, 10 இலட்சம் விவசாயிகளுக்கு, 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நெல் கொள்முதல் செய்யும்பொழுது, கொள்முதலில் எடை சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக அனைத்துக் கொள்முதல் நிலையங்களிலும் electronic எடை machine வைக்கப்பட்டிருப்பதை வரவேற்கின்றோம். நெல் கொள்முதலை மேற்கொள்ள திருநெல்வேலி மாவட்டத்திலும், தூத்துக்குடி மாவட்டத்திலும் குறுவை, சம்பா பயிர் இரண்டிற்கும நிரந்தரமாகக் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, ஓய்வூதியம், ஈமச் சடங்கு மற்றும் இழப்பீடுகளுக்காக 152 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஓய்வூதியம் அளிக்கும்பொழுது, அந்தத் தள்ளாத வயதிலே, தனது குழந்தைகளால் கைவிடப்பட்ட அல்லது வாரிசுகள் இல்லாத அந்தப் பெரியவர்கள், வருவாய்த் துறை அதிகாரிகளைச் சந்தித்து மனு கொடுக்கும்பொழுது, அவ்வாறு கொடுத்த நாளில் இருந்து 15 நாட்களிலோ, 20 நாட்களிலோ ஒரு நாளைக் குறிப்பிட்டு, அந்த மனுவை அவர்கள் முடித்தாக வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அரசு, இதை ஒரு நல்ல திட்டமாகக் கருதி, அந்த வயதான பெரியவர்கள், எதிர்காலத்திலே வாழ முடியாது; சம்பாதிக்க முடியாது என்பதற்காக உதவித் தொகை வழங்குகிறது. ஆனால், அந்த உதவித் தொகையை அவர்கள் பெறுவதற்குள்ளாக படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை ஒவ்வொரு வருவாய்த் துறை அலுவலகத்திலேயும் கண்கூடாகவே நேரடியாகச் சந்திக்கிறோம். ஆகவே, மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

தோட்டக்கலைத் திட்டத்தின்மூலம் முந்திரி, மஞ்சள் மற்றும் மருத்துவ நறுமணப் பயிர்களின் உற்பத்திக்காக 98 கோடி ரூபாய்

ஒதுக்கப்பட்டிருக்கிறது; வரவேற்கத்தக்க விஷயம். நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் வாயிலாக, அதாவது drip irrigation system மூலமாக ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ஏக்கருக்கு, இந்த ஆண்டு 101 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், விஞ்ஞான முறையிலே, நவீன விவசாய யுக்திகளைப் பயன்படுத்தி வருவாய் ஈட்ட, மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து விவசாயிகளும், குறிப்பாக, வாழை, நெல், கரும்பு, தென்னை, இவைதான் அனைத்து விவசாயிகளும் நேரடியாக ஈடுபட்டிருக்கின்ற தொழில்கள். கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,100 ரூபாய் வீதம் நிர்ணயம் செய்திருக்கிறது அரசு. அதேபோல நெல்லுக்கு குவிண்டாலுக்கு என்று ஒவ்வோர் ஆண்டும் நிர்ணயம் செய்து, போனசாக வழங்குகின்றது. அதுமட்டுமல்லாமல், கொப்பரைகளுக்கு—கொப்பரைத் தேங்காய்க்கு—TANFED மூலம் ஒரு கிலோ இவ்வளவு என்று நிர்ணயம் செய்து வாங்குகிறார்கள். ஆனால், இந்த வாழை விவசாயிகள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களுக்கு இந்த வேளாண் அமைச்சகம், இதுவரை எந்தவிதமான பிரதிபலனோ, ஒரு மாற்றமோ செய்யவில்லை. ஏனென்று சொன்னால் சத்துணவில்கூட ஒரு முட்டையாக இருந்ததை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2 முட்டை ஆக்கினார்கள். இந்த ஆண்டு 3 முட்டை ஆக்கினார்கள். முட்டை வியாபாரிகள் அனைவருமே கோடிக்கணக்கான ரூபாய் போட்டு முதலீடு செய்து, ஒரு இலட்சம் கோழிகளை வைத்துப் பயன்பெறக்கூடிய மிகப் பெரிய கோடீஸ்வரர்கள். அவர்களுக்கு மூன்று முட்டை ஆக்கும்பொழுது, வாழைப் பழத்தையும் சத்துணவில் சேர்த்தால் அது குழந்தைகளுக்கு ஊட்டச் சத்தாகவும், ஊக்க உணவாகவும் இருக்கும் என்பதுடன் நலிவடைந்த ஏழை விவசாயிகளும் அதைக் கொண்டு பயன்பெறுவார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்களும், இந்த நிதி ஆண்டிலேயே வாழைப் பழத்தைச் சத்துணவிலே சேர்த்து, அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்தாக அளிக்கக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நதிநீர்ப் பங்கீட்டிலே, மிக நீண்ட காலமாக ஒரு பிரச்சினை நமது மாநிலத்தில் இருக்கிறது. என்னவென்று சொன்னால், கர்நாடகாவிலிருந்து தண்ணீர் வருவதில் தகராறு; கேரளாவிற்குத் தண்ணீர் கொடுப்பதில் தகராறு; ஆந்திராவிலேயும் தகராறு. இந்த நதிநீர்ப் பங்கீட்டிலே மாநிலத்திலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் தேசிய உணர்வை இழந்துவிட்டதன் காரணமாகத்தான், இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது.



தமிழகத்திலே இருக்கின்ற மாநிலக் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்தியிலே இருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் ஆட்சியுடன் ஒத்துப்போவதால், அப்படி ஒத்துப்போனதன் விளைவாக, தமிழகத்திலே பல நல்ல திட்டங்களை, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை இப்போது தமிழக அரசு பெற்று, தமிழகத்திலே முதலீடு செய்து, வளர்ச்சியைப் பெற்று ஓர் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற முன்னுதாரணத்தை அண்டை மாநிலமாக இருக்கின்ற கர்நாடகத்திலே இருக்கின்ற மாநில அரசும் சரி, மாநிலக் கட்சிகளும் சரி, அதுபோல ஆந்திராவிலே, கேரளாவிலே இருக்கின்ற மாநிலக் கட்சிகளும் சரி, தேசிய உணர்வு பெற்று, நதிநீர்ப் பிரச்சினையிலே மிகச் சுமுகமான முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அடுத்தபடியாக, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்குத் தமிழக அரசு இலவச மின்சாரத்தை அளிக்கிறது. இதனை டாக்டர் கலைஞர் அரசு அறிவித்தது. அதுமட்டுமல்லாமல் கரும்பு விவசாயிகளுக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்திக் கொடுத்தது. நெல்லுக்கு மானிய விலை கொடுக்கிறது. விதைக்கு மானிய விலை கொடுக்கிறது. கடனுக்கான வட்டியை 5 சதவிகிதத்திற்குக் கொண்டுவந்துவிட்டது. அதாவது, ஒரு ரூபாய்க்கு, 4 பைசா வட்டி என வந்துவிட்டது. இதுமாதிரி எந்த மாநிலத்திலும் விவசாயிகளுக்குச் சலுகைகள் அறிவிக்கப்படவில்லை. ஆனால், இவ்வளவு சலுகைகளை அறிவித்தும், 7,000, 8,000 கோடி ரூபாய்களை மானியமாக வழங்கியும், இப்போது தமிழகத்தில் இருக்கின்ற விவசாயம், பொருளாதார நிலை, அரசு நிர்ணயித்த நிலையை அடையவில்லை என்பது மிக முக்கியமான விஷயம்.

பொருளாதார ரீதியாகத் தொழிற்சாலைகள் முன்னேறுகின்றன; போக்குவரத்துத் துறை முன்னேறுகிறது; மற்ற இலாகாக்கள் அனைத்தும் அரசு நிர்ணயித்த குறியீட்டை மீறிச் செல்கின்றன. ஆனால், விவசாயத் துறையில் அந்த முன்னேற்றம் இல்லை. அதன் வாயிலாக, இப்போது அரசுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் என்ன காரணம்? நுண்முறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, விஞ்ஞான முறையைப் புகுத்துவதற்கு, விஞ்ஞானிகளை வளர்க்க வேண்டும். விஞ்ஞான முறையிலே தொழில்நுட்பத் துறையை ஏற்படுத்தி, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் கண்டுபிடிக்கக்கூடிய விவசாய மண்டலங்களை ஏற்படுத்தி, நுண்முறைகளை நேரடியாக கிராமத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்குச்

சென்றடையும் வகையிலே, அந்த உத்தி பயன்பட்டால்தான், நாம் நிரந்தரமாக விவசாயத்திலே முன்னுக்கு வர முடியும். ஆகவே, மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள், இதில் அதிக கவனம் செலுத்தி, அயல்நாடுகள் போன்று, ஆஸ்திரேலியா, கொரியா, இத்தாலி போன்று மிக நுட்பமான முறையில் விஞ்ஞான முறையைப் பயன்படுத்தி, கீழ்மட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கும் அதை எடுத்துச் சொல்லி, அவ்வாறு எடுத்துச் சொல்கின்ற விஷயத்தை அவர்கள் முறையாகப் பயன்படுத்துகிறார்களா, அதைச் செயல்படுத்துகிறார்களா, அரசு அளிக்கும் மானியம் நேரடியாக அவர்களுக்குச் சென்றடைகின்றதா என்பதைக் கண்காணிக்கும் வகையில் நிருவாகச் சீர்திருத்தம் செய்தால், அதன் வாயிலாக விவசாயத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, திருச்சி மாவட்டத்தைக் காவிரி டெல்டா மாவட்டமாக அறிவிக்கக் கேட்டுக்கொள்கின்றோம். ஏனென்று சொன்னால், திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற மாவட்டங்கள் காவிரி தண்ணீர் பாயக்கூடிய மாவட்டங்கள். ஆனால், அரசானது காவிரி டெல்டா மாவட்டங்களாக அறிவித்திருப்பது தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களை. அரசு அறிவித்திருக்கிற அனைத்து நலத் திட்டங்களும் சரி, மானியத் திட்டங்களும் சரி அல்லது இலவச மின்சாரமும் சரி, சென்றடையக்கூடிய மாவட்டங்கள், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம். ஆனால் முழுக்க முழுக்க, காவிரித் தண்ணீரை நம்பியிருக்கின்ற திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு இந்தப் பலன் கிடைப்பதில்லை. ஆகவே, மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள், திருச்சி மாவட்டத்தையும் காவிரி டெல்டா மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, 20 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழகத்திலே சம்பா பயிராக பொன்னி இருந்தது; குதிரைவால் இருந்தது. அதன்பிறகு, வீரிய ஒட்டு இரகங்களான கருணா, கண்ணகி, I.R.20, I.R.28, CO-43 A.T.T.23, பொன்மணி போன்ற இரகங்களைப் புகுத்தினீர்கள். கலைஞர், வளர்ச்சியின் காரணமாக, 10 ஆண்டுகள் மிகச் சிறப்பாக இருந்தது. அதன் பரிணாம ஆனால், அதன்பிறகு விதைகூட இன்று கிடைப்பதில்லை; விதைகூட கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எப்போதும், டாக்டர் தலைவர் கலைஞர் தலைமையில் இருக்கின்ற அரசு வந்தவுடன், விவசாயிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும். ஆகவே, மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள், புதிய இரகங்களைக் கண்டுபிடித்து, மறுபடியும் விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மரபணு விதைகளை அடியோடு தடை செய்ய



வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அடுத்தபடியாக... (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் தொகுதிப் பிரச்சினைக்கு வந்திருக்கிறேன். அதுவும் நான்கே points-லே முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய முறை என்பது, Co-operative; அதுமட்டுமல்லாமல், P.W.D.-ஐயும் சார்ந்தது. எங்கள் பகுதியிலே ஸ்ரீராம சமுத்திரம் என்ற குரம்பு இருக்கிறது. அந்தக் குரம்பு காவிரியிலேயிருந்து செல்கிறது. முழுக்க முழுக்க, 13,000 ஏக்கருக்குத் தண்ணீர் பாய்ச்சக்கூடிய அந்தக் குரம்பை நிரந்தரக் குரம்பாக்குவதற்கு இப்போது 2 கோடி ரூபாய்க்கு estimate போடப்பட்டு, திட்ட ஆய்விற்காகச் சென்னைக்கு வந்திருக்கிறது. இந்தக் காலக்கட்டத்திலே, நேற்றையதினம்கூட, அந்தப் பகுதியிலே மணல் எடுப்பதற்குப் புதிதாக அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறேன். அந்த இடத்திலே மணல் எடுப்பார்களேயானால், (குறுக்கீடு) மணல் எடுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்ட காரணத்தினால், குரம்பிலிருந்து வாய்க்காலுக்குச் செல்லும் தண்ணீர், தடைவு ஏற்படும். இதனால் 13,000 ஏக்கர் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். என்னுடைய தொகுதியில் 27 கிலோ மீட்டர் தூரம் காவிரிக் கரையில் இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து அந்த இடத்தைவிட்டு, வேறு இடத்தில், அரசு மணல் குவாரி தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொளகிறேன்.

அதேபோல, தொட்டியம்-திருநாராயணபுரம் இடையே உள்ள பெரிய வாய்க்கால் கரையை அகலப்படுத்த வேண்டும். தொட்டியம கொண்டாமனை பாலம் மதகுகள், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. அதைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொட்டியம், வெற்றிலை அதிகமாக விளையக்கூடிய பகுதி. அங்கே வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை ஏற்படுத்த வேண்டும்.

தா. பேட்டை, புளியஞ்சோலையிலிருந்து வரக்கூடிய உபரி நீரை, மகாதேவி ஏரிக்கு வாய்க்கால்மூலம் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் 3,000 ஏக்கர் பயன்பெறும். ரெட்டியாபட்டி ஏரியிலிருந்து மங்கலம் ஏரி வழியாகச் செல்லும் வாய்க்காலில் கரிசல் மண் நிறைந்து இருப்பதால், அந்தப் பகுதியிலே ஆண்டுதோறும் தூர்வார வேண்டிய நிலை உள்ளது. மழை பெய்கிறபோது, கரிசல் மண் கரைந்து, வாய்க்கால் தூர்ந்து போய்விடுகின்றது. நிரந்தரமாக சிமெண்ட் வாய்க்கால் அதற்குக் கட்டுவதற்கு நபார்டிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டுவிட்டது. ஆனால், அரசு உத்தரவிற்காகக் காத்திருக்கிறது.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இதற்கு உடன் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தாத்தையங்கார்பேட்டையில் 2 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டி முடிக்கப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்படாமல் உள்ளது. அதை நடைமுறைப்படுத்தினால், அந்தப் பகுதி விவசாயிகள் மிக நல்ல முறையில் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, எங்களது பகுதியிலே சூரியகாந்தி பயிர் செய்கிறார்கள். சூரியகாந்தியை வாங்குவதற்கு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 12 ஏரிகள் இருக்கின்றன. நீர் ஆதாரங்கள் அனைத்துமே அங்கிருக்கின்ற அந்த 12 ஏரிகளையே நம்பியிருக்கின்றன. ஆகவே, அந்த ஏரிகளைத் தூர் வார வேண்டும். தா. பேட்டை ஏரி, மேட்டுப்பாளை ஏரி, காருகுடி ஏரி, கரிகாள் ஏரி, உத்தம்பட்டி ஏரி, வடமலைப்பட்டி ஏரி, தலைமலை ஏரி, பிட்டமலை ஏரி, வளையபடுப்பு ஏரி, மங்கலம் ஏரி, எம். கருப்பம்பட்டி ஏரி, மகாதேவி ஏரி போன்ற ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளை இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தூர் வாரினால் அந்தப் பகுதியிலே சுத்தமாகத் தண்ணீர் தட்டுப்பாடு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

அதுமட்டுமல்லாமல், தும்பலம் ஊராட்சியிலே ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கடுத்தாற்போல, தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் சேவை கூட்டுறவுப் பணியாளர்களுடைய மிகப் பெரிய பிரச்சினை, 2001-லே 686 பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம், ஐந்தாண்டுகளாகக் கொடுக்கப்படவில்லை என்பது. மாவட்ட அளவிலே 21 மாவட்டச் சங்கங்கள் இருக்கின்றன; வட்டார அளவிலே 191 வட்டார மையங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு இதுவரை பாக்கியாக இருக்கிற தொகை 16,19,71,173 ரூபாய் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வேளாண் துறை அமைச்சர் அவர்களும் இதிலே ஈடுபட்டு, சிறப்பாகப் பணியாற்றி, அந்த ஏழைப் பணியாளர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஈரோடு மாவட்டத்தில் மிக அதிகமாக விளையும் மஞ்சள் பயிருக்கு . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜசேகரன், முடியுங்கள்.

**திரு. மா. ராஜசேகரன்:** ஆதாரவு விலையான ரூபாய் 3,500 கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

***திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற நல்வாய்ப்பைத் தந்த தங்களுக்கும், எங்களுடைய இயக்கத்தின் நிறுவனத் தலைவர், சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய சட்டமன்றக் கட்சியின் தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்"**

**"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"**

என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கேற்பவும்,

**"வரப்புயர நீருயரும்**
**நீருயர நெல்லுயரும்**
**நெல்லுயரக் குடியுயரும்**
**குடியுயரக் கோனுயர்வான்"**

என்ற ஔவை மூதாட்டியின் அற்புத வரிகளுக்கேற்பவும், தமிழகத்தில் 56 சதவிகித மக்கள் செய்கிற ஒரு மிகப் பெரிய தொழில் விவசாயமாகும். அப்படிப்பட்ட, இப்போது நமது நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்ந்துகொண்டிருக்கின்ற, இந்த விவசாயிகளுடைய முன்னேற்றம் கருதி, இந்த அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்திருப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் பாராட்டி வரவேற்கிறேன்.

இதில் குறிப்பாக, விவசாயிகள் பெற்றிருந்த சுமார் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து, இதுவரை 22,39,487 விவசாயிகளுக்குச் சான்று வழங்கியிருப்பதையும், கடன் தள்ளுபடியால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய

இந்நிதியாண்டில் ரூ.1628 கோடியும், பயிர்க் கடன் வழங்க ரூ.1,300 கோடியும் நிதி ஒதுக்கியிருப்பதையும், இப்பயிர்க் கடன்களுக்கு வட்டி வீதம் 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாகவும், 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகவும் குறைத்திருப்பதையும் பாராட்டி வரவேற்கிறேன்.

இனி வருங்காலங்களில் சிறு குறு விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், விவசாயிகள் நீர்ப்பாசன வழிகளை அமைப்பதற்காகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் ரூ.100 கோடி வழங்கப்படுவதையும், நெல் விலை போடும்போது ஏற்படும் குறைபாடுகளை நீக்குவதற்குக் கொள்முதல் நிலையங்களை அமைப்பதற்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 1,100 நேரடிக் கொள்முதல் நிலையங்களில் நவீன இயந்திரங்கள் அமைக்கப்படுவதையும், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை 1.15 கோடி பயனாளிகள் கண்டறியப்பட்டு, 57.30 இலட்சம் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதையும் பாராட்டி வரவேற்கிறேன்.

அதேவேளையில், இப்போது சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில், தேர்வு செய்யப்படுவதிலே பல்வேறு குழப்பங்களும், குளறுபடிகளும் நிறைந்திருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தகுதியுள்ள பலர் புறக்கணிக்கப்பட்டிருக்கிற நிலைமையை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் எதிர்காலத்திலே இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் அடையாள அட்டைகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசு, கடந்த ஆண்டிலும், இவ்வாண்டிலும் பல திட்டங்களைத் தீட்டியிருந்தபோதிலும், மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் 25 விழுக்காடாக இருந்த விவசாயத்தின் பங்களிப்பு, தற்போது 13.3 விழுக்காடாகக் குறைந்துள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியிலே நமது நாடு 11.5 சதவீத வளர்ச்சியை எட்டியிருப்பதை நான் பாராட்டுகிற அதேவேளையில், வேளாண் வளர்ச்சி வீதம் 2.3 சதவீதம் என்பது, கவலையளிக்கிற ஒரு செய்தி என்பதை நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மை சார்ந்த வருமானம் பெறுபவர்களின் எண்ணிக்கை 56 சதவீதமாக இருக்கிறது. இதனால் விவசாயிகள் பலர் வருமானம் குறைந்து, வறுமையில்



வாடுகிறார்கள். விவசாயம் தற்போது இலாபகரமாக இல்லாததால், விவசாயிகள் நிலத்தை விற்றுவிட்டு, கிராமத்தைவிட்டு வெளியேறுகிற அவலம் தொடர்ந்து வருகிறது. பயிரிடப்படும் நிலத்தின் அளவு குறைந்து வருகிறது. நிலமற்ற சிறு குறு விவசாயிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. விவசாய நிலங்களையெல்லாம், பண முதலாளிகள் வீட்டுமனைப் பட்டாக்களாக ஆக்கி வருகிறார்கள். எனவே, அரசு இந்நிலையைத் தடுக்க, விவசாயத் தொழிலுக்கு ஒரு தொழில் அங்கீகாரத்தை உடனே வழங்க, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

சென்ற ஆண்டு, 977.88 கோடி ரூபாய் விவசாய மூலதனத்தை ஒதுக்கீடு செய்தபோது, பின்தங்கிய மாவட்டங்களுக்கு அதிக ஒதுக்கீட்டையும், பின்தங்கிய மாவட்டங்களில், மிகவும் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்கு அதிக நிதியையும் ஒதுக்கீடு செய்ததோடு, திட்டத்தின் வாரியாக நிதி ஒதுக்கீடு செய்த முறையைத் தவிர்த்து, வட்டார ரீதியான வளர்ச்சியின் அடிப்படையில், இனிவரும் காலங்களில் நிதி ஒதுக்கீடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குரிய காப்பீட்டு வசதியினை இனிவரும் காலங்களில் கட்டாயமாக்கவேண்டும். விவசாயிகள் கடன் வாங்கும் அளவிற்குக் காப்பீட்டு உரிமையும் வழங்கப்படவேண்டும். விவசாய உற்பத்தியைப் பெருக்க, மண்ணின் தன்மை உயர்த்தப்பட வேண்டும்; நுட்பப் பண்ணை முறை உருவாக்கப்பட வேண்டும். வேளாண்மை ஆராய்ச்சிக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, ஆராய்ச்சியின் பயன்கள் உழவர்களுக்கே சென்றடைய வேண்டும். பசுந்தாள் உரம் தயாரித்து, விவசாயிகளுக்கு மானிய விலையில் அளிக்கவேண்டும். தனியார் கையில் உள்ள விதை உற்பத்தியை, அரசும், பொதுத் துறையும் சேர்ந்து தயாரித்து, விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, மரபணு மாற்றப்பட்ட விதைகள். இந்த விதைகளின் ஆபத்தை ஏற்கெனவே இந்த அவையிலே விவாதித்திருக்கிறோம். அமெரிக்காவின் U.S.F.D.A. நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வில், மரபணு மாற்றப்பட்ட தக்காளி மற்றும் உருளைக்கிழங்கை, எலிகளுக்குக் கொடுத்து பரிசோதனை செய்தபோது, அவற்றின் வயிற்றில் பாதிப்பு ஏற்பட்டதும் ஆய்வின்மூலமாகக் கண்டறியப்பட்டது. ஆந்திர மாநிலத்தில் Bt. பருத்தியின் கழிவுகளைத் தின்ற ஆடுகள் இறந்து போயுள்ளன.

ஆக, இப்படி மரபணு மாற்றப்பட்ட Bt. விதைகளைத் தமிழகத்தில் இனி ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என்ற கொள்கையில் அரசு உறுதியாக இருக்கவேண்டும். அவ்விதைகளைத் தமிழகத்தில் விற்கிற கம்பெனிகளை உடனடியாகத் தடை செய்ய வேண்டும்.

பல்கலைக்கழகங்களும், அரசுத் துறைகளும், தனியார்த் துறையோடு சேர்ந்து, பெரிய அளவில் விதைகளைத் தயாரிப்பதற்கு ஒரு புரிதல் ஒப்பந்தம் ஏற்படுத்தவேண்டும். நமது பாரம்பரிய விதைகள் பெருக்கப்பட்டு, மீண்டும் மறுபயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்களைத் தயாரித்து, அரசு மானிய விலையில் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். வேளாண் தொழிலாளர்களின் உரிமைப் பாதுகாப்புச் சட்டமும் குறைந்தபட்சக் கூலிச் சட்டமும் அரசால் ஏற்படுத்தப்பட வேண்டும். விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான விலை நிர்ணயம் என்பது, அதன் உற்பத்திச் செலவு, விவசாயிகளுக்கான இலாபம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இவற்றில் விவசாயிகளும், அரசும் சேர்ந்து, நியாயமான விலையை நிர்ணயிக்கின்ற ஒரு நிலையை அரசு உருவாக்க வேண்டும். இதனால், அறுவடைக்குப் பிறகு, விலை ஒரேயடியாகக் குறையாது. அரசு நேரடிக் கொள்முதல் செய்யும்போது, விவசாயிகளிடம் எந்தக் கட்டணமும் வசூலிக்கக் கூடாது. அனைத்து வேளாண்மை உற்பத்திப் பொருட்களையும் உரிய விலையில் அரசே வாங்கி, அவற்றை வியாபாரிகளிடம் விற்கும் நடைமுறையை உருவாக்க வேண்டும்.

தற்போதுள்ள உழவர் சந்தைகளின் எண்ணிக்கையை, 103-லிருந்து, 200 ஆக உயர்த்த வேண்டும். உழவர் சந்தையினை, தானியச் சந்தைகளாகவும் விரிவுபடுத்த வேண்டும். அதேபோல, கிராமம், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் என்ற அளவில், அதி நவீன தானிய வங்கிகள் அமைக்கப்பட வேண்டும். அரசின் கொள்முதல் தானியங்களும், விவசாயிகளின் உபரி விளைபொருட்களும் உள்ளூர் வங்கியிலேயே சேமிக்கப்பட வேண்டும். நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகள் பயன்பெறும் வகையில், பெங்களூரில் உள்ளதைப் போன்று —SAFAL Market— நவீன மொத்த வியாபாரச் சந்தை, திருச்சி போன்ற இடங்களில் அமைக்கப்பட வேண்டும். இதனால் அறுவடைக்குப் பிறகு, விளைபொருட்களின் விலை ஒரேயடியாகக் குறையாது. அரசின் பொது விநியோகத் திட்டம், சத்துணவுத் திட்டம் போன்றவற்றிற்குத் தேவையான தானியங்களை, இந்த உள்ளூர் தானிய வங்கியிலேயே வாங்கிக் கொள்ளலாம். விவசாயிகளுக்குக் கிடைக்கும் வருமானம் ஒரு வகையில் உயரும்போதும், உற்பத்திச் செலவு மறுமுறை குறையும்போதும், நல்ல



இலாபம் கிடைக்கும். இது அவர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கம் அளிக்கும். உலகத் தரம் வாய்ந்த சேகரிப்பு மையங்கள், குளிர வைக்கும் சாதனங்கள், தரப் பிரிப்பு, பதப்படுத்துதல் மற்றும் மின்னணு ஏல முறை போன்ற அனைத்து வசதிகளுடன்கூடிய வணிக முனையங்களை அனைத்துப் புறநகர்ப் பகுதிகளிலும் அமைத்தல் வேண்டும்.

விவசாயப் பொருட்களின் பரிவர்த்தனை முறைமூலம், விற்பனையையும், ஏற்றுமதியையும் அதிகரிக்கலாம். காய்கறி, பழங்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்ய, குளிர்சாதன வசதிகொண்ட சரக்குந்துகள் விடப்படவேண்டும். பழங்கள் அதிகமாக உற்பத்தியாகும் காலங்களில், உபரியாகும் பழங்களை அரசே வாங்கி, சத்துணவுக் கூடங்களில் மதிய உணவுடன் சேர்த்து வழங்க வேண்டும்.

வேளாண்மை மற்றும் வேளாண் தொழிலுக்குப் பயன்படும் டீசலுக்கு மானியம் வழங்கவேண்டும். பட்டுப் புழு, கறவை மாடு, நாட்டுக் கோழி, காளான், இயற்கை எரு போன்ற விவசாயத் துறை தொழில்களுக்கு, மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்பட வேண்டும். வேளாண் விற்பனைத் துறை ஒரு தன்னாட்சிபெற்ற நிறுவனமாக மாற்றப்பட வேண்டும். சில்லறை வணிகத்தில் பெரும் நிறுவனங்கள் நுழைந்துள்ள நிலையில், உற்பத்தியாளர்கள், நுகர்வோர் பங்குகொள்ளும் முக்கியமான இடங்களில், சில்லறை வணிக நிறுவனங்கள் தொடங்கப்பட வேண்டும்.

முற்பகல் 11-15

நதிநீர்ப் பிரச்சினை தீர, இந்தியாவிலுள்ள நதிகளை தேசியமயமாக்குவது ஒன்றே நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும். எனவே, அதற்கான நடவடிக்கையை அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும். நிலத்தடி நீர் அபாயகரமாகும் காலக்கட்டத்தில், குறைந்து வருவதை அரசு உணர வேண்டும். எதிர்காலத் தமிழகம் பாலைவனமாகும் (மணியடிக்கப்பெற்றது) அபாயகரமான சூழ்நிலை உள்ளது. எனவே, இதை உணர்ந்து, 2008-2009 ஆம் ஆண்டை நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு ஆண்டாக அறிவிக்க வேண்டும்.

அடுத்து, கரும்பு விவசாயிகள் பிரச்சினை. தமிழகத்தில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் கரும்பு பயிரிடும் விவசாயிகள் இப்போது பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். 15 மாதங்களுக்கு மேலாகியும், அவர்கள் பதிவு செய்யவில்லை என்கிற ஒரு காரணத்திற்காக அந்தக்

கரும்புகளையெல்லாம் வெட்டுகிற அனுமதி வழங்கப்படாமல், அவை காய்ந்துபோய், அவற்றையெல்லாம் எரிக்கிற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். எனவே, மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிற அந்தக் கரும்பு விவசாயிகளுடைய நலனைக் கருதி, அரசு உடனே தலையிட்டு, ஆங்காங்கு இருக்கிற சர்க்கரை ஆலைகள், அந்தக் கரும்பை வெட்டுகிற அனுமதியை வழங்கும் வகையில், அந்தக் கரும்பு விவசாயிகளுடைய துயரைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கரும்பு டன் ஒன்றுக்கு ரூபாய் 1,500 வழங்கவும், கரும்பை ஏற்றிச் செல்லும் சர்க்கரை ஆலைகளில் எத்தனால் உற்பத்தியை அதிகரிக்கவும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனது தொகுதியில், ஏறக்குறைய 25,000 ஏக்கர் நிலத்தில் கரும்பு வெட்டப்படாமல் இப்போது விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒன்பது மற்றும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடைந்து, பதினோராம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் விவசாய நிலப்பரப்பும், அதனால் விவசாய விளைபொருட்களும் குறைந்துள்ளதை நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இந்த நிலை நீடித்தால் நாட்டில் மிகவும் பசியும், பஞ்சமும், வறுமையும் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்ற எச்சரிக்கையை அரசுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, நமது நாட்டின் பொருளாதாரம் மேம்பட, இதற்கான மாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீண்ட காலமாக வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கும் வேளாண் பட்டதாரிகள், வேளாண் பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை அளிக்க முன்வர வேண்டும். வேளாண்மையை ஒரு சிறப்புப் பாடத் திட்டமாகக் கொண்டுவந்து, அதற்கு வேளாண்மை ஆசிரியர்களை நியமனம் செய்து, நவீனமயமான விவசாயத்தை அனைவரும் கடைப்பிடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எம்.எஸ். சுவாமிநாதன் கமிட்டி பரிந்துரையின்படி, வேளாண்மைத் துறையின்கீழ் இயங்கிவரும் வேளாண்மை ஆராய்ச்சிப் பிரிவினை, வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க அரசு துரித நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

விவசாயத்தை மேம்படுத்த, தமிழகத்திலுள்ள அனைத்து அணைகளின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்டி, அதிலிருந்து கால்வாய்ப் பாசனத்தின்மூலம் நீரை ஏரிகளில் தேக்கி, நீர் மட்டம் உயர அரசு வழிவகை காண வேண்டும். மழை நீர் எந்தவகையிலும் வீணாகிக் கடலில்



கலப்பதைத் தவிர்க்க, சுழற்சி முறையில் மழை நீரைப் பயன்படுத்த, நவீன திட்டத்தை அரசாங்கம் துவக்கி, அதனைப் போர்க்கால அடிப்படையில் நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். பல வட்டங்களை உள்ளடக்கி, விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு வேளாண்மைக் கல்லூரியை உழவர் பெருமக்களின் நலன் கருதி அமைத்துத் தரவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கிளை நிறுவனத்தை மாவட்டங்கள்தோறும் (மணியடிக்கப்பெற்றது) மாவட்டத் தலைநகரங்களில் அமைத்து, அதற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, விவசாயிகள் நலன்பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து ரகப் பயிர்களுக்கும் சொட்டு நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்த, அனைத்து மாவட்டங்களிலும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செந்தமிழ்ச்செல்வன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** வட்டார அளவில் ஒரு பயிற்சி மையம் அமைய, அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையில் வழங்கப்படும் மானியங்களால் பயன்பெறும் விவசாயிகளின் பட்டியல், ஒவ்வொரு பஞ்சாயத்து அலுவலகம், கிராம நிருவாக அலுவலகம், வேளாண்மை வளர்ச்சி அலுவலகம் போன்றவற்றில் ஒட்டப்பட வேண்டும்.

அடுத்து, என்னுடைய தொகுதி சம்பந்தமான சில செய்திகளை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டிலே, வராக நதித் திட்டத்தை நான் கேட்டிருந்தேன். அதை அறிவித்த நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, நந்தன் கால்வாய்த் திட்டம்; (மணியடிக்கப்பெற்றது) திருவண்ணாமலை தொகுதி, மேல்மலையனூர், முகையூர் ஆகிய தொகுதிகளை உள்ளடக்கிய விவசாயிகளின் நலன்கருதி உருவாக்கப்பட்ட அந்தத் திட்டம் புனரமைக்கப்படாமல், இப்போது பழுதுபட்டிருக்கிறது. எனவே, அந்த நந்தன் கால்வாய்த் திட்டத்தை இந்த ஆண்டிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டத்திற்குச் சென்ற ஆண்டிலேயே, நீங்கள் முதன்முதலாக மருத்துவக் கல்லூரியை அறிவித்தீர்கள். இதுவரையிலே அதற்கு இடம் தேர்வு செய்யப்படாமல் இருக்கிறது. எனவே, விரைந்து நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இடத்தினைத்

தேர்வு செய்து, இந்த ஆண்டிலேயே அந்தக் கல்லூரியைத் தொடங்குவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மேல்மலையனூரில், மாதா மாதம் இலட்சக்கணக்கான மக்கள் கூடுகிற ஒரு மிகப் பெரிய திருத்தலம், அங்காள பரமேஸ்வரி கோயில் இருக்கிற இடம். அந்த இடத்திலே, பல வழிப்பறிக் கொள்ளைகள் அந்தச் சமயத்தில் நடக்கின்றன. எனவே, ஒரு காவல் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வந்துசெல்கின்ற பேருந்துகளின் நலன்கருதி அங்கே ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தரவேண்டும். அந்தப் பேருந்து நிலையத்திற்காக 2 ஏக்கர் நிலத்தை, அங்கேயிருக்கிற ஜெயின் மடத்தைச் சார்ந்தவர்கள், தீர்மானம் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டிலேயே அங்கே ஒரு பேருந்து நிலையத்தை வழங்கி, சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அடுத்து, எனது தொகுதியில் இருக்கிற அனந்தபுரம், வளத்திப் பகுதியிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கான ஒரு புதிய கட்டடத்தை நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அடுத்து எனது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செந்தமிழ்ச்செல்வன்...

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** ஒரே நிமிடம், முடித்துவிடுகிறேன். கோட்டப்பூண்டி, எதப்பட்டு, அவலூர்பேட்டை பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து. (குறுக்கீடு) பேச்சை நிறைவு செய்யுங்கள். ஒரு நிமிடத்தில் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மேலும், எனது தொகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஒரு முக்கியமான துறை என்கிற வகையில், ஏறத்தாழ தமிழகத்திலே இருக்கக்கூடிய 56 சதவீத மக்கள் ஊரகப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழலில், இந்த மக்கள் முழுவதும் வேளாண் துறையைச் சார்ந்து வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழலில், வேளாண் துறையினுடைய நிலைமை கவலை அளிப்பதாக இப்போது உள்ளது. குறிப்பாக, கொள்கை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது, தமிழகத்திலே தானியப் பயிர்கள் சாகுபடிப் பரப்பு என்பது, 1980-81 ஆம் ஆண்டில் 57 சதவீதமாக இருந்து, 2004-2005 ஆம் ஆண்டில் 46 சதவீதமாகக் குறைந்துள்ளது. 1999-2000, 2004-2005 காலக்கட்டத்தில் பயறுவகை சாகுபடிப் பரப்பு என்பது, 11 சதவீதம் தமிழகத்திலே குறைந்து இருப்பதாகக் கொள்கை அறிக்கை குறிப்பிடுகிறது. தமிழக வேளாண்மை என்பது, இப்போது கடினமான சவால்களைச் சந்திக்கக்கூடிய ஒரு துறையாக மாறியிருக்கிறது. தொடர்ந்து குறைந்து கொண்டே வரக்கூடிய பண்ணை பரப்பும், வேளாண்மை அல்லாத பயன்பாடுகளுக்கான நிலத் தேவையும் மாநிலத்திலே அதிகரித்திருக்கிறது. மேலும், நீர்ப் பற்றாக்குறை, தமிழகத்தை நகரமயமாக்குவதற்காக மற்றும் தொழில் மயமாக்குவதற்காக குறைந்துகொண்டே வரும் வேளாண்மை விளை நிலம், இப்போது மிகப் பெரிய பிரச்சினையாக தமிழகத்திலே மாறி இருக்கிறது.

இன்றைய சூழலில்தான், அகில இந்திய அளவிலும் வேளாண் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை, கடந்த 8-3-2007 அன்று நாடாளுமன்றத்திலே நம்முடைய நாட்டினுடைய பிரதமர் ஆற்றிய உரையில் "விவசாயத் துறையில் போதுமான அளவில் முன்னேற்றம் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்; விவசாய வளர்ச்சிக்கு இன்னும் கூடுதலாகச் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்பதை நான் அறிவேன்; நாட்டின் சில பகுதிகளில் விவசாயிகள் கடன் வலையில் ஆழமான அளவில் சிக்கிக்கொண்டிருப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்" என்று இந்தியாவினுடைய பிரதமர் அவர்கள் நாடாளுமன்றத்திலே உரையாற்றியிருக்கிறார்.

அதேபோல, தமிழகத்தினுடைய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன் அவர்கள் சமீபத்திலே வெளியிட்ட அறிக்கையில், அகில இந்திய அளவிலும் தமிழக அளவிலும் ஒன்பது மற்றும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட விவசாய உற்பத்தி வளர்ச்சி இலக்குகளை நம்மால் எட்ட முடியவில்லை;

2001-2002 ஆம் ஆண்டில் 76.89 இலட்சம் டன்னாக இருந்த விவசாய உற்பத்தி, 2004-2005 ஆம் ஆண்டில் 61.4 இலட்சம் டன்னாக வீழ்ச்சி அடைந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, வேளாண் துறையைப் பாதுகாப்பதற்கு, மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை இப்போது எடுத்திருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். குறிப்பாக, ஏறத்தாழ 22,39,487 விவசாயிகள் 7,000 கோடி ரூபாய் கடன் தள்ளுபடியின்மூலமாகப் பயன்பெற்றிருக்கிறார்கள். ஏறத்தாழ 71,555 விவசாயிகளுக்கு 77,117 ஏக்கர் நிலம் இப்போது வழங்கப்பட்டிருக்கிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 1,360 கோடி ரூபாய் அளவிலான பயிர்க் கடன் வழங்குவதற்குண்டான திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற கடனுக்கான வட்டி 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 10 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுகிற அளவிற்குப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கு, 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11-55*

இவை அனைத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்பதோடு, இவைமட்டும் வேளாண் துறையை, விவசாயிகளைப் பாதுகாப்பதற்குப் போதுமா என்று சொன்னால், இன்றைய நிலையில் போதுமானவை அல்ல என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஏனென்று சொன்னால், ஆண்டுக்காண்டு விவசாயிகளுடைய உற்பத்திச் செலவு என்பது, கூடுதலாகிக் கொண்டிருக்கிறது. இடுபொருட்களினுடைய விலை, ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குண்டான கட்டுப்படியான விலையும்—இடுபொருட்களினுடைய விலையைக் குறைத்து, மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதும் உதவிகரமாக இருக்கும். ஏனென்று சொன்னால், சமீபத்திலே நாகையிலே நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் ஒரு விவசாயி பேசினார். "நான் பெற்ற குழந்தைக்குப் பெயர் வைப்பதற்குக்கூட எனக்கு உரிமையில்லை" என்று சொன்னார். "எப்படி வேளாண் துறை இந்த நாட்டில் செழிக்கும்?" என்று கேட்டார். அப்படி, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு விலையைத் தீர்மானிக்கின்ற உரிமை, விவசாயிகளுக்கு இல்லாத காரணத்தினாலே, கூடுதலான சுமையை, உற்பத்திச் செலவை ஏற்கின்ற சூழலில் இப்போது விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அகில இந்திய புள்ளிவிவரம் இன்றைக்குக் குறிப்பிடுகிறது; பத்தாண்டுக் கால இந்தியாவில், வறுமையின் காரணமாக கட்டுப்படியான விலை கிடைக்காத காரணத்தினாலே, சராசரியாக, ஏறத்தாழ ஒரு இலட்சம் விவசாயிகள் தற்கொலை



செய்துகொண்டு, மாண்டுபோயிருக்கிறார்கள் என்றும், ஜனவரி மாதம் மற்றும் பிப்ரவரி மாதம், 2007-ல் மட்டும், ஏறத்தாழ 130 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டுபோயிருக்கிறார்கள் என்றும் குறிப்பிடுகிறது. எனவே, வேளாண் துறையையும் விவசாயிகளையும் பாதுகாக்க, உரிய முறையில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல, விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேளாண்மையில், விஞ்ஞான முறையில், நவீன உத்திகளைப் பயன்படுத்தினால்மட்டுமே, அதிக வருவாயை ஈட்ட முடியும் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது, நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அதேநேரத்தில், தமிழகத்தில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பட்டம் படித்தவர்கள், ஏறத்தாழ சுமார் 15 ஆயிரம் பேர் இப்போது வேலையில்லாமல் உள்ளனர். 1987 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டுவரை, வேளாண் அலுவலர் பணியில், வெறும் 416 பேர் மட்டுமே நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 19 ஆண்டுக் காலத்தில் வேளாண் துறையில் பட்டம் பெற்றவர்கள், 416 பேர்தான் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இவர்களை எப்படி இந்தத் துறையிலே பயன்படுத்துவது என்பதை அரசு யோசித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல, இப்போது கரும்பு விவசாயிகள் மிகப் பெரிய இன்னலுக்கு ஆட்பட்டுள்ளார்கள். 2002 முதல் சில ஆண்டுகள், மாநில அரசு கரும்பிற்குண்டான பரிந்துரை விலையை அறிவிக்கவில்லை. மாநில அரசு விலையை உயர்த்திய காரணத்தினாலே, கூட்டுறவு ஆலைகளுக்கு ஏறத்தாழ 800 கோடி ரூபாய் நஷ்டம் என்று அன்றைக்குக் கூறப்பட்டது. அதன் பிறகு, கடந்தகால அரசு, கரும்பினுடைய விலையை 1,014 ரூபாய் ள்ன்று அறிவித்தது. தற்போதைய அரசு 1,025 ரூபாய் என்று அறிவித்துள்ளது. ஆனால், கரும்பு விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய கரும்பிற்கு விலையைத் தீர்மானிக்கின்றபொழுது, உடன்பாட்டு விலையைத் தீர்மானிக்கின்றபொழுது, முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி விலையைத் தீர்மானிக்க வேண்டுமென்று நீதிமன்றத் தீர்ப்பு இருந்தும், முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டாமல், ஏன் விலை தீர்மானிக்கப்படுகிறது என்பதை விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கரும்பு ஆலைகளில் பதிவு செய்யாத கரும்பு விவசாயிகள், விற்பனை செய்வதற்கு இப்போது மிகப் பெரிய நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விவசாயிகளிடம், தனியார் ஆலை முதலாளிகள், 250 ரூபாய்க்கு நாங்கள் வெட்டிக்கொள்கிறோம்

என்கிற நிலையில், விவசாயிகளிடம் கேட்டு வருகிறார்கள். இதன் காரணமாக, கரும்பு உற்பத்தி செய்திருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோல, செய்யாறு அருணாசலம் சர்க்கரை ஆலை மூடப்பட்ட காரணத்தினாலே, அந்த ஆலையில் பதிவுசெய்த விவசாயிகள் உற்பத்தி செய்த கரும்பை, நான்கு ஆலைகள் வெட்டிக் கொள்ள வேண்டுமென்று ஒப்பந்தம் போட்டிருக்கிறது. ஆனால், அந்த நான்கு ஆலைகளும் அந்த விவசாயிகளிடமிருந்து கரும்பைக் கொள்முதல் செய்வதற்கு மறுத்து வருகிறார்கள். எனவேதான், இப்படிப்பட்ட பாதிப்புக்களைச் சந்தித்துக்கொண்டுவருகிற, இதை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற, ஏறத்தாழ 8 இலட்சம் குடும்பங்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இன்றைய பத்திரிகைச் செய்தி குறிப்பிடுகிறது; விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலே, விவசாயிகளால் பதிவு செய்யப்படாமல், 8 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இப்போது கரும்பு பயிரிடப்பட்டிருக்கிறது என்றும், வெட்டுவதற்குத் தயாராக உள்ள அந்தக் கரும்பை, கரும்பு ஆலைகள்—கூட்டுறவு ஆலைகளும், தனியார் ஆலைகளும்—வெட்டுவதற்கு மறுத்த காரணத்தினாலே, அந்தக் கரும்பை நேற்றையதினம் தீயிட்டுக் கொளுத்தியிருக்கிற சம்பவம், விழுப்புரம் மாவட்டத்திலே நடைபெற்றிருக்கிறது என்றும் அது குறிப்பிடுகிறது. எனவேதான், விவசாயிகளைப் பாதுகாக்க, கரும்பு விவசாயிகளைப் பாதுகாக்க, உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டுமென நான் வலியுறுத்துகிறேன். அதேபோல, பயிர் இன்ஷுரன்ஸ் ... (குறுக்கீடு)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், செய்யாறு அருணாசலம் சர்க்கரை ஆலை என்று சொன்னார்கள். செய்யாறிலே அப்படி இல்லை. அங்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இருக்கிறது. திருவண்ணாமலை பக்கத்தில்தான் அருணாசலம் சர்க்கரை ஆலை இருக்கிறது.

அந்தச் சர்க்கரை ஆலை, சென்ற ஆட்சியிலே முதன்முதலாகத் தொடங்கப்பட்டது. இரண்டு ஆண்டுக் காலம் அந்தச் சர்க்கரை ஆலை



ஓடியது; பிறகு அந்தச் சர்க்கரை ஆலை நிறுத்தப்பட்டது, அந்த ஆட்சியிலேயே. மூன்று ஆண்டுக் காலம் அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள், கரும்பு விவசாயிகள் நாதியற்ற நிலையிலே இருந்தார்கள். இந்த முறை, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே அந்த விவசாயிகளையெல்லாம், அந்தக் கரும்பு ஆலை சம்பந்தப்பட்டிருக்கின்ற கரும்பு விவசாயிகளையெல்லாம் அழைத்துப் பேசி, நான்கு சர்க்கரை ஆலைகள்—கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, திருத்தணி, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, ஆம்பூர், அதேபோன்று தரணி சர்க்கரை ஆலை, S.V. Sugar mill ஆகிய நான்கு சர்க்கரை ஆலைகளினுடைய தனி அதிகாரிகளையும், முதலாளிகளையும், இந்த அரசாங்கம் அழைத்துப் பேசி, அந்தப் பகுதியிலிருக்கின்ற கரும்பு விவசாயிகளுடைய கரும்புகளையெல்லாம் எவ்வளவு, எவ்வளவு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து, இப்பொழுது இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு தனியார் சர்க்கரை ஆலை எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னொரு தனியார் சர்க்கரை ஆலையும் எடுத்துக்கொள்கிறேன் என்று உறுதி கொடுத்திருக்கிறது.

வேண்டிய பணிகள் எல்லாம் இந்த அரசின்மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள், கரும்பு சர்க்கரை ஆலையின் பிழிதிறனுக்கு மேலும், அங்கு உற்பத்தி செய்திருக்கின்ற காரணத்தினால், அவற்றை எடுப்பதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. ஆனாலும், தொடர்ந்து சம்பந்தப்பட்ட தனி அதிகாரிகளை அழைத்து, அதுவும் குறிப்பாக நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய அறைக்கே Sugar Commissioner-ஐ, ஆணையாளரை அழைத்து, நானும் சென்று பங்கிட்டுக் கொடுத்து, இன்னும் கொஞ்சம் நாளைக்கு ஓட்ட முடியுமா என்று அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த அரசு கரும்பு விவசாயிகளைப் பொறுத்தளவுக்கு, அந்தப் பகுதியிலே உரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நான் கேட்க விரும்புவது, கரும்பு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு மகாராஷ்டிரா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஒப்பந்தம் செய்யப்படாத கரும்புகளை வெட்டி எடுத்துக்கொள்ள அரசும், தனியாரும் மற்றும்

கூட்டுறவு மில்களுக்கு உத்தரவு பிறப்பித்திருப்பதைப்போல, தமிழகத்திலும் பிறப்பிக்க முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதேபோல, விவசாயிகள் பயிர் இன்ஷூரன்ஸுக்காக, 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். ஆனால், தமிழகத்திலே ஒரு கோடி விவசாயிகள் இருக்கிறார்கள். இந்த ஒரு கோடி விவசாயிகளும் பயன்பெறக்கூடிய அளவிற்குப் பயிர் இன்ஷூரன்ஸ் தொகைக்குக் கூடுதலான நிதியை ஒதுக்க வேண்டுமென நான் வலியுறுத்துகிறேன். பயிர் இன்ஷூரன்ஸ் என்று சொல்லுகிறபொழுது, என்னுடைய தொகுதியிலே 6,000 விவசாயிகள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; 2005-2006-க்குரிய பயிர் இன்ஷூரன்ஸ் தொகை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. தமிழகத்தினுடைய வேளாண் துறை, வருவாய்த் துறை, மாவட்ட நிருவாகம் இவை அனைத்தும், என்னுடைய தொகுதியிலே 90 சதவீதம் பயிர் பாதிப்பு என்று அரசுக்கு அறிக்கை அனுப்பியதற்குப் பின்னாலே, தமிழகத்திலே இருக்கக்கூடிய புள்ளியியல் துறை எடுத்த கணக்கைமட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு, 6,000 விவசாயிகளுக்கு இன்ஷூரன்ஸ் தொகை இல்லையென்று மறுப்பது சரியானது அல்ல; மீண்டும் அரசு பரிசீலிக்க வேண்டுமென நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோல, மரபணு மாற்று சாகுபடி என்பது, இப்போது ஒரு அபாயகரமான பிரச்சினையாக மாறியுள்ளது. Bt. பருத்தி பயிரிட்ட தருமபுரி, சேலம், வேலூர் உள்ளிட்ட பகுதிகள் 5,000 ஏக்கருக்குமேல் இப்போது பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு 5,000 ரூபாய் வீதம் நிவாரணம் என்பது வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், வேலூர் மாவட்டத்தில், பல விவசாயிகளுக்கு இந்தத் தொகை என்பது இப்போது கிடைக்காத நிலை. அதேபோல, Bt. உருளை; உலகில் பல்வேறு நாடுகளில் இதனால் ஏற்படக்கூடிய தீங்குகளை அறிந்து, தடை செய்திருக்கிறார்கள். எனவே, மாநில அரசு விழிப்போடு இருக்கவேண்டும். சமீபத்தில் கோயம்புத்தூரிலே மரபணு மாற்று விதைகளைப் பயன்படுத்தி பயிர் செய்யப்பட்டிருக்கிறது. மரபணு மாற்று விதைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்; அல்லது மத்திய அரசு நியமித்திருக்கக்கூடிய Board அனுமதி அளிக்கவேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மாரிமுத்து, சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** இதோ முடித்து விடுகிறேன். ஆனால், மத்திய அரசு அனுமதிக்காமல், Board-ன் அனுமதியைப் பெறாமல், கோயம்புத்தூரில் எப்படிப் பயிரிடப்பட்டது; மாநில அரசு எப்படி



அனுமதித்தது என்பதை நான் அறிய விரும்புகிறேன். எனவே, மரபணு மாற்று விதைகளைச் சோதிக்கக்கூடிய களமாகத் தமிழகத்தை மாற்றுவதற்கு அரசு அனுமதிக்கக் கூடாது என நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழகத்தில் விவசாய மேம்பாட்டுக் குழு என்பது அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே அதிகாரிகள்மட்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அதிகாரிகள், ஆய்வாளர்கள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மேம்பாட்டுக் குழுவாக அது மாற்றப்பட வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* அதேபோல, இன்னும் ஒரே ஒரு கோரிக்கை.

*பிற்பகல் 12-05*

நேற்றையதினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்; கன்னியாகுமரி மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மீனவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு, வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று அறிவித்தார்கள். அதனைத் தமிழகமே வரவேற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில், கடந்த மாதம் என்னுடைய நாகை தொகுதியில் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட இரண்டு மீனவர்களுக்கும் அந்தத் தொகை, 5 இலட்சம் ரூபாயும், வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்பதையும் வழங்க வேண்டும். நேற்றிலிருந்து நாகை மீனவர்கள் தொலைபேசியிலே, தொடர்ச்சியாகத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, வேளாண் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். வேளாண்மைத் துறை தொடங்கப்பட்டு, 100 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. 101 ஆவது ஆண்டிலே அடி எடுத்து வைத்திருக்கிறோம். எனவே, 150 ஆவது ஆண்டு முடிந்து, காவல் துறைக்கு விழா எடுத்ததைப்போல, 100 ஆண்டுகள் முடிந்திருக்கக்கூடிய வேளாண்மைத் துறைக்கும் அரசு சார்பில் விழா எடுக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கூறுவதோடு, தமிழகத்தில் பயறு வகைகளின் விளைச்சல் மிகவும் குறைவாக உள்ளதால், நமது தேவையினை நிறைவு செய்திட பயறு வகைகள், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன. ஆகவே, பிற மாநிலங்களில் மற்றும் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் பயறு வகைகளுக்கு cess விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுகிறேன். வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு மட்டுமே *(மணியடிக்கப்பெற்றது)* cess விதிக்க வேண்டும்; வேளாண்

விளைபொருட்களுக்குமட்டுமே, cess விதிக்க வேண்டும்; இப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களுக்கு cess விதிககக் கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரே ஒரு விஷயம். கன்னியாகுமரி மாவட்டத்தில் 30 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில், தென்னை விவசாயம் செய்யப்படுகிறது. 2000 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தென்னை விவசாயிகளின் வளர்ச்சிக்கான ஆய்வு நடத்த, விவசாயத் துறைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. கேரளாவைப்போல், தேங்காயை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்பது உள்ளிட்ட சில பரிந்துரைகளை அந்தக் குழு அரசிடம் சமர்ப்பித்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அதன்பின் வந்த அ.இ.அ.தி.மு.க. அரசு, அந்தப் பரிந்துரைகளைக் கிடப்பில் போட்டது. எனவே, அந்தப் பரிந்துரைகளை அமல்படுத்தவும், கேரளாவைப்போல ஒரு கயிறு வாரியம் அமைக்கவும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, தந்த வாய்ப்பிற்குப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன் உரையாற்றும்போது, அவருடைய உரையிலே ** அந்த மாதிரியான வார்த்தைகள் இருக்கின்றன. அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் வேளாண் பிரச்சினைகளைச் சிறப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளதோடு, வேளாண் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய அவசியத்தையும், அதேசமயம் அரசின் பல நடவடிக்கைகளையும் தெளிவுபடுத்தியுள்ளார். அந்த அடிப்படையில், வேளாண் பொருள் உற்பத்திக்கு விவசாய ஆராய்ச்சி முக்கியம் என்பதும், அந்த ஆராய்ச்சியும் அந்தந்தப் பகுதி விவசாய மக்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டும் என்பதும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உண்மை. ஆனால்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தமிழ்நாட்டில் வேளாண்மை ஆராய்ச்சி தொடங்கப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேலாகியும், சிவகங்கை மாவட்ட விவசாய மக்களின் தேவைகளை நிறைவேற்றும்வகையில், முழுமையான ஓர் ஆராய்ச்சி மையம் அங்கு அமைக்கப்படவில்லை. எனவே, சிவகங்கை மாவட்ட விவசாய உற்பத்திக்கு முக்கியத்துவம் தரும்வகையில் சிவகங்கை மாவட்டத்தில் ஒரு மண்டல வேளாண்மை ஆராய்ச்சி மையத்தை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில், மிளகாய் முக்கிய சாகுபடிப் பயிர். மிளகாய் வற்றலைப் பாதுகாக்க, குளிரூட்டப்பட்ட பாதுகாப்பு மையங்களையும், மிளகாய் தொழிற்சாலைகளையும் நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும். சிவகங்கை மாவட்டம் உட்பட தமிழ்நாட்டில் வறட்சி பாதித்த மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்குப் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தின்கீழ், பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் பதியாத விவசாயிகளுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-10

31-3-2007 ஆம் தேதியோடு நெல்லுக்கு மத்திய அரசு வழங்கிவந்த ஆதரவு விலையான ரூபாய் 40/-ஐ நிறுத்திவிட்டதால், விவசாயிகள் பாதிப்படைந்துள்ளார்கள். எனவே, தொடர்ந்து மத்திய அரசின் ஆதரவு விலையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31 ஆம் தேதி வரை மத்திய அரசாங்கம் கொடுத்திருந்தது உண்மை; 40 ரூபாய் ஊக்கத் தொகை. ஆக, தொடர்ந்து மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று, தமிழக அரசின் சார்பாகக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும், இடையிலே அந்த அனுமதி பெறுகிறவரை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்த 40 ரூபாய் ஊக்கத் தொகையைக் கொடுப்பதற்கு அனுமதித்திருக்கிறார்கள். அதைக் கொடுக்கச் சொல்லி இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சு. குணசேகரன்:** தமிழ்நாட்டு விவசாயிகளின் சார்பில் அமைச்சர் அவர்களுக்கும், கலைஞர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** கொடுக்கச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) 6 ஆயிரம் ரூபாய் முதலிலே. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, கொடுக்கச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) கொடுக்கச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, கொடுக்கச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதற்கு, உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள் முதலிலே.

**திரு. சு. குணசேகரன்:** பசுமைப் புரட்சியின்மூலம் உணவுப் பொருள்கள் உற்பத்தி அதிகரித்தாலும், எதிர் விளைவுகளை அது உருவாக்கியுள்ளது. நில வளம் குன்றி, விஷத் தன்மை நிலத்தில் மட்டுமல்லாது, கீழூற்றுத் தண்ணீரிலும் விஷம் கலந்துள்ளது. எனவே, தமிழகத்தில் இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன், அமைதியாக இருங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அதற்கான சிறப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இயற்கை வேளாண்மை உணவுப் பொருள்களை விற்பதற்கு, விற்பனை மையங்களை உருவாக்கி ஊக்கப்படுத்த வேண்டும். குறிப்பாக, இப்போது இயற்கை வேளாண், இயற்கை உணவு வகைகள் என்ற அடிப்படையில் பரவலாகப் பல்வேறு கருத்துகள் உருவாக்கப்பட்டிருக்கிற நேரத்தில், அதை ஊக்கப்படுத்த, உற்சாகப்படுத்த நமது மானியக் கோரிக்கைகளின்போது, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பல்வேறு துறைகளின்மூலமாக உணவுகள் வழங்கப்படுகின்றன; அந்த உணவுகளைக்கூட இயற்கை வேளாண் மூலமாக உற்பத்தி செய்த அந்த உணவு வகைகளை, அந்த உற்பத்தியின் மூலமாக தயாரிக்கப்பட்ட உணவுகளை வழங்குவது சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

உலகம் முழுவதும் இந்திய மூலிகைகளுக்குத் தேவை இருப்பதால், மூலிகை உற்பத்தியை ஊக்கப்படுத்த நடவடிக்கையும், ஒருங்கிணைந்த திட்டத்தையும் உருவாக்க வேண்டும். உணவு தானிய உற்பத்தி, வீழ்ச்சி அடைந்துள்ள சூழ்நிலையில், இந்திய மக்களுக்கு உணவு தானியத்தில் தன்னிறைவை ஏற்படுத்த இத்தொழிலைப் பாதுகாத்து, அதை நம்பி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் வாழ்விக்க, அரசு பல அடிப்படையான



பிரச்சினைகளில் கூடுதலான கவனமும், செயல் ஊக்கமுள்ள செயல் திட்டங்களையும் உருவாக்கிச் செயல்படுத்திட வேண்டும்.

இந்தியாவில், 1950-60 ஆம் ஆண்டுகளில் 4 சதவிகிதமாக இருந்த வேளாண்மை வளர்ச்சி, 1990 ஆம் ஆண்டுகளில் 3 சதவிகிதமாகக் குறைந்து, 2005 முதல் 2 சதவிகிதமாக மிக மோசமான நிலைக்கு எட்டியுள்ளது. அதேபோல், தேசிய வருமானத்தில் 50 சதவிகிதப் பங்கு வகித்த வேளாண் துறை, தற்சமயம் 17 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. அதனால் நாடு முழுவதும் விவசாயத்தின்மீது நம்பிக்கை இழந்து, வேளாண் மக்கள் விவசாயத்தைக் கைவிட்டு நகர்ப் புறங்களுக்குக் குடி பெயர்கிறார்கள். விவசாயத்தில் நீடித்தவர்கள் கடந்த சில ஆண்டுகளில் மட்டும் சுமார் ஒரு இலட்சம் பேர் தற்கொலை செய்து கொண்டு மாண்டுவிட்டார்கள். வேளாண்மை என்பது, தேசத்தின் ஜீவாதாரமான துறை. மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் தொழில். எனவே, வேளாண் உற்பத்தி அதிகரிப்பு, உணவுப் பாதுகாப்பு, உற்பத்திப் பாதுகாப்பு என்பதுடன், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பாதுகாப்பையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

வேளாண் தொழிலுக்கு அடிப்படையான தேவை நீர்ப் பாசன வசதி. தமிழ்நாட்டில் ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம், கிணற்றுப் பாசனம்மூலம், சுமார் 30 சதவிகித நிலங்களுக்குத்தான் பாசனம் கிடைக்கிறது. 70 சதவிகிதம் வானம் பார்த்த விவசாயம். ஒவ்வொரு பகுதிக்குமுள்ள தனித் தனி விவசாயப் பிரச்சினைகளுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு, தீர்வுகள் எட்டப்பட வேண்டும். வறட்சி, வெள்ளம் போன்ற பாதிப்புகளைக் கவனத்தில்கொண்டு, நிலவள, நீர்வள பாதுகாப்பிற்கான தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

5-2-2007-ல் காவிரி இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில், தமிழ்நாட்டிற்குப் பல பாதகமான அம்சங்கள் உள்ளன. அவற்றைச் சரிசெய்து, தமிழகத்தின் பாரம்பரியமான சாகுபடி உரிமையைப் பாதுகாக்க, மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில அரசும் அதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

முல்லை பெரியாறு பிரச்சினையில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்த மத்திய அரசு உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். கேரள அரசின் அணை கட்டும் முயற்சியை எல்லா முனைகளிலும்

தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, பாலாற்றுப் பிரச்சினையிலும் தமிழக மக்களுடைய நலன்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேளாண் தொழிலுக்கு, விதை அடிப்படையான தேவையாகும். விதைகள் உற்பத்திக்கு அரசு பல நடவடிக்கைகள் எடுத்தபோதும், அவை போதுமானதாக இல்லை. அரசுத் துறையின் சார்பில் விதைகள் உற்பத்தி, விநியோகம் என்பது, சுமார் 20 விழுக்காடுதான் உள்ளது. 80 சதவிகித விதை விநியோகம், தனியார்வசம் உள்ளது. இந்தப் பெரும் இடைவெளியைப் பயன்படுத்தி, அன்னிய உள்நாட்டுக் கம்பெனிகள் தரமற்ற விதைகளை, மறு முளைப்புத் திறன் இல்லாத விதைகளை உற்பத்திச் செய்து விநியோகிப்பதால் உற்பத்தியில் பெருமளவு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. தனியார் கம்பெனிகள் கொள்ளை இலாபம் அடைகிறார்கள். அரசே மானிய விலையில் தரமான மறு முளைப்புத் திறனுள்ள விதைகளை முழுமையாக உற்பத்தி செய்து வழங்க வேண்டும். தனியார் விதை உற்பத்தியில் தரக் கட்டுப்பாட்டை உறுதி செய்யும் விதிமுறைகள் கடுமையாக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் ஏழு வகையான தட்பவெப்ப மண்டலங்கள் உள்ளன. அதற்கேற்ப விதைகளை, பயிர் வகைகளைத் தேர்வு செய்து, விவசாயிகளுக்கு உதவ வேண்டும். தமிழ்நாட்டில், சிறு குறு விவசாயிகளின் எண்ணிக்கை அதிகம். அவர்களுக்கு எளிதாக, தேவைப்படுகிற நேரங்களில், தாராளமான கடன் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிரிவுகள் 12-15

மத்திய அரசு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் இந்த ஆண்டு 2 இலட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு, விவசாயக் கடன் வழங்குவதாக அறிவித்துள்ளது. ஆனால், இந்திய வங்கிகளின் செயல்பாடுகள் நகர்ப்புறத்தைச் சார்ந்தே உள்ளதாகவும், 31 சதவிகித மக்கள் வங்கிக் கணக்குகள் வைத்துள்ளதாகவும், 2 சதவிகித மக்கள் வங்கிகளில் கடன் பெறுபவர்களாக இருப்பதாகவும், 51 சதவிகித மக்கள் வங்கியிடம் எந்தச் சம்பந்தமும் இல்லாமல் உள்ளார்கள் என்றும் ஆய்வறிக்கை கூறுகிறது. எனவே, இப்படிப்பட்ட நிலையில், சாதாரண கிராமப்புற ஏழையெளிய விவசாய மக்கள், இந்தப் பயனை அடையமுடியாத ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, கூட்டுறவுத் தொடக்க



வேளாண்மை வங்கிகளைப் பலப்படுத்தி, அனைத்து விவசாயிகளுக்கும் கடன் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அறிவினை மையமாகக் கொண்டு இயங்கும் சமுதாயச் சூழ்நிலை வளர்ந்துவரும் நிலையில், வேளாண் தொழிலைப் பாதுகாக்க, பலப்படுத்த, வேளாண் தொழில்நுட்பங்களை, வேளாண் உற்பத்தி நுணுக்கங்களை விவசாய மக்கள்பெற உதவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அதற்கான கட்டமைப்புகள், நிருவாக முறைகள் முற்றிலும் சீரழிந்துள்ளன. தமிழ்நாட்டில், பொறியியல் மற்றும் மருத்துவப் பட்டப் படிப்புகள் வளர்ந்து வரும் நிலையில், வேளாண் கல்வி நீண்ட நாட்களாகத் தேக்கம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில், கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஒன்றுதான் இயங்கி வருகிறது. இன்னும் கூடுதலாகப் பல்கலைக்கழகங்களைத் தொடங்க வேண்டும். தமிழ்நாட்டில், மொத்தமே 9 வேளாண் கல்லூரிகள்தான் உள்ளன. அவற்றிலிருந்து ஆண்டுக்கு சுமார் 980 மாணவர்களே இளங்கலைப் பட்டப் படிப்பு படிக்கிற வாய்ப்பு உள்ளது. அதைப்போல, டிப்ளமோ பயிற்சிக்கு 6 மையங்களில், 300 பேர்மட்டுமே பயிற்சி பெறுகிறார்கள். மாறிவரும் வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு அளிக்க, இந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லை. எனவே, கல்லூரிகளும், டிப்ளமோ பயிற்சி நிலையங்களும் அதிகப்படுத்தப்பட வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளிலேயே வேளாண் பாடத் திட்டத்தைக் கொண்டுவரும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். வேளாண் பல்கலைக்கழகத்தை, சிவகங்கை போன்ற பின்தங்கிய மாவட்டங்களை மையப்படுத்தி, கூடுதலான வேளாண் பல்கலைக்கழகங்களை விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்குத் தகவல் அளிக்க வேண்டிய விரிவாக்கப் பணிகள் முழுமையாகத் தோல்வி அடைந்துள்ளன. தமிழகத்தில் வேளாண் துறை மற்றும் தோட்டக்கலை பட்டம் படித்தவர்கள் 1987 முதல் 2006 ஆம் ஆண்டு வரை, சுமார் 16,000 நபர்கள், 20 ஆண்டுகளில் தேர்வு பெற்று வந்திருக்கிறார்கள். இவர்களில், 1,188 நபர்கள் மட்டுமே பணியில் அமர்த்தப்பட்டு உள்ளார்கள். அதைப்போல, கிராமப்புற மக்களோடு தொடர்புடைய உதவி வேளாண்மை அலுவலர் என்ற பணியிடம், கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் பணி நியமனம் செய்யப்படாமல் உள்ளது. அதற்குக் கீழே உள்ள வயல் விளக்க அலுவலர்-FDO-என்ற பதவியிலும் கடந்த 20 ஆண்டுகளாகப் பணி நியமனம் செய்யப்படாமல் உள்ளது. அரசு என்னதான் புதிய திட்டங்களைத் தீட்டினாலும், அவற்றை கிராமப்புறங்களில்

விவசாயிகளிடம் நேரடியாகக் கொண்டு செல்பவர்கள், விவசாயத் துறையில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ஆவார்கள். எனவே, உரிய காலியிடங்களைப் பூர்த்தி செய்து, வேளாண் தொழிலுக்கு உதவிட வேண்டும்.

ஆண்டுதோறும் விவசாய நிலங்கள் குறைந்துகொண்டே வருகிற நிலையில், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், வெளிநாட்டு, உள்நாட்டு ஏகபோகக் கம்பெனிகளின் வளர்ச்சிக்காகத் தொழில் வளர்ச்சி என்ற போர்வையில் அரசுகளால் முன்மொழியப்படுகின்றன. இத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எக்காலத்திலும், எக்காரணத்தைக் கொண்டும், விவசாய நிலங்கள் பயன்படுத்தப்படக் கூடாது.

விவசாய உற்பத்தியில் 2 சதவிகிதம் மட்டும்தான் பதப்படுத்தப் படுகிறது. 40 சதவிகித பழ உற்பத்தி, உரிய வகையில் பதப்படுத்தப்படாததால் வீணாகிறது. அனைத்து விவசாய விளைபொருள்களுக்கும் இலாபமான விலை கிடைக்க அரசே பொறுப்பேற்க வேண்டும்.

உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் சந்தை நிலவரங்களை அறிந்துகொள்ளும் வசதிகளும், சந்தைகளுக்கு நேரடியாகப் பொருட்களை அனுப்பும் வசதிகளும் கிராமப்புற மட்டத்தில் ஏற்படுத்த வேண்டும். சந்தைகளில், விலை கிடைக்காத காலங்களில், உற்பத்திப் பொருள்களைப் பாதுகாப்பதுடன், பொருள்களின் மதிப்புக்கான பணத்தைக் கடனாகப் பெற்றுக் கொள்வதற்கான கட்டமைப்பு வசதிகளை, கிராம மட்டங்களில் ஏற்படுத்த வேண்டும். விவசாய உற்பத்திப் பொருள்களை, மதிப்புக் கூட்டப்படும் பொருளாக மாற்றும் தொழிற்சாலைகளை அதிக அளவில் கிராம மட்டத்தில் உருவாக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குணசேகரன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இந்தியாவில் விவசாயிகளுக்கும், உபயோகிப்பாளர்களுக்குமிடையே அதிக அளவிலான இடைத்தரகர்கள் உள்ளனர்; இதைப் போக்க வேண்டும். அனைத்து விவசாய உற்பத்திப் பொருள்களுக்கும் அரசே விலை நிர்ணயிக்கும் கொள்கையை உருவாக்கவும், அதற்கான கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்கான நடவடிக்கையையும் எடுக்க வேண்டும்.



கரும்பு, தமிழ்நாட்டில் முக்கிய உற்பத்திப் பொருளாக அதிக அளவில் பயிரிடப்படுகிறது. 9 சதவிகித சர்க்கரைச் சத்துள்ள கரும்பிற்கான விலையை, மத்திய அரசு டன்னுக்கு ரூ.1,500/- என அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-20

தமிழ்நாட்டில் இருபதுக்கும் மேற்பட்ட தனியார் சர்க்கரை ஆலைகள் இயங்கும் நிலையில், அவற்றைக் கட்டுப்படுத்த, மாநில அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு மாநில அரசு அறிவிக்கும் மாநில அரசின் ஆதரவு விலை, வாகன வாடகை போன்ற சலுகைத் திட்டங்களைத் தனியார் ஆலைகள் செயல்படுத்துவதில்லை. கரும்பு வெட்டப்படும் காலத்தின் அளவை நிர்ணயிப்பது, கரும்புக்கு மத்திய, மாநில அரசுகளின் விலைகளைக் கொடுப்பது, வெட்டுக் கூலி, வாகன வாடகையை ஆலைகளே ஏற்பது, கரும்புக்கான பணத்தை 15 நாட்களுக்குள்ளாக முழுப் பணமும் பட்டுவாடா செய்வது மற்றும் மத்திய மாநில அரசுகள் அறிவிக்கும் கரும்பு விவசாயிகளுக்கான திட்டங்களைத் தனியார் ஆலைகளும் ஏற்றுச் செயல்படுத்தும்விதத்தில், தமிழகச் சட்டமன்றத்தில் உரிய சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். இப்போது அரசு அறிவிக்கின்ற எல்லா அறிவிப்புகளையும், திட்டங்களையும் தனியார் ஆலைகள், வழக்குகளின் மூலமாக நிறுத்தி வைக்கின்றன. அவற்றைக் கொடுப்பதில்லை. எனவே, சட்டமன்றத்தில் உரிய சட்டத் திருத்தம் கொண்டுவருவது அவசியம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாடு வேளாண் மகளிர் வணிகத் திட்டம் சிறப்பாகச் செயல்பட, கூடுதலாக மகளிர் அமைப்புகளை இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரவும், அதற்காக ஒதுக்கப்படும் நிதியைச் செலவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ். (குறுக்கீடு) பேச்சை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** விவசாய விளைபொருட்களை அரசே கொள்முதல் செய்து, நுகர்வோருக்கு வழங்கும் திட்டத்தைப் படிப்படியாகச் செயல்படுத்தவும், விவசாயம் சார்ந்திருக்கின்ற மீன் குட்டைகள், கோழிப் பண்ணைகள் போன்றவற்றுக்கு இலவச மின்சாரம் கிடைப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

விவசாயிகளுக்கு உரம், விதைகளின் திடீர் விலை உயர்வு, தட்டுப்பாடு ஏற்படுவது போன்ற தொடர் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தி, விவசாய மக்களைப் பாதுகாப்பதற்காக அரசு கூடுதலான கவனத்தைச் செலுத்தவேண்டும்.

நமது கலைஞர் அரசு, கடந்த ஆண்டிலும், இந்த ஆண்டிலும் விவசாயிகளுக்காகக் கூடுதலாக பல நல்ல சலுகைகளையும், திட்டங்களையும் அறிவித்திருக்கிறது. அதோடு, நான் முன்மொழிந்திருக்கின்ற இந்தக் கோரிக்கைகளின்மூலம் நடவடிக்கை எடுத்து, திட்டங்களை அமலாக்கி, தமிழ்நாட்டிலே விவசாய மக்களை வாழ்விக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்த நேரத்தில் கூறி, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

***திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறைக்கான மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்ததற்காக, தங்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், மக்கள் தலைவர் திரு. வைகோ அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் 60 சதவிகித மக்கள் விவசாயத்திலும், அதுசார்ந்த தொழில்களிலும் உள்ளனர் என்பதால், விவசாயத் துறைக்கு அதற்கேற்ப இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கப்படவேண்டும். 1960 வரையிலும் மொத்த உள்நாட்டு விவசாய உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்கு, சேவை மற்றும் உற்பத்தித் துறைகளைவிட அதிகமாக இருந்தது. ஆனால், அதன்பின்பு விவசாயத் துறையின் பங்கு குறைந்து வருகிறது. 1990-க்குப்பின், விவசாயம் வளர்ச்சியடையவில்லை. 1995-க்குப்பின், விவசாயம், இந்தியாவில் வீழ்ச்சி என்றுதான் சொல்லவேண்டும். தமிழகத்தில் ஒட்டுமொத்த உற்பத்தியில், விவசாயத் துறையின் பங்கு, கடந்த 1993-1994-ல் 25 சதவிகிதமாக இருந்தது. தற்போது 13 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. உணவு தானிய உற்பத்தியும் குறைந்துள்ளது. பயிரிடக்கூடிய நிலங்களின் அளவும் குறைந்துள்ளது. தமிழகத்தின் மொத்த வருமானத்தில், விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 60 சதவிகித மக்களுக்கு 14 சதவிகித வருமானமே போய்ச் சேருகிறது. விவசாயத்தில் ஈடுபடாத 40 சதவிகித மக்களுக்கு 86 சதவிகித வருமானம் போய்ச் சேருகிறது. பொய்யாமொழிப் புலவர் கூறிய,

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்"*



என்பதும், புகழ் பெற்ற அறிஞர் ஜான் ரஸ்கின் கூறிய,

***"உழுபவரின் வாழ்க்கையே, உலகில் சிறந்த வாழ்க்கை"***

என்பதும் பொய்த்துவிட்டது. ஒரு விவசாயிக்கு மூலதனம் நிலம், நீர், மற்றும் விதைகள். "மண்ணை வைத்துச் சாப்பிடு, பொன்னை விற்றுச் சாப்பிடு" என்பது பழமொழி. இயற்கை விவசாயத்தைக் கைவிட்டு, இரசாயன முறைக்குச் சென்றதால் மண் வளம் பாதிக்கப்பட்டு, நிலம் நச்சுத் தன்மை அடைந்துள்ளது. மண்புழு உரம் போன்ற இயற்கை உரங்கள் மண் வளத்தைக் காப்பது மட்டுமன்றி, செலவும் குறைவு; கிராமப்புறங்களில் அதிகமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்தவும் அது உதவும்.

நிலங்களில் வேலிகாத்தான்—Prosopis Juliflora—எனனும் மரங்கள், சோலையாக வளர்ந்து மண் வளத்தையும், நீர் வளத்தையும் கெடுக்கின்றன. உணவுப் பொருளைப் பறிகொடுத்துவிட்டு, அடுப்பெரிக்க விறகைமட்டும் வைத்து நாம் என்ன செய்யப்போகிறோம்? கேரளாவில் வேலிகாத்தான் சிறிய செடியாக முளைக்கும்போதே, அதை யார் பார்த்தாலும் கிள்ளி எறிந்துவிடுவார்களாம்!

*பிற்பகல் 12-25*

கோவில்பட்டி, எட்டயபுரம், தூத்துக்குடி பகுதிகளில் நிலத்தில் மக்னீசிய சத்து குறைந்துபோய் இருப்பதால் பருத்தி விளைச்சலும், பருத்தியின் தரமும் பாதிக்கப்படும் என அப்பகுதி விவசாயிகள கவலையில் உள்ளனர். இதை உடனடியாக ஆய்வு செய்து ஆவன செய்யவேண்டும்.

ஆந்திராவில் கீசரகட்டா என்னும் இடத்தில், இயற்கை முறையில் மண் வளத்தை ஒரு விவசாயி புதுப்பித்து, அதில் விளைந்த தரமான திராட்சைகளை, அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ் அவர்களிடமே காட்டியுள்ளார். கேரளாவில், திருச்சூர் அருகே, இயற்கை முறை விவசாயத்தில் விவசாயிகள் அதிக இலாபம் அடைந்துள்ளனர். வேப்ப எண்ணெய், புகையிலை மற்றும் மிளகாய்த் தூள் கலந்த கலவையை நெற்பயிரில் தூவி, நோய்த்தடுப்பு செய்து வெற்றிகண்டுள்ளனர். இவற்றையெல்லாம் தமிழக விவசாயிகளுக்கும் தெரிவிக்க வேண்டும். மண் வளத்தைப் பாதுகாக்க அவசர நடவடிக்கைகள் தேவை.

அடுத்த முதலீடு நீர். நம் நாட்டில் நிலத்தடி நீர் அதிகமாக உறிஞ்சப்படுவதால், எதிர்காலத்தில் 25 சதவிகித விவசாய விளைச்சல்

பாதிப்பு அடையும் என்று ஸ்டாக்ஹோமில் உள்ள—International Water Institute-உலக தண்ணீர் நிறுவனம் எச்சரித்துள்ளது. தமிழகத்தில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள். ஆண்டில் 150 முதல் 200 நாட்களுக்குத்தான் விவசாய வேலை கிடைக்கிறது. இதில் கிடைக்கும் வருமானத்தை வைத்துதான், ஆண்டு முழுவதும் வாழ்க்கை நடத்த வேண்டியுள்ளது. ஆண்டு முழுவதும் விவசாயம் செய்ய, போதிய நீர்ப் பாசன வசதிகள் இல்லை. தமிழகம், ஆந்திரம், காஷ்மீர், இராஜஸ்தான் மாநிலங்களில் இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறையும், குஜராத், உத்தரப் பிரதேசத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும், மராட்டியம், விதர்பா பகுதிகளில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும், மேற்கு வங்கம், ஒரிஸ்ஸா, பீகார், மத்தியப் பிரதேசத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும், அஸ்ஸாம் மாநிலத்தில் 15 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் வறட்சி ஏற்படுகின்றது. வறட்சியைப் போக்கி ஆண்டு முழுவதும் தொடர்ந்து விவசாயம் செய்வதற்கு மக்கள் தலைவர் திரு. வைகோ அவர்கள் நாடாளுமன்றத்தில் தனி நபர் மசோதாமூலமும், நெல்லை முதல் சென்னை வரை நடந்த நடைப்பயணத்தின்மூலமும் வலியுறுத்திய, நதிகள் இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும், நதி நீருக்காக மாநிலங்களுக்கு இடையே தொடர்ந்து பிரச்சினைகள் நிலவுவதால், தமிழக விவசாயிகளின் நிலை கேள்விக்குரியதாக இருக்கின்றது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் சேகர், உட்காருங்கள். அனுமதி இல்லை. உட்காருங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** நதி நீருக்காக மாநிலங்களுக்கிடையே தொடர்ந்து பிரச்சினை நிலவுவதால், தமிழக விவசாயிகளின் நிலை கேள்விக்குறி ஆகின்றது. நீருக்காக, மூன்றாவது உலகப் போர் வரலாம் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். தண்ணீருக்காக ஏற்படும் பிரச்சினைகளை மனதில்கொண்டுதான், "Whisky is for drinking, water is for fighting over" என்று புகழ்பெற்ற அறிஞர் மார்க் ட்வைன் கூறியது உண்மையாகி வருகிறது.

செக்கோஸ்லோவாகியா, இஸ்ரேல், கலிபோர்னியாவில் சிறப்பான நீர்வள மேலாண்மைத் திட்டங்கள் செயலில் உள்ளன. இவற்றையெல்லாம் நமது கிராமப்புற விவசாயிகளுக்குத் தெரிவிக்கவேண்டும்.

மூன்றாவது மூலதனம் விதைகள். போர்க்காலங்களில் முற்றுகையின்போது எதிரிகள் விதை நெல்லை வைத்துவிட்டுப்



போவார்களாம். ஆனால், நமது பாரம்பரிய விதைகள் எல்லாம் நம்மிடமிருந்து நாகரீகமாகத் திருடப்பட்டுவிட்டன. ஒவ்வோர் ஆண்டும், விதைப்பதற்கான விதைகளுக்கு விதை நிறுவனங்களை நாடவேண்டிய அவல நிலை உள்ளது. மண்ணை மலடாக்கும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளும், பயிர்களும் மனித இனத்திற்குக் கேடு விளைவிப்பவை. எனவே, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளையும், பயிர்களையும் தடை செய்யவேண்டும்.

பன்னாட்டு நிறுவனங்களை, விவசாயத் துறையில், விதைகள் உற்பத்தியிலும், விற்பனைத் துறையிலும், குறிப்பாக, சில்லறை விற்பனையிலும் அனுமதிக்கக் கூடாது. நார்வே நாட்டில் சிவில்பாடு தீவில், விதை வங்கி ஒன்று சென்ற ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது. பல நாட்டுப் பாரம்பரிய விதைகள் அங்கு உள்ளன. ஆயிரம் ஆண்டுகளானாலும் விதைகளைக் கெடாத வகையில் பாதுகாக்கும் வசதிகள் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல், நமது பாரம்பரிய விதைகளைப் பாதுகாக்க, நாட்டில் முதன்முதலாகத் தமிழகத்தில் விதை வங்கி ஒன்றை நிறுவவேண்டும் என்பதை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்துகிறது.

ஜப்பான், சீனா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில், குதிரை வாலி தானியம், அரிசி உணவிற்கு மாற்றாகவும், இணையாகவும் உள்ளது. அமெரிக்காவில் பான்யார்டு என்ற பெயரிலும், ஜப்பானில் மில்லட் என்றும் மிகவும் புகழ் பெற்றுள்ளது. நம் நாட்டில் கர்நாடகா, ஆந்திரம், மராட்டியம், பீகார், மத்தியப் பிரதேசம் மாநிலங்களில் பயிர் செய்யப்படுகிறது. தமிழகத்தில் அதிக அளவு பயிர் செய்யப்பட்ட இநத உணவு தானியம் தற்போது கிட்டத்தட்ட மறைந்துவிட்டது மறைந்துவரும் நம் பாரம்பரிய பயிர் வகைகளை, தானிய வகைகளை, மீண்டும் உற்பத்தி செய்ய ஆவன செய்ய வேண்டும். விவசாயிகளின் விளைபொருள்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலைகள் கிடைக்க வழிவகை காண முயலவேண்டும். நான்கில் ஒரு விவசாயி விவசாயத்தை விட்டுவிடத் தயாராக இருக்கிறார். பத்தில் ஒரு விவசாயி, தொழிலில் இலாபம் இல்லை என்ற காரணததால் விவசாயத்தில் ஆர்வம் இல்லாமல் இருக்கிறார். கடந்த 20 ஆண்டுகளாக விவசாயப் பொருள்களின் விலைகள், கிட்டத்தட்ட அதே நிலையில்தான் இருக்கின்றன. குறிப்பிடத்தக்க விலை ஏற்றம் ஏதுமில்லை. ஆனால், கார்களின் விலையில் 20 ஆண்டுகளில் எவ்வளவு ஏற்றம்; எவ்வளவு மாற்றம். ஜப்பான் நெல் சாகுபடியாளர்களின, நோக்கியா கூட்டுறவு

மற்றும் ஹாலந்து நாட்டின் வேளாண் விற்பனை கூட்டுறவுச் சந்தைகளைப்போல், பெங்களூரில் சபல் மார்க்கெட் ஏற்படுத்தப்பட்டது.

*பிற்பகல் 12-30*

பாலைக் கொள்முதல் செய்து, கறவையாளர்களுக்குப் பட்டுவாடா செய்வதுபோல், சபல் சந்தை நிர்வாகம், காய்கறிகள், பழங்களை வயல்களிலேயே கொள்முதல் செய்து சந்தைக்குக் கொண்டுவந்து ஏல முறையில் விற்று, விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்கிறது. அதைப்போன்று விற்பனையில் புதிய யுக்திகளைக் கண்டு, விளைபொருட்களுக்கு விற்பனைச் சந்தைகள் உருவாக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நமது விவசாயிகளின் மகசூலைப் பெருக்கும் வழிகளையும் காண வேண்டும்.

உலக சராசரியை ஒப்பிடும்போது, நமது மகசூல் மிகவும் மோசமாக உள்ளது. அரிசி ஒரு ஹெக்டேரில் உலக சராசரி 7,111 கிலோ; நமது மகசூல் 2,811 கிலோ. கோதுமை உலக சராசரி 8,997 கிலோ; நமக்கு 2,193 கிலோ. பயறு வகை உலக சராசரி 4,527 கிலோ; நமக்கு 608 கிலோ. மக்காச்சோளம் உலக சராசரி 18,638 கிலோ, நமக்கு 1,108 கிலோ. சோளம் உலக சராசரி 6,182 கிலோ, நமக்கு 897 கிலோ. இதை ஆய்வு செய்வதும் அவசரத் தேவையாகும்.

குஜராத் மாநிலம், Agri Vision 2010 எனும் ஒருங்கிணைந்த விவசாய வளர்ச்சிக்கான திட்டத்தைத் தயாரித்துள்ளது. ஆந்திர மாநிலம், Agricultural Technological Mission என்று இரண்டாம் பசுமைப் புரட்சிக்கான திட்டத்தை வகுத்துள்ளது. நீர்ப் பாசனத்திற்கு, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 30 சதவிகிதம் அதிக நிதியை ஒதுக்கியுள்ளது.

கேரள அரசு, 2007-2008 நிதிநிலை அறிக்கையில் விவசாயத் துறையை, விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத் துறை என்று பெயர் மாற்றம் செய்துள்ளது. இவ்வாண்டை விவசாயிகள் ஆண்டாக, "ஹரித வருஷம்" என்று கடைப்பிடிக்கவும் முடிவு செய்து, சில மாவட்டங்களைக் காய்கறி மாவட்டங்களாக மாற்றவும், 100 bio villages உண்டாக்கவும், 15 இலட்சம் டன் காய்கறிகளை உற்பத்தி செய்யவும் முடிவு செய்துள்ளது.

கேரளாவில் தனியார்மூலம் பெறப்பட்ட விவசாயக் கடன்களுக்கு நிவாரணம் அளிக்க, சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கர்நாடக மாநிலம், 5 ஆம் வகுப்பிலிருந்தே விவசாயத்தைப் பாடத்



திட்டத்தில் சேர்க்க முன்வந்துள்ளது. தன் மொத்த பட்ஜெட்டில் 10 சதவிகித்தை விவசாயத் துறைக்கு ஒதுக்கியுள்ளதாகவும், நிலத்தடி நீரை உயர்த்த, 50 ஆயிரம் சிறு தடுப்பணைகளைக் கட்ட அறிவித்திருப்பதாகவும் வரும் செய்திகளும், அண்டை மாநில நிகழ்வுகளும், தமிழக அரசைச் சிந்திக்கத் தூண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கரும்பு போன்ற பயிர்களுக்கு அளிக்கும் Minimum Support Price அனைத்துப் பயிர்களுக்கும், அனைத்து சிறு விவசாயிகளுக்கும் அளிக்க வேண்டும். பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறி, பழங்கள், மலர்கள், மூலிகைச் செடிகள் பயிரிடுவதற்குப் போதிய ஊக்கம் அளிக்க வேண்டும்.

சரியான மண் பரிசோதனை, தரமான விதைகளைத் தேர்ந்தெடுத்தல், இயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மேலாண்மை, தண்ணீர் மேலாண்மை, அறுவடைத் தொழில்நுட்பம், சேமிப்பு, பதப்படுத்துதல், பாதுகாத்தல், விற்பனை ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்பங்களைத் தமிழக விவசாயிகளுக்குக் கொண்டுசெல்ல உரிய நடவடிக்கைகளை எடுப்பது காலத்தின் கட்டாயமாகும். விவசாயத்திற்கு விமோசனமும், விவசாயிக்கு விடியலுமாக இது அமையும் என மறுமலர்சசி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இம்மன்றத்தில் பதிய வைக்கின்றேன்.

சிவகாசி தொகுதியிலுள்ள வல்லம்பட்டி, கொம்மங்கியாபுரம், மாறனேரி, கீழராஜகுலராமன், மேலாண்மறைநாடு கண்மாய்களைத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்த வேண்டும். தொகுதியில் விவசாயத்திற்கு மின் இணைப்புக் கோரி மனுச் செய்தவர்களுக்கு விரைவில் மின் இணைபபு வழங்க வேண்டும்.

சிவகாசி தொகுதியில் பல பகுதிகளில் பழைய மின் மாற்றிகளை மாற்றி, புதியனவற்றை அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை ஒன்றியத்தில், மக்காச்சோள சாகுபடி பொய்த்துவிட்டது. பயிர்க் காப்பீடு, சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் வழங்க வேண்டும்.

சென்ற ஆண்டு வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்னும் நிவாரணம் வழங்கப்படவில்லை. விரைவில் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், தமிழக மீனவர்களின

படகுகள் சேதப்படுத்தப்படுவதையும் அவர்கள் சுடப்படுவதையும் தடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவில் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** தமிழக மீனவர்கள் நலன் காக்க, நிவாரணங்கள் அளிப்பது மட்டுமின்றி, நிரந்தரத் தீர்வையும் காண்பதற்கும் மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டு முடிக்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

*பிற்பகல் 12-35*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைமீது, இந்தப் பேரவையில் பேசிய உறுப்பினர்களுக்கும், தமிழக வேளாண் பெருமக்களுக்கும், இந்தத் துறையின் சார்பாக சில விளக்கங்களைத் தருவதற்கு முன்பு, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய பிள்ளை, பேரறிஞர் அண்ணாவினுடைய தம்பி, எங்கள் கழகக் குடும்பத்தினுடைய தலைவர், அண்ணன் கலைஞர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) 2007-2008 ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனது விளக்கத்தைத் தர விரும்புகிற அதே நேரத்தில், தமிழகத்தினுடைய முதலமைச்சர் எங்கள் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களே வேளாண்மைத் துறையாக விளங்கக்கூடிய நேரத்தில், நான் இந்தப் பேரவைக்கு அவரை வைத்துக்கொண்டு என்னால் வேளாண்மை துறை குறித்து விளக்கத்தைத் தந்திட முடியுமா என்ற ஓர் ஐயப்பாடு என்னுள் எழுகிறது. ஏனென்றால், தலைதாழா சுயமரியாதைத் தமிழனாக, தமிழ்நாடு வளம்பெற, தமிழர்களுடைய வாழ்வாதாரங்கள் உயர்ந்திட, நித்தம் நித்தம் சிந்தித்து, உழைத்துவருபவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இந்த 2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்கள், இந்தப் பேரவையிலே வைக்கிறபோது, வேளாண்மைத் துறையினுடைய முன்னேற்றத்திற்கான வேளாண் பெருமக்களுடைய நல்வாழ்வுக்கான பல திட்டங்கள் இந்த அறிக்கையிலே இடம்பெறச் செய்த நம்முடைய முதலமைச்சர்



அவர்களை நான் இந்த நேரத்திலே, தமிழக விவசாயிகளின் சார்பாக வணங்கிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேளாண் பெருமக்களுடைய நலனைக் கருதி, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, நம்முடைய நிதித் துறை அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்கள், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒரு முக்கியத்துவம் இடம் பெறக்கூடிய வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து, விவசாயப் பெருமக்கள் எல்லாம் பாராட்டக்கூடிய வகையிலே, இந்தத் துறை இப்போது விளங்குவதற்குக் காரணமாக இருப்பவர் நம்முடைய முதலமைச்சர் என்பதை நான் மீண்டும் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தினுடைய 2001 மக்கள்தொகை கணக்கெடுப்புப்படி, 6.24 கோடி. மக்கள்தொகையாகவும், இந்த மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்தி, 115.24 இலட்சம் மெட்ரிக் டன் என்றும் கணக்கிடப்படுகிறது. ஆனால், தற்போது உற்பத்தி செய்யப்படும் மொத்த உணவு உற்பத்தி, 96.04 இலட்சம் மெட்ரிக் டன் உணவுதான் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், அரிசி 78.10 இலட்சம் மெட்ரிக் டன். சிறு தானியம் 13.65 இலட்சம் மெட்ரிக் டன். பயறு வகைகள் 3.60 இலட்சம் மெட்ரிக் டன். மொத்தம், 96.04 இலட்சம் மெட்ரிக் டன் உணவுதான் நாம் உற்பத்தி செய்கின்றோம்.

115.24 இலட்சம் மெட்ரிக் டன் தேவை என்பதிலே, பற்றாக்குறை ஏற்படுவது 19 இலட்சம் மெட்ரிக் டன் உணவு; முதல் பசுமைப் புரட்சி ஏற்பட்டு, இரண்டாவது பசுமைப் புரட்சி தொடங்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலும் உணவுப் பற்றாக்குறை இருக்கிறது என்பதை இந்தப் பேரவைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சார்பாக நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-40*

நெல் சாகுபடி நிலம் குறைந்துவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கவலைப்பட்டதைப்போல, இந்த அரசும் கவலைப்படுகிறது. சாகுபடி நிலப் பரப்பு குறைந்தாலும், புதிய வீரிய ரக விதைகள்மூலம், புதிய தொழில்நுட்பத்தினுடைய உதவியின்மூலம் ஒவ்வோர் ஆண்டும், உணவு உற்பத்தியை நாம் அதிக அளவிலே செய்யக்கூடிய நிலையிலேதான் இருக்கிறோமே தவிர, நிலப் பரப்பு குறைந்த காரணத்தினாலே, உணவு உற்பத்தி ஒன்றும் குறைந்துவிடவில்லை. அந்த அடிப்படையிலேதான்,

இப்போது நம்முடைய தமிழகத்தின் உணவு உற்பத்தியிலே, தொடர்ந்து நாம் மற்ற மாநிலங்களைவிட முன்னணியிலே இருக்கிறோம் என்று பெருமையோடு சொல்லக்கூடிய அளவுக்கு இருந்துகொண்டு இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் உதாரணத்திற்காக ஒன்றைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அப்போது, நம்முடைய முதலமைச்சர், அண்ணன் கலைஞர் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சராகவும், போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றார்கள். முதல் பசுமைப் புரட்சி அப்போதுதான் இந்தியாவிலே ஏற்படவேண்டும் என்று தொடங்கப்பட்டு, இந்திய அளவிலும், குறிப்பாக நம்முடைய மாநிலத்திலும், முதல் பசுமைப் புரட்சியிலே நாம் ஒரு மகத்தான சாதனையைப் படைத்தோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

1967 ஆம் ஆண்டு மொத்த உணவு உற்பத்தி, 54.17 இலட்சம் மெட்ரிக் டன்தான். 1970-1971 ஆவது ஆண்டில் மொத்த உணவு உற்பத்தி, 66.11 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. 1971-ல், இதையெல்லாம் பார்த்து நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், இன்னும் வேளாண்மையிலே விதைகள், வீரிய வித்துகள், நல்ல ஆராய்ச்சிகள் செய்து, விவசாயிகளுக்குத் தொழில்நுட்பங்களை வழங்கவேண்டும் என்பதற்காகத்தான், கோவையில் 1971-லே வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பல்கலைக்கழகம் தொடங்கிய பிறகுதான், வேளாண் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து, உயர் விளைச்சல் தரக்கூடிய விதைகளான ஆடுதுறை 27, ஆடுதுறை 29, அம்பாசமுத்திரம் 13, கோ-33, I.R.-5, I.R.-8, I.E.T.-1722 போன்ற நெல் இரகங்களும், C.H.-1 என்ற வீரிய சோள இரகமும் கண்டுபிடிக்கப்பட்டு அவை விவசாய மக்களிடத்திலே அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்மூலம் ஆண்டுதோறும் உணவு உற்பத்தியிலே நாம் பெரும் வளர்ச்சியைப் பெற்றோம் என்று சொன்னால், அது மிகையாகாது. 1975-1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், மொத்த உணவு உற்பத்தி, 71.88 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்தது. இந்தப் புதிய வீரிய வித்து விதைகளாலும், தொழில்நுட்பத்தாலும் என்று சொன்னால், இது நம்முடைய முதலமைச்சர் எங்கள் தலைவர் கலைஞரையே சாரும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



பிற்பகல் 12-45

இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் தருகிறபோது கேட்பதற்குக் கொஞ்சம் சுவை இல்லாமல் இருக்கலாம். ஆனால், பசி எடுத்தவனுக்குச் சாப்பாடு முக்கியம் என்பதைப்போல, இது வேளாண்மைத் துறை என்பதால், கொஞ்சம் சுவையாகச் சொல்ல முடியாது. உங்களுக்கு எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் வாய்க்கு ருசி சாதம்தான். அதைப்போல, இந்தப் புள்ளிவிவரங்களைக் கொஞ்சம் கேட்பதிலே, யாரும் ஆர்வம் இல்லாமல் இருக்கிறீர்கள் என்று நான் சொல்ல மாட்டேன். மத்தியில் தேசிய முன்னணி அரசு அமைந்தபோது, இன்றைய முதல்வர் அன்று தமிழகத்திலே மூன்றாவது முறையாக முதல்வராக இருந்தபோதுதான், விவசாயிகளுடைய நன்மையைக் காப்பாற்ற வேண்டும்; அவர்களுடைய வாழ்க்கைத் தரத்திற்கு அரசாங்கம் ஓர் உத்தரவாதமாக அமைய வேண்டும் என்பதற்காக தேசிய முன்னணி கூட்டணி அமைந்தபோது, நாட்டு மக்களுக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய வகையில், 10,000 ரூபாய் வரை வாங்கியிருக்கின்ற கடன், இரத்து செய்யப்படும் என்று சொன்ன அந்த வாக்குறுதியை நிறைவேற்ற, தமிழகத்திற்கு என்று கணக்கிட்டு, 209 கோடியே 42 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் கடனை, விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்த தலைவரும், முதலமைச்சராக இங்கே அமர்ந்து இருப்பவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, 1990 ஆம் ஆண்டு, மூன்றாவது முறையாக, அப்பொழுதும் அவர் முதலமைச்சராக இருந்தபோது, அப்போதும் இந்த அடியேன்தான் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தேன். அமைச்சரவையிலே இருந்த பெருமக்களை எல்லாம் அழைத்து, அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதித்தபோது, யாரும் சொல்லாதபோதே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகள் மகிழ்ச்சியோடு இருந்தால்தான், அவர்கள் மகிழ்ச்சியோடு விவசாயத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டால்தான், இந்த நாட்டிலே வாழுகின்ற மக்களுக்கு உணவு கிடைக்கும்; ஆகவே, எல்லாத் தரப்பு மக்களுக்கும் அரசாங்கம் செய்கிறது; நம்மை கவனிக்கவில்லையே என்று யாரும் சொல்லிவிடக் கூடாது என்பதை மனதிலே வைத்து, நாங்கள் எல்லாம் சொல்லாதபோதே முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், "நான் ஒன்றை இப்பொழுது உங்களுக்குச் சொல்லப் போகிறேன்" என்று அமைச்சரவையில் சொல்லிவிட்டுச் சொன்னார்: "தமிழ்நாட்டிலே இருக்கின்ற விவசாயிகள் பயன்படுத்துகின்ற பம்புசெட்டுகளுக்கெல்லாம் இலவச மின்சாரம் வழங்கப்படும்" என்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்பொழுது எங்களுடைய அமைச்சரவையில் இருந்தவர், இன்றைக்கு அவர் வேறு கட்சிக்குக்கூட சென்று இருக்கலாம்; நான் அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அப்பொழுது அவர் ஒரு கருத்தைச் சொன்னார்: "இதில் பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று பார்க்க வேண்டும்; எல்லோருக்கும் வழங்குவது சரியாக இருக்காது" என்ற கருத்து அவரால் சொல்லப்பட்டது. அதற்கும் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர்தான் பதில் சொன்னார்: "பெரிய விவசாயிக்கு என்ன செலவு ஏற்படுகின்றதோ, அதுதான் சிறிய விவசாயிக்கும் ஏற்படுகிறது. சிறிய விவசாயிக்கு என்ன ஏற்படுகிறதோ, அவன் எத்தனை ஏக்கரா வைத்து இருக்கிறானோ, அந்தச் செலவு அவனுக்கும் ஏற்படும் அல்லவா? ஆகவே, இதிலே பாகுபாடு கூடாது; விவசாயிகளுக்கு நாம் உதவி செய்வதாக இருந்தால், எல்லோருக்கும்தான் செய்ய வேண்டும்" என்று பதில் சொல்லிவிட்டு, நடைமுறைப்படுத்திய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் 18 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் பெறக்கூடிய அந்த வாய்ப்பு, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பினாலே, இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதிலே 1990-91 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி இருந்தபோது, மொத்த உணவு உற்பத்தி 75 இலட்சம் மெட்ரிக் டன்னாக ஆனது. உற்பத்தித் திறன், அதாவது அரிசி, ஒரு எக்டேருக்கு எவ்வளவு வருகிறது என்று கணக்கிட்டுப் பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது, 3,116 கிலோ அரிசி உற்பத்தித் திறனாக இருந்தது. பிறகு 1995 ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சி; அப்பொழுது மொத்த உணவு உற்பத்தி எவ்வளவு ஆனது என்றால் 61.05 இலட்சம் மெட்ரிக் டன்னாகக் குறைந்துவிட்டது. பிறகு, 1996 ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சி; அப்போது 1998-1999 — நான் நேரத்தின் அருமைகருதி வரிசையாகச் சொல்ல இயலவில்லை. 1998-1999 ஆம் ஆண்டிலே மொத்த உணவு உற்பத்தி, தி.மு.க. ஆட்சியிலே, 94.12 இலட்சம் மெட்ரிக் டன்களாக இருந்தது. அரிசி உற்பத்தித் திறன், ஒரு எக்டேருக்கு 3,579 கிலோ. இந்தியாவிலேயே, இரண்டாவது இடத்தில் தமிழகம். (மேசையைத் தட்டும் ஒலி) 1998 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறையிலே, உணவு உற்பத்தித் திறனிலே, நாம் முன்னணியிலே இருந்ததற்குக் காரணம், பல்வேறு துறைகளுக்கு ஊக்கத்தைத் தந்து, செயல்பட வைத்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.



பிற்பகல் 12-50

2004-2005 ஆம் ஆண்டு, மீண்டும் அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி குறைந்துவிட்டது. 61.16 இலட்சம் மெட்ரிக் டன்கள். உற்பத்தித் திறன், ஒரு எக்டேருக்கு 2,703 கிலோதான். 2005-2006 ஆம் ஆண்டு, மீண்டும் அந்த ஆட்சியின் இறுதியிலே மொத்த உணவு உற்பத்தி 61.17 இலட்சம் மெட்ரிக் டன்கள். அரிசி உற்பத்தித் திறன், ஒரு எக்டேருக்கு 2,833 கிலோதான். ஆக, உணவு உற்பத்தியிலும் குறைந்தது; உற்பத்தித் திறனிலும் குறைந்தது. மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் இப்போது ஆட்சிப் பொறுப்பேற்றதும், 2006-2007 ஆம் ஆண்டின் மொத்த உணவு உற்பத்தி, 96 இலட்சம் மெட்ரிக் டன்கள். உணவு உற்பத்தித் திறனில் ஒரு எக்டேருக்கு அரிசி எவ்வளவு என்று பார்த்தால் 3,628 கிலோ. இது தமிழகம் கண்டிராத (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வரலாற்றுச் சாதனையாகும். உற்பத்தித் திறனிலே, இந்தியாவிலே இது முதலிடமாக இருக்கும்.

நேற்று, பல்வேறு மாநிலங்களைக் கேட்கத் தொடங்கினோம். உரிய தகவல் கிடைக்கவில்லை. ஆனால், 3,500 கிலோ என்றிருந்தபோதே மாநில அளவில் இரண்டாவது இடத்தில் நாம் இருந்ததுபோக, இப்போது இந்த உற்பத்தித் திறனைக் கணக்கிட்டால், அரிசி உற்பத்தியிலே நாம்தான் இந்தியாவிலே, முதலிடத்திலே இருக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எங்களுக்கு இப்போது கிடைத்த தகவலின்படி, 96 இலட்சம் மெட்ரிக் டனகள். இன்னும் இறுதி அறிக்கை கிடைக்குமானால், இந்த ஆண்டு உணவு உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்களை அடையும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாங்கள் நம்பிக்கையோடு தெரிவிக்கிறோம். கடந்த காலத்தைவிட, கடந்த அ.தி.மு.க. ஆட்சியைவிட, 36.5 சதவிகிதம், கூடுதலாக உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு என்ன காரணம்? உற்பத்தித் திறன் குறைந்ததற்கு மழை காரணம் அலல. சரியான தொழில்நுட்பம் தராத காரணத்தாலே, உரம் தராத காரணத்தாலே, (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல விதை தராத காரணத்தாலே, விதை தந்ததிலே மோசடி நடைபெறற காரணத்தாலேதான், அந்தக் காலத்திலே, உற்பத்தித் திறனிலே, உற்பத்தியிலே குறைவு ஏற்பட்டது. ஏக்கரா ஒன்றும் குறையவில்லை. 20 இலட்சம் எக்டேர், 21 இலட்சம் எக்டேர் என்று சொன்னால், அதே நிலத்தில்தான் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, குறைந்ததற்கான தவறை, நாங்கள் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஆனால், இந்த ஆட்சியிலே தரமான விதை தருகிறோம்; உரிய நேரத்திலே

நல்ல உரம், இடுபொருள்களைத் தருகிறோம், நல்ல தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குகிறோம்; அதனாலே உணவு உற்பத்தியிலே மகத்தான சாதனையை நாம் அடைந்திருக்கிறோம் என்று சொல்வதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறு ஒன்றும் அல்ல.

இன்னொன்று, இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் படித்தபோது நாம் எல்லாம் பார்த்தோம். எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு, இது ஒரு வேளாண்மைத் துறை பட்ஜெட்டா என்று எண்ணக்கூடிய அளவுக்கு, இந்த நிதிநிலை அறிக்கை அமைந்தது. எனக்கும் துறை அமைச்சர் என்ற முறையில் மகிழ்ச்சி. அதேநேரத்தில், இந்த மகிழ்ச்சிக்கெல்லாம் சொந்தக்காரர் நம்முடைய முதல்வர்தான் என்பதை நான் நன்றாக அறிவேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-55*

இந்த நிதிநிலை அறிக்கையில் பக்கம் 3-ல் பத்தி 6 முதல், பக்கம் 10-ல் பத்தி 26-வரை விவசாயிகளின் நலனுக்காக அளிக்கப்பட்ட திட்டங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்களெல்லாம் பொது விவாதத்தின்போதுகூட, மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போதும் இங்கே ஏன் இந்த சொல்லியிருந்தாலும், மீண்டும் அதை நினைவுபடுத்துவது என்னுடைய கடமை. இந்தத் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள், இவ்வளவு சலுகைகளை இந்த அரசாங்கம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நிதியமைச்சர் அவர்கள் வழங்குகிறபோது, இந்தத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்தோடு, அரசுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் செயல்பட வேண்டுமென்பதற் காகத்தான்.

31-3-2006 அன்று நிலுவையிலிருந்த 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் இரத்து; இதனாலே 22,39,487 விவசாயிகள் பயன்பெற்றது; பிறகு, 2006-2007 ஆம் ஆண்டில் 1,435 கோடி ரூபாய் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி தந்து, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது; 2007-2008 ஆம் ஆண்டில் 1,628 கோடி ரூபாய் நிதி மேலும் ஒதுக்கப்பட்டுள்ளது; 2006-2007 ஆம் ஆண்டில் புதிய பயிர்க் கடன் வழங்க ரூபாய் 1,153 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; 2007-2008 ஆம் ஆண்டுக்கு 1,360 கோடி ரூபாய் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



2006-2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கூட்டுறவுக் கடனுக்கு — மத்திய நிதியமைச்சர், சேலத்திலே நான் அவரோடு ஒரு நிகழ்ச்சியிலே கலந்துகொண்டபோது, என்னிடம் சொன்னார் —"9 சதவீத வட்டியிலே, கூட்டுறவு வங்கிகளிலே கடன் வழங்கப்படுகிறது விவசாயிகளுக்கு; அதை 7 சதவீதமாகக் குறைக்க முடியுமா என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே நீங்கள் சொல்ல வேண்டும்" என்றார்கள். நான் அவரிடத்திலே கேட்டேன்: "நீங்கள்தானே மத்திய நிதியமைச்சர்? இந்தியா முழுவதும் இப்படி வட்டி குறைக்கப்படும் என்று சொல்லிவிட்டால், ரிசர்வ் வங்கியும் ஒத்துக்கொள்ளும்; பிறகு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் ஒத்துக்கொள்வார்கள்; அதைப்போல, மற்ற கூட்டுறவு வங்கிகளும் ஒத்துக்கொள்வார்கள்" என்று சொன்னேன். "இல்லை, இல்லை; இதை முதன்முறையாக இந்த முறையிலே, இந்த முயற்சியிலே நம்முடைய முதலமைச்சரைப்போல யாரும் செய்ய முடியாது; நீங்கள் சொல்லுங்கள்" என்றார்கள். "அது அவர்களுக்கு நன்றாகத் தெரியும், நான் சொல்வதனுடைய நோக்கம்" என்றார்கள். நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன், இப்படி மத்திய நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் என்று. யோசித்துப் பார்த்துவிட்டுச் சொன்னார்; 'யோசிப்போம்' என்றார். ஆனால், 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக வட்டி குறைக்கப்படும் என்று அறிவித்து இப்போது நடைமுறைப்படுத்தியது இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான், கூட்டுறவுச் சங்கங்களிலே. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மேலும் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கிய கடன்களை முறையாகச் செலுத்தக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும், 7 சதவீத வட்டியிலிருந்து 5 சதவீத வட்டியிலே அவர்களுக்குக் கடன் வழங்கப்படும்; செலுத்தினால் போதும் என்று அறிவித்ததும் இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்திலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான்; (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்தான் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போல, பயிர்க் காப்பீட்டுக் கடன் —இன்ஷூரன்ஸ் —சென்ற ஆண்டு 8 கோடி ரூபாயைக் கொடுத்தார்கள். கூட்டுறவு வங்கிகளிலே கடன் வாங்கக்கூடியவர்களுக்கு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே கடன் வாங்கக்கூடியவர்களுக்கும், கடன் கொடுக்கிறபோதே இன்ஷூரன்ஸ் பிரீமியத் தொகையைப் பிடித்துக்கொண்டு கொடுத்துவிடுகிறார்கள்; இன்ஷூரன்ஸ் அவர்களுக்கு அதிலேயே இடம்பெற்று விடுகிறது. ஆனால், அப்படிக் கடன் வாங்காத விவசாயிகளுக்கு, இன்ஷூரன்ஸ் cover ஆவதில்லை. ஆகவேதான், நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் இந்தத்

துறையின்மூலம் எடுத்துச் சொன்னதற்கிணங்க, சென்ற ஆண்டு 8 கோடி ரூபாயை வழங்கினார்கள்; இந்த ஆண்டு 15 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் கூட்டுறவு வங்கியிலே, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியிலே கடன் பெறாத விவசாயிகளையும் இன்ஷூரன்ஸ் திட்டத்திலே, ஈடுபடுத்திக் கொண்டு வருவதற்காக, பிரீமியத் தொகையிலே 50 சதவீதம் அரசாங்கமே கொடுத்துவிடுகிறது. இதுபோல, இந்த இன்ஷூரன்ஸ் cover ஆவதற்கு, விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு, நம்முடைய மாநிலம்தான் இதற்கும் வழிகாட்டியாக இருக்கிறது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் வழிகாட்டியாக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

அதைப்போல, வாணிபக் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்ய, எடை சரியாக இல்லை; அதிலே தவறு இருக்கிறது என்று சொல்லப்பட்டபோது, அந்தக் கருத்தையும் பரிசீலித்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 1,100 நேரடிக் கொள்முதல் நிலையங்களுக்கும் நவீன மின் எடை பொருத்தப்படும், வாங்கித்தரப்படும் என்று அறிவித்து இருப்பது, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக தமிழகம் திகழ்கிறது என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்மூலம், 1.15 கோடி விவசாயிகளுக்கு, 72.85 இலட்சம் குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. விவசாயக் குடும்பங்களுக்குக் கல்வி உதவித் தொகை, திருமண உதவி, மகப்பேறு உதவி, ஓய்வூதியம், ஈமச் சடங்கு மற்றும் இழப்பீட்டுத் தொகை போன்றவற்றிற்கு, இந்த ஆண்டு 2007-2008 ஆம் ஆண்டில், 152 கோடி ரூபாயை நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் வழங்கியிருக்கிறார்கள். தரிசு நிலங்களை மேம்படுத்துவது, பொதுவுடைமைக் கொள்கையிலே நாட்டம் கொண்டவர்கள் செய்யக்கூடிய காரியம். இதுபோன்ற ஒரு துணிச்சலான ஒரு முடிவை எடுக்கக்கூடிய ஒரு முதலமைச்சர் நமக்குக் கிடைத்திருப்பது நாமெல்லாம் பெற்ற பெருமை என நான் கருதுகிறேன்.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, தரிசு நிலம் வழங்குவது எனத் தேர்தல் நேரத்திலே தந்த வாக்குறுதியை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்ததில்,



இப்போது 77,117 ஏக்கர் நிலம், 71,755 விவசாயிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து வழங்கப்பட இருக்கிறது.

தோட்டக்கலைமூலம் 2007-2008 ஆம் ஆண்டில், 77,300 ஏக்கர் பரப்பளவில் ரூ.98 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, தமிழகத்திலே 11 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ், 50% மானியத்தில் 1,30,100 ஏக்கர் பரப்பளவில், 101 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நடப்பாண்டிலேயே செயல்படுத்தப்படவுள்ளது.

கரும்பு விவசாயிகளுக்கு உரத்துடன்கூடிய நுண்ணீர்ப் பாசன முறை, உரமிட்டு 74,100 ஏக்கர் பரப்பளவில் 50% மானியத்தில் செயல்படவுள்ளது. பண்ருட்டியில், நவீன முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை ரூபாய் 17 கோடியில் நிறுவப்படவுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு, துல்லிய பண்ணைத் திட்டம் ரூபாய் 3 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. ரூ.123 இலட்சம் செலவில் வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது. இந்த ஆண்டு உலக வங்கியோடு நம்முடைய முதலமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி, வேளாண் உலக வங்கி நிதியுதவியுடன், நீர்வளத் திட்டத்தின்கீழ், வேளாண்மைத் தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனைத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்றவற்றிற்கு 2,547 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். இந்த நிதியை எப்படித் திட்டங்களுக்குச் செயல்படுத்தலாம் என்று, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் மற்றும் இயக்குனர்கள் இவர்களெல்லாம் வந்து பார்வையிட வேண்டுமென்று உலக வங்கியே எங்களை கேட்டுக்கொண்டதற்கிணங்க, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களை அனுப்பி வைத்தார்கள். நாங்களும் சென்று பார்த்து வந்திருக்கின்றோம். அந்த அடிப்படையிலே, உலக வங்கி சொல்லக்கூடிய அந்தக் கருத்துகளையும் கருத்திலேகொண்டு, பார்த்தவற்றையும் அடிப்படையாகக் கொண்டு, நம்முடைய மாநிலத்திற்கு ஏற்ற வகையிலே அந்தத் திட்டங்களை எப்படிச் செயல்படுத்தலாம் என்று நம்முடைய முதலமைச்சரோடு கலந்து, ஆறு ஆண்டுக் காலத்தில் இந்தத் தொகையைச் சிறப்பாகத் திட்டமிட்டுச் செயல்படுத்த இருக்கின்றோம்.

பிற்பகல் 1-05

தமிழ்நாட்டிலே 39,200 ஏரிகள் இருக்கின்றன. அந்த எல்லா ஏரிகளுக்கும் நீர்வரத்துள்ள கால்வாய்களைத் தூர் எடுத்து, ஏரிகளினுடைய கரைகளைப் புதுப்பித்து, அவற்றிலே பள்ளங்களை, மண்களை அகற்றி, மழைக்காலம் வந்தால், ஏரிகளில் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இன்னும் சொல்லப்போனால், பாசனத்திற்குத் தண்ணீர் செல்கிறபோது, ஒரு மூன்று அல்லது நான்கு மாத காலத்திலே, ஏரிகளுடைய தண்ணீர் வறண்டுவிடக் கூடாது; அதிலே இரண்டு அடி மதகைத் தூக்கிவைத்து விட்டால், அந்தத் தண்ணீர் அந்த அளவிற்கு நிற்கும். அதிலே மீனும் வளர்க்கலாம். அந்தக் காலத்திலே அதிலேதான் மீன் எல்லாம் இருந்தது. இப்பொழுதுதான் இல்லை. ஏரியிலே மீன் பிடிப்பதே இல்லை. ஆகவே, அந்த அளவிற்கு மதகைக் கொஞ்சம் தூக்கி வைத்து, புதியதாகவே கட்டிவிட்டால், அதற்கு மேலே உள்ள தண்ணீர், ஒரு போகத்திற்குப் பாசனத்திற்குச் சென்றுவிட்டால்கூட, அடிக்கரையில் இருக்கக்கூடிய கிணறுகளிலே நீராதாரம் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு உண்டு.

இன்னும் சொல்லப்போனால், அந்த ஏரிகளிலே கருவேல மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த மரங்களை எல்லாம் இனி வளர்க்கக் கூடாது; அதனாலே நீர் கெடுகிறது; மண் வளம் பாதிக்கப்படுகிறது என்ற ஒரு கருத்து மக்களிடத்திலே இருக்கின்றது. அதை நம்முடைய முதலமைச்சரிடத்திலே கலந்து பேசி, அவருடைய அனுமதியின் பேரிலே, அதைப்போல வேறு நல்லதொரு திட்டத்தை செயல்படுத்தலாம் என்று இந்த அரசு கருதிக் கொண்டிருக்கின்றது.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்; இந்த அரசிலே, பெயரை மாற்றிவிட்டார்கள் என்ற ஓர் ஆதங்கம், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறது. ஏற்கெனவே நடைமுறையிலே இருந்ததைத்தான், நீங்கள், "முதலமைச்சர் விவசாயப் பாதுகாப்புத் திட்டம்" என்றெல்லாம் பெயர் வைத்தது; இது ஒன்றும் புதிதல்ல. நாங்கள் கொண்டுவந்திருந்த இந்தத் திட்டத்தின் பெயரை நீங்கள் மாற்றினீர்கள். இப்போது அதிலே சில மாற்றங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதனுடைய விவரத்தை நான் இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

வாரத்திற்கு ஒரு மெட்ரிக் டன் விளைபொருளை, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்யும் விவசாயிகள், குத்தகைதாரர்கள், விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டால், அவர்களுக்கு நிவாரணம் வழங்க 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு உழவர் நலத் திட்டம் துவங்கப்பட்டது. விவசாயிகளின்பால் அக்கறை கொண்ட இவ்வரசு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்யும் விவசாயிகள் மட்டும் அல்லாது, அனைத்து விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், அவர்கள் குடும்பத்தாரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, 2000 ஆம் ஆண்டில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் அமைக்கப்பட்டது. விவசாயிகள்மீது உண்மையான அக்கறை இருந்திருந்தால், இத்திட்டத்தினைத் தொடர்ந்து அ.தி.மு.க. ஆட்சியிலே அப்படியே நீங்கள் செயல்படுத்தி இருக்கலாம். இன்னும்கூட சில சலுகைகளை வழங்கிச் செயல்படுத்தி இருக்கலாம். அதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், இதிலே பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பெயர் மாற்றம் செய்து, பொதுத் தேர்தலுக்கு முன்பு 2005 ஆம் ஆண்டில், இதைத் தொடங்கினீர்கள். தொடங்கி இரண்டே மாதத்திற்குள் 80 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டதாகக் கணக்கு இருக்கிறது; விவசாயிகளுக்கு நீங்கள் வழங்கியதாக. விவசாயிகளுக்கா, ஓட்டுக்கா என நான் அந்த விவாதத்திற்குள்ளே போகவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, 80 கோடி ரூபாய் நீங்கள் வழங்கியதாக, இரண்டு மாதத்திலே, 2005-லே தொடங்கி (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். சத்தம் போடுவதாலே ஒன்றும் ஆகிவிடாது. நான் மெதுவாகத்தான் சொல்லிக்கொண்டு வருகிறேன். சத்தம் போடுவதாலே ஒன்றும் ஆகிவிடாது. (குறுக்கீடு) இல்லை, 2005-லே நீங்கள் தொடங்கினீர்கள். 2005-லே தொடங்கி, 2006-லே தேர்தல், சட்டமன்றத்திற்கு. (குறுக்கீடுகள்) நாங்கள், இப்பொழுது 2006-ல் election-க்குப் பின்னாலே, ஒரு வருடத்திற்குப் பின்னாலேதான் ஆரம்பித்தோம்; ஆனால், அப்பொழுது செலவு செய்தது, 12 கோடி ரூபாய்தான். தொடங்கி, ஒரு 6 மாத காலத்திற்குள்ளே 12 கோடி ரூபாய். ஆனால், நீங்கள் ... (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். (கூச்சல்-குழப்பம்)



பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வைத்திலிங்கம், உட்காருங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நீங்கள் இந்த இரண்டே மாதத்தில் இவ்வளவு செலவு செய்ததுதான் வேதனை தரக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சார், அனுமதி இல்லாமல் எழுந்திருக்கக்கூடாது. பின் வரிசையிலே இருந்து கொண்டு பேசாதீர்கள்.

(குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. முதலில் உட்காருங்கள். திரு. வைத்திலிங்கம், உட்காருங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இதிலே உழவர் பாதுகாப்புத் திட்டம் என, நீங்கள் கொண்டு வந்ததில் என்ன வித்தியாசம் அப்படி இருக்கிறது என்பதைத்தான் பார்க்க வேண்டும். அ.தி.மு.க. அரசின் திட்டத்திலே, நிலம் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டனர். இதிலே நாங்கள் என்ன மாறுதல் கொண்டு வந்திருக்கிறோம் என்றால், கழக அரசின் திட்டத்தில் இவர்களுடன், குத்தகைதாரர்களையும் சேர்த்துக்கொண்டோம். நீங்கள் குத்தகைதாரர்களை விட்டுவிட்டீர்கள்; குத்தகைதாரர்களை நாங்கள் சேர்த்துக் கொண்டோம். உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம் என்று. அ.தி.மு.க. திட்டத்தில், அதனைச் செயல்படுத்தும் குழுவில், விவசாயிகளோ, தொழிலாளர்களோ உறுப்பினர்களாக இல்லை. இப்பொழுது நாங்கள் கொண்டு வந்திருப்பதில், அந்தக் குழுவில் 9 தொழிலாளர்களும், 9 விவசாயிகளும் அலுவல் சாரா உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று சேர்த்திருக்கின்றோம். (குறுக்கீடு) அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், உங்கள் காலத்தில் என்றுதான் சொல்கிறேன்; நீங்கள் என்று சொன்னால், உங்களைத்தானே குறிக்கும்! நீங்கள் கொண்டுவந்த திட்டத்தில், உறுப்பினர் கட்டணம் ரூபாய் 10, அரசு ஏற்றது; பதிவு புதுப்பிக்கத் தேவையில்லை என்று சொல்லி இருக்கின்றீர்கள். நாங்கள் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால் பதிவுக் கட்டணத்தை அரசே ஏற்கும். நீங்கள் புதுப்பிக்கவே வேண்டாம் என்று சொல்லிவிட்டீர்கள். அதிலேதான் ஒரு மாற்றம் என்ன என்றால் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். ஏனென்றால், அத்திட்டத்திலே ஒருவன் இருக்கிறானா, இல்லையா என்றே தெரிந்துகொள்ள முடியாது. நலத் திட்ட உதவிகளைக் கொடுக்க வேண்டும் என்றால் தெரிந்துகொள்ள வேண்டும் இல்லையா? அதனாலே, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும்; அப்படி புதுப்பிக்கிறபோது, கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்று சொல்லியிருக்கின்றோம். (கூச்சல்-குழப்பம்)

திருமண உதவித் திட்டத்திலே ஒன்றும் மாற்றம் இல்லை. அ.தி.மு.க. கொண்டுவந்த திட்டத்தில், மகப்பேறு, கருச்சிதைவுக்கான உதவித் தொகை 2,000 ரூபாயாக இருந்தது. கழக அரசின் திட்டத்தில், கருச்சிதைவுக்கு 3,000 ரூபாயாக நாங்கள் உயர்த்தி இருக்கின்றோம். மகப்பேறு, பிரசவ கால உதவி நிதியாக, ரூபாய் ஆயிரம் வீதம் ஆறு மாதங்களுக்கு நாங்கள் 6,000 ரூபாய் வழங்குகிறோம்.



ஓய்வூதியத் திட்டம், உங்கள் திட்டத்திலே 200 ரூபாய்தான் இருந்தது. இப்பொழுது கழக அரசில், நாங்கள் 400 ரூபாய் என்று சொல்லி இருக்கின்றோம். உறுப்பினரின் மகன், மகள் ஆகியோருக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தில், உங்கள் ஆட்சிக் காலத்தில் வழங்கிய உதவித் தொகையைவிடக் கூடுதலாக 250 ரூபாய், இந்த ஆட்சியில் வழங்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தில், 1.15 கோடி பயனாளிக் குடும்பங்கள் கண்டறியப்பட்டு 72.85 இலட்சம் குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. 21-3-2007 வரை 7 கோடியே, 63 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயன் அடைந்தோர் 25,618 குடும்பங்கள். 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக நம்முடைய முதலமைச்சர், நிதி அமைச்சர் வாயிலாக இந்த அவையிலே சொல்லி இருப்பது, 152 கோடி ரூபாய் இங்கே ஒதுக்கப்பட்டு இருப்பதாக ... (கூச்சல்-குழப்பம்)

கரும்புக்கு மைய அரசு, சட்டபூர்வ, குறைந்தபட்ச விலையை — S.M.P. — அறிவிக்கிறது. அதற்குமேல், மாநில அரசாங்கம், தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், பரிந்துரை விலையாக ஒன்றை நாம் அறிவித்துக் கொண்டிருந்தோம். இதிலே, 2-1-2000 ஆம் ஆண்டில், — SISMA — கரும்பு உற்பத்தி ஆலை அதிபர்களுடைய சங்கம், சென்னை உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்குப் போட்டு, அப்படி மாநில அரசாங்கம் விலை நிர்ணயிக்க அதிகாரம் இல்லை என்று ஒரு தடை உத்தரவை வாங்கினார்கள். நாங்கள் அந்தத் தடை உத்தரவை எதிர்த்து அதை இரத்து செய்ய வேண்டும்; மாநில அரசாங்கத்திற்கு உரிமை உண்டு என்று எதிர்த்து வழக்காடினோம். பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது; ஏற்பட்ட பிறகு, 4 ஆண்டுக் காலம் நீங்கள் பரிந்துரை விலையை மாநில அரசாங்கம் செய்யவில்லை, என்ன காரணம்? விவசாயிகள்மீது அக்கறை இருப்பதாகச் சொல்கிறீர்கள், பேசுகிறீர்கள், வரவேற்கிறோம். ஆனால், 2001-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற அ.தி.மு.க. அரசு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் கடன்பெற வேண்டி, அந்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் சட்ட திட்டங்களையேற்று, தமிழக அரசு, மாநில அரசு பரிந்துரை விலையை அளிக்க வேண்டியதில்லை என, 25-6-2002 நாளிட்ட வேளாண்மைத் துறை கடிதம்மூலம், அந்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் நீங்கள் ஒப்புதல் கடிதம் கொடுத்திருக்கின்றீர்கள்.

பிற்பகல் 1-15

இன்னொன்று, 2001-ல் நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், அமைச்சரவைக் கூட்டத்திலே வைத்து, மாநில அரசாங்கத்தினுடைய

பரிந்துரை விலையைச் செய்ய வேண்டியதில்லை என்று அமைச்சரவையே ஒரு தீர்மானம் போட்டுவிட்டு, நீங்கள் 4 ஆண்டுக் காலம், உங்கள் ஆட்சிக் காலம் வரை, 4 ஆண்டு காலம் பரிந்துரை விலையே நீங்கள் செய்யாமல் இருந்ததை, உங்கள்மீது நான் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினால் தப்பாகிவிட முடியுமா? நாங்கள் ஒரு தப்பு செய்திருந்தால், நீங்கள் கண்டிக்கமாட்டீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசட்டும்; கடைசியிலே, உங்கள் clarification-ஐக் கடைசியில் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21 ஆம் தேதி மே மாதத்தில், 2001 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆட்சிக்கு வந்தது. (குறுக்கீடுகள்) ஆட்சிக்கு வந்தது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification கடைசியிலேதான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் பேசாமல். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசி முடித்தவுடன், ஏதாவது கேட்க வேண்டுமென்றால், பிறகு கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நீங்கள் கடைசியாகக் கேளுங்கள், நான் பதில் சொல்கிறேன். நீங்கள் எத்தனை மாதம் இருந்தீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை, (குறுக்கீடுகள்) அமைச்சராக, வேளாண்மைத் துறை அமைச்சராக எத்தனை மாதம் இருந்தார் என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கிட்டுப் பேச முடியாது. (குறுக்கீடுகள்) கடைசியில் கேட்கலாம் நீங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இல்லை, இல்லை. இதைப் பாருங்கள், கோப்பே இருக்கிறது. கோப்பு இல்லாமல் ஒன்றும் சொல்லவில்லை. 2001 மே மாதத்தில் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க., 19-11-2001 அன்று அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள், கடந்தகால ஆட்சி நடத்தியவர்களுடைய அமைச்சரவைக் கூட்டத்தில் அப்படி ஒரு



தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் மறுக்கிறார்கள். அந்த அமைச்சரவைக் கூட்டத்திலே நடைபெற்ற, நிறைவேற்றப்பெற்ற அந்தத் தீர்மானம் குறித்து, பேரவைத் தலைவரிடத்திலே அந்தக் குறிப்பைக் காட்டுவதற்கு அமைச்சர் தயாராக இருக்கிறார். அதை, அந்தக் குறிப்பு சரியா, அல்லவா என்பதை எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பார்த்து, அவர்களுடைய கட்சிக்குத் தெரிவித்துக் கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நான்... (குறுக்கீடு) உச்ச நீதிமன்றம் என்பது எல்லாம் இல்லை 2001 மே மாதத்திலே நீங்கள் ஆட்சிக்கு வருகிறீர்கள். (குறுக்கீடு) 2001 மே மாதத்தில் ஆட்சிக்கு வருகிறீர்கள். 19-11-2001 அன்று அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, பரிந்துரை விலைபற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு, மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டியதில்லை என முடிவெடுக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரவைத் தலைவரிடம் அந்தக் கோப்பினையே நான் தருகிறேன். (குறுக்கீடுகள்) கோப்பினையே தருகிறேன், மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் வேண்டுமானாலும், அந்தக் கோப்பினைப் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் வேண்டுமென்றுகேட்டால், நான் பதில் சொல்ல முடியும்; (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** எல்லோரும் எழுந்து நின்றால் நான் ஒன்றும் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Minutes Book இருக்கிறதா? அதைப் பார்க்கலாம்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இருக்கிறது, இருக்கிறது அந்தக் கோப்பு இருக்கிறது, இப்போதே எடுத்துக்கொண்டு வந்து தருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஏற்பட்டிருக்கிற பிரச்சினை கொள்கையைப் பற்றியதாகும். அது ஒன்றும் குற்றச்சாட்டு அல்ல. அவரவர்களுடைய கொள்கை அவரவர்களுக்கு. சொல்லப்பட்ட செய்தி உண்மையில்லையென்றால் தலைவரால் நீக்கப்படலாம்...(குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சொல்லப்பட்ட செய்தி உண்மையா, அல்லவா என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பார்த்துக்கொள்ளலாம். அது உண்மையல்ல என்றால், (குறுக்கீடுகள்) உண்மையல்ல என்றால், அது நீக்கப்படும். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் Minutes Book-ஐப் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டீர்கள். அப்புறம் Minutes Book-ஐப் பார்த்துக்கொள்வோம். அவ்வளவுதானே? உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன், மாண்புமிகு பேரவைத் தலைவருடைய இருக்கைக்கு அருகில் வந்தார்.)

நீங்கள் உட்காருங்கள். உங்கள் இடத்திலே போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள், பொறுங்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும், எல்லாம் தெரியும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள். அதாவது அமைச்சருடைய உரை முடியட்டும், reply முடியட்டும். நீங்கள் ஏதாவது கேட்க வேண்டுமானால், அப்புறம் கேளுங்கள். Minutes Book-ஐப் பார்க்க வேண்டுமென்றால், அப்புறம் Minutes Book-ஐக் கொண்டுவருகிறேன். பாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இப்பொழுது தங்களிடம் 19-11-2001 அன்று அ.தி.மு.க. அமைச்சரவைக் கூட்டத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினுடைய அந்த நகலை உங்களுக்குத் தருகிறேன். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஒரு கோப்பினை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அளித்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், என்னங்க? (குறுக்கீடுகள்) Minutes Book இருக்கிறது, Minutes Book இருக்கிறது. (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** ஆகவே, கரும்பு விவசாயிகளை அல்லது விவசாயப் பெருமக்களை ஏமாற்றலாம் என்று நினைப்பது, "பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுக்கொள்வான்" என்பதற்கு ஓர் அடையாளம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் Minutes-ஐப் பாருங்கள், முதலில். (குறுக்கீடுகள்) Minutes-ஐப் பாருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பிறகு, உச்ச நீதிமன்றம்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Minutes-ஐப் பார்த்துவிட்டு முடிவெடுக்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** 5-5-2001-ல் உச்ச நீதிமன்றம்... (குறுக்கீடுகள்)

(உறுப்பினர்கள் திரு. இரா. விசுவநாதன், திரு. கு. பாண்டுரங்கன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. டி. ஜெயக்குமார் ஆகியோர் இருக்கையைவிட்டு எழுந்து முன்வரிசையை நோக்கி வந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்னது பழமொழி. உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) திரு. பாண்டுரங்கன், நீங்கள் அமைச்சருடைய...

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசுவநாதன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கிருந்து எழுந்து இங்கே வந்து என்ன பேசுவது! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அவையிலே என்னை அனுமதித்திருக்கிறீர்கள். நான் பேசுகிறேன். விசுவநாதன் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய இடத்தை விட்டுவிட்டு இங்கு வந்து நின்றுகொண்டு பேசுவது என்றால் என்ன அர்த்தம்? எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் பேசுகிறார். *(குறுக்கீடுகள்)* துணைத் தலைவர் இருக்கிறார். அவர் கேட்கட்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* அதெல்லாம் இருக்கட்டும். நான் சொல்கிறேன், கேளுங்கள். உரை முடிந்தபின், உங்களுக்கு ஏதாவது இருந்தால் நீங்கள் கேட்கலாம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்னர் நீங்கள் அவரிடம் கேளுங்கள். அவர் உரை முடியட்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் போய் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உறுப்பினர், நீங்கள் உங்கள் இடத்திலே போய் உட்காருங்கள் முதலிலே. *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் இருக்கையில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஜெயக்குமார், இது நல்ல பழக்கமில்லை. முதலிலே சீட்டிலே போய் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. பாண்டுரங்கன், உங்களுடைய இருக்கையிலே போய் உட்காருங்கள். அமைச்சர் பதிலுரை ஆற்றிக்கொண்டிருக்கிறார். ஏதாவது கேட்க வேண்டுமென்றால், அவர் உரை முடிந்ததற்குப் பிறகு கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நான் பேசி முடித்த பிறகு, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதாவது விளக்கம் கேட்க விரும்பினால், அதற்கு உரிய பதிலை நான் தரத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவர் உரையை முடித்ததற்குப் பிறகுதான் உங்களுக்கு வாய்ப்பு. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*



திரு. பாண்டுரங்கன், திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, நீங்களெல்லாம் உங்கள் இருக்கைகளில் போய் உட்காருங்கள். ஏன் இங்கே வருகிறீர்கள்? *(குறுக்கீடுகள்)* எதுவானாலும் உங்கள் இருக்கைக்குப் போய்ச் சொல்லுங்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவசியமில்லை. இங்கே வர வேண்டிய அவசியமில்லை. போய் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் உங்களைக் கூப்பிடவில்லை. நீங்கள் போய் உட்காருங்கள் அங்கே.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உங்களைக் கூப்பிடவில்லை. உங்கள் இடத்தில் போய் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உங்கள் இடத்திலே போய் உட்கார்ந்துதான் நீங்கள் கேட்க வேண்டும். அவையின் முன்பகுதிக்கு வரவேண்டிய தேவையில்லை. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், உங்களை நான் பேசக் கூப்பிடவில்லை. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அனுமதியில்லை. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அனுமதியில்லை. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,.. *(கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, உட்கார்ந்துகொண்டே பேசாதீர்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *19-11-2001* அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பொருள் விரிவாக விவாதிக்கப்பட்டு, மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டியதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. *(கூச்சல்-குழப்பம்)* மேலும்,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய உரை முடியட்டும். *(குறுக்கீடுகள்)* முதலில் அவை முன்னவர் பேசிக்கொண்டிருக்கிறார்; அவரது உரை முடியட்டும். அதற்குப்பிறகு சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இங்கே வாருங்கள்;

இங்கே வாருங்கள்; (குறுக்கீடுகள்) இங்கே வாருங்கள். இங்கே வந்து கோப்பினைப் பாருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே வாருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவரை இங்கே வந்து கோப்பினைப் பாருங்கள் என்று கூறிவிட்டாகிவிட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள் வருவதற்குத் தயாராக இல்லை. (குறுக்கீடுகள்) அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** உச்ச நீதிமன்றம், 5-5-2001-ல், 'மாநில அரசு பரிந்துரை விலையைச் செய்யலாம்' என்று தீர்ப்பு வழங்கியது. (குறுக்கீடுகள்) அந்தக் கோப்புகூட இங்கேயிருக்கிறது. (குறுக்கீடுகள்) கோப்பு இங்கேயிருக்கிறது. (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு அமைச்சர் தன் கையிலிருந்த கோப்பினை அவையில் காட்டினார்.)

உச்ச நீதிமன்றம் 5-5-2001-ல், 'மாநில அரசாங்கம் பரிந்துரை விலையைச் செய்யலாம்' என்று தீர்ப்பு வழங்கியது. (குறுக்கீடுகள்) 5-5-2001-இலே தீர்ப்பு வழங்கிய பிறகு, ஏன் அந்த ஓர் ஆண்டு, ஒன்றரை ஆண்டுக் காலம், அந்த ஆண்டிற்குப் பரிந்துரை விலையை, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பிறகும், நீங்கள், உங்கள் மாநில அரசாங்கம், பரிந்துரை விலையை பரிந்துரை செய்யாதிருந்தது ஏன்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நீங்கள் 2005-2006-லே பரிந்துரை செய்ததற்குக் காரணம், தேர்தல். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தேர்தல் நாளிலே 1,011 ரூபாய் தரப்படும் என்று அறிவித்தீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவ்வளவு பேரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** ஆக, ஓட்டு வாங்கவேண்டும் என்பதற்காக நீங்கள் அறிவித்தீர்களே தவிர, வேறொன்றுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** விவசாயிகளுடைய நன்மையைக் கருதி ஒன்றும் நீங்கள் அறிவிக்கவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை இரண்டு கட்சிகள், மாற்றுக் கட்சிகள், வெவ்வேறு காலம், வெவ்வேறு ஆட்சி. அந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தபோது, அவருடைய கொள்கை முடிவு. அதுவேதவிர, குற்றச்சாட்டு என்று தயவுசெய்து கருதத் தேவையில்லை. உங்களுடைய கொள்கை முடிவு அது. எனவே, அவர்களது கொள்கை முடிவாக இருந்தது என்பதைத்தான் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள், அந்த அமைச்சரவைக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவு என்பதைச் சான்றுகளோடு இங்கே படித்துக் காட்டினார். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி, இருக்கையிலே உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) இருக்கையிலே உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது, உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மேலும், ஒருவேளை அது கொள்கை முடிவல்ல என்று கருதப்படுமானால் அல்லது அங்கு சொல்லப்படுகிற செய்தியே உண்மையல்ல என்றாலும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அதைப் பேரவைத் தலைவருக்குச் சான்றுகளோடு தெரிவிப்பாரேயானால், அது ஏற்றுக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், 19-11-2001 அன்று நடைபெற்ற கூட்ட Minutes Book-ஐ இங்கே கொண்டுவந்து காண்பிக்கிறார்கள்; நீங்கள் பாருங்கள் என்று சொல்லியாகிவிட்டது. நீங்கள் பார்ப்பதற்கு வரத் தயாராக இல்லை. (குறுக்கீடுகள்) பிறகு, வேறு என்ன செய்யவேண்டும்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள்மூலமாக ஒரு கோப்பினைக் கொடுத்தோம். அதையும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பார்க்க மறுக்கிறார் கோப்பு; முதலமைச்சர் கையெழுத்துப் போட்ட கோப்பு இருக்கிறது. இந்தக் கோப்பை. (குறுக்கீடுகள்) —முதலமைச்சர் 17-6-2002 அன்று, (குறுக்கீடுகள்) முன்னாள் முதலமைச்சர்; முன்னாள் முதலமைச்சர். —17-6-2002 அன்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள், "தலைமைச் செயலர் கருத்தை ஏற்கலாம்" என்று, அன்றைய தொழில் துறை அமைச்சரும் கையெழுத்துப் போட்டு, அதற்குப் பிறகு முதலமைச்சரும் கையெழுத்துப் போட்ட கோப்பிருக்கிறது. ஒரு அமைச்சர் சொல்வதை, கோப்பிலிருந்து சொல்வதை, மாண்புமிகு உறுப்பினர்களும், முன்னாள் அமைச்சர்களும் ஏற்க மறுத்தால், எப்படிச் சட்டமன்றத்தை நடத்துவது? (குறுக்கீடுகள்) கோப்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இது முதலமைச்சர் கையெழுத்து இல்லை என்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) இல்லை, இந்தக் கோப்பிலே இருக்கிற கையெழுத்து முதலமைச்சருடைய கையெழுத்து இல்லை என்று சொல்கிறீர்களா?

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அலுவல் நேரம் பேரவையின் அனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்தக் கோப்பை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடத்திலே தாங்கள் தயவுசெய்து காட்டி, அவருடைய ஒப்புதலைப் பெற்று, தொடர்ந்து பேரவை நிகழ்ச்சிகளை நடத்த ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லுங்கள், சொல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்) என்ன இது? முதலில் நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், பேச அனுமதிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் ஒன்றும் கட்டாயப்படுத்தாதீர்கள். முதலில் நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது கேட்க வேண்டுமென்றால், கடைசியில் கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** 2006 ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் .. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். அமைச்சர் அவர்கள், கொஞ்சம் இருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** ஒரு டன் கரும்புக்கு 9 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், கொஞ்சம் இருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். (குறுக்கீடு) One Minute. அவர் பேசட்டும். என்னதான் சொல்கிறார் என்று பார்ப்போம். (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள் சார். நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சென்ற முறை அமைச்சராக இருந்தவர். அமைசசர்கள் பேசுகிறபோது, நாங்கள் ஏதேனும் குறுக்கிட்டுக் கேட்டால்கூட, முடிவிலே பேசுங்கள் என்று சொல்லிவிட்டு, கடைசியில் பேசவே விடாமல bell அடித்துவிட்டு, நாங்கள் வெளியே சென்ற காலங்கள் உண்டு. (குறுக்கீடுகள்) மனசாட்சி என்று ஒன்று இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேசியதற்குப் பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேச விட்டீர்களா? (குறுக்கீடுகள்) அன்றைக்கு இருந்த அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இங்கே இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புக் கேட்டோம். முதலமைச்சர் பேசுகிறபோதே நான் குறுக்கிட்டுக் கேட்டபோது, 'கடைசியில் பதில் சொல்வார்கள்' என்று சபாநாயகர் சொல்வார்கள். கடைசியில் எழுந்திருந்து கையை நீட்டினால், சபாநாயகர், 'நேரம் முடிந்துவிட்டது, வெளியே போங்கள்' என்று சொல்லிவிட்டுப் போனதுதான் வரலாறு. Record இருக்கிறது. மனசாட்சி இருந்தால் அமைச்சருக்குத் தெரியும். அவர் பேசி முடிந்தபிறகு உங்கள் சந்தேகங்களைச் சொல்லுங்கள்; அவர் பதில் சொல்வார். அதை விட்டுவிட்டு நீங்கள் கண்டபடி எழுந்துநின்று, எல்லோரும் சேர்ந்து கத்தினால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களுக்கு மனசாட்சி இல்லை. நாம் இப்போது சொல்வோம். (குறுக்கீடு) என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) கோப்பு இங்கே இருக்கிறது. Minutes Book இங்கேயிருக்கிறது. பார்ப்பதாக இருந்தால் பாருங்கள். (குறுக்கீடு) பார்க்க விருப்பம் இல்லை என்றால் விடுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு ஆதாரமாக, மந்திரிசபையினுடைய, Cabinet Minutes-ஐப் பார்வையிடுங்கள்; கோப்பினைப் பார்வையிடுங்கள் என்று சொன்னீர்கள். Cabinet Minutes-ஐப் பார்த்தபிறகு, கோப்புகளைப் பார்த்தபிறகுதான் இந்தப் பிரச்சினைக்குள்ளே போக வேண்டும். ஆனால், நீங்கள் இந்தப் பிரச்சினையிலே இருக்கின்ற குற்றச்சாட்டுக்களை மீண்டும் மீண்டும் இங்கே பதிவு செய்து கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் Minutes-ஐயும் பார்க்கவில்லை; கோப்புகளையும் பார்க்கவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு சார்பிலும் உரக்க ஒலியெழுப்பி, உண்மை அதற்கிடையே பதுங்கிவிடக் கூடாது. எனவேதான், இப்போது ஒரு தீர்வாக -- நான் தீர்வு அளிக்கக்கூடிய இடத்திலும் இல்லை. அந்தத் தகுதியும் எனக்கு இல்லை, தாங்கள் இருக்கும்பொழுது. — தங்களுக்கு ஒரு யோசனையாகச் சொல்லுகின்றேன். அந்தக் கோப்பில் இப்படிப் பரிந்துரைக்கக்கூடாது மாநில அரசு என்று இருப்பதாக மாண்புமிகு வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதை 'இல்லை, அப்படியில்லை' என்று சொல்கிறார்கள். கோப்பு இங்கே இருக்கிறது. தங்களிடத்திலே கோப்பு ஒப்படைக்கப்படும். அதைத் தாங்கள் பார்த்து, நாளைக்கு அதுபற்றிய விவரத்தை இங்கே சொல்ல வேண்டும். அதுவரையில், இப்போது பேசப்பட்ட விஷயங்கள் ஒத்திவைக்கப்பட்டு, வெளியிடப்படாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவரையிலே இதை ஒத்தி வைக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய யோசனையை ஏற்று, சம்பந்தப்பட்ட அப்பகுதியைத் தீர்ப்பிற்குப் பின்னால் எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, உங்களிடம் ஒரு பழக்கம். நீங்கள் உட்கார்ந்து கொண்டே பேசுகிறீர்கள். அது சரியல்ல.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** 2006 ஆம் ஆண்டு ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், ஒரு டன் 9 சதவீதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு, 1,025 ரூபாய் விலையும், அதற்கு மேல் ஒவ்வொரு 0.01 சதவிகிதம் பிழிதிறனுக்கும் 9 ரூபாய் வீதம் கணக்கிடப்பட்டு, விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்தது மட்டுமல்ல; கரும்பு விவசாயி, அவருடைய கரும்பை வெட்டி ஆலைக்கு அனுப்புகிறபோது, பத்து கிலோ மீட்டர் தூரம்வரை விவசாயிகளே கொடுக்க வேண்டும் என்பதையும் மாற்றி, அதை ஆலையே ஏற்கும் என்று அறிவித்ததற்கிணங்க, இன்றைக்கு 51 கோடி ரூபாய்க்குமேல் வண்டி வாடகையையும் ஏற்ற அரசு, கலைஞர் அரசு, இந்த அரசு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-35

கடுமையான வறட்சியினால் தொடர்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, 1972-73 ஆம் ஆண்டு முதல் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் 17 மாவட்டங்களில், 80 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில், பிப்ரவரி 2007 முடிய, ரூபாய் 33.76 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம், 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், IWDP நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படாத வட்டாரங்களில், வனம் இல்லாத தரிசு நிலங்களை மேம்படுத்தும்வகையில், 1993-94 ஆம் ஆண்டு முதல், ஐந்தாண்டுத் திட்டமாக 24 மாவட்டங்களில் 99 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் 29.42 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம், 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்த் துறை; 2006-2007 ஆம் ஆண்டில் பழங்கள், காய்கறிகள், மலர்கள் மற்றும் வாசனைப் பொருட்கள் உற்பத்தி, 135.67 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 155.42 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. உற்பத்தித் திறன் ஒரு ஹெக்டருக்கு 14.77 மெட்ரிக் டன்னிலிருந்து 15.9 மெட்ரிக் டன்னாகவும் உயர்ந்துள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆகிய திட்டங்களின்கீழ், தோட்டக்கலைப் பயிர்களுக்கான தரமான நடவுச் செடியை, வீரிய ஒட்டு காய்கறி விதைகளை மானிய விலையிலும் விவசாயிகளுக்கு வழங்கி, பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில், ரூபாய் 7.3 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ், 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 98 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 104 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

நீர்வள நிலவளத் திட்டம் — ஒருங்கிணைந்த நவீன வேளாண்மை மற்றும் நீர்வள ஆதார மேலாண்மைத் திட்டம், — IAMWARM; தமிழகத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 939.7 மில்லி மீட்டர். தமிழகத்தைப் பொறுத்தவரை கிடைக்கும் நீர் வளத்தில், 80 சதவீதத்திற்குமேல் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுவதால், வேளாண்மைக்கான நீர்ப் பயன்பாட்டில் சிக்கனமான வழிமுறைகளைக் கையாள்வதன்மூலம் ஒட்டுமொத்த நீர்த் தேவையை நிறைவு செய்ய முடியும். தமிழ்நாட்டில், தற்போது பொதுப் பணித் துறை, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் உள்ள 39,200 ஏரிகள், குளங்கள் மற்றும் ஊருணிகள் ஆகியவற்றில் மழைபெய்யும் காலங்களில் கிடைக்கும் நீரை வீணாக்காமல் நல்ல முறையில் சேமித்து வந்தால், அந்தந்தப் பகுதிகளில் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து இருக்கும். வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் கட்டப்படும் தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள்மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து, பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு பலவகைகளில் நீர் சேமிக்கப்பட்டாலும், வேளாண்மைக்குப் போதிய நீர் கிடைப்பதில்லை. இதனைக் கருத்தில்கொண்டு, ஆஸ்திரேலியாவின் சிக்கன முறை நீர்ப்பாசன மேலாண்மை செயல்பாடுகள் குறித்து கண்டறிந்து வரும்பொருட்டு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், நானும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களும், பொறியாளர்கள் அடங்கிய குழு கடந்த மாதம் ஆஸ்திரேலியாவிற்குச் சென்று அங்கு செயல்படும் பாசன முறைகளுக்கான திட்டங்கள் குறித்து அறிந்து வந்துள்ளோம். ஆஸ்திரேலியாவில்கூட, கடந்த ஐந்தாண்டுகளாக மழை பெய்யாத நிலையில், கிடைக்கும் நீரைச் சிக்கனத்துடன பயன்படுத்தி, நவீன வேளாண்மை யுக்திகளைப் பயன்படுத்தி, சிறந்த முறையில் வேளாண்மை செய்து வருகின்றனர். அதேபோல், இஸ்ரேல்



நாட்டிலும், புதிய யுத்திகளை வேளாண்மையில் புகுத்தி, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, "ஆஸ்திரேலியா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு, நமது முன்னோடி விவசாயிகளை அழைத்துச் சென்று, அங்கு நடைமுறையிலுள்ள நவீன விவசாயத் தொழில்நுட்ப முறைகளை நமது விவசாயிகள் கண்டு வந்து அவற்றை நமது மாநிலத்தில் பின்பற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்" என இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு, அதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-10

வேளாண்மைப் பொறியியல் துறை, நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ், ரூ.12.50 கோடி செலவிலும், மழை நீர் சேகரிப்பு மற்றும் மழை நீர் மேலாண்மைப் பணிகளுக்காக ரூ.27.40 கோடி செலவிலும், நிலத்தடி நீர் செறிவூட்ட, ரூ.36.8 கோடியும், பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்புப் பணிக்கு 100 சதவிகித மானியத்தில் ரூ.1.50 கோடி செலவிலும், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மாவட்டங்களில் நுண்ணிய நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.6.77 கோடி செலவிலும், வேளாண்மை இயந்திரமாக்குதல் திட்டம், 2007-2008 ஆம் ஆண்டில் 315 டிராக்டர்கள், 2,320 பவர் டில்லர்கள் மற்றும் 692 வேளாண் கருவிகள் வாங்க, விவசாயிகளுக்கு ரூ.9 கோடி மானியம் வழங்கப்படும். கால்வாய்மூலம் பாசனம் மேற்கொள்ளப்படும் பகுதிகளில், நீர் உபயோகிக்கும் திறனை மேம்படுத்த, 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.39.12 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. புல வடிகால் திட்டத்தின்கீழ், 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.15.54 கோடி செலவில் செயல்படுத்தப்படும். பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், 2007-2008 ஆம் ஆண்டில் 120 விவசாய சபைகளுக்குச் செயல்பாட்டு மானியம் ரூ.250 இலட்சம் வழங்கப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை போன்ற பல்வேறு துறைகளிலே செயல்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பங்கள் அல்லது அரசினுடைய மானியங்கள், திட்டத்தினுடைய நோக்கம் இவற்றைப்பற்றியெல்லாம் நம்முடைய விவசாயிகளுக்குச் சரியாக எடுத்துச் சொல்லப்பட வேண்டும் என்பது அனைவருடைய எண்ணமும் ஆகும். அந்த அடிப்படையிலேதான், முதலிலே தோட்டக் கலைத் துறையின்மூலம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அதேபோல,

தமிழகத்திலே இருக்கின்ற 12,600-க்கும் மேற்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்களுக்கெல்லாம், எந்தெந்த வகையிலே மானியங்கள் வழங்கப்படுகின்றன, திட்டத்தை எப்படி நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கடிதம் எழுத வேண்டும், அதை விளம்பரப்படுத்த வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கேற்ப, அப்படிப்பட்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதைப் பலர் பாராட்டி, கிராமப்புறங்களில் இருக்கும் ஊராட்சி மன்றத் தலைவர்கள், அரசுக்கு, குறிப்பாக எனக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதைப்போல, தோட்டக்கலைத் துறையிலே, எப்படி நாங்கள் கடிதம் அனுப்பினோமோ, அதைப்போல வேளாண்மைத் துறையிலும், திட்டத்தைப் பற்றி விளக்கி, கடிதங்களை விரைவில் எழுத இருக்கின்றோம். பொறியியல் துறையினுடைய பணி என்ன என்பதையும் விளக்கிக் கடிதங்கள் எழுத இருக்கின்றோம். இப்படி ஒவ்வொரு துறை பற்றியும், நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலே இருப்பவர்களுக்கு இந்த அரசு தெரிவிக்கிறது என்று சொன்னால், ஒளிவுமறைவற்ற நிர்வாகம் நடத்துவதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதற்கு நாங்கள் உங்களிடத்திலே இதைவிட என்ன ஆதாரத்தைச் சொல்லமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-45*

மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள்கூட, நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள்: "இந்த அரசாங்கம் அறிவிப்புச் செய்தது; அந்த அறிவிப்புகள் எல்லாம் என்னவாயிற்று" என்றார்கள். ஒன்றும் ஆகவில்லை, நன்றாக இருக்கிறது, ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை! (சிரிப்பு)

பயிர்க் கடன் பெறாத விவசாயிகளுக்கு, 8 கோடி ரூபாய் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டு, ஆணையிடப்பட்டு இரண்டு இலட்சம் விவசாயிகளுக்குமேல் இப்பொழுது இந்தக் காப்பீட்டுத் திட்டத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து கொண்டு வரப்படுவார்கள். இந்த ஆண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 15 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆணையிடப்பட்டு நடைமுறையிலே இருக்கிறது.



அடுத்து, புதிதாகத் தொடங்கப்பட்ட 10 வட்டங்களில், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் தொடங்குவது, அதற்கும் அரசாங்கத்தால்—அதற்கான தேதி இருக்கிறது, அதைச் சொல்ல நேரமில்லை, சுருக்கமாகச் சொல்கிறேன்—ஆணையிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

அதைப்போல, விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்குவதைப்பற்றி சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதற்கும் அரசாங்க ஆணை வழங்கப்பட்டுவிட்டது.

வேர் வாடல் நோயினால் பாதிக்கப்பட்ட, வெட்டி அகற்றப்பட வேண்டிய தென்னை மரங்களுக்கு ஈட்டுத் தொகை வழங்குவதுபற்றிச் சொன்னோம். அதற்கும் ஆணையிடப்பட்டது. இப்பொழுது அது செயல்பட்டு வருகிறது.

விவசாய மேம்பாட்டுக் குழு என்று சொன்னீர்களே, என்னவாயிற்று என்றார்கள். 23-12-2006 ஆம் நாளிட்ட அரசாணை 404-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, இந்தக் குழுவிற்குத் தலைவராகவும், துணைத் தலைவராக வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற முறையில், என்னையும் போட்டு, 23-12-2006-லேயே ஆணை வெளியிடப்பட்டது. இதிலே ஒரு துணைக் குழு அமைக்க வேண்டுமென்று முதலமைச்சர் கருதி, அதற்கான ஆணையும் இடப்பட்டு, அந்தக் குழுவிற்கு வேளாண்மைத் துறை அமைச்சராகிய என்னைத் தலைவராகவும், சிதம்பரத்தைச் சேர்ந்த கே.எஸ். அழகிரி அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு, அந்தக் குழுவும் அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் சார்பிலேகூட, கடந்த 20 ஆம் தேதி சென்னையிலே விவசாயிகள் அடங்கிய கூட்டம் ஒன்றைக் கூட்டி, அந்த விவசாயிகளுடைய கருத்துகளையெல்லாம் கேட்டு, அவற்றிலே எதை எதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டு உடனடியாக நிறைவேற்ற முடியும் என்று விவசாயிகள் வழங்கிய நல்ல ஆலோசனைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லி, அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் அந்தக் குழுவும் இப்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

அதேபோல, பட்டுக்கோட்டையிலே தென்னை வளாகம் அமைப்பது என்னவாயிற்று என்றார்கள். அதற்காக நிலம் பார்க்கப்பட்டு, இப்பொழுது 20 ஏக்கர் நிலம் கையகப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் தக்காளிக்கு என குளிர்பதனக் கிடங்கு வசதி என்னவாயிற்று என்று கேட்டீர்கள். ஓசூர் வட்டம்,

மோடனப்பள்ளி கிராமத்தில் 10.70 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அங்கே அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடலூர் முந்திரி ஏற்றுமதி மண்டலம் என்னவாயிற்று என்றீர்கள். நிதிநிலை அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான ஆணை எல்லாம் வெளியிடப்பட்டு TIDCO நிறுவனத்திடம் ரூபாய் 19 இலட்சம் பங்குத் தொகையும் அரசு சார்பிலே நாம் வழங்கிவிட்டோம். அந்த TIDCO நிறுவனம்தான் இந்த ஏற்றுமதி மையத்தைத் தொடங்கவிருக்கின்றது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் செயல்படும் இலவச மருத்துவ மையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு, அந்த மருத்துவர்களெல்லாம் இப்பொழுது அந்த உயர்த்தித் தந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

மாநில அக்மார்க் ஆய்வகம் தரம் பிரிப்பு மையத்தை நவீனப்படுத்துதல்; அதற்கான ஆணை 6-9-2006-லேயே எண் 235 மற்றும் 236-ல் ஆணையிடப்பட்டு, அதற்காக ரூபாய் 25.02 இலட்சம் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கான குளிர்பதனக் கிடங்கு வசதி என்னவாயிற்று என்று கேட்டீர்கள். 27-11-2006 அன்று அரசாணை 361-ன்படி ஆணையிடப்பட்டு, அதற்காக 10.04 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் பொங்கலூரில் வெங்காயத்திற்கு எனக் குளிர்பதனக் கிடங்கு வசதியுடன் வணிக வளாகம் அமைப்பது என்னவாயிற்று என்று கேட்டீர்கள். 28-11-2006 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கான இடம் பொங்கலூரிலே கூட்டுறவுச் சங்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினுடைய இடத்திலேயே தாப்பட்டு, அதைக் கட்டுவதற்கான பணி விரைவிலே தொடங்கப்படவிருக்கிறது.

பிற்பகல் 1-50

தேனி மாவட்டம், ஓடைப்பட்டி திராட்சைக்கு எனக் குளிர்ப் பதனக் கிடங்கு வணிக வளாகம் என்னவாயிற்று என்றீர்கள், அதுவும் 2-11-2006 இல் அரசாணை எண் 349-ன்படி ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கையிலே இருந்து வருகிறது. அதற்காக 2 ஏக்கர் நிலமும் தேர்வு செய்யப்பட்டுவிட்டது.



சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் அனைத்து வசதிகளுடன்கூடிய விற்பனை முனையங்கள்—Terminal Markets—இது என்னவாயிற்று என்று கேட்டீர்கள். இது முழுக்க முழுக்க மத்திய சர்க்கார் தரக்கூடிய நிதியைப் பொறுத்தது. அவர்கள் அறிவித்ததற்கிணங்க, நம்முடைய மாநிலத்திலே மூன்று இடங்களிலே ஆரம்பிக்கலாம் என்று அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன. இப்போது நிலம், ஒரு 100 ஏக்கர் நிலம் அதற்குத் தேவைப்படுகிறது. அந்த 100 ஏக்கரை கையகப்படுத்துவதற்கு எப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுப்பப்படுகின்றன விவசாயிகள் மத்தியிலே, மற்றவர்கள் மத்தியிலே என்று உங்களுக்குத் தெரியும். இருந்தாலும்கூட, இந்த மூன்று இடங்களிலும் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, இப்பொழுது அதற்கு Technical Opinion அதற்காக ஒரு நிபுணர் குழுவிடம் தந்து, மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். மத்திய அரசாங்கம் அதனை அனுமதித்தவுடன் அந்த மூன்று இடங்களிலும் Ternıinal Markets தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே, தமிழ்நாட்டிலே மண்டல தேசிய தோட்டக்கலை வாரியம்--அந்தக் கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. முன்னோடி விவசாயிகளுக்கு இந்தியாவிலும், வெளிநாட்டிலும் பயிற்சி -தேசிய தோட்டக்கலை இயக்ககத்தின்கீழ் பயிற்சிகள் வழங்க TANHODA தலைவரால் ரூ.25 இலட்சம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கும் அந்தப் பயிற்சி கொடுப்பதற்குப் பணம், மாநில அரசாங்கம் கொடுத்துவிட்டது.

பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் அமைக்க அறிவித்தோம். 5-12-2006 நாளிட்ட அரசாணை எண் 372-ன்படி ஆணையிடப்பட்டு, 50 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திண்டுக்கல் மாவட்டத்தில் புதிதாக மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதுபற்றிச் சொன்னீர்களே, அது என்னவாயிற்று என்றீர்கள். அதற்கும் 4-12-2006-இல் அரசாணை எண் 376-ல் ஆணையிடப்பட்டு, 24.5 ஏக்கர் நிலமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல எல்லாம் இருக்கிறது. மேலும் உள்ளதைப் படித்தால் எனக்கு நேரமாகிவிடும் எல்லாவற்றிற்கும். எல்லாவற்றிற்கும் அரசாணையைப் போட்டுவிட்டோம். எல்லாம் நடக்கிறது. ஒன்றும் இல்லை என்று நீங்கள் சந்தேகப்பட வேண்டாம்.

"சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்". இது அரசினுடைய கொள்கை. சொல்லாததையும் செய்வோம் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அறிவிப்பாக சிலவற்றை மட்டும் சொல்கிறேன். கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும். துணைத் தலைவர் அவர்கள் பொறுமையாக இருந்தால் சரி.

தற்போதுள்ள நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு விரைவில் சென்றடையவும், ஒரே இடத்தில் கிடைத்திடவும், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை துறை, விதைச் சான்று துறை ஆகிய துறைகளின் விரிவாக்கப் பிரிவுகளை ஒருங்கிணைத்து விவசாயிகள், ஒன்றிய அளவில் அனைத்துத் தகவல்களையும் பெறும்பொருட்டு, தற்போது தாலுகா அளவில் பணியாற்றிவரும் பணியாளர்களின் பணி நிலை பாதிக்காதவாறு, ஒன்றிய அளவில் பணி நியமனம் செய்யப்படுவார்கள். தற்போதுள்ள மூன்று அடுக்குமுறை மாற்றப்பட்டு, இரண்டு அடுக்காக மாவட்ட அளவிலிருந்து ஒன்றிய அளவில், நேரடியாக நிர்வாகமுறை செயல்படுத்தி, தற்போதுள்ள அனைத்துக் காலியிடங்களும் நிரப்பப்பட்டு, வேளாண்மைத் துறைகள் மறுசீரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ( மேசையைத் தட்டும் ஒலி )

வேளாண்மைத் துறையில் பணிபுரியும் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு, 1996 ஆம் ஆண்டு முதல், நிரந்தரப் பயணப் படியாக மாதம் ஒன்றிற்கு ரூ.140 என வழங்கப்பட்டு வருகிறது. தற்போது போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் எரிபொருள் செலவினங்கள் உயர்ந்துள்ள நிலையில், உதவி வேளாண்மை அலுவலர் சங்கம் நிரந்தரப் பயணப் படியை உயர்த்தி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் பரிசீலித்து, ஒரு நல்ல முடிவு விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பள்ளிகளில் வேளாண்மைப் பாடத் திட்டத்தினை ஒரு பாடமாக, 1999-2000 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 2,025 உயர் நிலைப் பள்ளிகள் மற்றும் 1,810 மேல்நிலைப் பள்ளிகளில் இதுவரை 300 பள்ளிகளில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் நிதியாண்டில், இத்திட்டம் தொடர்ந்து அனைத்துப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும்



எனத் தமிழக அரசு அறிவித்ததன்பேரில், 2007-2008 ஆம் ஆண்டில், மேலும் 100 பள்ளிகளில் வேளாண்மை, ஒரு பாடத் திட்டமாகக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

தற்போது, தமிழகத்தில் 14 உரப் பரிசோதனை நிலையங்கள், ஆண்டு ஒன்றுக்கு 17,500 உர மாதிரிகளை ஆய்வு செய்து வருகின்றன. தமிழகத்தில் 151 உர உற்பத்தி நிலையங்களும், 13,833 உர விற்பனை மையங்கள்மூலம் உரங்களின் மாதிரிகளை ஆய்வு செய்ய, தற்போதுள்ள 14 உரப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் போதுமானவையாக இல்லாததால், திருவள்ளூர், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தேனி, சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் அரியலூர் ஆகிய 16 மாவட்டங்களில் புதிய உரப் பரிசோதனை நிலையங்கள் மத்திய அரசின் ஒப்புதலோடு பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தொடங்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில், தற்போது 19 மண் பரிசோதனை நிலையங்களும், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 6 இலட்சம் மண் மாதிரிகள் மட்டுமே ஆய்வு செய்ய முடியும் என்பதால், தமிழகத்திலுள்ள 80 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கும் மண் வள அட்டை வழங்க, மண் பரிசோதனை நிலையம் இல்லாத திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், விருதுநகர் மற்றும் அரியலூர் ஆகிய 11 மாவட்டங்களில் மண் பரிசோதனை நிலையங்கள் மத்திய அரசின் ஒப்புதலோடு பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், நாமக்கல், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படும் 8 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களுக்கு, நுண்ணூட்ட சத்தியின் அளவை ஆய்வு செய்ய தேவைப்படும் அட்டாமிக் அப்சார்ப்சன், ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் கருவிகளை வாங்க, பேரியல் மேலாண்மைத் திட்டத்தில் மத்திய அரசின் அனுமதி பெற்று வாங்கப்படும். பழைய நடமாடும் மண் ஆய்வு ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகள் வாங்க,

ரூபாய் 372 இலட்சம் செலவில் தேசிய தோட்டக்கலை நிதியிலிருந்து பெறப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது, தமிழகத்தில் 9 மாவட்டங்களில் பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 11,500 பூச்சிக்கொல்லி மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 138 பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்களும், 12,936 விற்பனை மையங்களும் செயல்பட்டு வருகின்றன. தற்போதுள்ள பூச்சிக்கொல்லி மருந்து ஆய்வகங்களின் ஆய்வுத் திறன் போதுமானதாக இல்லை எனக் கருதி, 2007-2008 ஆம் ஆண்டில், மேலும், வேலூர், தருமபுரி, நாகப்பட்டினம், தேனி, சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் புதியதாக 6 பூச்சிக்கொல்லி ஆய்வுக் கூடங்கள் மத்திய அரசின் ஒப்புதலோடு, பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவம், கால்நடை மருத்துவம் போன்ற துறைகளுக்கு 'மன்றம்' இருப்பது போன்று வேளாண்மைக்கும் 'வேளாண்மை மன்றம்' அமைக்க வேண்டுமென்ற வேளாண்மைப் பட்டதாரிகளின் கோரிக்கையினை ஏற்று, 1998 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது வேளாண்மை மன்றம் அமைக்க ஆணையிடப்பட்டது. கடந்த 5 ஆண்டுக்கால ஆட்சியில் வேளாண்மை மன்றம் அமைக்க சட்டமுன்வடிவு, சட்டப் பேரவையிலே அறிமுகம் செய்யப்படவில்லை. எனவே, வேளாண்மை மன்றம் அமைக்க நடப்புச் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்படும். மேலும், வேளாண்மை மன்றம் அமைப்பதற்கான ஆரம்பப் பணிக்காக, ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெல் உற்பத்தித் திறனை மேம்படுத்த, திருந்திய நெல் சாகுபடித் தொழில்நுட்பம் விவசாயிகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில், திருந்திய நெல் சாகுபடித் தொழில்நுட்பத்தை, ஒரு கிராமத்தில் 2.5 ஏக்கர் பரப்பளவில் செயல் விளக்கத் திடல் அமைத்து, இந்தத் தொழில்நுட்பம் அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடைய, தமிழகத்தில் 1,132 கிராமங்களில் ரூபாய் 226.40 இலட்சம் செலவில், செயல் விளக்கத் திடல் அமைக்கப்பட உள்ளது. 1,132 கிராமங்களில் 56,600 விவசாயிகளுக்கு ரூபாய் 56.60 இலட்சம் செலவில் திருந்திய நெல் சாகுபடித் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது



என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-00

தோட்டக்கலைத் துறையின்மூலம், 2007-2008 ஆம் நிதியாண்டில் 50,000 விவசாயிகளுக்குத் தோட்டக்கலைப் பயிர்களின் நவீன தொழில்நுட்பத்தைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பயிற்சி அளிக்க, ரூபாய் 8 கோடி, தேசிய தோட்டக்கலை வாரிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது, தமிழகத்தில் 7 விதைப் பரிசோதனை நிலையங்கள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 30,000 மாதிரிகள்வரை மட்டுமே பரிசோதனை செய்யப்படுகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு, தேசிய தோட்டக்கலை வாரியத்தின் நிதி உதவியிலிருந்து விதை ஆய்வுக் கூடங்கள் இல்லாத அனைத்து மாவட்டங்களிலும் ரூ.216 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கொய்மலர்களுக்கான நல்ல தேவை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ளதால், சேலம் மற்றும் கோவை மாவட்டங்களில் நிலவும் தட்பவெப்ப நிலை, ரோஜா சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளதால், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ், 2007-2008 ஆம் ஆண்டு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 33 சதவிகித மானியமும் அளித்து, ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சதுர மீட்டரில் பசுமைக் குடில்கள் அமைக்க, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது, உழவுப் பணிக்கும், அறுவடைப் பணிக்கும், தரிசுநில மேம்பாட்டுப் பணிக்கும் வேளாண் தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. வேளாண்மையை இயந்திரமயமாக்குவதால், உற்பத்திச் செலவு குறைவதாலும், விவசாயிகளிடையே வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டிற்கு நல்ல வரவேற்பு உள்ளது. விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில், வேளாண் இயந்திரங்களை வழங்கும்பொருட்டு, வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடனாக, ரூ.612.50 இலட்சம் பெற்று, 25 அறுவடை இயந்திரங்களும், 50 டிராக்டர்களும் நடப்பாண்டில்

வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1999-2000 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 103 உழவர் சந்தைகள் திட்டம், விவசாயிகளாலும், நுகர்வோர்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்ட திட்டமாகும். கடந்த ஆட்சியில், இந்த உழவர் சந்தைகள் சரிவரப் பராமரிக்கப்படாததால், 28 உழவர் சந்தைகள் மூடப்பட்டன. மீண்டும் தலைவர் கலைஞர் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், உடனடியாக நடவடிக்கை எடுத்து, ரூ.12 இலட்சம் செலவில் அனைத்து உழவர் சந்தைகளும் புதுப்பிக்கப்பட்டு, 3-6-2006 முதல் மீண்டும் சிறப்பாகச் செயல்படத் தொடங்கியுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்களிடமிருந்தும், சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும், அவர்கள் பகுதிகளில் உழவர் சந்தைகள் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. இதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு, தமிழகத்தில் நடப்பாண்டு, மேலும் புதிதாக 50 உழவர் சந்தைகள், ரூ.12.50 கோடி செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) 2007-2008 ஆம் நிதியாண்டில் தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக்கூடிய அதேநேரத்தில், இந்த உழவர் சந்தைகளுக்கு நிரந்தரப் பணியாளர்களும் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மாவட்டம், உத்தமசோழபுரத்தில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியப் பயிற்சி நிலையம்மூலமாக, 2007-2008 ஆம் நிதியாண்டில், சுமார் 10,000 விவசாயிகளுக்கு, அறுவடைக்குப்பின் நேர்த்தி செய்யும் தொழில்நுட்பப் பயிற்சி, ஒரு வார காலத்திற்கு ரூ.50 இலட்சம் செலவில் அளிக்கப்பட உள்ளது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டுவரும் விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காதபோது, விவசாயிகள் பயன்பெறும்வகையில், அவர்கள் விளைபொருட்களுக்கு பொருளீட்டுக் கடனாக வழங்கப்படும் கடன் தொகைக்கு 8 விழுக்காடு வட்டி இப்போது வாங்கப்படுகிறது. இந்த 8 விழுக்காடு இனிமேல் அப்படிக் கொடுக்கப்படும் பொருளீட்டுக் கடனுக்கு 5 விழுக்காடுதான் வசூல் செய்யப்படும என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, 50,000 ரூபாய் வரை பொருளீட்டுக் கடனாகக் கொடுப்பது, இனிமேல் ஒரு



இலட்சம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-05

உலர்களங்கள்; ஏற்கெனவே 1996-1997 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. 1,130 உலர்களங்கள் ரூ.21.24 கோடி செலவில் இதுவரையில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பொழுது 2007-2008-ல் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில், 100 உலர்களங்கள் இந்த ஆண்டு அமைக்கப்படும். அதற்காக ரூ.2.75 கோடி செலவழிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தோட்டக்கலைப் பயிர்கள், மூலிகைப் பயிர்கள் மற்றும் மலைப் பயிர்கள், பயிர் செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் அதனை விற்பனை செய்ய முடியாத நிலை உள்ளது. இந்நிலையைப் போக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், வேளாண்மை விற்பனைத் துறையும் இணைந்து, விற்பனைப் பொருட்களை வாங்கும் நிறுவனங்களைக் கண்டறிந்தும், சந்தை நிலவரத்தை அறிந்தும், சிறு மற்றும் குறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் தோட்டக்கலை மூலிகைப் பயிர்கள் மற்றும் மலைப் பயிர்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விற்பனை செய்ய, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் தனியார் பங்கேற்புடன் அமைக்கப்படும் ஓசூர் கொய்மலர் ஏற்றுமதி மண்டலம், ஊட்டியில் மலர் ஏற்றுமதி மண்டலம், தேனியில் மா ஏற்றுமதி மண்டலம் மற்றும் கடலூரில் முந்திரி ஏற்றுமதி மண்டலம் செயல்படவிருக்கிறது. இந்த ஏற்றுமதி மண்டலப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்குத் தேவையான உலகத் தரம் வாய்ந்த நாற்றுகள், விதைகள் மற்றும் தேவையான இடுபொருட்கள் வழங்குவதற்கு ஏதுவாக, மேம்படுத்தப்பட்ட நாற்றங்கால்கள ஏற்றுமதி மண்டல முனைவோர் பங்கேற்புடன் அமைத்து வழங்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் வேளாண் விளைப்பொருட்களை எவ்விதத் தங்குதடையின்றி விவசாயிகளும், வியாபாரிகளும் மாநிலத்தின் அனைத்து இடங்களுக்கும் சந்தைக் கட்டணம் செலுத்தி கொண்டு செல்ல வழிவகை செய்ய, ஒவ்வொரு விற்பனைக் குழுவுக்கும் மாறுபட்ட விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதைச் சீரமைத்து,

மாநிலம் முழுவதும் ஒரே சீரான அறிவிக்கை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். ஒரே சீரான அறிவிக்கை செய்யப்படுவதால், தற்போதுள்ள 15 சோதனைச் சாவடிகளும் இவ்வாண்டு மூடப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக அரசின் பரிந்துரையின்பேரில், மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், அடிப்படை ஆராய்ச்சியை மேற்கொள்ளவும், கட்டமைப்பு வசதிகளை மேமபடுத்தவும், ரூ.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி உதவியைக் கொண்டு, உலகத் தரம் வாய்ந்த பரிசோதனை ஆய்வுக் கூடம் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை நந்தனத்தில், வேளாண்மைப் பள்ளியாகச் செயல்பட்டுக் கொண்டிருந்ததை, 1907 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கோவைக்கு மாற்றம் செய்யப்பட்டது. கோவைக்கு மாற்றப்பட்டு 100 ஆண்டுகள் ஆனதையொட்டி, நூற்றாண்டுக் கட்டடம் ஒன்று கட்டப்படும் என்று முன்னாள் முதலமைச்சர் அவர்களே அறிவித்தார்கள். ஆனால், அதற்கான ஆணையோ, நிதியோ ஒதுக்கப்படவில்லை. ஆணையே போடவில்லை. இப்பொழுது இந்த அரசால் நூற்றாண்டுக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.5 கோடிக்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 100 சதவிகித நிதி உதவியுடன் தருமபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி கிராமத்தில் ஒரு வேளாண்மை அறிவியல் மையம் ரூ.110 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த வேளாண்மை அறிவியல் மையம்மூலமாக, விவசாயிகள் பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் துல்லிய பண்ணைத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதன் தொடர்ச்சியாக, தமிழகத்தில் உள்ள இதர 28 மாவட்டங்களிலும் 560 எக்டேர் பரப்பில், ரூ.565.60 இலட்சம் செலவில், துல்லிய பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேசிய



தோட்டக்கலை திட்டத்தின்மூலமாகவும், நுண்ணீர் பாசனத் திட்டத்தின்மூலமாகவும், 390 எக்டரில் ரூ.103.80 இலட்சம் செலவில், துல்லிய பண்ணைத் திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது. இதேபோல, ஏற்றுமதிக்கு உகந்த வாழைக்கு, 150 எக்டேர் பரப்பில் ரூ.209 இலட்சம் செலவில் துல்லிய பண்ணை அமைக்க தேசிய தோட்டக்கலை வாரியத்தின்மூலம் மைய அரசின் ஒப்புதலைப் பெற்று செயல்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 2-10*

கோவையில் உள்ள விதைச் சான்று துறையின்கீழ் இயங்கி வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில், பல்வேறு பயிர் விதைகளின் இனத் தூய்மைபற்றி மூன்று நாட்களிலேயே அறிந்து கொள்வதற்கு ஏதுவாக டி.என்.ஏ. பிங்கர் பிரிண்ட் பரிசோதனை நிலையம் ரூபாய் 58.7 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளது.

அங்கக நடைமுறைகள் கடைப்பிடித்து உற்பத்தி செய்யப்படும் வேளாண் பொருட்களுக்குச் சான்று அளிக்கும் வகையில் -- ஐ.எஸ்.ஐ. முத்திரை மாதிரி இது—தற்சமயம் இயங்கிவரும் வேளாண்மை விதைச்சான்று துறையானது "விதை மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை" எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.

அங்கக வேளாண்மை சான்றிதழ் பயிற்சிப் பெறவும், அதற்கென ஒரு தனிப் பிரிவு தொடங்கவும், புதுடெல்லியிலுள்ள "அபிடா" நிறுவனத்தில் பயிற்சிபெற, உயர் அலுவலர்களை அனுப்பி வைப்பது என்றும் அரசு முடிவு செய்திருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் 99 பேர், 358 வெட்டுத் தீர்மானங்களை வழங்கியிருக்கின்றார்கள். வேளாண்மைத் துறையிலே 172 வெட்டுத் தீர்மானங்களும், தோட்டக்கலைத் துறையிலே 35 வெட்டுத் தீர்மானங்களும், வேளாண்மை விற்பனைத் துறையிலே 63 வெட்டுத் தீர்மானங்களும், வேளாண்மைப் பொறியியல் துறையிலே 19 வெட்டுத் தீர்மானங்களும், தமிழ்நாடு வேளாண்மைப பல்கலைக்கழகத்திலே 37 வெட்டுத் தீர்மானங்களும், சர்க்கரைத் துறைபற்றி 28 வெட்டுத் தீர்மானங்களும், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் குறித்து 4 வெட்டுத் தீர்மானங்களும் ஆக 358 வெட்டுத் தீர்மானங்களை, 99 சட்டப் பேரவை உறுப்பினர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

இங்கே, இரண்டு நாட்களாக நம்முடைய வேளாண்மைத் துறையைச் சார்ந்த செயலாளர் மற்றும் இதர துறைகளினுடைய ஆணையாளர்களை வைத்து, ஒவ்வொருவருடைய கருத்துகளைப் பற்றியும், அவர்கள் என்ன கேட்கிறார்கள், அது சாத்தியமா, இல்லையா அல்லது அதை ஏன் நாம் செய்யக்கூடாது என்ற வினாவை எழுப்பி, உரிய பதிலை நானும் பெற்றிருக்கிறேன். அவர்களும் எழுத்துபூர்வமாக என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வெட்டுத் தீர்மானங்கள் குறித்து, ஒவ்வொருவருடைய பெயரையும் நான் இங்கே சொல்லாவிட்டாலும்கூட, இந்த அரசினுடைய பரிசீலனையில் இருக்கக்கூடிய ஆவணமாக அவை இருக்கும். அவற்றை வைத்துக்கொண்டு நடப்பு ஆண்டிலே, இந்த அரசு—ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்பதல்ல முக்கியம்—மக்களுடைய பிரச்சினை முக்கியம், அந்த அடிப்படையில், வேளாண் பெருமக்களுடைய நன்மை கருதி சொல்லப்பட்டு இருக்கின்ற கருத்துகளை இந்த அரசாங்கம் பரிசீலிக்க இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, நான் அளித்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனைக்கு ஏற்ப, 19-11-2001 அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவு குறித்த நிகழ்வு நாளை வரை ஒத்திவைக்கப்படுகிறது. எனவே, அதனை வெளியிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் (குறுக்கீடு) இன்னும் என்ன கிளாரிபிகேசன்? மணி 2-13 ஆகிவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக 7 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க் கடன் அதாவது விவசாயப் பெருமக்கள் வாங்கிய கடன் இரத்து செய்யப்பட்டிருக்கின்றது என்ற அறிவிப்பு, அதன்மூலம் 22,39,487 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த வருட வேளாண்மை மானியக் கோரிக்கையில், பாலிசி நோட்டில் 1153 கோடி ரூபாய் மட்டும் பயிர்க் கடன் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ரூபாய் 7ஆயிரம் கோடிக்கு சுமார் 22 இலட்சம் பேர் பயனடைந்தார்கள் என்ற புள்ளிவிவரம் இருக்கிறது. 1,153 கோடி ரூபாய் பயிர்க் கடனுக்கு எத்தனை இலட்சம் பேர் பயனடைந்தார்கள் என்ற விவரம் இல்லை. ஆக, தோராயமாகப் பார்த்தால் 3 இலட்சம் பேர் பயனடைந்து இருப்பார்கள் என்று



நினைக்கிறேன். பாக்கி 19 இலட்சம் பேர்களுக்கு எப்போது இந்த அரசு பயிர்க் கடன் வழங்கப்போகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஏற்கெனவே இந்த மன்றத்தில் இந்தக் கேள்வி எழுப்பி, நான் விடையளித்து, திரும்பவும் தான் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிற செய்தியை, தவறாகவே ஒரு கேள்வியாக எழுப்புகிறார். கடன் இரத்து என்பது, அரசாங்கமே பொறுப்பேற்றுக்கொண்டு, அந்தக் கடன் பெற்றவர்களுக்கு எல்லாம் இரத்து செய்யப்பட்டுவிட்டது. அதிலே பாக்கி கிடையாது. அரசாங்கம் வழங்கி இருக்கிற பணம், கூட்டுறவு வங்கிகள் செயல்படுவதற்காக, நடைமுறைப்படுத்துவதற்காக. புதிய கடனுக்குத்தான் இந்தப் பணமே தவிர, இரத்து செய்யப்பட்ட கடன் அது அரசாங்கப் பொறுப்பு; அதற்குரிய பதிலை நான் ஏற்கெனவே வழங்கியிருக்கிறேன்.

*பிற்பகல் 2-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) இருங்கள். இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 5, வேளாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,087,96,32,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.81,28,94,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4-4-2007) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

33. மானியக் கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு

(294 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008.

### அத்தியாயம்-1

### முன்னுரை

*"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"*

*--அய்யன் திருவள்ளுவர்*

*பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம் ஏர்த்தொழிலின் பின்னேதான் நடைபோடுகிறது. ஆகவே எவ்வளவுதான் துன்புற்றாலும் உழவுத் தொழிலே உயர்வுடையது*

*--டாக்டர் கலைஞரின் குறளோவியம்.*

கிராமப்புற வறுமையைக் குறைப்பதில் வேளாண் வளர்ச்சி பெரும் பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டின் மொத்த மாநில உற்பத்தியில் வேளாண் உற்பத்தியின் மதிப்பு குறைந்து வந்துள்ள போதிலும் கிராமப்புற மக்களில் பெரும்பான்மையோர் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நிலம் மற்றும் நீர் வளங்கள் குறைந்துவரும் நிலையிலும் தமிழக வேளாண் வளர்ச்சியானது, மக்கட்தொகைப் பெருக்கத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் வளர்ச்சியடைய வேண்டியுள்ளது. தமிழக வேளாண்மை, 1960ஆம் ஆண்டுகளில் நவீனப் பயிர் இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே மிகவும் சிறப்பான வளர்ச்சியைக் கண்டுள்ளது. நவீன பயிர் இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, பெரும்பாலான பயிர்களின் உற்பத்தித் திறன் வேகமாக வளர்ச்சியடைந்ததன் பயனாக மொத்த வேளாண் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. நெல், கரும்பு மற்றும் நிலக்கடலை போன்ற முக்கியப் பயிர்களை உள்ளடக்கிய பாசன வேளாண்மையில் தமிழகம் மிகவும் சிறப்பான வளர்ச்சியைக் கண்டுள்ளது. தொடர்ந்து பல ஆண்டுக் காலமாக தமிழக அரசு வேளாண் வளர்ச்சிக்குத் தேவையான வலுவான மனித வளம் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளில் குறிப்பிடத்தக்க அளவு முதலீடு செய்ததன் விளைவாகவே வேளாண் வளர்ச்சியில் ஒரு

நிலையான முன்னேற்றத்தைக் காண முடிந்தது. மேலும், வேளாண் ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கப் பணிகளுடன் கூடவே விதைகள், நீர், உரம், இயந்திரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் போன்ற அத்தியாவசிய இடு பொருட்கள் அளிப்பதிலும் தமிழக அரசு கவனம் செலுத்தியதன்மூலம் இத்தகைய வளர்ச்சி உறுதி செய்யப்பட்டது. வேளாண் தொழில்நுட்பம் மற்றும் வேளாண் சந்தைப்படுத்துதல் ஆகிய இரண்டிலுமே சரியான அளவு அரசு முதலீடுகள் இருந்ததன் விளைவாக உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது. மனிதவள மேம்பாடு, ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள், உயிர் இடுபொருட்களின் பயன்பாடு, சிறப்பான பயிர்ப் பாதுகாப்பு முறை, அறிவியல் பூர்வமான பயிர் மேலாண்மை, சிக்கனமான நீர்ப்பாசன முறைகள், அங்கக வேளாண்மை, வீரிய ஒட்டு இரக மற்றும் மாற்று மரபணுப் பயிர்கள் உற்பத்தி ஆகியவற்றில் தொடர்ச்சியான ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம், நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு மற்றும் மானாவாரி வேளாண்மை ஆகிய திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவதன்மூலம் வேளாண் உற்பத்தித் திறன் மற்றும் மொத்த உற்பத்தி ஆகியவற்றில் தொடர்ச்சியான வளர்ச்சியை அடையமுடியும். சமீப ஆண்டுகளில் வேளாண் வளர்ச்சியைத் தீவிரப்படுத்தும் வகையில் ஏற்றுமதிக்கான வேளாண்மை, தரிசு நில மேம்பாடு, துல்லிய வேளாண்மை, நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி ஆகியவற்றில் அதிக முதலீடு செய்யப்பட்டு வருகிறது.

அரசின் சீரிய முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருந்த போதிலும், நெல் மற்றும் எண்ணெய் வித்துக்களின் சாகுபடிப் பரப்பு தொடர்ந்து குறைந்து வந்துள்ளது. எனவே, இப்பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதின்மூலம் மட்டுமே மொத்த உற்பத்தியை அதிகரிக்க முடியும். கால்நடை மற்றும் கோழித் தீவனத்தின் அதிகரித்து வரும் தேவையால், மக்காச்சோளம் சாகுபடிப் பரப்பு குறிப்பிட்ட அளவு அதிகரித்துள்ளது. வணிகப் பயிர்களின் உற்பத்தித் திறன், குறிப்பாக கரும்பின் உற்பத்தித் திறன், பெருமளவு அதிகரிக்கவில்லையென்றாலும், சாகுபடிப் பரப்பு அதிகரித்ததன் காரணமாக மொத்த கரும்பு உற்பத்தி அதிகரித்து சர்க்கரை ஆலை மற்றும் அதைச் சார்ந்த தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. பெரும்பாலும், மானாவாரியாகப் பயிரிடப்படும் பருத்தியின் உற்பத்தித் திறன் மிகவும் மெதுவாகவே அதிகரித்து வருகிறது. இருப்பினும், புதிய இரகங்கள், குறிப்பாக, மாற்று மரபணுப் பருத்தி இரகங்களின் சாகுபடி அதிகரித்து வருவதால், பாசனத்தின்கீழ் பயிரிடப்படும் பருத்தியின் உற்பத்தி ஆகியன தொடர்ந்து அதிகரிக்க நல்ல வாய்ப்புகள் உள்ளன. நிலக்கடலை மற்றும் எள் போன்ற எண்ணெய் வித்துக்களின்





உற்பத்தித் திறன் அதிகரித்துள்ள போதிலும் இப்பயிர்களின் சாகுபடிப் பரப்பு குறைந்து விட்டதால் தேவையான உற்பத்தி இலக்கை அடைய முடியவில்லை.

தமிழகத்தில் தானியப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு 1980-81 ஆம் ஆண்டில் 57 சதவீதமாக இருந்து 2004-05 ஆம் ஆண்டில் 46 சதவீதமாகக் குறைந்துள்ளது. மொத்த சாகுபடிப் பரப்பில் பயறு வகைகளின் சாகுபடிப் பரப்பு ஏறத்தாழ பத்து சதவீதமாக உள்ளது. பருத்தி, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துக்களின் சாகுபடிப் பரப்பும் தொடர்ந்து சில ஆண்டுகளாகக் குறைந்து கொண்டே வந்துள்ளது. பயறு வகைகளைப் பொறுத்தவரை, தமிழகத்தின் மொத்தத் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையில் பெரும் இடைவெளி நிலவுவதால் பய்றுவகைகளை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. துவரை, பச்சைப் பயறு மற்றும் உளுந்து ஆகிய பயறு வகைகளின் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வந்துள்ள போதிலும், 1999-2000 முதல் 2004-2005 வரையிலான ஐந்தாண்டுக் காலத்தில் பயறு வகைகளின் சாகுபடிப் பரப்பு 14 சதவீதம் குறைந்துள்ளது.

**வேளாண் வளர்ச்சிக்கான சவால்களும் வாய்ப்புகளும் :**

தமிழக வேளாண்மை, மிகவும் கடினமான சவால்களை எதிர்கொண்டுள்ளது. தொடர்ந்து குறைந்து கொண்டே வரும் பண்ணைப் பரப்பு, வேளாண்மை அல்லாத பயன்பாடுகளுக்கான நிலத் தேவை மற்றும் நீர்ப் பற்றாக்குறை ஆகிய காரணங்களினால் குறைந்துவரும் சாகுபடிப் பரப்பு, பருவமழையை அதிக அளவில் நம்பியிருக்கும் நிலை, குறைந்துவரும் முதலீடு, நிலத்தடி நீரின் மிதமிஞ்சிய பயன்பாடு, மானாவாரிப் பயிர்களின் குறைவான உற்பத்தித் திறன், வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறை, நகர்ப்புற தொழிற்சாலை மாசுகளின் காரணமாகவும், போதிய பராமரிப்பின்மையாலும் சீரழிந்து வரும் நீர் ஆதாரங்கள், அறுவடைக்குப் பிந்திய பதனிடல் மற்றும் விளைபொருள் சேமிப்பு வசதிகள் போதிய அளவில் இல்லாமலிருப்பது ஆகியவை வேளாண் வளர்ச்சியைப் பாதிக்கும் முக்கியக் காரணிகளாகும். இத்தகைய சவால்களை எதிர்கொள்ள அரசு அறிவியல்பூர்வமான பல்நோக்கு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க உள்ளது. தமிழகத்தில் 52 சதவீத சாகுபடிப் பரப்பு மானாவாரி வேளாண்மையின்கீழ் உள்ளது. இத்தகைய பகுதிகளில் வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்த தொழில்நுட்பம், இடுபொருட்கள் மற்றும் மூலதனம் ஆகியவை இன்றியமையாத தேவைகளாகும். எனவே, இத்தகைய மானாவாரி நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கத் தேவையான பயிர் இரகங்களைத் தேர்வு செய்து பயன்படுத்துவதும், பொருத்தமான மண் மற்றும் நீர் பராமரிப்புத்

தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதும் அவசியமாகும். இதுதவிர, நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு, ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம், நீர்ப்பாசன மேலாண்மை, ஏரிகளையும் பாசனக் கால்வாய்களையும் தூர்வாரி ஆழப்படுத்திப் பராமரித்தல் மற்றும் கடன் வசதி மற்றும் பயிர்க் காப்பீடு முதலிய உழவர் நலத் திட்டங்களையும் அரசு செயல்படுத்தவுள்ளது.

ஆக்கிரமிப்பு, நகர்ப்புற மற்றும் தொழிற்சாலை கழிவுகளினால் மாசுபாடு மற்றும் அறிவியல் பூர்வமான நீர்த் தேவை பற்றிய திட்டமிடல் இல்லாமை ஆகிய காரணங்களினால் மேற்பரப்பு நீர்ப்பாசன ஆதாரங்கள் கடினமான சவால்களை எதிர்கொண்டுள்ளன. வளரும் நாடுகளை ஒப்பிடும்போது, நம்முடைய நீர்ப் பயன்பாட்டுத் திறன் மிகவும் குறைவாகும். கடந்த 50 ஆண்டுக் காலத்தில் கிணற்றுப் பாசனப் பரப்பு மூன்று மடங்கிற்குமேல் அதிகரித்துவிட்டதால், பல இடங்களில் நிலத்தடி நீர் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு நிலத்தடி நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர் வளம் குன்றி வருவதால், பயிர்ச் சாகுபடியில் 25 சதவீதம் வரை இழப்பு ஏற்படக்கூடும். எனவே, இத்தகைய பகுதிகளில் நிலத்தடி நீர் வளத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளும், நீர்ப்பாசன சிக்கனத்திற்கான தொழில்நுட்பங்களும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இம்மாதிரியான சூழ்நிலையில், சொட்டு நீர்ப்பாசனம் 20 முதல் 40 சதவீதம் வரை நீர்ச் சேமிப்புக்கு உதவுவதுடன் பயிர்களின் உற்பத்தித் திறனை 10 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கவும் உதவுகின்றது. சொட்டு நீர்ப்பாசனத்துடன் கூடவே உரமிடுவதற்கான தொழில்நுட்ப அறிவை உழவர்களுக்கு அளிப்பதற்கான பயிற்சிகளை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நீர்ப்பாசன மேலாண்மையினை நவீனமயமாக்கவும், நீர் நிலைகளைச் சீரமைத்து மேம்படுத்திடவும், உலக வங்கிக் கடனுதவியுடன் நீர்வள, நிலவள திட்டம் (IAMWARM) இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம், காவேரி உபவடி நிலப் பகுதிகள் நீங்கலாக, மாநிலத்தில் உள்ள 63 உபவடி நிலப் பகுதிகளில் ரூ.2,547 கோடி செலவில் பொதுப் பணி, வேளாண்மை, மீன்வளம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு ஆகிய துறைகள்மூலம் வரும் 6 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் 6,17,000 எக்டேர் பாசனப் பரப்பளவு பயன்பெறும். 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டம் வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவைமூலம் ரூ.6,160.25 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.



உழவர்களை மையமாகக் கொண்ட ஆராய்ச்சி, "ஆத்மா" என அழைக்கப்படும் "வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை" என்கிற வேளாண் விரிவாக்கத் திட்டம் மற்றும் உழவர்களுக்கு இலாபகரமான விளைபொருட்களைச் சந்தைப்படுத்தல் ஆகிய திட்டங்களின்மூலம் வேளாண் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒப்பந்த சாகுபடி முறை, குழு சாகுபடி, வேளாண் வளர்ச்சியில் பொதுத் துறை தனியார் துறைகளின் கூட்டுச் செயல்பாடு ஆகியவற்றின்மூலம் வேளாண்மையிலுள்ள இடர்பாடுகளைத் தவிர்த்து வேளாண்மையை இலாபகரமான தொழிலாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏழை விவசாயிகள், குறிப்பாக வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் வருவாயைப் பெருக்குவதற்கும் அவர்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்குமான தொழில்நுட்பங்களும், செயல்திட்டங்களும் அவசியமாகும். சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரங்களை அதிகரிப்பதற்குத் தேவையான பயிர் மற்றும் கால்நடை வளர்ப்பு, வேளாண் பதனிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய பலநோக்கு வேளாண்மை முறைகளைக் கண்டறிந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒன்பது மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் துல்லிய வேளாண்மைத் திட்டம், ஒரு மிகப் பெரிய வெற்றியாக உருவெடுத்து வருவதால் இத்திட்டத்தை, வரும் ஆண்டு முதல் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற போதிலும், அரசுத் திட்டங்கள் மட்டுமே வேளாண் வளர்ச்சியைத் தக்க வைப்பதற்குப் போதுமானவையல்ல. சந்தையை மையமாகக் கொண்ட வேளாண்மையை நோக்கி நாம் முன்னேறிவரும் இவ்வேளையில் வேளாண் வளர்ச்சியைப் பெருக்குவதில் தனியார் துறை முக்கியப் பங்கு வகிப்பதானது, வேளாண்மையில் 4 சதவீத வளர்ச்சி இலக்கினை எட்டுவதற்கு அவசியமாகும். இத்தகைய இலக்கினை அடையும் பொருட்டு துல்லிய வேளாண்மை, மலர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி, வேளாண் விளைபொருட்களின் அறுவடைக்குப்பின் மேலாண்மை, வேளாண் விளைபொருட்கள் பதனிடுதல், ஒப்பந்தச் சாகுபடி ஆகியவற்றை வேளாண் பதன்செய் மண்டலங்கள்மூலமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுடன் இணைக்க தனியார் துறையினர் முன்வர வேண்டும் என்று அரசாங்கம் அழைப்பு விடுத்து வருகிறது. உலகமயமாதலின்மூலம் வேளாண் விளைபொருட்களின் ஏற்றுமதிக்கான

வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. அதேசமயம், சந்தைகளின் தாராளமயமாக்கலின் காரணமாக ஏற்படக்கூடும் பாதகமான விளைவுகளிலிருந்து உழவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பழவகைகள், காய்கறிகள் மற்றும் கொய்மலர்கள் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் பெருகியுள்ளன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகளின் தேவைக்கேற்ப பயிர்ச் சாகுபடி முறைகளையும் பதன்செய் தொழில்நுட்பங்களையும் மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, ஒட்டுமொத்த வேளாண்மையில் நான்கு சதவீத வளர்ச்சியையும், தோட்டக்கலைப் பிரிவில் எட்டு சதவீத வளர்ச்சியையும் அடைவதற்கான அனைத்துக் கொள்கைகளையும் செயல்திட்டங்களையும் வகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான திட்டங்களில், பொதுத் துறை முதலீட்டை அதிகரித்து வேளாண் வளர்ச்சியைத் துரிதப்படுத்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும், மானாவாரி நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை விரிவாக்குவதன் மூலம் மானாவாரி உழவர்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளதால், தோட்டக்கலை விரிவாக்கத்தை மேற்கொள்வது அவசியமாகும். தமிழகத்தில் பல்வேறுபட்ட தட்பவெப்ப நிலை நிலவுவதால் பல வகையான பழ மற்றும் காய்கறிப் பயிர்களைச் சாகுபடி செய்ய முடியும். சமீப காலங்களில் அதி நவீனத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தோட்டப்பயிர்கள் சாகுபடித் திட்டங்கள் பெருகி வருகின்றன. இயற்கை வளமிக்க பகுதிகள் இருப்பதால் தோட்டக்கலை சார்ந்த உணவுப் பதனிடும் தொழிற்சாலைகளை நிறுவி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் வாய்ப்புகளும் உள்ளன. நிலமற்ற ஏழைகளுக்கு 2 ஏக்கர் தரிசு நிலம் வழங்கும் தமிழக அரசின் திட்டத்தின்மூலம் பயன்பாட்டில் இல்லாத தரிசு நிலங்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து வேளாண் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# அத்தியாயம் 2

# வேளாண்மை

## 1. முன்னுரை

80 சதவிகித மக்கட்தொகைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வாழ்வாதாரத்தினை அளித்துவரும் வேளாண்மைத் தொழில், விரைவான மாற்றங்களுக்கு உள்ளாகி வருகிறது. மாறிவரும் பருவநிலைகள், குறைந்துவரும் மழை அளவு இவற்றினை எதிர்கொண்டு, வயல்களில் கடினமாக உழைக்கும் 80 இலட்சம் பண்ணைக் குடும்பங்கள், 6 கோடிக்கும் அதிகமான மக்களுக்குத் தேவைப்படும் உணவு மற்றும் ஊட்டச் சத்துப் பாதுகாப்பினை வழங்குவது மட்டுமின்றி, தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களையும் வழங்கும் வகையில் பங்காற்றி வருகின்றன. வாழ்வாதாரத்திற்காக தொன்றுதொட்டுப் பயிரிட்டு வரும் பயிர்களையே தொடர்ந்து சாகுபடி செய்துவரும் நிலைமை மாறி, நல்ல வருமானம் பெறும் வகையில், சந்தை வாய்ப்புள்ள பயிர்களைச் சாகுபடிச் செய்ய வேண்டியதன் அவசியத்தை வேளாண் பெருமக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

வேளாண் வளர்ச்சியானது, பெருகிவரும் மக்கட்தொகைக்குத் தேவையான உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்காக மட்டுமின்றி, மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதார முன்னேற்றத்திற்கும் அவசியமானதாகும். மாநில அளவில் தன்னிறைவினை அடைவது மட்டுமல்லாது, தனிநபர் உணவு பாதுகாப்பிற்கும், வருமானம் மற்றும் அனைத்து வளங்களைச் சமமாக வழங்கி, வறுமையை அகற்றி, வாழ்க்கைத் தரத்தில் சமநிலையினை அடைவதற்கும், வேளாண் வளர்ச்சி முக்கியமானதாகிறது. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக வேளாண்மைத் தொழிலை, இலாபகரமான தொழிலாக மாற்றுவதில் அரசு முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நகரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் ஆகியவற்றால் குறைந்துகொண்டே வரும் வேளாண் விளைநிலங்கள் மற்றும் நீர்ப் பற்றாக்குறையினால், பாசனப் பயிர் பரப்பு குறைந்து வருதல் ஆகியவை நிலையான வேளாண் வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக இருந்தாலும், உரிய மேம்பாட்டு உத்திகளைப் பின்பற்றி சவால்களை எதிர்கொள்வதற்கு அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தரிசு நிலங்களை விளை நிலங்களாகவும், தொகுப்பு முறையிலும் மேம்படுத்தி ஏழை வேளாண் தொழிலாளர்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யும் திட்டம்,

பெருவாரியாக உள்ள தரிசு நிலங்களைச் சாகுபடிக்கு கொண்டு வந்து, வேளாண் தொழிலாளர்களின் வாழ்வில் ஒளியேற்றும் முக்கிய திட்டம் ஆகும். தரிசு நிலங்களை விநியோகிப்பதன்மூலம் சமூகப் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த மற்றும் தொகுப்பு மேம்பாட்டு அணுகுமுறைமூலம் பண்ணைக் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு, மண்வளத்தில் கவனம் மற்றும் இயற்கை வேளாண்மைமூலம் மண் பாதுகாப்பு, தரத்தினை உறுதிப்படுத்துவதன்மூலம் இடுபொருள் பாதுகாப்பு, பயிர்க் காப்பீடு திட்டத்தின்மூலம் பயிர்ப் பாதுகாப்பு, பண்ணை மகளிருக்கு உரிய அங்கீகாரம் வழங்குவதன்மூலம் மகளிருக்குப் பாதுகாப்பு ஆகியவற்றுடன், தொழில்நுட்ப உதவிகள் கூடிய அணுகுமுறைமூலமும், வேளாண் மருந்தகங்கள்மூலமும் வழங்கும் நோக்கத்துடன் அரசு செயல்படுகிறது.

10-12-2006 அன்று நடைபெற்ற தேசிய மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தென் மாநிலங்களில் வளமையை ஏற்படுத்த நதிகளை இணைக்கும் திட்டத்தினை விரைவாக செயல்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளார். 6 இலட்சம் எக்டேர் நிலத்தில் பாசன வசதி ஏற்படுத்துவதற்காக உலக வங்கி திட்டமான 'பாசன வேளாண்மையினை நவீனப்படுத்துதல் மற்றும் நீர் ஆதார மேலாண்மை' (IAMWARM) திட்டம், 2007-08 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். நுண்ணீர்ப் பாசன முறையுடன் சொட்டுநீர் வழி உரமிடுதலைப் பிரபலப்படுத்தி அதிகப் பரப்பில் செயல்படுத்த அரசு பெரும் திட்டத்தினை மேற்கொண்டுள்ளது.

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கத்துடன், கிணற்றுப் பாசனம்மூலம் நிலையான பாசனம் பெறும் விவசாயிகளின் நிலங்களில் இலாபம் தரக்கூடிய பயிர்ச் சாகுபடி முறையினை (Profitable Cropping Pattern) மேற்கொள்ள பரிந்துரைகள் வழங்கப்படும். இந்த அணுகுமுறையின்படி, குறைவான நீரில், அதிக இலாபம் தரக்கூடிய குறுகியகாலப் பயிர்களான மக்காச்சோளம், பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள், மூலிகைப் பயிர்கள் மற்றும் அந்தந்தப் பகுதிகளில் நிலவும் வேளாண் தட்பவெப்ப நிலைகளுக்கேற்ற, சந்தை தேவை அதிகமுள்ள இதர வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள், பயிர்ச் சாகுபடி முறையில் சேர்த்து சாகுபடி மேற்கொள்ள பரிந்துரைக்கப்படும். இதன்படி விவசாயிகளுக்கு இலாபம் தரும் மூன்று பயிர்களை ஓர் ஆண்டில் தொடர்ச்சியாகச் சாகுபடி செய்வதன்மூலம் விவசாயிகள் நல்ல இலாபம் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பயிரிடு திறனும் 120 சதவிகிதத்திலிருந்து 140 சதவிகிதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள்மூலம் பல்வேறு வாழ்வாதார வாய்ப்புகள் உருவாக்கப்படும். வேளாண்மை மற்றும் தோட்டக்கலை மட்டுமின்றி கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் பண்ணை, பட்டுப்புழு வளர்ப்பிற்கான தொழில்நுட்ப தகவல்கள் மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கு உதவிடும் சந்தை வாய்ப்புகளுக்கான விவரங்கள் ஆகியவற்றை விவசாயக் குழுக்களுக்கு ஒருங்கிணைந்த விரிவாக்க பணிகளுக்கான மாநில உதவித் திட்டம் (ஆத்மா) மூலம் வழங்கப்படும்.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வேளாண் வளர்ச்சியினை 4 சதவிகிதம் என்ற அளவிற்கு அடையும் நோக்கத்தோடு வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். வேளாண் வளர்ச்சியைக் கணக்கிடும்போது, வேளாண் உற்பத்தி மட்டுமின்றி பண்ணைக் குடும்பங்களின் நிகர வருமானத்தின் அடிப்படையிலும் கணக்கிடும் வகையில் வடிவமைக்கப்படும்.

## 1.1 வேளாண்மையின் தற்போதைய நிலை

விவசாயிகளுக்கு அரசு வழங்கியுள்ள பல்வேறு உதவித் திட்டங்கள் விவசாயிகளிடையே நம்பிக்கையையும் தைரியத்தையும் அளித்துள்ளது. அவை பின்வருமாறு:—

- ரூ.7000 கோடி அளவில் கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. இதுவரை 22,39,187 விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- கூட்டுறவு வங்கியில் வழங்கப்படும் பயிர்க் கடன் மீதான வட்டி விகிதம் 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைக்கப்பட்டதுடன், பயிர்க் கடன்களை உரிய காலத்தில் முறையாகத் திருப்பி செலுத்துபவர்களுக்கு வட்டி விகிதம் 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைப்பு.
- 2006-07 ஆம் ஆண்டில் ரூ.1153 கோடி அளவிலான புதிய பயிர்க் கடன்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. வரும் 2007-08 ஆம் ஆண்டில் ரூ.1300 கோடி அளவிலான பயிர்க் கடன்கள் வழங்க ஆவன செய்யப்படும்.
- பயிர்க் கடன் பெறாத விவசாயிகளுக்குக் காப்பீட்டுக் கட்டணத்தில் 50 விழுக்காடு மாநில அரசு மானியம்.
- அனைத்து வேளாண் பம்புசெட்டுகள் மற்றும் சுயநிதித் திட்டத்தில் மின் இணைப்பு பெற்ற 2.1 இலட்சம் விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்கும் இலவச மின்சாரம்.

[2007 ஏப்ரல் 3

## 2 பருவ நிலை மற்றும் பயிர் நிலை

### 2.1 மழை விவரம்

**பருவ வாரியாக பெறப்பட்ட மழை விவரம் பின்வருமாறு:**

(அளவு மி.மீ)

| பருவம் | இயல்பான மழை அளவு | பெறப்பட்ட மழை அளவு | | வேறுபாடு விழுக்காட்டில் இயல்பு மழையுடன் | |
|---|---|---|---|---|---|
| | | 2006 | 2007 | 2006 | 2007 |
| குளிர் காலம் (ஜனவரி-பிப்ரவரி) | 36.8 | 15.6 | 11.9 | (-)57.6 | (-)67.7 |
| கோடை காலம் (மார்ச்-மே) | 129.7 | 150.4 | | (+)16.0 | |
| தென்மேற்கு பருவம் (ஜூன்-செப்டம்பர்) | 332.8 | 264.6 | | (-)20.5 | |
| வடகிழக்கு பருவம் (அக்டோபர்-டிசம்பர்) | 431.4 | 496.3 | | (+)15.0 | |
| மொத்தம் | 930.7 | 926.9 | | (-)0.4 | |

குளிர் காலத்தில் பெறப்பட்ட மழை போதுமானதாக இல்லை என்றாலும், 2006 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ஒட்டுமொத்த மழை அளவு, ஏறக்குறைய இயல்பானதாக அமைந்தது. குறைவான மழை பதிவாகியுள்ள வேலூர், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் மழை பொழிவு சீராக இருந்தது. பொதுவாக, இந்த ஆண்டில் கிடைக்கப்பெற்ற மழை, பெரிய நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகளில் நீர் சேமிப்பு அளவினை உயர்த்துவதற்கும், நிலத்தடி நீர் உயர்வதற்கும், உதவியாக இருந்தது.

### 2.2. 2006-07 ஆம் ஆண்டில் பயிர் உற்பத்தி விவரம்

டெல்டா பகுதியில் உரிய காலத்தில் குறுவை சாகுபடி மேற்கொள்ளவும், சம்பா பயிர் சாகுபடி முழுமையாக மேற்கொள்ளும் வகையிலும் தொடர்ந்து நீர் திறந்துவிடப்பட்டது. மேலும், உரிய காலத்தில் தரமான இடுபொருட்கள் விநியோகம், வேளாண்மைத்



2007 ஏப்ரல் 3]

துறைமூலம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகள், சாதகமான மழை மற்றும் பருவ நிலை ஆகியவை 2006-07 ஆம் ஆண்டு நல்ல விளைச்சல் பெறுவதற்கு வழி ஏற்படுத்தியுள்ளது.

2006-07 ஆம் ஆண்டில் பயிர் பருவம் முழுவதும் நிலவிய சாதகமான சூழ்நிலையினால், உணவு தானிய உற்பத்தி, 1998-99 ஆம் ஆண்டு பெறப்பட்ட 94.12 இலட்சம் மெ. டன்னுக்கும் அதிகமாக, இதுவரை அடைந்திடாத 95 இலட்சம் மெட்ன் என்ற அளவினைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயிகளின் வருவாயை உயர்த்தும் வகையில், மக்காச்சோளம் மற்றும் பயறு வகை பயிர்களின் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த, வேளாண்மைத் துறை உரிய நேரத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் உணவு தானிய உற்பத்தி உயர்வு சாத்தியமானது.

கரும்பு உற்பத்தி, 39.60 இலட்சம் மெ.டன் என்ற இலக்கைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்மேற்கு பருவமழை (ஜூன்-செப்டம்பர்) இயல்பான மழை அளவைவிட (-) 20.5 விழுக்காடு குறைவாக பெறப்பட்டதால், மானாவாரி எண்ணெய் வித்து மற்றும் பருத்தி பயிர்களில் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி, சற்று குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2006-07 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் பயிர் உற்பத்தி விவரம் பின்வருமாறு:

| பயிர் | பரப்பு (இலட்சம் எக்டரில்) | | உற்பத்தி (இல.மெ.டன்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | எதிர்நோக்கும் சாதனை | இலக்கு | எதிர்நோக்கும் சாதனை |
| நெல் | 21.70 | 21.50 | 78.10 | 78.00 |
| சிறு தானியங்கள் | 10.50 | 11.60 | 13.65 | 13.70 |
| பயறு வகைகள் | 7.50 | 8.50 | 3.60 | 3.70 |
| மொத்த உணவு தானியங்கள் | 39.70 | 41.60 | 95.35 | 95.40 |
| எண்ணெய் வித்துக்கள் | 10.00 | 8.50 | 17.00 | 15.00 |
| பருத்தி (லட்சம் பொதிகள்) | 2.00 | 1.20 | 3.80 | 2.30 |
| கரும்பு (வெல்லமாக) | 3.30 | 3.70 | 39.60 | 40.25 |
| மொத்தம் | 55.00 | 55.00 | | |

## 2.3 2007-2008 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி இலக்கு

சாதகமான பருவநிலை மற்றும் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காகக் குறித்த காலத்தில் நீர் திறந்துவிடப்படும் என்பதை எதிர்நோக்கி, 2007-08 ஆம் ஆண்டிற்கான சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்திக்கான இலக்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :

| பயிர் | பரப்பு (இலட்சம் எக்டரில்) | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) |
|---|---|---|
| நெல் | 21.50 | 78.00 |
| சிறு தானியங்கள் | 12.00 | 13.80 |
| பயறு வகைகள் | 8.50 | 3.70 |
| மொத்த உணவு தானியங்கள் | 42.00 | 95.50 |
| எண்ணெய் வித்துக்கள் | 10.00 | 17.00 |
| பருத்தி (லட்சம் பொதிகள்) | 1.50 | 3.50 |
| கரும்பு (வெல்லமாக) | 3.50 | 41.00 |
| மொத்தம் | 57.00 | |

## 2.4. 2007-2008 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்

- பொது மற்றும் தனியார் பங்கேற்பின்மூலம் கூடுதல் விதைமாற்று விகிதத்தில் தரமான விதை விநியோகம்
- உற்பத்தியில் நிலையான முன்னேற்றத்திற்கு மண்வளத்தில் கவனம்
- சொட்டுநீர் வழி உரமிடல் உட்பட அனைத்து தொழில்நுட்பங்களையும் ஒருங்கிணைத்து தொகுப்பு அணுகுமுறையாக துல்லிய பண்ணைய முறையை மேற்கொள்ளுதல்
- மாற்று முறையான ஒருங்கிணைந்த பண்ணைய முறைமூலம் நிலையான வருமானம்
- இலாபகரமான பயிர்சாகுபடி முறையினைப் பிரபலப்படுத்தல்/ மக்காச்சோளம், பயறு வகைகள், காய்கறிகள் சாகுபடிமூலம் பயிர் சாகுபடித் திறன் மற்றும் இலாபத்தினை அதிகரிப்பதில் சிறப்புக் கவனம் செலுத்துதல்.
- இயற்கைப் பண்ணையம் மற்றும் சான்றளிப்புமூலம் வேளாண் விளைபொருள் ஏற்றுமதிக்காகத் தரத்தினை உயர்த்துதல்



- விரிவாக்கப் பணிகளில் "குழு அணுகுமுறை" மூலம் தொழில்நுட்ப பரிமாற்றத்தினை மேம்படுத்துதல்/ வேளாண் மருந்தகங்களை ஊக்குவித்தல்
- பண்ணை மகளிருக்கு அங்கீகாரம் வழங்கி செயல்பாடுகளை வலுப்படுத்தல்
- தகவல் தொழில்நுட்பம்மூலம் தகவல் பரிமாற்றத்தினை விரைவுபடுத்துதல்
- தொகுப்பு அணுகுமுறைமூலம் திட்டத்தின் முழுப் பயனையும் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்தல்.

## 3. மாநிலத் திட்டங்கள்

### 3.1. இடுபொருள் விநியோகம்

#### 3.1.1. விதைகள்

பயிர்களின் உற்பத்தித் திறனை நிர்ணயிக்கும் அடிப்படை, இடுபொருள் விதை ஆகும். விதை உற்பத்தி மற்றும் விநியோகப் பணிகள் துறைமூலம் அதிக அளவில் மேற்கொள்ளப்படுவதுடன், தனியார் விதை உற்பத்தியாளர்களும் முக்கியமாக மக்காச்சோளம், பருத்தி, காய்கறிப் பயிர்களின் விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பங்கேற்கிறார்கள். நெற்பயிரில், தனியார் விதை விநியோகத்தையும் சேர்த்து விதை மாற்று விகிதம் தற்போது 35 முதல் 45 விழுக்காடாக உள்ளது. இது பிற பயிர்களில் குறைவாகவே உள்ளது. தற்போது விதை மாற்று விகிதத்தை உயர்த்தி சுமார் 50 சதவீதத்திற்கும் மேலான சாகுபடிப் பரப்பிற்கு தரமான விதைகளை விநியோகிக்கும் நோக்கத்தோடு அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது :

- மத்திய அரசுத் திட்டமான விதை கிராமத் திட்டத்தினை ஒருங்கிணைத்து, விவசாயிகளே சான்று விதையினை உற்பத்தி செய்து, அதனை நேரடியாக இதர விவசாயிகளுக்கு விநியோகிக்கும் வகையில், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.
- துறைமூலம் மேற்கொள்ளப்படும் விதை உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதோடு, விதைமாற்று விகிதத்தை உயர்த்த மகளிர் சுய உதவிக் குழுக்கள், விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் ஈடுபடுத்தப்படும். எனினும், அதிக அளவு ஆதார விதை உற்பத்தியில் துறை ஈடுபடும்.

அதிக அளவு தரமான விதைகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்குத் தனியார் விதை உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப் படுவார்கள்.

மாநில அரசே முழு செலவையும் ஏற்கும் வகையில், விதை உற்பத்தித் திட்டங்களை மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டுடன் துறை மேற்கொண்டுள்ளது. விதை உற்பத்தித் திட்ட செயல்பாடுகள் மூன்றடுக்கு முறையில் செயல்படுத்தப்படுகிறது. வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறப்படும் வல்லுநர் விதையைக் கொண்டு துறையின்கீழ் செயல்படும் 37 அரசு விதைப் பண்ணைகள், 5 எண்ணெய் வித்துப் பண்ணைகள் மற்றும் ஒரு பயறுவகைப் பண்ணைமூலம் ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2006-07 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசு விதைப் பண்ணைகளில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ஆழ்குழாய்க் கிணறுகள் ரூ.27.40 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன. இந்த ஆதார விதைகளைக் கொண்டு விவசாயிகளின் நிலங்களில் சான்று விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அரசுக்குச் சொந்தமான 74 விதை சுத்திகரிப்பு நிலையங்கள்மூலமாக, துறையினால் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைகளும், சான்று விதைகளும் சுத்திகரிக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, பின்னர் சான்றட்டை பொருத்தப்பட்டு மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் இயங்கிவரும் 880 வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 2006-07 ஆம் ஆண்டில், பகுதி-2 திட்டத்தின்கீழ், 44 வேளாண்மை விரிவாக்க மையங்கள் ரூ.50 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்பட்டன. துறையில் செயல்பட்டு வரும் விதை சுத்திகரிப்பு நிலையங்களின் இயந்திரங்களில் பெரும்பாலானவை, 15 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டதால், பழுதுநீக்கம் செய்யப்பட வேண்டி உள்ளது. இத்தகைய இயந்திரங்களின் பழுதினை நீக்கி சுத்திகரிப்புத் திறனை அதிகரிப்பதற்காக, 2007-08 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கரூரில் 2 சிறிய விதை சுத்திகரிப்பு இயந்திரங்களும், வேலூர், நாகப்பட்டினம், தருமபுரி ஆகிய இடங்களில் தலா ஒன்றும் ஆக மொத்தம் 5 சிறிய விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் ரூ.15 இலட்சம் செலவிலும் 2007-08 ஆம் ஆண்டில் புதிதாக வாங்கப்படும். இதன்மூலம் தேவையான விதைகள் குறித்த நேரத்தில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். 2007-08 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.3 இலட்சம் செலவில் 50 பை தைக்கும் கருவிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு வழங்கப்படும்.



2006-2007 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் விதைப் பெருக்கத் திட்டத்தில் அடையப்பெற்ற சாதனை மற்றும் 2007-08 ஆம் ஆண்டின் திட்ட விவரமும் பின்வருமாறு :

(மெ. டன்கள்)

| பயிர் | இலக்கு 2006–07 | பிப்ரவரி 2007 முடிய சாதனை | 2007–08 ஆண்டிற்கான திட்டம் |
|---|---|---|---|
| **(அ) கொள்முதல்** | | | |
| 1. நெல் | 18000 | 15983 | 18000 |
| 2. சிறு தானியங்கள் | 450 | 387 | 450 |
| 3. பயறு வகைகள் | 1600 | 1120 | 1800 |
| 4. எண்ணெய் வித்துக்கள் | 4500 | 2904 | 4500 |
| 5. பருத்தி | 250 | 180 | 250 |
| **ஆ) விநியோகம்** | | | |
| 1. நெல் | 18000 | 15762 | 18000 |
| 2. சிறு தானியங்கள் | 450 | 416 | 450 |
| 3. பயறு வகைகள் | 1600 | 1171 | 1800 |
| 4. எண்ணெய் வித்துக்கள் | 4500 | 3504 | 4500 |
| 5. பருத்தி | 250 | 175 | 250 |

### 3.1.2. உரங்கள்

மண் வளத்தினை மேம்படுத்த, இயற்கை மற்றும் இரசாயன உரங்களை சமச்சீராகவும், இணைந்தும் பயன்படுத்தவும் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை உத்திகளை அதிக அளவில் பின்பற்றுவதற்கும் முக்கியத்துவம் தரப்படுகின்றன. போதிய அளவு இயற்கை உரங்கள் மண்ணில் இடாததாலும் தொடர்ந்து பல ஆண்டுகளாகத் தீவிர சாகுபடி மேற்கொண்டதாலும், 1971 ஆம் ஆண்டில் 1.2 சதமாக இருந்த மண்ணின் இயற்கை அங்ககச் சத்து, 2002 ஆம் ஆண்டில் 0.68 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இதனால் மண்ணில் பலவகையில் விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்பட்டதோடு, மண்ணுக்கும், பயிருக்கும் இடையிலான இணக்க நிலையில் தடை ஏற்பட்டு மண்வளம் மற்றும் உற்பத்தித் திறன் குறைந்துள்ளது. அங்ககச் சத்து மண்ணின் நீர்பிடிப்புத் திறனை

அதிகரிப்பதுடன், மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் செயல்பாட்டினையும் அதிகப்படுத்துவதால், பயிர் ஊட்டச்சத்தினைக் கிரகிக்கும் திறனும் அதிகரிக்கிறது. எனவே, பசுந்தாள் உரப் பயிர்கள் சாகுபடி, மண்புழு உரத்தினைத் தயாரித்து பயன்படுத்துதல், பண்ணைக் கழிவுகளை புளூரோட்டஸ் கொண்டு உரமாக்கல், நீலப்பச்சை பாசி, அசோலா, உயிர் உரங்கள் போன்றவைமூலம் இயற்கை அங்கக உரப் பயன்பாடு பிரபலப்படுத்தப்படுகிறது.

மண் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதில் விவசாயிகளிடையே பெரும் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை சரியான அளவு பயன்படுத்துவதற்காக சட்டமன்றத்தில் அறிவித்தபடி, இதுவரை 4.12 இலட்சம் மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உர இருப்பினையும், உர விநியோகத்தினையும் துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. உரக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1985-ஐ கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தி, தரமான உரங்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

2006-2007 ஆம் ஆண்டு இரசாயன உரங்கள் விநியோகம் மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுக்கான திட்ட விவரம் பின்வருமாறு:

(அலகு இல. மெ.டன்)

| சத்துக்கள் | 2006–07 இலக்கு | பிப்ரவரி 2007 முடிய சாதனை | 2007–08 ஆண்டிற்கான திட்டம் |
|---|---|---|---|
| தழைச் சத்து | 5.50 | 5.132 | 5.55 |
| மணிச் சத்து | 2.36 | 2.484 | 2.38 |
| சாம்பல் சத்து | 2.29 | 2.489 | 2.32 |
| மொத்தம் | 10.15 | 10.105 | 10.25 |

துல்லியப் பண்ணையத்தின்கீழ் சொட்டுநீர்ப்பாசனம் மற்றும் சொட்டுநீர் வழி உரமிடல் முறைமூலம் உற்பத்தித் திறனை அதிக அளவிற்கு உயர்த்த பெருமளவில் பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது. சொட்டுநீர் வழி உரமிடல் முறையில் கரையும் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், கரையும் உரங்களின் விலை அதிகமாக உள்ளது. மத்திய அரசினால் மற்ற உரங்களுக்கு வழங்கப்படும் மானியம் கரையும் உரங்களுக்கு வழங்கப்படுவதில்லை. எனவே, விவசாயிகளின் நலனினைக் கருத்தில் கொண்டு, கரையும் உரங்களுக்கு மானியம் அளிக்கவும், அதன்மூலம் அதன் விலையைக் குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு, மத்திய அரசை அணுகியுள்ளது.



### 3.1.3. நுண்ணூட்டச் சத்துக்கள்

தொடர்ந்து பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தீவிர சாகுபடியினால், மாநிலத்தின் பெரும்பாலான விளைநிலங்களில் நுண்ணூட்டச் சத்து குறைபாடு கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் குறைபாட்டினால் பயிர்களின் விளைச்சலும் விளைபொருட்களின் தரமும் நேரடியான பாதிப்புக்கு உள்ளாகின்றன. மண்ணின் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டினைக் கண்டறிவதற்காக, அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் என்ற நவீனக் கருவி மண் பரிசோதனை நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் தேவையினை மேலும் வலுப்படுத்துவதற்காக, நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், நாமக்கல், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் பெரம்பலூர் ஆகிய 8 மாவட்டங்களில் இயங்கி வரும் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களுக்கும் அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் என்ற நவீனக் கருவியினை 2007-08 ஆம் ஆண்டில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பல்வேறு பயிர்களுக்குத் தேவையான 14 வகையான நுண்ணூட்டக் கலவைகள் ஆண்டுதோறும் 1400 மெ. டன் என்ற அளவுக்கு குடுமியான் மலையில் உள்ள நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையத்தில் உற்பத்திச் செய்யப்பட்டு, வட்டார அளவில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

2006-07 ஆம் ஆண்டில் 1400 மெ.டன் நுண்ணூட்ட உரக் கலவை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 1325 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டு 1084 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டிலும் 1400 மெ.டன் நுண்ணூட்ட உரக் கலவையினை உற்பத்தி செய்து விநியோகிக்கும் வகையில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.2. உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

விவசாயிகளுக்குத் தரமான உரங்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, உரக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1985 கடுமையான முறையில்

நடைமுறைப்படுத்தப்படுகிறது. 13833 உர விற்பனை நிலையங்கள் மற்றும் 151 உர உற்பத்தி நிலையங்களில் உர மாதிரிகள் எடுக்கப்பட்டு மாநிலத்தில் இயங்கிவரும் அறிவிக்கை செய்யப்பட்ட 14 உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்மூலம் தர ஆய்வு செய்யப்படுகிறது. 2006-07 ஆம் ஆண்டில், 17500 உர மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 17100 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தரக் கட்டுப்பாட்டுப் பணியினை மேலும் வலுப்படுத்தி விவசாயிகளுக்குத் தரமான இடுபொருட்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, ஆய்வகங்கள் இல்லாத திருவள்ளூர், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தேனி, சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் மேலும் 16 புதிய உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.3. மண்வளம்

வேளாண் உற்பத்தியின் தேக்க நிலைக்கு மண்வளம் பாதிக்கப்பட்டதுதான் முக்கிய காரணம் ஆகும். மண்ணின் வளத்தினை மேம்படுத்துவதற்காகச் செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்கள் பின்வருமாறு:

### 3.3.1. பசுந்தாள் உரப் பயிர் சாகுபடியினைப் பிரபலப்படுத்தும் திட்டம்

தீவிரச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டதால், பயிர்ச் சுழற்சியில் பசுந்தாள் உரப் பயிர்களைச் சாகுபடி செய்து வந்த வழக்கத்தினை விவசாயிகள் மேற்கொள்வதில்லை. சணப்பு, தக்கைப்பூண்டு, அகத்தி, கொளிஞ்சி போன்ற பசுந்தாள் உரப் பயிர்களைச் சாகுபடி செய்து வயல்களிலேயே மடக்கி உழுதால் மண்ணில் இயற்கை அங்ககச் சத்து கணிசமான அளவு உயரும்.

பசுந்தாள் உரப் பயிர் சாகுபடியினை ஊக்குவிப்பதற்காக, 2007-2008 ஆம் ஆண்டில், ரூ.50 இலட்சம் செலவில் 25 சத மானியத்தில் 250 மெ.டன் பசுந்தாள் உர விதைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.3.2. புளூரோட்டஸ் மூலம் பண்ணைக் கழிவினை கம்போஸ்ட் உரமாக்கும் திட்டம்

இத்திட்டத்தில் விவசாயிகளின் வயல்களில் கிடைக்கும் பண்ணைக் கழிவுகள், புளூரோட்டஸ் மூலம் கம்போஸ்ட் உரமாக்கப்படுகின்றன.





இத்திட்டத்தில் ஒரு கிலோ புளூரோட்டஸ், 5 கிலோ யூரியா மற்றும் தொழில்நுட்ப விவரங்கள் கொண்ட பிரசுரம் அடங்கிய சிறுதளைப் பைகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. ரூ.7 இலட்சம் செலவில் 5000 சிறுதளைப் பைகளை விநியோகிக்கும் வகையில் இத்திட்டம் 2007-08 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.3.3. மண்புழு உரம்

சுய உதவிக் குழுக்களும், அரசு சாரா நிறுவனங்களும், வணிக ரீதியாக மேற்கொள்ளும் பெரும்பாலான சுய தொழில் செயல்பாடுகளில் மண்புழு உற்பத்தியும் ஒன்றாகும். மண்புழு உற்பத்தியினை அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் அதிகமுள்ளன. மண்புழு உரத் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், மகளிர் குழுக்கள் மற்றும் விவசாயிகள் ஆர்வலர் குழுக்களை ஊக்குவித்து ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தபட்சம் ஒரு மண்புழு உற்பத்தி மையத்தினை உருவாக்கி மண்புழு உரத் தேவையினை அடைய வேண்டும் என்ற நோக்கத்தை அரசு கொண்டுள்ளது.

மண்புழு உர உற்பத்தித் தொடர்பான தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், விவசாயிகளே உற்பத்திச் செய்ய வாய்ப்புகளை உருவாக்கவும் இத்திட்டத்தில் செயல் விளக்கமும், பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 2007-08 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் ரூ.11.55 இலட்சம் செலவில் 300 செயல் விளக்கங்கள் நடத்தி 15000 விவசாயிகளுக்குப் பயிற்சியும் அளிக்கப்படும். இத்திட்டத்தில் ஒரு செயல் விளக்கம் அமைக்க இடுபொருள் செலவிற்கு ரூ.1200/-ம் பங்குபெறும் விவசாயிகளுக்கு இடைநிகழ் செலவிற்கு உதவித் தொகையாக நபருக்கு ரூ.50/-ம் வழங்கப்படும்.

### 3.3.4. உயிர் உர உற்பத்தி மற்றும் விநியோகம்

விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் அதிக அளவில் கிடைக்கச் செய்ய கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை, திருச்சி ஆகிய 6 இடங்களில் இயங்கி வரும் உயிர் உர உற்பத்தி மையங்களில் ரைசோபியம், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா ஆகிய உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2006-07 ஆம் ஆண்டில், பிப்ரவரி 2007 வரை 1,567 மெ.டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு 1,372 மெ.டன் விநியோகிக்கப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,600 மெ.டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும்.

### 3.3.5. நீலப்பச்சை பாசி மற்றும் அசோலா

நீலப்பச்சை பாசி மற்றும் அசோலா காற்றில் உள்ள தழைச் சத்தினைக் கிரகித்து நெற்பயிருக்குக் கிடைக்கச் செய்வதால், நீலப்பச்சை பாசியும், அசோலாவும் தலா 500 மெடன் என்ற அளவில் உற்பத்திச் செய்யப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டில், 525 மெ.டன் நீலப்பச்சை பாசி, 500 மெ.டன் அசோலா உற்பத்திச் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

## 3.4. மண் ஆய்வு மற்றும் மண் மேலாண்மை

### 3.4.1. மண் பரிசோதனை நிலையங்கள்

மண் வளத்தின் அடிப்படையில் பயிரின் தேவைக்கேற்ப பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை விவசாயிகள் இடுவதற்காக மாநிலத்தில் உள்ள அனைத்து 80 இலட்சம் நில உடைமைதாரர்களுக்கும் மண்வள அட்டையினை வழங்குவதற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. தற்போது, ஆண்டு ஒன்றுக்கு 6.5 இலட்சம் எண்கள் மண் மாதிரிகளை ஆய்வு செய்வதற்கான திறன் கொண்ட 19 மண் பரிசோதனை நிலையங்களும், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 80 இலட்சம் விவசாயக் குடும்பங்களில், மண்வள அட்டை இதுவரை வழங்கப்பட்ட 2.76 இலட்சம் குடும்பங்கள் தவிர, மீதமுள்ள 77.24 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கும் மண்வள அட்டையினை வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி. பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், 2006-07 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சமும், மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.4 இலட்சமும் ஒப்பளித்து அரசு ஆணை வழங்கப்பட்டு, இதுவரை 4.12 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

குறுகிய காலத்தில் அனைத்து நில உடைமைதாரர்களின் நிலங்களில் மண் பரிசோதனை செய்ய தற்போதைய ஆய்வுத் திறன் போதுமானதாக இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு, திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், விருதுநகர், அரியலூர் ஆகிய



மாவட்டங்களில் புதிதாக 11 மண் பரிசோதனை நிலையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. மேலும், மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்தின் அளவினை ஆய்வு செய்ய, அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் என்ற நவீனக் கருவியினை, நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், நாமக்கல், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம், பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள 8 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆய்வுக்கூட அலுவலர்களுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சியினை அளித்திடவும், மற்ற ஆய்வகங்கள் மேற்கொள்ளும் ஆய்வு முடிவுகளின் துல்லிய தன்மையைக் கண்காணிக்கவும் குடுமியான்மலையில் மத்தியக் கட்டுப்பாட்டு ஆய்வகம் இயங்கி வருகிறது.

### 3.4.2. மண் அளவை மற்றும் நிலப் பயன்பாட்டு அமைப்பு

கள ஆய்வு மற்றும் பரிசோதனைக்கூட ஆய்வுகளின்மூலம் மண்ணின் தன்மை, உருவாக்கவியல், அதன் பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் பண்புகளைக் கண்டறிந்து மண்ணை வகைப்படுத்தி, நில அமைப்பியலின்படி வரைபடம் தயாரித்து, பல வகைகளிலும் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில், "மண் அளவை அமைப்புகள்" இயங்கி வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் 1.10 இலட்சம் எக்டர் பரப்பில் கள ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1.10 இலட்சம் எக்டேர் பரப்பில் மண் அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டது.

2007-2008 ஆம் ஆண்டிலும், இவ்வமைப்புகள்மூலம் 1.10 இலட்சம் எக்டேர் பரப்பில் விரிவான மண் அளவைப் பணி மேற்கொள்ளப்படும்.

### 3.4.3. நிலச் சீர்திருத்தம்

#### 3.4.3.1. சுனாமியால் பாதிக்கப்பட்ட வேளாண் விளை நிலங்கள் சீரமைப்பு (ROTAAL)

சுனாமியால் பாதிப்பிற்குள்ளான வேளாண் விளை நிலங்களை மறுசீரமைக்க, தமிழக அரசு தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மார்ச் 2007 வரை ஒரு எக்டேருக்கு ரூ.15,000/-வீதம் ரூ.1269.051 இலட்சம் நிதியினைப் பேரிடர் நிவாரண நிதி/தேசிய பேரிடர் செலவின நிதியிலிருந்து ஒப்பளித்துள்ளது.

[2007 ஏப்ரல் 3

கீழ்க்கண்ட பணிகளுக்காக ரூ.1118.75 இலட்சம் பிப்ரவரி 2007 வரை செலவிடப்பட்டுள்ளது.

1. சுனாமி தாக்குதலுக்குப்பின் பாதிக்கப்பட்ட விவசாயிகள் உடனடியாக மேற்கொண்ட நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு அதிகபட்சமாக எக்டேருக்கு ரூ.1900/- வீதம் நிவாரண உதவி.

2. நிலச் சீர்திருத்தம் மற்றும் மண் வளம் மீட்பு (மண் பரிசோதனை, ஜிப்சம், பசுந்தாள் உர விதை, களர் நிலத்திற்கேற்ற பயிர் விதைகள் ஆகிய இடுபொருட்கள் விநியோகம், காப்பீட்டு பிரிமியம் தவணைத் தொகை).

3. சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள், புதிய பண்ணைக் குட்டைகள் ஏற்படுத்துதல், பழைய பண்ணைக் குட்டைகள் மற்றும் ஊருணிகளைச் சீரமைத்தல், பி.வி.சி. குழாய்கள் விநியோகம் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள்.

4. பவர் டில்லர், டிராக்டர், ஆயில் எஞ்சின், தெளிப்பான்கள், கதிரடிக்கும் கருவிகள், பசுந்தாள் உரப் பயிர்களை மடக்கி உழும் கருவி, பண்ணைக் கருவிகள் மற்றும் தார்ப்பாய்கள் ஆகியவை விநியோகம்.

5. கதிரடிக்கும் களங்கள் அமைத்தல்.

6. விவசாயிகள் பயிற்சி, விவசாயிகள் வயல்வெளிப் பள்ளிகள் அமைத்தல் போன்ற பணிகளில் தொழில்நுட்ப மற்றும் விரிவாக்க ஆதரவு.

7. மண் மற்றும் நீர் தரம் கண்காணிப்பு மற்றும் மண்வள அட்டை விநியோகம்.

மேற்கண்ட பணிகள் அனைத்தும் இதற்காக உருவாக்கப்பட்ட 178 சுனாமி விவசாயிகள் சுய உதவிக் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.



2007 ஏப்ரல் 3]

பிப்ரவரி 2007 முடிய செலவின விவரம் (ரூ. இலட்சத்தில்) பின்வருமாறு:—

| வ. எண் | மாவட்டம் | மொத்தம் சீரமைப்பு செய்யப்பட வேண்டிய பரப்பு (எக்) | ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி | பிப்ரவரி 2007 முடிய செலவு |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 248.48 | 37.272 | 37.094 |
| 2. | கடலூர் | 1640.49 | 288.822 | 203.998 |
| 3. | விழுப்புரம் | 1616.34 | 242.451 | 200.556 |
| 4. | நாகப்பட்டினம் | 4657.47 | 698.621 | 675.221 |
| 5. | கன்னியாகுமரி | 12.57 | 1.885 | 1.881 |
| | மொத்தம் | 8175.35 | 1269.051 | 1118.75 |

### 3.4.3.2 களர் மற்றும் உவர் நிலங்கள் சீர்திருத்தம்

நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 500 ஏக்கர் வீதம் 1000 ஏக்கர் பரப்பில் களர் மற்றும் உவர் நிலங்களைச் சீர்திருத்தம் செய்யும் பணிகள் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. 2006-07 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2007 வரை 3,236 ஏக்கர் நிலங்கள் சீர்திருத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ், மண் பரிசோதனை பரிந்துரைகளின்படி, ஜிப்சம் மற்றும் துத்தநாக சல்பேட் 50 சதவீத மானியத்தில் விநியோகிக்கப்படுகிறது. மேலும், வடிகால் வசதியினை ஏற்படுத்தித் தர, ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.1000/- மானியமாக வழங்கப்படுகிறது.

### 3.5 பயிர்ப் பாதுகாப்பு

பயிர் பருவம் முழுவதும், முறையான பூச்சிக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதாலும், விவசாயிகளால் பெருமளவில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்கள் கடைப்பிடிக்கப்பட்டதாலும், 2006-07 ஆம் ஆண்டில், பூச்சி மற்றும் நோய்கள் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. பொதுவாக, நடப்பு ஆண்டில் எந்தப் பயிரிலும் பூச்சி நோய்த் தாக்குதல் பெரிய அளவில் ஏற்படவில்லை.

[2007 ஏப்ரல் 3

### 3.5.1. உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையம் மற்றும் மாநில ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையம்

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மேலாண்மை அணுகு முறையின்படி பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாட்டிற்கு உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உபயோகம் பரிந்துரைக்கப்படுகின்றன. மாநிலத்தில் வேளாண் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 60 உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்களில் டிரைகோடெர்மா விரிடி, என்.பி. வைரஸ், சூடோமோனாஸ் ப்ளூரோசன்ஸ் போன்ற உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், ஒட்டுண்ணிகள் மற்றும் பூச்சி உண்ணிகள் போன்றவை உற்பத்திச் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டு அடையப்பெற்ற சாதனை மற்றும் 2007-2008 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட இலக்கு விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள்/பூச்சிகள் | மையங்களின் எண்ணிக்கை | எதிர்பார்க்கப் படும் சாதனை 2006–07 (எக்டேர்) | 2007–08 ஆம் ஆண்டுக்கான திட்டம் (எக்டேர்) |
|---|---|---|---|---|
| 1 | டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் (கரும்பு இடைக்கணுப் புழு) | 21 | 11000 | 11000 |
| 2 | பெத்திலிட், பிரகோனிட்ஸ் யூலோபிட்ஸ் (தென்னை கருந்தலைப் புழு) | 20 | 10500 | 10500 |
| 3 | என்.பி.வி. (பருத்தி காய்ப்புழு) | 3 | 2000 | 2000 |
| 4 | என்.பி.வி. (மணிலா சிகப்பு கம்பளிப் புழு மற்றும் புரோடீனியா) | 4 | 600 | 600 |
| 5 | பச்சை மஸ்கார்டைன் பூஞ்சாணக் குப்பிகள் (தென்னை காண்டாமிருக வண்டு) | 2 | 11000 | 11000 |
| 6 | தாவரப் பூச்சிக்கொல்லி, என்.பி.வி. மற்றும் டிரைகோகிரம்மா கைலோனிஸ் (பருத்தி, நெல், பயறு வகைகள், மணிலா) | 10 | 62000 | 62000 |



2007 ஏப்ரல் 3]

### 3.5.2. பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து, பயறு மற்றும் மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம் மற்றும் தானிய உற்பத்தித் திட்டம் ஆகிய மத்திய சார்புத் திட்டங்களில் விவசாயிகளுக்கு மானியமாக விநியோகிக்கப்படும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் மற்றும் தாவரப் பூச்சிக்கொல்லிகள் ஆகிய இடுபொருட்களைக் கொள்முதல் செய்வதற்கான நிதியினை இத்திட்டத்தின்கீழ் அரசு ஒப்பளிக்கிறது. 2006-07 ஆம் ஆண்டு, இத்திட்டம் ரூ.117.76 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டு, இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.5.3. பூச்சிமருந்து பரிசோதனை நிலையங்கள்

12936 தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. மேலும், தமிழகத்தில் 138 பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி நிலையங்கள் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளை உற்பத்தி செய்கின்றன.

தரமான மருந்துகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்வதற்காகவும், பூச்சிக்கொல்லி மருந்துச் சட்டம் 1968-ஐக் கண்டிப்புடன் செயல்படுத்துவதற்காகவும், உற்பத்தி நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பூச்சிக்கொல்லி மருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டுவரும் 9 பூச்சிமருந்து பரிசோதனை நிலையங்களில் ஆண்டுக்கு 11500 மாதிரிகள் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. பூச்சிக்கொல்லி மருந்து சட்டம் 1968 மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துச் சட்டம் 1971 (2000-ல் திருத்தப்பட்டது)-ஐ தீவிரமாகச் செயல்படுத்த தற்போதுள்ள ஆய்வுக் கூடங்களின் திறன் போதுமானதாக இல்லை என்பதால், வேலூர், தருமபுரி, நாகப்பட்டினம், தேனி, சிவகங்கை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 6 புதிய பூச்சிக்கொல்லி ஆய்வகங்களை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

### 3.5.4. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை–வயல்வெளிப் பள்ளி

ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை அணுகுமுறையானது உழவியல் முறை, கைவினை முறை, உயிரியல் முறைகளை, ஒருங்கிணைந்து கடைப்பிடிப்பதன் மூலம் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதே

ஆகும். பூச்சி மற்றும் நோய்களுக்கு எதிர்ப்புள்ள இரகங்களைச் சாகுபடி செய்தல், பொறிப் பயிர்களை வளர்த்தல், பூச்சி நோய்க்கு உறைவிடமான மாற்றுப் பயிர்களை அழித்தல், நன்மை தரும் பூச்சிகளைப் பாதுகாத்தல் முதலான உழவியல் முறைகள் இத்தொழில்நுட்பத்தில் பின்பற்றப்படுகின்றன. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொழில்நுட்பத்தைப் பெருமளவில் பின்பற்றியதால், முந்தைய ஆண்டுகளில் பெரும் தாக்குதலை ஏற்படுத்திய நெல் தண்டு துளைப்பான், இலை சுருட்டுப் புழு, மணிலா சிகப்பு கம்பளிப் புழு, பருத்தி காய்ப் புழு போன்ற பூச்சிகளின் தாக்குதல் சிறப்பான முறையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம், ஒருங்கிணைந்த பயறு வகைகள், மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் மற்றும் தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் போன்ற மத்திய சார்புத் திட்டங்கள்மூலம் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்முறைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு பிரபலப்படுத்தப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டு பல்வேறு மத்திய சார்புத் திட்டங்களின்மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைத் திட்டங்கள் மற்றும் 2007-2008 ஆம் ஆண்டிற்கான இலக்கு பின்வருமாறு: -

அலகு எண்களில்

| வ. எண் | இனம் | 2006-07 | | 2007-08 ஆண்டிற்கான திட்டம் |
|---|---|---|---|---|
| | | திட்டம் | பிப்ரவரி 2007 முடிய சாதனை | |
| 1 | தானிய மேம்பாட்டுத் திட்டம்—அரிசி | 509 | 509 | 590 |
| 2 | தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் | 400 | 400 | 400 |
| 3 | ஐசோபாம் | | | |
| | மக்காச்சோளம் | 34 | 34 | 36 |
| | எண்ணெய் வித்துக்கள் | 100 | 92 | 100 |
| | பயறு வகைகள் | 40 | 39 | 200 |

## 3.6. பருத்தி மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்தில் பருத்திச் சாகுபடியின் இயல்பான பரப்பு 1.50 இலட்சம் எக்டராக குறைந்துள்ளது. மாநிலத்தின் தேவையான 55 முதல் 60 இலட்சம் பொதிகளுக்குப் பதிலாக தற்போது 2 முதல் 3 இலட்சம்



பொதிகளே உற்பத்திச் செய்யப்படுகின்றன. இலாபகரமற்ற விலை மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டிற்கு அதிக செலவும் பருத்திச் சாகுபடி பரப்பு குறைந்ததற்கு முக்கிய காரணமாகும்.

இருப்பினும், பன்னாட்டு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட பி.டி. பருத்தி வீரிய இரகங்கள் அதிக உற்பத்தித் திறன் மற்றும் பூச்சி எதிர்ப்புச் சக்தியை உள்ளடக்கியதாக உள்ளதால், விவசாயிகளிடையே பிரபலமாக உள்ளது. ஆனால், பி.டி. பருத்தி வீரிய இரகங்களைச் சாகுபடி செய்யும்போது பரிந்துரை செய்யப்பட்ட தொழில்நுட்பங்களைக் கவனத்துடன் கடைப்பிடிக்க வேண்டும். வீரிய இரகத்தைப் போன்று பி.டி. மரபணுவுடன் கூடிய பருத்தி இரகங்களை வெளியிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் விவசாயிகள் தங்களின் விதைத் தேவைக்கு அவர்களது சொந்த விதையையே பயன்படுத்திக் கொள்ள இயலும். விவசாயிகள் அதிக வருமானம் பெறுவதை உறுதி செய்வதற்கு பருத்தி ஆலைகளுடன் விவசாயிகள் இணைந்து ஒப்பந்தப் பண்ணை முறையை மேற்கொள்வது ஊக்குவிக்கப்படும்.

சொட்டுநீர்வழி உரமிடல் முறையுடன், அனைத்துத் தொழில்நுட்பங்களையும் இணைத்து மேற்கொள்ளப்படும் துல்லியப் பண்ணை முறையினால், உற்பத்தித் திறன் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயரும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் விவசாயிகள் அதிக இலாபம் பெறும் வகையில் துறைமூலம் மேற்கொள்ளப்படும் பருத்தி மேம்பாட்டுத் திட்டப் பணிகள், அனைத்துத் தொழில்நுட்பங்களையும் ஒருங்கிணைத்து, தொகுப்பு அணுகுமுறையில் மேற்கொள்ளப்படும்.

### 3.6.1. பி.டி. பருத்தி

#### 3.6.1.1. பி.டி. பருத்தியினை வணிக ரீதியாக சாகுபடி செய்தல்

தமிழகத்தில் பல்வேறு பருத்தி விதை உற்பத்தியாளர்கள் உருவாக்கிய பி.டி. பருத்தி வீரிய இரகங்களை வணிக ரீதியாக சாகுபடி செய்ய மரபு பொறியியல் அனுமதிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழகத்தில் 2006-07 ஆம் ஆண்டில் பி.டி. பருத்தியை வணிக ரீதியாகச் சாகுபடி செய்வதுடன், தமிழகத்தின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில், பல்முனை ஆய்வு மற்றும் பெரிய அளவில் செயலவிளக்கப் பரிசோதனை மேற்கொள்ளவும், பல்வேறு விதை உற்பத்தியாளர்களுக்கு மரபு பொறியியல் அனுமதிக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

[2007 ஏப்ரல் 3

### 3.6.1.2. தமிழகத்தில் பி.டி. பருத்தி இரகங்கள் செயல்பாடு பற்றி ஆய்வு செய்தல்

தமிழகத்தில் பயிரிடப்படும் பி.டி. பருத்தி இரகங்களின் செயல்பாடு பற்றி ஆய்வு செய்வதற்கு என மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வணிக ரீதியான சாகுபடி மற்றும் வயல்மட்ட ஆராய்ச்சித் தளைகளில், பி.டி. பருத்தி செயல்பாடுபற்றிய அறிக்கைகள் மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இது தவிர, மாநில அளவிலான பி.டி. பருத்திக் கண்காணிப்புக் குழுவும் மத்திய அரசுக்கு அறிக்கைகளை அனுப்பி வைக்கிறது.

மேலும், தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ள வயல்வெளித் திடல்களில் பி.டி. பருத்தியின் செயல்பாட்டினை ஆய்வு செய்ய, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும், மாநில வேளாண் துறை நிபுணர்களும் அடங்கிய பி.டி. பருத்திக்கான முன் மற்றும் பின் இரக வெளியீட்டுக்கான தேசிய ஆய்வுக் குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

விதை விலை குறைப்பினால், 2006-07 ஆம் ஆண்டு 30,000 எக்டேரில் பி.டி. பருத்திச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டு பி.டி. பருத்திச் சாகுபடி பரப்பளவை விட 13 சதவீதம் கூடுதலாகும்.

வேளாண்மைத் துறை பருத்தி மேம்பாட்டிற்காகக் கீழ்க்கண்ட திட்டங்களைத் தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறது:—

### 3.6.2. என்.பி.வி. உற்பத்திக்கான மாநிலத் திட்டம்

பருத்தியில் புரோடினியா புழுவை உயிரியல் முறையில் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் உயிர் காரணியான என்.பி.வி. என்ற நச்சுயிரியை உற்பத்தி செய்து, விநியோகம் செய்ய இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவை, தமிழ்நாட்டில் மேலூர், விழுப்புரம் மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் ஆகிய 3 என்.பி.வி. உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒரு எக்டேர் பரப்புக்கு நச்சுயிரி விநியோகம் செய்ய ரூ.39.50 விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

| வ. எண் | பொருள் | இலக்கு 2006–07 | எதிர்பார்க்கும் சாதனை |
|---|---|---|---|
| | என்.பி.வி. உற்பத்தி | | |
| 1. | பொருள் (எக்டேர்) | 2000 | 2000 |
| 2. | நிதி (இலட்சம் ரூபாயில்) | 0.79 | 0.79 |



2007 ஏப்ரல் 3]

2007-08 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினை உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணி உற்பத்தி மைய திட்டத்துடன் இணைத்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.6.3. மாநில அரசின் பருத்தி விதைப் பெருக்குத் திட்டம்

தரமான சான்று பெற்ற விதைகளை உற்பத்திச் செய்து விவசாயிகளுக்கு 10 சதவீத பருத்திச் சாகுபடிப் பரப்பிற்கு விநியோகம் செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திடமிருந்து வல்லுநர் விதைகள் பெறப்பட்டு, ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த ஆதார விதைகளிலிருந்து, சான்று விதைகள் அரசு விதைப் பண்ணைகள் மற்றும் விதைப் பண்ணை விவசாயிகளின் வயல்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2006-07 ஆம் ஆண்டில் 250 மெ.டன் பருத்திச் சான்று விதைகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்ய ரூ.115.07 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் 2006-07 ஆம் ஆண்டு சாதனை மற்றும் 2007-08 ஆம் ஆண்டுக்கான திட்டம் வருமாறு:—

| வ. எண் | இனம் | இலக்கு 2006–07 | எதிர்பார்க்கும் சாதனை | 2007–08 ஆம் ஆண்டிற்கானத் திட்டம் |
|---|---|---|---|---|
| 1 | சான்று விதை உற்பத்தி (மெ.டன்) | 250 | 250 | 250 |
| 2 | சான்று விதை விநியோகம் (மெ.டன்) | 250 | 250 | 250 |
| 3 | நிதி (இலட்சம் ரூபாய்) | 115.07 | 115.07 | 110.00 |

### 3.7. கரும்பு

கரும்பு உற்பத்தித் திறனில் பல வருடங்களாகத் தமிழகம் முதலிடம் வகித்து வருகிறது. தமிழகத்தில், கரும்பு சுமார் 2.75 முதல் 3 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு வருகிறது. இது தமிழகத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் 2 சதமாகும். தமிழகத்தில் ஆண்டுக்குச் சராசரியாக 320 இலட்சம் மெ.டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. கரும்பு உற்பத்தித் திறன் எக்டேருக்கு 95 மெ.டன் முதல் 105 மெ.டன் ஆகவுள்ளது. கரும்புப் பயிர் சாகுபடிக்கு அதிக நீர் தேவைப்படுவதால், சாகுபடிப் பரப்பினை மேலும் உயர்த்த வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளது. இருப்பினும்,

தமிழகத்தில் கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை நிலையாக உயர்த்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் குழி நடவு மற்றும் வரிசை நடவு முறையினையும், சொட்டுநீர்வழி உரமிடல் முறையினையும் உருவாக்கியுள்ளது. இததொழில்நுட்பங்களினால், உற்பத்தித் திறன் எக்டேருக்கு 110 மெ.டன் என்ற அளவிற்கு உயரும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. இது தற்போதைய உற்பத்தித் திறன் நிலையிலிருந்து 30 முதல் 40 விழுக்காடு அதிகமாகும். எனவே, கரும்பு உற்பத்தியை மேலும் உயர்த்த மேற்கண்ட தொழில்நுட்பங்களைத் தொகுப்பு அணுகுமுறையில் பிரபலப்படுத்துவதற்கு அரசு முனைப்புடன் உள்ளது. கரும்பு உற்பத்தியை உயர்த்துவதற்கு கீழ்க்கண்ட திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

### 3.7.1 ஒருங்கிணைந்த கரும்பு அபிவிருத்தித் திட்டம் — ஒட்டுண்ணி வெளியிடுதல்

இத்திட்டத்தில், வேளாண் துறையின்கீழ் செயல்பட்டுவரும் 21 ஒட்டுண்ணி உற்பத்தி நிலையங்களில் டிரைகோகிராமா எனும் முட்டை ஒட்டுண்ணி உற்பத்தி செய்யப்பட்டு, இடைக்கணுப் புழுவினைக் கட்டுப்படுத்துவதற்கு வயல்களில் வெளியிடப்படுகிறது. 2006-07 ஆம் ஆண்டில், 11,000 எக்டேரில் கரும்பு ஒட்டுண்ணியை விநியோகம் செய்ய ரூ.3.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | இலக்கு 2006–07 | எதிர்பார்க்கும் சாதனை |
|---|---|---|---|
| 1. | பொருள் (எக்டேர்) | 11,000 | 11,000 |
| 2. | நிதி (இலட்சம் ரூபாயில்) | 3.75 | 3.75 |

2007-08 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினைப் பயிர்ப் பாதுகாப்பு திட்டத்துடன் (உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணி உற்பத்தி மைய திட்டம்) ஒருங்கிணைத்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.7.2 தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளின் செயல்பாடு

தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. தற்போது 35 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. 3 சர்க்கரை ஆலைகள் அதாவது மதுராந்தகம கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை மற்றும் அருணாசலம் சர்க்கரை ஆலைகள் இயங்கவில்லை.



2005-06 ஆம் அரைவைப் பருவத்தில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சர்க்கரை ஆலைகளிலும் 1-10-2005 முதல் 30-9-2006 வரை 231.16 இலட்சம டன்கள் கரும்பு அரைவை செய்யப்பட்டு, சராசரி 9.21 சதவிகித சர்க்கரை கட்டுமானத்துடன் 21.38 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு 2006-2007 ஆம் அரைவைப் பருவத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சர்க்கரை ஆலைகளிலும் மொத்தம் 269.75 இலட்சம் டன்கள் கரும்பு அரைவை செய்து 9.5% சர்க்கரை கட்டுமானத்துடன் 25.76 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2006-07 ஆம் அரைவைப் பருவத்தில் 15-3-2007 வரை தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுப் பொதுத் துறை மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகளால் 105.51 இலட்சம் மெ.டன் கரும்பு அரைவை செய்யப்பட்டு, 9.54 சதவீத சர்க்கரை கட்டுமானத்தில் 10.07 இலட்சம் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. சென்ற வருடத்தினைவிட இதே காலத்தினை ஒப்பிடும்பொழுது அரைவை செய்யப்பட்ட கரும்பு 9.01 இலட்சம் மெ.டன், சர்க்கரை 1.05 இலட்சம் மெ.டன் மற்றும் சர்க்கரை கட்டுமானம் 0.20 சதவிகிதம் கூடுதலாகும்.

### 3.7.3 கரும்பு விலை நிர்ணயித்தல் மற்றும் கரும்பு போக்குவரத்துச் செலவினம்

மத்திய அரசு 2006-2007 ஆம் அரைவைப் பருவத்திற்கு 9 சதவிகித சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலை ரூ.802.50 எனவும், ஒவ்வொரு 0.1 சதவிகிதக் கூடுதல் கட்டுமானத்திற்கும் டன்னிற்கு ரூ.9/- ஊக்கத் தொகை எனவும் அறிவித்துள்ளது. 2006-2007 ஆம் அரைவைப் பருவத்திற்கு 9 சதவிகித சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கு மாநில அரசு பரிந்துரை விலையாக டன் ஒன்றுக்கு விலை ரூ.1,025/- எனவும், ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் கட்டுமானத்திற்கும் டன் ஒன்றிற்கு ரூ.9/- ஊக்கத் தொகை எனவும் அறிவித்துள்ளது. மத்திய அரசு 2007-2008 ஆம் அரைவைப் பருவத்திற்கு 9 சதவிகித சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலை ரூ.811.80 எனவும் அறிவித்துள்ளது. இது தவிர, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளால் கரும்பு போக்குவரத்துக்கான முழு வாகன வாடகையும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### 3.7.4. அதிக சர்க்கரை சத்து தரும் கரும்பு இரகங்களை ஊக்குவித்தல்

சராசரி சர்க்கரை கட்டுமானத்தை உயர்த்தும் பொருட்டு அதிக சர்க்கரை சத்து இரகங்களான கோ. 86032, கோ.உ. 92102, கோ.உ. 94101 ஆகிய இரகங்கள் ஒவ்வொரு பருவத்திலும் 85-90 சதவிகித அளவிற்கு நடவு செய்யப்பட்டு வருகின்றன. இதனால் கரும்பு விவசாயிகள் அதிக வருமானம் பெறுவதோடு, சர்க்கரை ஆலைகளின் நட்டம் குறைந்து, ஆலைகள் இலாபத்தில் இயங்க வாய்ப்புள்ளது. மேலும், செவ்வழுகல் நோய் எதிர்ப்பு சக்தி உள்ள புதிய இரகம் கோ.க.23 வெளியிடப்பட்டு, தற்போது 200 எக்டேர் பரப்பில் நாற்றங்கால் சாகுபடி செய்யப்பட்டு, 2006-2007 ஆம் நடவுப் பருவத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. (அக்டோபர் 2006-செப்டம்பர் 2007).

### 3.7.5. 50 சத மானியத்தில் நுண்ணீர்ப் பாசனம் மற்றும் சொட்டுநீர்வழி உரமிடுதல்

கரும்புச் சாகுபடியில் குழி முறை நடவிலும், இரட்டை வரிசை நடவிலும் நுண்ணீர்ப் பாசனம் மற்றும் சொட்டுநீர்வழி உரமிடுதலும் அமைக்கப்படும். சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதன்மூலம் 40 சதவிகிதம் நீர் தேவையைக் குறைக்கலாம். இதன்மூலம் ஏக்கருக்கு 10 முதல் 15 டன்கள் உற்பத்தி அதிகரிக்கின்றது. எனவே, கரும்பில் சொட்டு நீர்ப்பாசன முறையை அதிக அளவில் நிறுவி பயன்படுத்த விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் வகையிலும், 2006-2007 ஆம் அரவைப் பருவத்தில் 15,000 எக்டேர் பரப்பில் ரூ.12 கோடி செலவில் சொட்டுநீர்வழி உரமிடும் பாசன முறை கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைப் பகுதிகளில் அமைக்கப்படவுள்ளது. எக்டேர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூபாய் 28,800 மிகாமல் 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இதில் மாநில அரசு மற்றும் மத்திய அரசின் பங்கு 20:80 சதவிகிதமாகும். இதன்மூலம் 12,000 கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள். இத்திட்டம் தனியார் சர்க்கரை ஆலைப் பகுதிகளிலும் சுமார் 15,000 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படுகிறது. மேலும் சொட்டு நீர்ப்பாசன நிறுவனங்கள் மூலம் 8.5 எக்டேர் பரப்பில் ஒவ்வொரு கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைப் பகுதிகளில் 0.50 எக்டேர் பரப்பில் மாதிரி வயல்கள் அமைத்து கரும்பு விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்படும்.



### 3.7.6. கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் (SUBACS)

மத்திய அரசு பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கரும்பு மேம்பாட்டுத் திட்டம் 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.291.88 இலட்சத்தில் செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசும் மாநில அரசும் 90:10 என்ற விகிதத்தில் செலவினை ஏற்கும். இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த உர நிர்வாக செயல் விளக்க வயல்கள் அமைத்தல், நாற்றங்கால் மேம்படுத்தல், மண்புழு உரம் தயாரிக்கவும் மற்றும் உயிர் உரங்கள் இடுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 3.7.7. தமிழகத்தில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க வழிகாட்டு நெறிமுறைகள்

சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டபடி தமிழகத்தில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க, வழிகாட்டு நெறிமுறைகளை இவ்வரசு 27-11-06 நாளிட்ட அரசாணை எண் 362, வேளாண்மை (கரும்பு-2) துறை மூலம் வெளியிட்டுள்ளது.

அதன்படி புதியதாக அமைக்கப்படும் சர்க்கரை ஆலை வளாகத்தில் சர்க்கரை உற்பத்தி செய்வதுடன், இணை மின் உற்பத்தி செய்தல், வடிப்பாலைகள், எத்தனால் தயாரித்தல், உயிர் மக்கு உரம் தயாரிக்கும் வசதிகளும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும். கரும்பு (கட்டுப்பாட்டு) ஆணை 1966-ன்படி அறிவிக்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு கரும்பு விலையினை, கரும்பினை ஆலைக்கு வழங்கிய 14 நாட்களுக்குள்ளும், மாநில அரசு பரிந்துரை செய்யும் விலையினை அரசு அறிவித்த மூன்று மாதங்களுக்குள்ளும் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்.

பயிரிடப்படும் கரும்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, திசு வளர்ப்பு மூலம் விதைக் கரும்பு பெருக்கம் செய்திட உயிரியல் பரிசோதனை நிலையமும், உயிர் பூச்சிக்கொல்லிகள், உயிர் உரங்கள் உற்பத்தி செய்து வழங்கிடவும், கரும்பு ஆலைக் கழிவினை மதிப்புக் கூட்டிய உரமாக்கிட உயிர் மக்குரமாக மாற்றிடவும், பூச்சி நோய்களற்ற விதைக் கரணைகளை உருவாக்கத்தக்க கரும்பு நாற்றங்காலும், மண் பரிசோதனை நிலையங்கள் அமைத்து, மண் வள அட்டைகள் வழங்கவும், நீர்வழி உரமிடும் அமைப்புடன்கூடிய நுண்ணீர்ப் பாசன வசதியினை ஐந்து வருடங்களில் படிப்படியாக அமைத்து, சம்பந்தப்பட்ட ஆலைகளின் 100 சதவிகித கரும்பு தேவையைப் பூர்த்தி செய்திடவும், பூச்சி நோய் கண்காணிக்கும் பணி முறையினை அமைத்து, மாதிரி வயல்களை அமைப்பதுடன், கிராமக் கூட்டங்கள், பயிர்க் கருத்தரங்குகள் நடத்துவதுடன், கரும்பு பயிரிடும்

விவசாயிகளுக்குத் தக்க தொழில்நுட்பங்களைப் பரிமாற்றம் செய்திடவும் வேண்டும். கரும்பு வயலிலிருந்து ஆலைகளுக்குக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவினையும் ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கரும்பு பயிரிடும் பகுதி ஒதுக்கீடு செய்யப்படும் நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளாக புதிய ஆலையினை அமைத்திட நிலத்தினை கையகப்படுத்துவதுடன், கடன் வசதிக்கான நிதி நிறுவனங்களில் கடனுதவி கோருதல், இயந்திரங்கள் வாங்கிட நிறுவனத்திற்கு வழங்கிய ஆணைகள் காண்பிப்பதுடன், சோதனை அரைவையை 21 மாதத்திற்குள் துவக்க வேண்டும்.

## 3.8. தென்னை

தமிழகத்தில், தென்னை 3 இலட்சம் எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்படும் முக்கியப் பயிராக உள்ளது. தென்னை சாகுபடிப் பரப்பினை அதிகரிக்க தரமான கன்றுகள் விநியோகிக்கவும், மகரூல் தாக்கு நோயினால் பாதிக்கப்பட்ட மரங்களை அகற்றி புதிய கன்றுகள் நடுவதற்கும், மாநிலத்திலுள்ள 22 தென்னை நாற்றுப் பண்ணைகளில் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2006-07 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2007 வரை பொருள் மற்றும் நிதி சாதனை மற்றும் 2007-08 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் வருமாறு:—

**(இலட்சம் எண்கள்)**

| வ. எண் | இரகம் ஒட்டு | 2006-07 இலக்கு | | சாதனை பிப்ரவரி 2007 முடிய | | 2007-08 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நெற்றுக்கள் கொள் முதல் | கன்றுகள் விநியோகம் | கொள் முதல் | விநியோகம் | நெற்றுக் கள் கொள் முதல் | கன்றுகள் விநியோகம் |
| 1. | நெட்டை | 6.33 | 4.75 | 7.118 | 4.690 | 6.00 | 4.50 |
| 2. | நெட்டை x குட்டை | 6.00 | 4.10 | 4.169 | 3.110 | 7.00 | 4.30 |
| 3. | குட்டை x நெட்டை | 1.00 | 0.30 | 0.241 | 0.060 | 0.50 | 0.20 |
| | மொத்தம் | 13.33 | 9.15 | 11.528 | 7.860 | 13.50 | 9.00 |



துறை மூலம் உற்பத்தி செய்யப்படும் தென்னங்கன்றுகள் தவிர, தனியார் நாற்றங்கால்மூலம் சுமார் 5 இலட்சம் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

## 3.9. காட்டாமணக்குச் சாகுபடி மேம்பாடு

### 3.9.1. தரமான காட்டாமணக்கு தாய்மரத் தோப்பு உருவாக்குதல்

கிராமப்புற மக்களின் வறுமை நிலையினைப் போக்குவதற்கு காட்டாமணக்குச் சாகுபடியினை வணிகரீதியாக மேற்கொள்ள புதியதொரு திட்டத்தினை அரசு தொடங்கியது. தரமான விதை போதிய அளவு கிடைக்காததால், தரமான காட்டாமணக்கு தாய்மரத் தோப்பு உருவாக்குவதற்கான திட்டம், தேசிய தாவர எண்ணெய் மேம்பாட்டு வாரியத்தின் (NOVOD BOARD) 100 சதவீத மானிய உதவியுடன், ரூ.75.00 இலட்சம் ஒதுக்கீட்டில் வேளாண்மைத் துறையினால் தொடங்கப்பட்டது. வேளாண்மைத் துறை கட்டுப்பாட்டில் இயங்கும் 11 அரசு விதைப் பண்ணை மற்றும் தென்னை நாற்றுப் பண்ணைகளில் 380 எக்டேர் பரப்பில் காட்டாமணக்கு தாய்மரத் தோப்பு அமைக்க திட்டமிடப்பட்டது. பிப்ரவரி 2007 முடிய ரூ.65.222 இலட்சம் நிதி செலவில் 358 எக்டேர் நடவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் ஆண்டு தாய்மரத் தோப்பு பராமரிப்பிற்காக மத்திய அரசு ரூ.2.26 இலட்சம் நிதியினை விடுவித்துள்ளது.

### 3.9.2. தனியார் நிறுவனங்களின் செயல்பாடுகள்

காட்டாமணக்குச் சாகுபடியில் ஒப்பந்தப் பண்ணைய முறை மற்றும் எண்ணெய் பிழியும் ஆலையினை நிறுவும் பணிக்குக் கீழ்க்கண்ட 4 நிறுவனங்கள் தெரிவித்த விருப்பத்தினை அரசு கவனத்தில் கொண்டுள்ளது:

1. மோகன் புரூவரிஸ் மற்றும் டிஸ்டில்லரிஸ் லிமிடெட்.
2. சிவா டிஸ்டில்லரிஸ் லிமிடெட்.
3. தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்.
4. ரிவர்வே அக்ரோ புராடக்ஸ் பிரைவேட் லிமிடெட்.

மேற்படி நிறுவனங்களில், மோகன் புரூவரிஸ் மற்றும் சிவா டிஸ்டில்லரிஸ் நிறுவனங்கள் மட்டுமே காட்டாமணக்குச் சாகுபடியைப்

பிரபலப்படுத்தும் செயல்பாட்டை மேற்கொண்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மட்டுமின்றி, பல அரசு சாரா நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஒப்பந்தப் பண்ணைய முறையில் காட்டாமணக்குச் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பிப்ரவரி 2007 முடிய, 20,277 எக்டேர் பரப்பளவில் காட்டாமணக்குப் பயிர்ச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் காட்டாமணக்குப் பயிரினை ஆண்டுக்கு 20,000 எக்டேர் வீதம் 5 ஆண்டுகளில் 1 இலட்சம் என்ற அளவிற்குச் சாகுபடி செய்வதற்காகக் கன்றுகளை உற்பத்தி செய்யவும், சொட்டு நீர்ப் பாசனத்திற்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படும் என சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த 2007-2008 ஆம் ஆண்டில் காட்டாமணக்குக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.1.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் முன்பணமாக ரூ.2.50 கோடி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் சொட்டுநீர்வழி உரமிடல் முறை மூலம் காட்டாமணக்குப் பயிரின் உற்பத்தியினை உயர்த்த மானிய உதவி வழங்குமாறு மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

## 3.10. உழவர் பயிற்சி நிலையங்கள்

வேளாண்மை, விற்பனை பற்றிய நவீனத் தொழில்நுட்பங்களில் பயிற்சி வழங்கவும், முடிவெடுக்கும் திறனை உருவாக்கவும் விவசாயிகளுக்குத் தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இந்த நோக்கத்துடன், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், திண்டிவனம், வேலூர், சேலம், தருமபுரி, ஈரோடு, லால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை, நாகர்கோவில், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், பெரம்பலூர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 22 இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களுக்குப் புத்தூட்டம் வழங்கி இலாபகரமான பயிர்ச் சாகுபடி, மண்வளப் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, தரமான இடுபொருள் உற்பத்தி மற்றும் மேலாண்மை, துல்லியப் பண்ணைய திட்டம், நுண்ணீர்ப் பாசனத் தொழில்நுட்பங்கள், பின் அறுவடை நேர்த்தி, சேமிப்பு, விற்பனை முதலான புதிய அணுகுமுறைகள் பற்றிய பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.



2006-2007 ஆம் ஆண்டின் செயல்பாடு மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுக்கான திட்டம் பின்வருமாறு:—

அலகு எண்கள்

| வ. எண் | இனம் | இலக்கு | 2006–07 சாதனை பிப்ரவரி வரை | 2007–08 ஆம் ஆண்டுக்கான திட்டம் |
|---|---|---|---|---|
| 1. | கிராம அடிப்படையிலான பயிற்சி | 428 | 428 | 484 |
| 2. | ஒருங்கிணைப்பாளர் பயிற்சி | 192 | 192 | 220 |
| 3. | புத்தூட்டப் பயிற்சி | 2164 | 2164 | 2420 |
| 4. | செயல்விளக்க முறை | 852 | 852 | 968 |

## 3.11. மானாவாரிப் பண்ணைக் குழுமத் திட்டம்

மானாவாரிப் பகுதியில் உற்பத்தித் திறனைப் பெருக்கி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த மானாவாரிப் பயிர்களுக்கான பன்னாட்டு ஆராய்ச்சி நிலையம் (ICRISAT) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் (TNAU) மற்றும் மானாவாரி விவசாயத்திற்கான மைய ஆராய்ச்சி நிலையம் (CRIDA) உதவியுடன் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி அணுகுமுறையை மேற்கொள்ள மானாவாரிப் பண்ணைக் குழுமத்தினைத் தமிழக அரசு துவக்கியுள்ளது.

மாநிலத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் 16 சதவிகிதம் (29 இலட்சம் எக்டேர்) மானாவாரிப் பயிராக உள்ளது. அதாவது மொத்த விவசாயிகளில் 52 சதவிகிதத்தினர் மானாவாரிச் சாகுபடியினை மேற்கொண்டு வருகின்றார்கள். நெல், சிறுதானியம், பயறு, எண்ணெய் வித்து மற்றும் பருத்தி ஆகிய பயிர்களை மானாவாரிப் பயிர்களாகச் சாகுபடி செய்கின்றனர்.

அனைத்துத் துறைகளின் மானாவாரிச் சாகுபடிக்கான செயல்பாடுகளை ஒருங்கிணைத்து மானாவாரிப் பண்ணைக் குழுமத் திட்டம் துவக்கியதற்கான குறிக்கோள்கள்:

— மானாவாரிப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

— ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு அணுகுமுறையினைப் பின்பற்றி உரிய மழைநீர் சேகரிப்பு முறைமூலம் நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்துதல்.

— மண் அரிமானத்தைக் குறைத்தல்.

— பயறு வகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், பசுந்தாள் உரப் பயிர்கள் போன்ற பயிர்களை உள்ளடக்கிய மாற்றுத் திட்டம். பயிர் சுழற்சி முறைகள் பின்பற்றி மண்வளத்தினை அதிகரித்தல்.

— கால்நடை, ஆடுவளர்ப்பு, கோழி வளர்ப்பு, இயற்கை அங்ககங்கள் மூலம் நில மேற்புறத்தை மூடுதல் போன்ற பணிகளைப் பிரபலப்படுத்தி, பல்நோக்கு பண்ணைத் திட்டம் வாயிலாக இயற்கை கழிவுப் பொருட்களைச் சுழற்சி முறையில் மீண்டும் மண்ணிற்குக் கிடைக்கச் செய்தல்.

— பண்ணைக் குடும்பங்கள் மற்றும் நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களுக்குப் பண்ணைசாரா வேலைவாய்ப்புகள் வாயிலாக வருவாயினை அதிகரித்தல்.

### திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

### 1. நீர்ப் பாதுகாப்பு செயல்விளக்கப் பூங்கா அமைத்தல்

புதுக்கோட்டை மாவட்டம் அண்ணா பண்ணையில் ரூ. 98 இலட்சம் செலவில் இரண்டு ஆண்டுகளில் நீர்ப் பாதுகாப்பு செயல்விளக்கப் பூங்கா அமைத்தல்.

### 2. புதுக்கோட்டையில் தற்போது இயங்கி வரும் ஸ்டாமின் நிறுவனத்தை மேம்படுத்தி மாநிலத் தலைமை மானாவாரிப் பயிற்சி மையம் அமைத்தல்

குழுமத்தில் பங்கேற்கும் அனைத்துத் துறை பங்கேற்புடன் தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களில், நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்துவதற்காகத் தொழில்நுட்பப் பயிற்சிகளை ரூ.55 லட்சம் செலவில் 3 ஆண்டு காலத்தில் மாநில மானாவாரிப் பயிற்சி மையம் வழங்கும்.

### 3. பயிற்சி அளித்தல்

ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மை அடங்கிய பயிற்சியினை திட்ட பங்கேற்பாளர்களுக்கு அளித்தல் (நிதி செலவின எதிர்பார்ப்பு ரூபாய 71 இலட்சம், மூன்றாண்டு காலம்).



### 4. நீர்ப்பிடிப்பு மையங்களை நிறுவுதல்

தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் 9 நீர்ப்பிடிப்பு மையங்களை ரூ.673 இலட்சம் செலவில் 5 ஆண்டுகளில் உருவாக்கி, பின்னர் ஒவ்வொரு மைய நீர்ப்பிடிப்பிற்கும் மூன்று அல்லது நான்கு துணை நீர்ப்பிடிப்புகளைப் படிப்படியாக உருவாக்கி, நீர்ப்பிடிப்பு இணையம் ஏற்படுத்துதல், பயிற்சி மையம், குழு மற்றும் நீர்ப்பிடிப்பு மையங்களுக்கிடையே தகவல் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது செயல்படுத்தப்படும் மாநில மற்றும் மைய அரசு திட்டங்களை ஒருங்கிணைத்து இத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தினை வகுக்கவும், திட்ட முன்னேற்றத்தினை கவனிக்கவும், திருத்தங்கள் மேற்கொள்ளவும் மானாவாரிப் பண்ணைக்கான உயர்மட்டக் குழுவினை தமிழக அரசு அமைத்துள்ளது.

இதன் அடிப்படையில், தேசிய மானாவாரிப் பயிர்களுக்கான பன்னாட்டு ஆராய்ச்சி மையம், மானாவாரிப் பகுதிகளுக்கான மத்திய ஆராய்ச்சி மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், வேளாண் ஆணையரகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் ஏற்படுத்தப்படும்.

### 3.12. பயிர் விளைச்சல் போட்டி

நெல், மணிலா, சோளம், கம்பு, பச்சைப் பயறு மற்றும் உளுந்து பயிர்களில் நவீன வேளாண் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து உற்பத்தித் திறனை உயர்த்துவதில், விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

உற்பத்தித் திறனில் அதிக அளவில் சாதனை புரிந்த விவசாயிகளுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை விவரம் பின்வருமாறு:

(ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
| --- | --- | --- | --- | --- |
| | முதல் இடம் | இரண்டாம் இடம் | முதல் இடம் | இரண்டாம் இடம் |
| நெல் மற்றும் மணிலா | 25,000 | 15,000 | 8,000 | 4,000 |
| பிற பயிர்கள் | 8,000 | 4,000 | 4,000 | 2,000 |

நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு, மாநில அளவிலான போட்டிக்கான நுழைவுக் கட்டணம் ரூ.100 ஆகவும் பிற பயிர்களுக்கு ரூ.50/- ஆகவும், நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு, மாவட்ட அளவிலான போட்டி நுழைவுக் கட்டணம் ரூ.50/- ஆகவும், பிற பயிர்களுக்கு ரூ.25/- ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.15.26 இலட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.13. வேளாண் மேம்பாட்டுக் குழு

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்ததன்படி, வேளாண்மையில் கடன் உட்பட விவசாயிகள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்காகவும், வேளாண் விளைபொருள்களுக்கு நியாயவிலை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கவும், வேளாண் விளைபொருள்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்கவும் அரசுக்கு உரிய பரிந்துரைகளை வழங்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில், வேளாண் மேம்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு உதவும்பொருட்டு மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு சிறப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

### 3.14. தேசிய வேளாண்மைப் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

தேசிய வேளாண்மைப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், சாதாரணமாகக் கடன்பெறும் விவசாயிகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டு பயனடைந்து வந்தார்கள். ஆனால், பயிர்க் கடன் பெறாத விவசாயிகள், இத்திட்டத்தில் பங்குபெற்று பதிவுசெய்ய முன்வருவதில்லை. பயிர்க்கடன் பெறாத விவசாயிகளை இத்திட்டத்தில் பங்கேற்க வைத்து, காப்பீட்டு வசதியினை வழங்க வேண்டி அரசு காப்பீட்டு தவணைத் தொகையில் 50 சத மானியத்தை வழங்குவதற்காக மாநில அரசு ரூ.8 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தினால், பல்வேறு பயிர்களுக்கு ஒரு எக்டேருக்கு செலுத்த வேண்டிய தவணைத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 2007 வரை 1.05 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். காப்பீட்டுத் தவணைத் தொகையில், 50 சத மானியமாக ரூ. 1.16 கோடியை அரசு ஏற்றுள்ளது.



2007-2008 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கான சிறப்புத் திட்டமாக வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில், வரும் நிதியாண்டில் 10 இலட்சம் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு செய்துகொள்ள நிதியுதவி அளிக்கப்படும். இதற்காக ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.15. 10 வட்டங்களில் புதிய வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் துவக்குதல்

இடுபொருள் விநியோகம் மற்றும் வேளாண் விரிவாக்க சேவை அமைப்பினை வேளாண் பெருமக்களுக்குத் திறம்படத் தருவதற்காக, 10 புதிய வேளாண் உதவி இயக்குநர் அலுவலகங்கள் 2006-2007-ல் ஆரம்பிக்கப்படும் எனச் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, கீழ்க்கண்ட 10 தாலுகாக்களில் புதிதாக வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் ஆரம்பிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது:

| வ.எண் | மாவட்டம் | தாலுகா |
|---|---|---|
| 1. | வேலூர் | காட்பாடி |
| 2. | திருச்சி | தொட்டியம் |
| 3. | நாகப்பட்டினம் | கீழ்வேளூர் |
| 4. | மதுரை | பேரையூர் |
| 5. | தேனி | போடிநாயக்கனூர் |
| 6. | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் |
| 7. | விருதுநகர் | சிவகாசி |
| 8. | திருநெல்வேலி | ஆலங்குளம் |
| 9. | சேலம் | வாழப்பாடி |
| 10. | காஞ்சிபுரம் | திருக்கழுக்குன்றம் |

### 4. மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 4.1. பேரியல் மேலாண்மைத் திட்டம்

பல்வேறு மத்திய சார்பு திட்டங்களை ஒருங்கிணைத்து, 2000 ஆம் ஆண்டில் பேரியல் மேலாண்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

[2007 ஏப்ரல் 3

இத்திட்டத்தில் மாநிலத்திற்குத் தேவைப்படும் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த மாநில அரசுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் செலவை, மத்திய மாநில அரசுகள் 90:10 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. பெரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்ற பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டு விவரம் பின்வருமாறு:--

### 4.1.1 ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு, 2002 முதல் 2005 ஆம் ஆண்டு வரை வறட்சி, சுனாமி மற்றும் வெள்ளம் ஆகிய இயற்கை பாதிப்புகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டதால், வேளாண்மையில் மிகப் பெரிய பின்னடைவை அடைந்தது. எனினும், வேளாண்மைத் துறையால் உணவு தானிய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த மிகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் 33 விழுக்காடு பரப்பில், நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

2004-2005 முதல் 2006-2007 வரை நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்ட பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் விவரம் வருமாறு:--

| வ. எண் | வருடம் | சாகுபடி பரப்பு (இல.எக்டர்) | உற்பத்தி (இல.மெ.டன்) | உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்) |
|---|---|---|---|---|
| 1. | 2004–2005 | 19.09 | 53.02 | 2,777 |
| 2. | 2005–2006 | 20.50 | 52.10 | 2,541 |
| 3. | 2006–2007 (எதிர்பார்ப்பு) | 21.50 | 78.00 | 3,600 |

### திட்டக் குறிக்கோள்

- சராசரி நெல் உற்பத்தியை எக்டேருக்கு 4 மெட்ரிக் டன்கள் என்ற அளவிலும் பாசன சாகுபடியில் எக்டேருக்கு 6.5 மெட்ரிக் டன் என்ற அளவிற்கும் உற்பத்தித் திறனை உயர்த்துதல்.
- பாசன நீரைத் தேவைக்கேற்ப உபயோகப்படுத்துதல்.
- விவசாயிகள் வருமானத்தை உயர்த்துதல்.
- மகளிர் குழுக்கள், விவசாய ஆர்வலர் குழுக்கள், உழவர் விவாதக் குழுக்கள், பாசன நீர் உபயோகிப்பாளர் சங்கம் மற்றும் விவசாயிகள் ஆலோசனைக் குழுக்கள்மூலம் தொகுப்பு மேம்பாட்டிற்கான உத்திகள்.
- தரமான விதை உற்பத்தி



2007 ஏப்ரல் 3]

- தீவிர சாகுபடி தொழில்நுட்பத்தை அதிக பரப்பில் மேற்கொள்ளுதல்.
- வீரிய ஒட்டு இரகங்கள் சாகுபடியை மேம்படுத்துதல்.
- ஒருகிணைந்த பயிர்ப்பாதுகாப்பு மேலாண்மை.
- ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் பாசன மேலாண்மை தொழில்நுட்பங்கள்.
- தீவிர முகாம்கள் மூலம் தொழில்நுட்பங்களை வழங்குதல்.

இத்திட்டத்தில் 2006-2007 ஆம் ஆண்டில் இனவாரியான முன்னேற்ற விவரம் பிப்ரவரி 2007 வரை வருமாறு:

| வ. எண் | திட்டம் | அலகு | பொருள் | | நிதி (இல. ரூபாய்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | பிப்ரவரி 07 வரை சாதனை | இலக்கு | பிப்ரவரி 07 வரை சாதனை |
| 1 | சான்று பெற்ற நெல் விதை விநியோகம் கிலோவிற்கு ரூ.2/– வீதம் | மெ.டன் | 15,000 | 12519 | 300.00 | 252.041 |
| 2 | சான்று பெற்ற சிறு தானிய விதை விநியோகம் | மெ.டன் | 400 | 387 | 16.00 | 13.480 |
| 3 | திருந்திய நெல் சாகுபடி செயல்விளக்கத் திடல் அமைத்தல் | எண்கள் | 4,500 | 4,329 | 90.00 | 86.580 |
| 4 | வீரிய சிறு தானிய செயல் விளக்கத் திடல் அமைத்தல் | எண்கள் | 1,000 | 1,000 | 10.00 | 10.000 |
| 5 | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கத் திடல் | எண்கள் | 509 | 509 | 86.53 | 86.530 |
| 6 | விவசாயிகள் பயிற்சி | எண்கள் | 600 | 600 | 30.00 | 30.000 |
| 7 | விவசாய தொழிலாளர்கள் பயிற்சி | எண்கள் | 62,500 | 57,556 | 50.00 | 42.836 |
| 8 | முன்பருவ இயக்க முகாம் | எண்கள் | 10,933 | 10,933 | 109.33 | 109.332 |
| 9 | எரிபொருள் | | .. | .. | 8.40 | 8.311 |
| 10 | நுண்ணுயிர் விநியோகம் | எக்டர் | 50,000 | 49,541 | 18.750 | 18.040 |
| 11 | நுண்ணூரம் விநியோகம் | எக்டர் | 10,000 | 10,000 | 4.00 | 4.000 |
| 12 | வரப்புகளில் பசுந்தாள்/பயறு வகை பயிர்ச் சாகுபடி | எக்டர் | 50,000 | 49,353 | 25.0 | 24.603 |
| | மொத்தம் | | | | 748.01 | 685.753 |

2007-2008 ஆம் ஆண்டில் விவசாய ஆர்வலர் குழு, பண்ணை மகளிர் குழு, உழவர் விவாதக் குழு, பாசன நீர் உபயோகிப்பாளர் சங்கம் ஆகிய குழுக்களின் பங்கேற்புடன் பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்:

| வ. எண் | திட்டம் | அலகு | 2007-2008-ம் ஆண்டு திட்டம் | |
|---|---|---|---|---|
| | | | பொருள் | நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | விதை கிராமத் திட்டம் மூலமாக தரமான நெல் விதை விநியோகம் | மெ.டன் | 15,000 | 300.00 |
| 2 | திருந்திய நெல் சாகுபடி முறையினை கூட்டு அணுகுமுறை மூலம் ஊக்குவித்தல் | எண்கள் | 1132 | 283.00 |
| 3 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தினைக் கூட்டு அணுகுமுறை மூலம் ஊக்குவித்தல் | எண்கள் | 590 | 100.30 |
| 4 | முகாம் மூலம் விளம்பரம், கிராம கருத்தரங்குகள் அரசு வாகனங்களுக்கு எரிபொருள் முதலியன (கூட்டு அணுகுமுறை மூலம் விளம்பரப் படுத்துதல்) | | | 108.40 |
| | மொத்தம் | | | 791. 70 |

## 4.1.2. சமச்சீர் மற்றும் ஒருங்கிணைந்த உரப் பயன்பாட்டுத் திட்டம்

இத்திட்டமும் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் திட்ட செயல்பாட்டு விவரம் வருமாறு :-

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | இனம் | அலகு | பொருள் | | நிதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | சாதனை பிப்ரவரி 2007 வரை | இலக்கு | சாதனை பிப்ரவரி 2007 வரை |
| 1 | தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் புத்தாட்டப் பயிற்சி | எண்கள் | 12 | 11 | 1.20 | 1.20 |
| 2 | தழைச்சத்து தேவை அறிய வண்ண அட்டை விநியோகம் | இல. எண்கள் | 2.25 | 1.25 | 50.00 | 38.75 |
| 3 | உரக் கட்டுப்பாடு ஆய்வகத்தைக் கணினிமூலம் மேம்படுத்துதல் | மையங் கள் | 5 | 5 | 5.00 | 5.00 |
| 4 | உர பரிசோதனை நிலையங் களுக்கான அட்டாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் வாங்குதல் | எண்கள் | 4 | 0 | 60.00 | 0 |
| 5 | மண்வள அட்டை அச்சிடுதல் | இல. எண்கள் | 10 | 10 | 10.00 | 10.00 |
| | மொத்தம் | | | | 126.20 | 54.95 |



## 2007–2008 ஆம் ஆண்டிற்கான திட்டம்

அனைத்து விவசாயிகளுக்கும் மண் ஆய்வு அடிப்படையில் பரிந்துரை வழங்கவும் தரமான உரம் மற்றும் பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் தரக்கட்டுப்பாட்டுச் செயல்பாடுகளைத் தீவிரப்படுத்துவதிலும் அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

இதன் அடிப்படையில் கூடுதலாக மண் ஆய்வுக் கூடங்கள், உர மாதிரி ஆய்வு மையங்கள் மற்றும் பூச்சி மருந்து ஆய்வுக் கூடங்கள் அமைக்க அரசு திட்டமிட்டு, தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசை அணுகியுள்ளது.

## 4.1.3. பேரியல் மேலாண்மையில் புதிய திட்டங்கள்

### 4.1.3.1. விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள்

வேளாண் விரிவாக்கச் சீரமைப்பில், குழு அணுகுமுறை ஒரு சிறப்பு அங்கமாகக் கருதப்படுகிறது. இதனால் திட்டமிடுதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டச் செயல்பாடுகள் கீழ்மட்ட கிராம அளவிலிருந்து உருவாக்கவும் செயல்படுத்தவும் வகை செய்யும்.

இதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் செயல்பாட்டினை மேம்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காகத் தற்போது நடைமுறையில் இருக்கும் பயிற்சி மற்றும் தொடர்புவழி முறையினை மாற்றி, குழு அணுகுமுறைமூலம் "விவசாயிகள் ஆர்வலர் குழு" அமைத்தல் எனும் ஒரு சிறப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இந்த ஆர்வலர் குழுக்கள் தங்களுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள், தொழில்நுட்பச் செய்திகள் மற்றும் மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து தெரிவிப்பதன்மூலம் அதனை உடனுக்குடன் வேளாண் களப் பணியாளர்கள்மூலம் தீர்வுகாண முடியும். இதன்மூலம் விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களிடையே நேரிடையாகக் கருத்துப் பரிமாற்றம் நடைபெறும் எனபதோடு வழக்கமான தகவல் பரிமாற்றம் மட்டும் அல்லாமல் பயிர்ச் சாகுபடியில் உள்ள பல பிரச்சனைகளுக்கு நேரிடைத் தீர்வுகாண முடியும்.

இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. வேளாண் விரிவாக்கத்தில் குழு அணுகுமுறை
2. விவசாயிகளின் செயல்பாடுகளுக்கு வலுவூட்டுதல்
   - விரிவாக்கத் திட்டங்களை வரையறுக்க விவசாயிகளைப் பங்கேற்க செய்தல்

[2007 ஏப்ரல் 3

- விவசாய ஆர்வலர் குழுக்கள் மூலமாகத் திட்டப் பணிகளைச் செயலாக்குதல்
- ஒப்பந்தப் பணி செயல்முறைகளில் விவசாயிகள் ஆர்வலர் குழுக்களைப் பங்கேற்க செய்தல்
- விவசாயிகளின் செயல்திறனை அதிகரிக்கச் செய்தல்

தேர்வு செய்யப்பட்ட மானாவாரிப் பயிர்களில், கிராம அளவில் 10 முதல் 15 உறுப்பினர்களைக் கொண்ட விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் இத்திட்டத்தில் படிப்படியாக உருவாக்கப்படும். இத்தகைய குழுக்கள், வட்டம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு, பின்னர் பயிர் மேம்பாட்டு உத்திகள் மற்றும் திட்டங்களை உருவாக்கும் பணியிலும் ஈடுபடுத்தப்படும். அலுவலக உபயோகத்திற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல், நூலகம் அமைத்துத் தருதல், தொழில்நுட்ப காலமுறை, செய்தித்தாள்கள் விநியோகம் போன்ற தொழில்நுட்ப உதவிகளைச் செய்து தருவதன் மூலம், இத்தகைய குழுக்களைப் பலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில், அரசு 600 புதிய விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் அமைப்பதற்கு ரூ.30.00 இலட்சமும், 2005-2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 600 விவசாயிகள் ஆர்வலர் குழுக்களின் செயல்பாட்டினை வலுப்படுத்துவதற்காக ரூ.30.00 இலட்சமும் வழங்கியது. இதன்படி தமிழ்நாட்டில் 600 புதிய விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள், தேர்வு செய்யப்பட்ட மானாவாரிப் பயிர்களில் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் 2006-2007 ஆம் ஆண்டு சாதனை விவரம் வருமாறு:

| வ. எண் | இனம் | அலகு | 2006-2007 பொருள் (எண்கள்) இலக்கு | சாதனை பிப்ரவரி 2007 வரை | நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு | சாதனை பிப்ரவரி 2007 வரை |
|---|---|---|---|---|---|---|
| I | 2006-2007-ம் ஆண்டில் மானாவாரிப் பயிர்களுக்காக புதிய விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் உருவாக்குதல் (அலுவலகம், நூலகம் அமைத்திட) | ஒரு குழுவிற்கு ரூ.5,000 | 600 | 600 | 30.00 | 29.35 |



2007 ஏப்ரல் 3]

| வ. எண் | இனம் | அலகு | 2006-2007 பொருள் (எண்கள்) இலக்கு | சாதனை பிப்ரவரி 2007 வரை | நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு | சாதனை பிப்ரவரி 2007 வரை |
|---|---|---|---|---|---|---|
| II. | 2005-2006-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட விவசாயிகள் ஆர்வலர் குழுக்களின் செயல்பாட்டினை வலுப்படுத்துதல் | | | | | |
| 1. | விவசாயிகளுக்கான பயிற்சி | ஒரு குழுவிற்கு ரூ. 3,000/- | 600 | 589 | 18.00 | 17.210 |
| 2. | அடையாள அட்டை வழங்குதல் | ஒரு குழுவிற்கு ரூ. 225/- | 600 | 582 | 1.35 | 1.275 |
| 3. | மாவட்ட அளவில் கூட்டம் | ஒரு கூட்டத்திற்கு ரூ. 15,000/- | 36 | 31 | 5.40 | 4.500 |
| 4. | எதிர்பாரா செலவினம்/ பதிவு மற்றும் தொடர்புக் கான செலவினம் | ஒரு குழுவிற்கு ரூ. 500/- | | | 3.00 | 1.610 |
| 5. | எரிபொருள் | | | | 2.25 | 0.897 |
| | மொத்தம் | | | | 60.00 | 54.842 |

இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் விவசாயிகளின் நலன் கருதி, தொடர்ந்து ரூ.150 இலட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | இனங்கள் | அலகு | 2007-2008 பொருள் (எண்கள்) | நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துக்கள் பயிர்களுக்கான புதிய விவசாய ஆர்வலர் குழுக்கள் அமைத்தல் | அலுவலகம் மற்றும் நூலகம் அமைத்திட (ஒரு குழுவிற்கு ரூ. 5,000/-) | 1200 | 60.00 |
| 2. | விவசாயிகளுக்கான பயிற்சி | ஒரு குழுவிற்கு ரூ.4,000/- | 1200 | 48.00 |
| 3. | அடையாள அட்டை வழங்குதல் | ஒரு குழுவிற்கு ரூ.400/- | 1200 | 4.80 |
| 4. | மாவட்ட அளவில் கூட்டம் | ஒரு கூட்டத்திற்கு ரூ.20,000/- | 74 | 14.80 |

| வ. எண் | இனங்கள் | அலகு | 2007-2008 | |
|---|---|---|---|---|
| | | | பொருள் (எண்கள்) | நிதி (ரூ. இலட்சத்தில்) |
| 5. | மாநில அளவில் கூட்டம் | ஒரு கூட்டத்திற்கு ரூ.50,000/- | 4 | 2.00 |
| 6. | எதிர்பாரா செலவினம்/பதிவு மற்றும் தொடர்புக்கான செலவினம் | ஒரு குழுவிற்கு ரூ.1,500/- | 1200 | 18.00 |
| 7. | எரிபொருள் | ஒரு மாவட்டத்திற்கு ரூ.30,000 மிகாமல் | 28 மாவட்டங்கள் | 8.40 |
| | மொத்தம் | | | 156.00 |

### 4.1.3.2 மாற்றுப் பயிர் சாகுபடித் தளைகள் அமைத்தல் மற்றும் கால்நடை மேம்பாடு

ஒருங்கிணைந்த பண்ணை முறைகளை ஊக்குவிப்பதற்காக மாற்றுப் பயிர்ச் சாகுபடித் தளைகள் அமைக்க ஒரு எக்டேருக்கு ரூ.10,000/-மும், கால்நடைகள் மேம்பாட்டிற்கு ரூ.10,000/-மும் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

இத்திட்டம் ஒருங்கிணைந்த பண்ணைய முறையின் ஒரு அங்கமாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி பண்ணை, பண்ணை சார்ந்த மற்றும் பண்ணைசாரா செயல்பாடுகளை இணைத்து அதன்மூலம் உணவுப் பாதுகாப்பு, நிலையான வேளாண்மை மேம்பாடு, பயிர் இழப்பைக் குறைத்தல் மற்றும் இழப்பீடு, வருவாய் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்க வழிவகை செய்கிறது. இதன்மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலை உயர ஏதுவாகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் 108 செயல்விளக்கங்கள் அமைக்க ரூ.33.00 இலட்சம் செலவில் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.



தற்போது செயல்படுத்தப்படும் 'ஆத்மா' திட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணை முறைகள், விரிவான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதால் இதற்கான தொழில்நுட்பங்கள் மற்றும் உதவிகள் 'ஆத்மா' திட்டம் மூலம் வழங்கப்படும். எனவே, தற்போது பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் இந்தப் பயிர் மாற்றுத் திட்டம், 2007-2008 ஆம் ஆண்டு பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்படவில்லை.

### 4.1.3.3 கரும்பில் சொட்டுநீர்ப் பாசன வழி உரமிடல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட இரட்டை வரிசை நடவு மற்றும் குழி நடவு முறைகளுடன் சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடல் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன்மூலம், உற்பத்தித் திறனை மிக அதிக அளவிற்கு உயர்த்த முடியும். இம்முறைகளைக் கடைப்பிடித்தால் கரும்பின் தற்போதைய உற்பத்தித் திறனான எக்டேருக்கு 95 முதல் 105 மெ.டன் என்ற அளவிலிருந்து எக்டேருக்கு 140 மெ.டன் என்ற அளவிற்கு உயர்த்த முடியும். இத்தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்த செயல்விளக்கத் தளைகள் 2006-2007 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

அதன் சாதனை விவரம் வருமாறு:

| வ. எண் | இனம் | அலகு | பொருள் | | நிதி (இலட்ச ரூபாய்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு 2006-2007 | எதிர் பார்க்கும் சாதனை | இலக்கு 2006-2007 | எதிர் பார்க்கும் சாதனை |
| 1. | வரிசை நடவு முறையில் சொட்டுநீர்ப் பாசன செயல் விளக்கம், தலா ரூ.25,000/ எக்டேருக்கு | எக்டர் | 464 | 464 | 116.00 | 116.00 |
| 2. | ஆராய்ச்சி / அறிவுரை வழங்கல் | | - | - | 19.26 | 19.26 |
| 3. | குழி வெட்டும் இயந்திரம் | எண் | 6 | 6 | 4.20 | 4.20 |
| | மொத்தம் | | | | 139.46 | 139.46 |

மத்திய அரசு நுண்ணீர்ப் பாசனத்திற்காக, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்குத் தனியாக நிதி ஒதுக்குவதால், 2007-2008 ஆம் ஆண்டு இத்திட்டம் மத்திய அரசின் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

### 4.1.3.4 சிறுதொழில் துவங்க தமிழ்நாடு பண்ணை மகளிர் குழுக்களை ஊக்குவித்தல்

தமிழ்நாடு பண்ணை மகளிர் வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டமானது, பண்ணை மகளிர் பணியினை முன்னிலைப்படுத்துதல், தற்போதுள்ள பண்ணை மகளிர் குழுக்களை மேம்படுத்துதல, பண்ணை மகளிர் குழுக்களின் திறன் மேம்பாடு, திட்ட செயலாக்கத்தில் செம்மையான செயல்பாடுகள், பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்களின் தொழில் வளர்ச்சிக்கான மாதிரிகளை உருவாக்கி, வேளாண்மையில் உயர் சாதனை அடையச் செய்தல், வேளாண் விரிவாக்கத்தின் முழுப் பலனையும் பல மடங்கு அதிகரிக்கச் செய்தல் போன்ற குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது.

2005-2006 ஆம் ஆண்டில் பண்ணை மகளிர் மற்றும் விவசாயத் தொழிலாளர்களைக் கொண்ட சுமார் 22,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் 2006-2007 ஆம் ஆண்டில், 7,366 பண்ணை மகளிர் குழுக்களுக்குத் தொழில் முனைவோருக்கான புத்தூட்டப் பயிற்சிக் குழுவிற்கு ரூ.1,000/- வீதம் அளிக்கப்பட்டதோடு, தொழில் தொடங்குவதை ஊக்குவித்து உதவும் வகையில் ஒரு குழுவிற்கு ரூ.3,500/- என்ற அளவில் நிதி உதவி வழங்கப்பட்டது. மேலும், நவீன வேளாண்மையில் இயந்திரமயமாக்கலின் அவசியத்தை உணர்ந்து, வேளாண் இயந்திரங்கள் 25% மானிய விலையில் பண்ணை மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்டன.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், நச்சில்லா சுற்றுச்சூழலை ஏற்படுத்தவும், முன்னோடித் திட்டமாக, திருவள்ளூர், கடலூர், வேலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திண்டுக்கல்



மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாவட்டங்களில், உயிரியியல் காரணிகள் உற்பத்தி மையங்கள், பண்ணை மகளிர் குழுக்கள்மூலம் அமைக்க, குழுவிற்கு ரூ.5 இலட்சம் வீதம் சுழல் நிதி வழங்கப்பட்டது.

2006-2007 ஆம் ஆண்டில் பண்ணை மகளிர் குழுக்களுக்கான திட்ட செயல்பாடுகள்:

| வ. எண் | இனம் | பொருள் (எண்) | | நிதி (இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | பிப்ரவரி 2007 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2007 முடிய சாதனை |
| 1. | தொழில் முனைவோருக்கான, ஒருநாள் புத்தூட்டப் பயிற்சி | 7366 | 7185 | 73.66 | 71.850 |
| 2. | பண்ணை மகளிர் குழுக்களுக்கு தொழில் தொடங்க உபகரணங்கள் வழங்கல் | 7366 | 3446 | 257.810 | 120.610 |
| 3. | ஆவணத் தயாரிப்பு | .. | .. | 2.190 | 1.514 |
| 4. | கணினி மூலம் புள்ளிவிவரம் | 56 | 52 | 19.60 | 12.434 |
| 5. | வேளாண் இயந்திர மயமாக்கல் | 223 | 64 | 66.75 | 19.200 |
| 6. | உயிரியியல் காரணிகள் உற்பத்தி | 9 | 9 | 45.00 | 45.000 |
| | மொத்தம் | | | 465.010 | 270.808 |

### 2007–2008 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

2007-2008 ஆம் ஆண்டு பேரியியல் மேலாண்மைத் திட்டத்தில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன:

#### 1. பண்ணை இயந்திரமயமாக்கல், உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல்

சுய உதவிக் குழுக்களுக்குப் பண்ணைத் தேவைகளுக்காக வேளாண்மைக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றை குழு உறுப்பினர்கள் தங்களது சொந்த உபயோகத்திற்காக அல்லது இதர விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கி,

குழுவின் நிதி ஆதாரத்தைப் பெருக்க உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மத்திய அரசின் வழிமுறைகளின்படி இயந்திரங்கள் மற்றும் கருவிகள், மானிய விலையில் வழங்க ரூ.100 இலட்சம் ஒதுக்கீட்டில் 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

## 2. சிறுதொழில் மேற்கொள்வதற்கான திட்டம்

பண்ணை மகளிர் பொருளாதார ரீதியில் மேம்பாடு அடைய, பண்ணை மகளிர் குழுக்களை, சிறுதொழில்கள் மேற்கொள்ள ஊக்குவிப்பது அவசியமாகிறது. அனைத்து மகளிர் பண்ணைக் குழுக்களையும் படிப்படியாக விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த சிறுதொழில்களில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் சிறுதொழில்களை பண்ணை மகளிர் குழுக்கள் மேற்கொள்ளலாம்.

- கொப்பரை உலர் நிலையங்கள் அமைத்தல்
- பயறு பதப்படுத்தும் நிலையங்கள் அமைத்தல்
- நெல் உமி நீக்கும் நிலையங்கள் அமைத்தல்
- உலர் தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருட்கள் உற்பத்தி
- தேங்காய்ப் பால் தயாரித்தல்
- இதர மதிப்புக் கூட்டும் பொருட்கள் உற்பத்தி
- விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும்
- விதை மற்றும் கன்றுகள் உற்பத்தி

இத்தகைய பல்வகைப்பட்ட பொருட்கள் உற்பத்தி மேற்கொள்வதற்கான சிறுதொழில் துவங்க 50 சதம் மானியம் வழங்கப்படும். இதற்காக ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தில் 1000 குழுக்களுக்கு, ஒரு குழுவிற்கு ரூ.10,000/- வீதம் தொழில் துவங்குவதற்கு உதவித் தொகை வழங்கப்படும்.



| வ. எண் | செயல்பாடுகள் | 2007–2008 நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பண்ணை மகளிர் குழுக்களுக்கு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் | 100.00 |
| 2. | சிறுதொழில்கள் துவங்க விற்பனையுடன் இணைந்த மானியம் | 100.00 |
| | மொத்தம் | 200.00 |

### 4.1.3.5. விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி

1000 வேளாண்மை அலுவலர்களுக்கும், 2500 உதவி வேளாண்மை அலுவலர்களுக்கும் 2007-2008 ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்மைப பல்கலைக்கழகத்தில் உயர் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்க, ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு பயிற்சிக்கு 35 அலுவலர்கள் வீதம் 100 பயிற்சிகள், ஒரு பயிற்சிக்கு ரூ.17,300/- செலவில் மேற்கொள்ளப்படும். மேலும் மண் வளப் பாதுகாப்பு, தரமான விதை மற்றும் நடவுப் பொருட்கள், நுண்ணீர்ப் பாசனம், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் உர மேலாண்மை மற்றும் இயற்கை இடுபொருட்கள் ஆகியவை பற்றி பல்வேறு மண்டலங்களிலிருந்து தேர்வு செய்யப்படும் அலுவலர்களுக்குப் பயிற்சியாளர் பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சியாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள இதர அலுவலர்களுக்கு இத்தொழில்நுட்பப் பயிற்சியை வழங்குவார்கள். இதன்மூலம் உரிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடையும்.

### 4.1.3.6. அரசு விதைப் பண்ணைகளில் நீர்ப்பாசனக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்

அரசுப் பண்ணைகளிலுள்ள பெரும்பாலான ஆழ்குழாய்க் கிணறுகள நிலத்தடி நீர் குறைவினால் உபயோகமற்றவையாக உள்ளன. இதனால் அரசுப் பண்ணைகளில் விதை உற்பத்தி இலக்கினை அடைய முடியாத நிலை உள்ளது. எனவே, கூடுதல் நீர் வசதிகளை, நுண்ணீர்ப் பாசனம் வழியாக அளிப்பதன்மூலம் விதை உற்பத்தி அதிகரிக்க இயலும். இப்பண்ணைகளில் துல்லியப் பண்ணை முறைகளை மேற்கொள்வதன் மூலம், உற்பத்தித் திறனை உயர்த்தித் தரமான ஆதார விதைகளை உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இத்திட்டத்தில், அரசு விதைப் பண்ணைகளில் ரூ.75 இலட்சம் செலவில் 15 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்.

[2007 ஏப்ரல் 3

## 4.2. ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து, பயறு, எண்ணெய் பனை மற்றும் மக்காச்சோளத்திற்கான திட்டம் (ஐசோபாம்)

எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம், தேசிய பயறு மேம்பாட்டுத் திட்டம், எண்ணெய் பனை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தீவிர மக்காச்சோளம் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து, 2004-2005 ஆம் ஆண்டு மத்திய அரசு ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து, பயறு, எண்ணெய் பனை மற்றும் மக்காச் சோளத்திற்கான திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தில் முக்கிய அணுகுமுறைகளில் மாநில அரசுகளின் தேவைக்கேற்ப திட்டங்களை மேற்கொள்ள வாய்ப்புள்ளது. இத்திட்டத்தின் செலவினை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

இத்திட்டத்தில் புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் கடைப்பிடிக்கும் வகையில் முக்கிய இடுபொருட்களான விதைகள், உயிர் உரங்கள், ஜிப்சம், உயிர் பூச்சிக்கொல்லிகள், பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்கள் முதலியன மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டு இத்திட்டம் அனைத்துத் தொழில்நுட்பங்களையும் இணைத்து, தொகுப்பு முறையில் மேற்கொள்வதன்மூலம் அதிக உற்பத்தித் திறனை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தில், 2006-2007 ஆம் ஆண்டின் பிப்ரவரி 2007 முடிய செலவினம் மற்றும் 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, கீழ் வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| பயிர் | 2006-2007 | | 2007-2008 ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவினம் பிப்ரவரி 2007 வரை | |
| எண்ணெய் வித்துக்கள் | 1147.378 | 753.435 | 1159.080 |
| பயறு வகைகள் | 603.399 | 385.303 | 667.720 |
| மக்காச்சோளம் | 68.700 | 41.519 | 97.395 |
| எண்ணெய் பனை | 465.863 | 212.918 | 590.170 |
| மொத்தம் | 2285.340 | 1393.175 | 2514.365 |



2007 ஏப்ரல் 3]

## 4.3. மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் பருத்தி தொழில்நுட்ப சிறுகுழு-2-ன்கீழ் வரும் தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்

"பருத்தி தொழில்நுட்பக் குழு" பிப்ரவரி 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 2000-2001 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 4 சிறுதொழில்நுட்பக் குழுக்களை உள்ளடக்கியது. இவற்றில் மினிமிஷன் 2, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. பருத்தியின் உற்பத்தியினை அதிகரிப்பதற்காகவும், தரமான மூலப் பொருட்களை வழங்குதல், பயிற்சி அளித்தல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைச் செயல்படுத்துதல் என்ற முக்கிய அம்சங்கள் இத்திட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் 75:25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் நீலகிரியைத் தவிர இதர மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டில், ரூ.432.317 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டு ரூ.450.00 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 4.4. இயற்கை பண்ணையத்திற்கான தேசிய திட்டம்

இயற்கை பண்ணையம் பற்றிய பயிற்சி, கருத்தரங்குகள், பணிமனை கூட்டங்கள் நடத்துதல் மற்றும் அரசு விதைப் பண்ணைகளில் இயற்கை பண்ணையைச் செயல்விளக்கப் பண்ணை அமைத்தல் மற்றும் மண்புழு உற்பத்தி ஆகியவற்றின் மூலமாக இயற்கை பண்ணைய முறையினைத் தமிழகத்தில் பிரபலப்படுத்துவதற்காக ஒரு திட்டம் ரூ.56.77 இலட்சம் நிதியில் மத்திய அரசின் 100 சத நிதியுதவியுடன் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டம் கீழ்க்கண்ட செயல்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது:

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | இனம் | நிதி உதவி | பொருள் (எண்கள்) | நிதி |
|---|---|---|---|---|
| 1. | சான்று மற்றும் ஆய்வு முகமைகளுக்கான பயிற்சி | 0.51 | 2 | 1.02 |
| 2. | இயற்கை பண்ணைய இடுபொருள் உற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாட்டுக்கான பயிற்சி | 0.51 | 2 | 1.02 |
| 3. | களப் பணியாளர்கள் மற்றும் விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி | 0.39 | 3 | 1.17 |
| 4. | விவசாயிகளுக்கான பயிற்சி | 0.13 | 2 | 0.26 |
| 5. | இயற்கை இடுபொருள் பற்றிய செயல்விளக்கம் | 0.10 | 13 | 1.30 |
| 6. | இயற்கை பண்ணைய செயல் விளக்கப் பண்ணை அமைத்தல் | 4.00 | 5 | 20.00 |
| 7. | மாநில மற்றும் மண்டலப் பணிமனை கூட்டங்கள் நடத்துதல் | .. | 1+4 | 2.00 |
| 8. | அரசு விதைப் பண்ணைகளில் மண்புழு பெருக்கும் அமைப்புகள் ஏற்படுத்துதல் | 1.50 | 20 | 30.00 |
| | மொத்தம் | | | 56.77 |

## 4.5. தென்னை வளர்ச்சி வாரிய திட்டங்கள்

தென்னை மற்றும் தென்னை சம்பந்தமான தொழில்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தென்னை வளர்ச்சித் திட்டங்கள் தமிழகத்தில் தென்னை வளர்ச்சி வாரிய முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2006-2007-ல் இத்திட்டத்தின்கீழ் பரப்பு விரிவாக்கம், சிறிய மற்றும் பெரிய அளவிலான தென்னை நாற்றுப் பண்ணை அமைக்க மானியம், உற்பத்தித் திறனை உயர்த்தும் பொருட்டு நோயுள்ள மரங்களை வெட்டி எடுத்தல், செயல்விளக்கப் பண்ணைகள் மற்றும் இயற்கை உரக் குழிகள் அமைத்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2006-2007 ஆம் ஆண்டுக்கான பொருள் மற்றும் நிதி சாதனை (பிப்ரவரி 2007 வரை) மற்றும் 2007-2008 ஆம் நிதியாண்டின் செயல் திட்டம் கீழ்வருமாறு:-





| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2006-2007 | | | | 2007-2008 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பொருள் | | நிதி (ரூ. லட்சத்தில்) | | பொருள் | நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
| | | இலக்கு | சாதனை பிப் 2007 முடிய | இலக்கு | சாதனை பிப் 2007 முடிய | | |
| 1 | தென்னை உற்பத்தி பெருக்க ஒருங்கிணைந்த செயல் திட்டம் | | | | | | |
| அ | நோயுற்ற மரங்களை பராமரித்தல் | 1,26,885 எண்கள் | 87385 | 317.213 | 218.460 | 100 | 250.00 |
| ஆ | செயல் விளக்க பண்ணைகள் அமைத்தல் | 1350 எக். | 1340 | 236.250 | 234.500 | 1500 | 262.50 |
| இ | இயற்கை உர மையம் | 80 எண்கள் | 80 | 16.00 | 16.00 | 100 | 20.00 |
| 2 | நல்லாக்கில் நெட்டை மற்றும் குட்டை உயர்ரக தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம் – நெற்றுக்கள் கொள்முதல் | 1.07 லட்சம் | 0.92 | 18.75 | 19.50 | ..... | 20.00 |
| | கன்றுகள் உற்பத்தி | 0.75 இலட்சம் | 0.58 | | | 0.75 | |
| 3. | தென்னை பரப்பளவு விரிவாக்கம் | 1000 எக் | 1008.71 | 40.00 | (***) | 1000 | (***) |
| | | | | (***) தென்னைவளர்ச்சி வாரியம் மூலமாக நேரடியாக செயல்படுத்தப்படுகிறது. | | | |
| 4. | அரசு தென்னை நாற்றங்கால் பண்ணைகளில் கன்றுகள் உற்பத்தி | | | | | | |
| அ. | பெரிய அளவு | 8 | 8 | 12.00 | 12.00 | 8 | 12.00 |
| ஆ. | சிறிய அளவு | 2 | 2 | 15.00 | 15.00 | 2 | 15.00 |
| 5. | மண்டல தென்னை நாற்றுப் பண்ணைகள் ஏற்படுத்துதல் நெற்றுக்கள் கொள்முதல் | 3.33 | 3.00 | 62.50 | 28.500 | ... | 62.50 |
| | கன்றுகள் உற்பத்தி | 2.50 இலட்சம் | ... | | | 2.50 இலட்சம் | |
| 6. | கொப்பரை உலர்கலன்கள் விநியோகம் | 30 | 7 | 2.82 | 0.52 | .. | .. |

### 4.6. திருந்திய விரிவாக்கப் பணிகளுக்கான மாநில விரிவாக்க உதவித் திட்டம் (ATMA)

வேளாண்மை மற்றும் சார்புத் துறைகளில் செயல்படுத்தப்படும் விரிவாக்கப் பணிகளைச் சீரமைத்து திருந்திய விரிவாக்கப் பணிகளுக்கு உதவிடும் வகையில், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளின் 90:10 சதவீத நிதிப் பங்களிப்புடன், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் தன்னாட்சி அமைப்பாகச் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA)யின் மூலம், வேளாண்மை மற்றும் சார்புத் துறைகளை ஒருங்கிணைத்து, இத்திட்டம் தமிழகத்தில் 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டு இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டமிடுதலிலும், செயலாக்கத்திலும் விவசாயிகளின் பங்கு, நிதியுதவி மற்றும் நடைமுறைப்படுத்தலில் தனியார் நிறுவனங்கள், அமைப்புகள், சங்கங்கள் பங்கேற்பு, பண்ணை மகளிர் குழுவினருக்கு முன்னுரிமை, விவசாய மற்றும் சார்புப் பணிகளுக்குத் தேவைப்படும் விரிவாக்க மற்றும் ஆராய்ச்சிகளைச் சம்பந்தப்பட்ட விவசாயிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு கிராம அளவில முடிவு செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இத்திட்டம் தற்போது ரூ.6.66 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு ரூ.11.21 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 4.7. விதை கிராம திட்டம்

வேளாண்மைக்கு விதையே முக்கிய ஆதாரம் ஆகும். இதுவே உற்பத்தியை நிர்ணயிக்கிறது. விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்கிட , பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதன் விளைவாக "விதை மாற்று விகிதம்" உயர்ந்துள்ளது. ஆனால், கடந்த சில ஆண்டுகளில் இதில் தேக்கம் காணப்படுகிறது. ஏனெனில், தரமான விதை உற்பத்தி என்பது ஒரு முறை மட்டும் மேற்கொள்ளப்படுவது இல்லை என்பதோடு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டியது ஆகும். எனவே, விவசாயிகள் சேமிக்கும் விதைகளில் தரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பது அவசியமாகிறது.



இதன் அடிப்படையில், 'விதை கிராம திட்டம்' என்ற புதிய திட்டம் 2006-2007 ஆம் ஆண்டு புதிய திட்டமாக ரூ.2 கோடி செலவில், மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் நெல், எண்ணெய் வித்து மற்றும் பயறு வகை பயிர்களில் செயல்படுத்தப்பட்டது.

2006-2007 ஆம் ஆண்டில் நிதிச் செலவின விவரம் பின்வருமாறு:

**(நிதி இலட்ச ரூபாயில்)**

| வ.எண் | இனத்தின் விவரம் | 2006–2007 |
|---|---|---|
| 1 | விதை விநியோகம் (50 சதம் மானியம்) | |
| | அ. நெல் | 100.76 |
| | ஆ. எண்ணெய் வித்து | 49.20 |
| | இ. பயறுவகை | 5.04 |
| 2 | பயிற்சி | 45.00 |
| | மொத்தம் | 200.00 |

இத்திட்டத்தின்கீழ் தரமான விதைகள் 50 சதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, தரமான விதை உற்பத்தி முறைகளில் பயிற்சி வழங்கப்பட்டது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மேலும், விதை உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பாக விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்குவதற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.117.82 இலட்சம் செலவில் மத்திய சார்புத் திட்டம் ஒன்று ஒப்பளிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் 380 வட்டாரங்களிலும், ஒரு வட்டாரத்திற்கு 50 விவசாயிகள் வீதம் 19,000 விவசாயிகளுக்கு மூன்று நாள் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 25 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, மொத்தம 700 விவசாயிகள் மற்ற மாநிலங்களுக்குக் கல்விச் சுற்றுலாவிற்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

### 5. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள திட்டம்

### 5.1 நீர்வள நிலவளத் திட்டம் (ஐயம்வாம்)

தேர்ந்தெடுக்கப்பட்ட உப வடிநிலங்களின் சேவை வழங்குதலை மேம்படுத்தலும், ஆற்றுப் படுகை மற்றும் உப வடிநிலங்கள் மூலமாக ஒருங்கிணைந்த நீர் மேலாண்மைத் திறனை அதிகப்படுத்துதல் மூலம்

பாசன வேளாண்மையின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் செயல்படுத்தப்படுகிறது.

- நீரினைச் சேமிக்கும் நவீனப் பாசனத் தொழில்நுட்பங்களான நுண்ணீர்ப் பாசனம் மற்றும் வேளாண்மை செயல்முறைகளை உள்ளடக்கிய பாசன விநியோகச் சேவையை மேம்படுத்துதல்.
- வேளாண்மையைத் தீவிரமாக்குதல் மற்றும் மாற்றுப் பயிர் சாகுபடியைப் பரவலாக்குதல்.
- வேளாண்மை விற்பனை உத்திகள் மற்றும் வேளாண்மை தொழில் வாய்ப்புகளை அதிகப்படுத்துதல்
- நீர்வள ஆதார மேலாண்மையை நிர்வகிக்கும் நிறுவனங்கள் மற்றும் அதன் முறைகளைப் பலப்படுத்துதல்.

## திட்டச் செயலாக்கம்

இத்திட்டம் 2007 முதல் 2013 வரை ஆறு ஆண்டுகளுக்கு உலக வங்கி உதவியுடன் நீர் ஆதார நிறுவனங்கள் மற்றும் இதர துறைகளான வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடை, மீன்வளம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமாக செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

"பல்துறைகள் ஒருங்கிணைப்புத் திட்டக் குழு" இத்திட்டம் செயல்படுத்தத் தேவையான வழிகாட்டுதல், பல்துறைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றில் உறுதுணையாக இருந்து திட்டம் செயல்படுத்த உதவும். இத்திட்டம் ஏப்ரல் 2007 முதல் துவங்கப்படும்.

வேளாண்மைத் துறை மூலம் இத்திட்டம் 63 ஆற்றுப் படுகைகளில் சுமார் ரூ.66.00 கோடி நிதியுதவியுடன் 6 ஆண்டுகளுக்கு 2007 முதல் 2013 வரை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் நிதியாண்டில் ஒன்பது ஆற்றுப் படுகைகள் - பாலாறு (கோயம்புத்தூர் / ஈரோடு), ஆழியாறு (கோயம்புத்தூர்), வராக நதி (விழுப்புரம்), அர்ஜுனா நதி (விருதுநகர்), மேல்வெள்ளாறு (சேலம்), தென்வெள்ளாறு (புதுக்கோட்டை), பாம்பாறு (புதுக்கோட்டை), கோட்டக்கரையாறு (சிவகங்கை), மணிமுத்தாறு (சிவகங்கை) தேர்ந்தெடுக்கப்பட்டு, இத்திட்டம் ரூ.4.52 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. 2007 முதல் 2013 வரையிலான ஆறு ஆண்டுகளில் ரூ.20.32 கோடி செலவில் இந்த ஒன்பது ஆற்றுப் படுகைகள் மேம்படுத்தப்படும்.



**அட்டவணை – 1**

**வேளாண்மை விரிவாக்க மையங்கள் பற்றிய விவரங்கள்**

| மாவட்டங்கள் | உட் கோட்டங்கள் | முதன்மை வேளாண் விரிவாக்க மையங்கள் | துணை வேளாண் விரிவாக்க மையங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| திருவள்ளூர் | 7 | 14 | 21 | 35 |
| காஞ்சிபுரம் | 6 | 13 | 16 | 29 |
| வேலூர் | 7 | 20 | 24 | 44 |
| திருவண்ணாமலை | 6 | 17 | 24 | 41 |
| கடலூர் | 6 | 13 | 17 | 30 |
| விழுப்புரம் | 8 | 21 | 27 | 48 |
| திருச்சி | 5 | 15 | 10 | 25 |
| பெரம்பலூர் | 3 | 10 | 7 | 17 |
| கரூர் | 2 | 8 | 4 | 12 |
| புதுக்கோட்டை | 7 | 13 | 20 | 33 |
| தஞ்சாவூர் | 8 | 14 | 47 | 61 |
| திருவாரூர் | 7 | 10 | 32 | 42 |
| நாகப்பட்டினம் | 6 | 11 | 33 | 44 |
| இராமநாதபுரம் | 5 | 11 | 6 | 17 |
| மதுரை | 6 | 14 | 18 | 32 |
| தேனி | 3 | 9 | 12 | 21 |
| திண்டுக்கல் | 5 | 13 | 15 | 28 |
| சேலம் | 5 | 20 | 11 | 31 |
| நாமக்கல் | 4 | 15 | 17 | 32 |
| தர்மபுரி | 5 | 8 | 8 | 16 |
| கிருஷ்ணகிரி | 3 | 10 | 7 | 17 |
| ஈரோடு | 7 | 20 | 26 | 46 |
| கோயம்புத்தூர் | 7 | 22 | 21 | 43 |
| விருதுநகர் | 6 | 11 | 5 | 16 |
| சிவகங்கை | 6 | 11 | 10 | 21 |
| தூத்துக்குடி | 7 | 12 | 16 | 28 |
| திருநெல்வேலி | 9 | 19 | 31 | 50 |
| கன்னியாகுமரி | 4 | 10 | 11 | 21 |
| மொத்தம் | 160 | 384 | 496 | 880 |

## அட்டவணை–2

### அரசு விதைப் பண்ணைகள் (37)

| இடம் | மாவட்டம் |
|---|---|
| காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| கொளந்தலூர் | திருவள்ளூர் |
| வானூர், இருவேல்பட்டு, காக்குப்பம் வடக்குனேந்தல் | விழுப்புரம் |
| பிராலூர், வண்டுராயன்பேட்டு | கடலூர் |
| அத்தியந்தல், வாழவச்சனூர் | திருவண்ணாமலை |
| மேட்டூர் அணை, டேனிஷ்பேட் | சேலம் |
| பாப்பாரப்பட்டி | தர்மபுரி |
| பொங்கலூர், பாப்பன்குளம் | கோயம்புத்தூர் |
| சத்தியமங்கலம், பவானி | ஈரோடு |
| இனுங்கூர் | கரூர் |
| நெய்க்குப்பைபூதூர், புதூர்பாளையம் | திருச்சிராப்பள்ளி |
| அண்ணாப் பண்ணை | புதுக்கோட்டை |
| சாக்கோட்டை | தஞ்சாவூர் |
| தீவாம்பாள்பட்டினம், காஞ்சிக்குடிக்காடு, கீராந்தி, நெடும்பலம், தியாகராஜபுரம், சக்கரமங்கலம், மூங்கில்குடி | திருவாரூர் |
| நாகமங்கமம், திருக்கடையூர் | நாகப்பட்டினம் |
| விநாயகபுரம் | மதுரை |
| கீழகூடலூர் | தேனி |
| தேவதானம் | விருதுநகர் |
| கரையிருப்பு, மேலகரம் | திருநெல்வேலி |
| திருப்பதிசாரம் | கன்னியாகுமரி |





### மாநில எண்ணெய் வித்துப் பண்ணை

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | முசரவாக்கம் | காஞ்சிபுரம் |
| 2 | அகசிபள்ளி | கிருஷ்ணகிரி |
| 3 | வெள்ளாளவிடுதி | புதுக்கோட்டை |
| 4 | நவ்லாக் | வேலூர் |
| 5 | பவானிசாகர் | ஈரோடு |

பயறு பண்ணை

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | வம்பன் | புதுக்கோட்டை |

## அட்டவணை–3

### விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

| வ. எண் | மாவட்டங்கள் | நிலையங்களின் எண்ணிக்கை | | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | பெரியது | நடுத்தரம் | சிறியது | |
| 1 | காஞ்சிபுரம் | 1 | .. | 6 | 7 |
| 2 | திருவள்ளூர் | 1 | .. | 3 | 4 |
| 3 | கடலூர் | .. | .. | 2 | 2 |
| 4 | விழுப்புரம் | 2 | .. | 2 | 4 |
| 5 | வேலூர் | .. | .. | 2 | 2 |
| 6 | திருவண்ணாமலை | 2 | .. | 5 | 7 |
| 7 | சேலம் | 1 | .. | 1 | 2 |
| 8 | நாமக்கல் | .. | .. | 1 | 1 |
| 9 | தர்மபுரி | .. | .. | 2 | 2 |
| 10 | கிருஷ்ணகிரி | .. | 1 | 1 | 2 |
| 11 | கோயம்புத்தூர் | .. | .. | 3 | 3 |

| வ. எண் | மாவட்டங்கள் | நிலையங்களின் எண்ணிக்கை | | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | பெரியது | நடுத்தரம் | சிறியது | |
| 12 | ஈரோடு | 1 | .. | 1 | 2 |
| 13 | திருச்சி | .. | .. | 2 | 2 |
| 14 | பெரம்பலூர் | .. | .. | 1 | 1 |
| 15 | கரூர் | 1 | .. | .. | 1 |
| 16 | புதுக்கோட்டை | 1 | 1 | 2 | 4 |
| 17 | தஞ்சாவூர் | 2 | .. | 1 | 3 |
| 18 | நாகப்பட்டினம் | .. | .. | 3 | 3 |
| 19 | திருவாரூர் | 1 | .. | 3 | 4 |
| 20 | மதுரை | 1 | .. | 2 | 3 |
| 21 | தேனி | .. | .. | 1 | 1 |
| 22 | திண்டுக்கல் | 1 | .. | .. | 1 |
| 23 | இராமநாதபுரம் | .. | 1 | 1 | 2 |
| 24 | சிவகங்கை | .. | .. | 2 | 2 |
| 25 | விருதுநகர் | .. | .. | 3 | 3 |
| 26 | திருநெல்வேலி | .. | .. | 3 | 3 |
| 27 | தூத்துக்குடி | 1 | .. | 1 | 2 |
| 28 | கன்னியாகுமரி | .. | .. | 1 | 1 |
| | மொத்தம் | 16 | 3 | 55 | 74 |



## அட்டவணை—4

| வ. எண் | மாவட்டம் | உரப் பரிசோதனை நிலையம் | | நடமாடும் மண் பரிசோதனை நிலையம் | | மண் பரிசோதனை நிலையம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | காஞ்சிபுரம் | | | 1 | காஞ்சிபுரம் |
| 2 | திருவள்ளூர் | | | 1 | திருவள்ளூர் | | |
| 3 | கடலூர் | | | | | 2 | கடலூர் |
| 4 | விழுப்புரம் | 2 | விழுப்புரம் | 2 | விழுப்புரம் | | |
| 5 | வேலூர் | | | | | 3 | மேலாலத்தூர் |
| 6 | திருவண்ணாமலை | | | 3 | திருவண்ணாமலை | | |
| 7 | சேலம் | 3 | சேலம் | | | 4 | சேலம் |
| 8 | நாமக்கல் | | | 4 | நாமக்கல் | | |
| 9 | தர்மபுரி | 4 | தர்மபுரி | | | 5 | தர்மபுரி |
| 10 | கிருஷ்ணகிரி | | | 5 | கிருஷ்ணகிரி | | |
| 11 | கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் | 6 | கோயம்புத்தூர் | 6 | கோயம்புத்தூர் |
| 12 | ஈரோடு | | | 7 | ஈரோடு | 7 | ஈரோடு |
| 13 | திருச்சி | 6 | திருச்சி | | | 8 | திருச்சி |
| 14 | பெரம்பலூர் | | | 8 | பெரம்பலூர் | | |
| 15 | கரூர் | | | 9 | கரூர் | | |
| 16 | புதுக்கோட்டை | | | | | 9 | குடுமியான்மலை |
| 17 | தஞ்சாவூர் | 7 | கும்பகோணம் | | | 10 | ஆடுதுறை |
| 18 | நாகப்பட்டினம் | | | 10 | நாகப்பட்டினம் | | |
| 19 | திருவாரூர் | 8 | திருவாரூர் | 11 | திருவாரூர் | | |
| 20 | மதுரை | 9 | மதுரை | 12 | மதுரை | 11 | மதுரை |
| 21 | தேனி | | | | | 12 | தேனி |
| 22 | திண்டுக்கல் | 10 | திண்டுக்கல் | | | 13 | திண்டுக்கல் |
| 23 | இராமநாதபுரம் | 11 | பரமக்குடி | 13 | பரமக்குடி | 14 | பரமக்குடி |
| 24 | சிவகங்கை | | | | | 15 | சிவகங்கை |
| 25 | விருதுநகர் | | | 14 | அருப்புக்கோட்டை | | |
| 26 | திருநெல்வேலி | | | | | 16 | திருநெல்வேலி |
| 27 | தூத்துக்குடி | 12 | கோவில்பட்டி | 15 | கோவில்பட்டி | 17 | கோவில்பட்டி |
| 28 | கன்னியாகுமரி | 13 | நாகர்கோவில் | 16 | நாகர்கோவில் | 18 | நாகர்கோவில் |
| 29 | ஊட்டி | 14 | ஊட்டி | | | 19 | ஊட்டி |

[2007 ஏப்ரல் 3

## அட்டவணை-5

| வ. எண் | மாவட்டம் | பூச்சிமருந்து ஆய்வகம் | உயிர் உர ஆய்வகங்கள் | உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் | நுண்ணூட்டச் சத்துக்கலவை தயாரிப்பு நிலையம் |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 காஞ்சிபுரம் | | 1 பஞ்சுப்பேட்டை (ஐபிஎம் மையம்) | |
| 2 | கடலூர் | 2 கடலூர் | 1 கடலூர் | | |
| 3 | விழுப்புரம் | | | 2 விழுப்புரம் | |
| 4 | சேலம் | 3 சேலம் | 2 சேலம் | 3 சீலநாய்க்கன் பட்டி | |
| 5 | நாமக்கல் | | | 4 நாமக்கல் | |
| 6 | தர்மபுரி | | | 5 பாப்பாரப்பட்டி | |
| 7 | கோயம்புத்தூர் | 4 கோயம் புத்தூர் | | 6 கோயம் புத்தூர் | |
| 8 | ஈரோடு | 5 ஈரோடு | | 7 பவானி | |
| 9 | திருச்சி | 6 திருச்சி | 3 திருச்சி | 8 திருச்சி | |
| 10 | புதுக்கோட்டை | | 4 குடுமியான் மலை | | 1 குடுமியான் மலை |
| 11 | தஞ்சாவூர் | 7 ஆடுதுறை | 5 சாக் கோட்டை | 9 காட்டுத் தோட்டம் | |
| 12 | மதுரை | 8 மதுரை | | 10 மேலூர் | |
| | | | | 11 வினாயகபுரம் (ஐபிஎம் மையம்) | |
| 13 | இராமநாதபுரம் | | 6 இராமநாத புரம் | | |
| 14 | திருநெல்வேலி | | | 12 பாளையங் கோட்டை | |
| 15 | தூத்துக்குடி | 9 கோவில் பட்டி | | | |



2007 ஏப்ரல் 3]

## அட்டவணை-6

| வ. எண் | மாவட்டம் | உழவர் பயிற்சி நிலையங்கள் | தென்னை நாற்றுப் பண்ணைகள் | பச்சை மஸ்கார்டைன் காளான் உற்பத்தி மையங்கள் | என்பிவி நச்சுயிரி உற்பத்தி மையங்கள்–நிலக்கடலை |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 காஞ்சிபுரம் | 1 பிச்சிவாக்கம் | | 1 காஞ்சிபுரம் |
| 2 | திருவள்ளூர் | | 2 மாதவரம் | | |
| 3 | கடலூர் | | 3 கடலூர் | 1 விருத்தா சலம் | |
| 4 | விழுப்புரம் | 2 திண்டிவனம் | | | |
| 5 | வேலூர் | 3 வேலூர் | 4 நவ்லாக் | | |
| 6 | திருவண்ணா மலை | 4 திருவண்ணா மலை | 5 வாழவச்சனூர் | | |
| 7 | சேலம் | 5 சேலம் | 6 டேனிஷ் பேட்டை | | |
| 8 | நாமக்கல் | 6 நாமக்கல் | | | |
| 9 | தர்மபுரி | 7 தர்மபுரி | | | |
| 10 | கிருஷ்ணகிரி | 8 கிருஷ்ணகிரி | 7 பி.ஜி. புதூர் | | |
| 11 | கோயம் புத்தூர் | | 8 ஆழியார்நகர் | | 2 கோயம் புத்தூர் |
| 12 | ஈரோடு | 9 ஈரோடு | 9 பவானிசாகர் | | |
| 13 | திருச்சி | 10 லால்குடி | 10 திருவரங்கம் | | 3 திருச்சி |
| 14 | பெரம்பலூர் | 11 பெரம்பலூர் | | | |
| 15 | கரூர் | 12 கரூர் | | | |
| 16 | புதுக்–கோட்டை | 13 குடுமியான் மலை | 11 வெள்ளாள விடுதி | | |
| 17 | தஞ்சாவூர் | 14 சாக்–கோட்டை | 12 பட்டுக் கோட்டை | | |
| 18 | நாகப்–பட்டினம் | | 13 மல்லியம் | | |
| 19 | திருவாரூர் | | | | |

| வ. எண் | மாவட்டம் | உழவர் பயிற்சி நிலையங்கள் | தென்னை நாற்றுப் பண்ணைகள் | பச்சை மஸ்கார்டைன் காளான் உற்பத்தி மையங்கள் | என்பிவி நச்சுயிரி உற்பத்தி மையங்கள்-நிலக்கடலை |
|---|---|---|---|---|---|
| 20 | மதுரை | | | | 4. மதுரை |
| 21 | தேனி | 15 தேனி | 14 வைகை அணை | | |
| 22 | திண்டுக்கல் | 16 திண்டுக்கல் | | | |
| 23 | இராமநாத புரம் | 17 பரமகுடி | 15 உச்சிப்புளி<br>16 தேவிப்பட்டினம் | | |
| 24 | சிவகங்கை | 18 சிவகங்கை | 17 சதுர்வேத-மங்கலம் | | |
| 25 | விருதுநகர் | 19 விருதுநகர் | 18 தேவதானம் | | |
| 26 | திருநெல் வேலி | 20 பாளையங் கோட்டை | 19 செங்கோட்டை<br>20 வடகரை | | |
| 27 | தூத்துக்குடி | 21 தூத்துக்குடி | 21 கிள்ளிக்குளம் | | |
| 28 | கன்னியா குமரி | 22 நாகர் கோவில் | 22 புத்தளம் | 2 நாகர் கோவில் | |
| 29 | ஊட்டி | 23 ஊட்டி | | | |

## அட்டவணை-7

| வ. எண் | மாவட்டம் | கரும்பு ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | பருத்தி ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 மதுராந்தகம் | 1 செங்கல்பட்டு | |
| 2 | திருவள்ளூர் | | 2 புட்லூர் | |
| 3 | கடலூர் | 2 விருத்தாசலம் | 3 கடலூர் | |
| 4 | விழுப்புரம் | 3 விழுப்புரம்<br>4 கள்ளக்குறிச்சி<br>5 திண்டிவனம் | | 1 விழுப்புரம் |





| வ. எண் | மாவட்டம் | கரும்பு ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | பருத்தி ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் |
|---|---|---|---|---|
| 5 | வேலூர் | 6 ஆம்பூர்<br>7 குடியாத்தம்<br>8 திருப்பத்தூர் | 4 மேலாளத்தூர்<br>5 வாணியம்பாடி<br>6 நாட்ராம்பள்ளி (திருப்பத்தூர்) | |
| 6 | திருவண்ணாமலை | 9 திருவண்ணாமலை | | |
| 7 | சேலம் | 10 மோகனூர் | 7 சுக்கம்பட்டி | |
| 8 | நாமக்கல் | | 8 பரமத்திவேலூர் | |
| 9 | தர்மபுரி | 11 பாப்பாரப்பட்டி | 9 தர்மபுரி | |
| 10 | கிருஷ்ணகிரி | | | |
| 11 | கோயம்புத்தூர் | 12 உடுமலைப்பேட்டை | 10 பொள்ளாச்சி | |
| 12 | ஈரோடு | 13 கோபி | 11 கோபி | 2 கோபி |
| 13 | திருச்சி | 14 லால்குடி | 12 திருச்சிராப்பள்ளி | |
| 14 | பெரம்பலூர் | 15 பெரம்பலூர் | | |
| 15 | கரூர் | 16 கரூர்<br>17 குளித்தலை | | |
| 16 | புதுக்கோட்டை | | | |
| 17 | தஞ்சாவூர் | 18 தஞ்சாவூர் | 13 தஞ்சாவூர் | |
| 18 | நாகப்பட்டினம் | 19 மயிலாடுதுறை | | |
| 19 | திருவாரூர் | | | |
| 20 | மதுரை | 20 மேலூர் | 14 மதுரை (வ) | 3 மேலூர் |
| 21 | தேனி | | | |
| 22 | திண்டுக்கல் | 21 நிலக்கோட்டை | | |
| 23 | இராமநாதபுரம் | | 15 உச்சிப்புளி | |
| 24 | சிவகங்கை | | 16 சிங்கம்புணரி | |
| 25 | விருதுநகர் | | 17 தேவதானம் | |
| 26 | திருநெல்வேலி | | 18 செங்கோட்டை | |
| 27 | தூத்துக்குடி | | 19 உடன்குடி | |
| 28 | கன்னியாகுமரி | | 20 நாகர்கோவில் | |
| 29 | ஊட்டி | | | |

[2007 ஏப்ரல் 3

## அத்தியாயம்-3
## தோட்டக்கலை

தமிழ்நாட்டில் உள்ள ஏழு வகையான தட்பவெட்ப சூழ்நிலைகள் மற்றும் மண்வளம், பழங்கள், காய்கறிகள் மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்கள் பயிர் செய்ய ஏற்றதாக உள்ளது. மேலும் தமிழ்நாடு மலர்கள் உற்பத்தியில் நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது.

ஏறக்குறைய 8.90 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பல தோட்டக் கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தோட்டக்கலைப் பயிர்களின் மொத்த உற்பத்தி 111.26 இலட்சம் மெட்ரிக் டன்களாகும்.

பழங்கள், காய்கறிகளில் உள்ள சத்துக்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளதால், காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களின் தேவை அதிகரித்துள்ளது. சாகுபடியில் உயர்சாகுபடி தொழில்நுட்பங்கள் பயன்படுத்தி ஆண்டுதோறும் குறிப்பிடத்தக்க அளவில் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகளின் வருமானம் அதிகரித்துள்ளது. எனவே, விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்ய அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் விவரம் :

(பரப்பு: இலட்சம்-எக்டேரில், உற்பத்தி: இலட்சம் மெட்ரிக் டன்னில், உற்பத்தித் திறன்: மெட்ரிக் டன்/எக்டேர்.)

| | 2000-2001 | | | 2005-06 | | | 2006-07 (தற்காலிகம்) | | | 2007-08 (மதிப்பிடப்பட்டது) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் மற்றும் பயிர் வகை | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் |
| 1 பழங்கள் | 2.23 | 40.06 | 17.96 | 2.58 | 57.79 | 22.40 | 2.80 | 62.85 | 22.46 | 3.02 | 67.87 | 22.49 |
| 2 காய்கறிகள் | 2.20 | 59.39 | 26.99 | 2.34 | 65.47 | 28.12 | 2.52 | 71.04 | 30.90 | 2.72 | 76.72 | 32.00 |
| 3 நறுமண கலவைப் பொருட்கள் | 1.68 | 6.62 | 3.94 | 1.30 | 7.84 | 6.02 | 1.55 | 8.70 | 5.62 | 1.67 | 9.39 | 5.64 |
| 4 மலைப் பயிர்கள் | 2.20 | 7.73 | 3.51 | 2.37 | 8.06 | 3.40 | 2.56 | 10.53 | 4.11 | 2.76 | 11.38 | 4.13 |
| 5 மலர்கள் | 0.19 | 1.45 | 7.75 | 0.25 | 2.02 | 8.18 | 0.27 | 2.18 | 8.16 | 0.29 | 2.35 | 8.17 |
| 6 மூலிகைப்பயிர் | 0.01 | 0.02 | 0.02 | 0.06 | 0.08 | 1.42 | 0.06 | 0.12 | 2.00 | 0.06 | 0.13 | 2.10 |
| மொத்தம் (அனைத்துப் பயிர்கள்) | 8.51 | 115.27 | 13.55 | 8.90 | 141.26 | 15.89 | 9.76 | 155.42 | 15.92 | 10.52 | 167.84 | 15.96 |



2007 ஏப்ரல் 3]

### 2. மாநிலத் திட்டங்கள்

### 2.1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டம் தமிழ்நாட்டில் சென்னையைத் தவிர இதர 29 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தரமான நடவுச் செடிகள், வீரிய ஒட்டுக் காய்கறி விதைகள் 50 சத மானிய விலையில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டம் 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.264.340 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ.280.820 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடர்வதற்கு முன்மொழியப்பட உள்ளது.

### 2.2. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள்

உதகை, தாவரவியல் பூங்கா உட்பட இத்துறையின்கீழ் 51 அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் 4 பூங்காக்கள் இயங்கிவருகின்றன. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் தரமான நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு திட்டங்களின்கீழ் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்பண்ணைகள் அப்பகுதி விவசாயிகளுக்கு மாதிரி செயல்விளக்கப் பண்ணைகளாகவும் விளங்குகின்றன. தாவரவியல் பூங்கா மற்றும் இதர பூங்காக்கள் மாணவர்களின் கல்விக்குப் பயனுள்ளதாகவும், பொதுமக்களுக்குச் சுற்றுலாத் தலமாகவும் உள்ளன.

2007-2008 ஆம் நிதியாண்டில் இத்தோட்டக்கலைப் பண்ணைகளின் மூலம் 96 இலட்சம் எண்கள் பல்வேறு வகையான நடவுச் செடிகள் அதாவது பழங்கள், மலர்கள், நறுமணப் பயிர்கள், அலங்காரச் செடிகள், பொருளாதாரச் செடிகள், மருத்துவ மற்றும் வாசனைப் பயிர்கள் உற்பத்தி செய்து விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 2.3. தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள்

இத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை, திருவள்ளூர் மாவட்டம் மாதவரம், கிருஷ்ணகிரி மாவட்டம் தளி மற்றும் நீலகிரி மாவட்டம் விவசாயிகள் பயிற்சி மையம் ஆகியவற்றில் விவசாயிகளுக்குப் பயிற்சியளிப்பதோடல்லாமல், களப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2006-2007 ஆம் நிதி ஆண்டில் 1500 விவசாயிகளுக்கும், 600 களப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. 2007-2008 ஆம் நிதி ஆண்டில் 2000 விவசாயிகளுக்கும், 600 களப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட உள்ளது.

[2007 ஏப்ரல் 3

## 2.4. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், திருச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பழங்குடி விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் தரமான நடவுச் செடிகள், காய்கறி விதைகள் விநியோகிக்கப்படுகின்றன. உயர் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்க சுற்றுலா மூலம் பயிற்சி மையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு 2472 பழங்குடி விவசாயிகள் பயனடைய உள்ளனர். இத்திட்டம் 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ.11.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடரப்பட உள்ளது.

## 2.5. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், கோயம்புத்தூர், ஈரோடு திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலைப் பயிர்ச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு 25 சதவீத மானியத்தில் தரமான நடவுச் செடிகள் மற்றும் இதர தோட்டக்கலை இடுபொருட்கள் வழங்கப்பட்டன. இத்திட்டம் 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.59.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ.62.630 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடரப்பட உள்ளது.

## 2.6. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்மூலம் பழங்களின் தரமான நடவுச் செடிகள், உயர் விளைச்சல் காய்கறி விதைகள், நறுமணப் பயிர்களின் நடவுச் செடிகள், பண்ணைக் கருவிகளான தெளிப்பான் மற்றும் ஆயில் இன்ஜின் ஆகியன 25 சத மானியத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இத்திட்டம் 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.278.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ.314.930 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடரப்பட உள்ளது.



2007 ஏப்ரல் 3]

## 2.7. பகுதி-2 திட்டங்கள்

2006-2007 ஆம் நிதி ஆண்டில் 11 அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.10.02 இலட்சம் பகுதி II திட்டங்களின்கீழ் செலவிடப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டம் ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடரப்பட உள்ளது.

## 2.8. நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் சென்னை நகர்வாழ் மக்களுக்குச் செடிகள், உரம் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விநியோகிக்கப்படுகின்றன. அத்துடன் தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. 2006-2007 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டம் ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடரப்பட உள்ளது.

## 2.9. தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் (ஏழு மாவட்டங்களில்)

வேலூர், ஈரோடு, மதுரை, தேனி, திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் செயல்படுத்திட அரசு 2005-2006 ஆம் நிதி ஆண்டில் ரூ.992.950 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டம் 2006-2007 ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஓராண்டு பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்கள் 735 எக்டேர் பரப்பளவில் துல்லிய பண்ணைய முறையில் பயிரிடப்படும். 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ.721.375 இலட்சம் நிதியில் இத்திட்டம் சேலம், நாமக்கல், திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர், விழுப்புரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் தோட்டக்கலைத் துறையால் தொடரப்பட உள்ளது.

## 3. மாநில மற்றும் மைய அரசுகளிடையே பகிர்வு பெறும் திட்டங்கள்

நுண்ணீர்ப் பாசனம் (மத்திய அரசு 80 சதவிகிதம் மற்றும் மாநில அரசு 20 சதவிகிதம்)

இத்திட்டத்தின்கீழ் நுண்ணீர்ப் பாசன முறைகளான சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்புநீர்ப் பாசன முறைகள் தோட்டக்கலை பயிர்களில் மேம்படுத்த 50 சத மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு பயனாளிக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைக்க அதிகபட்சமாக 5 எக்டேர் வரை மானியம் வழங்கப்படும். 2006-2007 ஆம் நிதியாண்டில்

ரூ.74.10 கோடி நிதியில் 61,090 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2007-2008 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டம் ரூ.104.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,30,100 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 29 மாவட்டங்களில் (சென்னையை தவிர) அம்மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட இயக்கக் குழுக்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் நீரின் தேவையை 40 விழுக்காடு குறைத்து கரும்புப் பயிரை வறட்சியில் இருந்து காக்கவல்ல உரசத்து கலந்த நுண்ணீர்ப் பாசன முறை 74,100 ஏக்கர் பரப்பளவில் 50 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்படும்.

## 4. இந்திய அரசின் முழு பங்குத் திட்டங்கள்

### தேசிய தோட்டக்கலை இயக்கம்

தமிழகத்தில் தோட்டக்கலையின் உன்னத வளர்ச்சிக்காக இவ்வியக்கம் பொருத்தமான இரகங்களைத் தேர்ந்தெடுத்து நடுதல், உயர் வேளாண் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்தல், அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி, பதனிடுதல், மற்றும் வணிகத் தொடர்புகள் முதலியவற்றை உள்ளடக்கியதாகும். தமிழ்நாட்டில் கோவை, ஈரோடு, சேலம், நீலகிரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, கடலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சி, சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 14 மாவட்டங்களில் தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் மா, நெல்லி, வாழை, முந்திரி, மிளகாய், மஞ்சள், மணமூட்டும் பயிர்கள் மற்றும் மலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சாகுபடிப் பரப்பு அதிகரிக்கப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டம் ரூ.46.00 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. 2007-2008 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டம் ரூ.98.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 77,300 ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும், இத்திட்டம் மாநில அரசின் பங்கீடாக 15 சதவிகித நிதி உதவியுடனும் மற்றும் மத்திய அரசின் பங்கீடாக 85 சதவிகித நிதி உதவியுடனும் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் மாவட்ட இயக்கக் குழு மூலம் செயல்படுத்தப்படுகிறது. தோட்டக்கலை உதவி இயக்குநர் இக்குழுவின் உறுப்பினர்-செயலாளர் ஆவார்.



## 5. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (TANHODA)

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை 18-06-2004 அன்று அமைக்கப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த இவ்வமைப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஆளுகைக் குழு உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| **வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வேளாண்மைத் துறை** | – | **தலைவர்** |
| **ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை** | – | **உறுப்பினர் செயலாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர்.** |
| **ஆணையர், வேளாண்மைத் துறை** | – | **உறுப்பினர்** |
| **ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை** | – | **உறுப்பினர்** |
| **இயக்குநர், ஊரக வளர்ச்சி துறை** | – | **உறுப்பினர்** |
| **தலைமைப் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை** | – | **உறுப்பினர்** |
| **தலைவர் (தோட்டக்கலை), வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்** | – | **உறுப்பினர்** |
| **நிதித் துறையின் பிரதிநிதி** | – | **உறுப்பினர்** |

தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்ணீர்ப் பாசனம், துல்லிய பண்ணையம் மற்றும் தேசிய மூங்கில் இயக்கம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் சிறப்பு நோக்க ஊர்தியாக தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை செயல்படுகிறது.

## 6. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் வரையறுக்கப்பட்டது (TANHOPE)

தமிழ்நாட்டில் காய்கறி உற்பத்தி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம், 1995 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ஒரு தொடக்கக் கூட்டுறவுச் சங்கமாகும். இச்சங்கம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன் கீழ் பதிவு செய்யப்பட்டது. 18-1-1995 முதல் செயல்பட்டு வருகிறது. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையர் இதன் தனி அலுவலராகவும், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் இதன் நிர்வாக இயக்குநராகவும் உள்ளார்கள்.

**இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்கள்**

1. தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியை ஊக்குவிப்பது.
2. பழங்கள், காய்கறிகளை நவீன முறையில் விநியோகம் செய்ய வழிவகை செய்யும் வகையில் தரம் பிரித்தல் மற்றும் ஏற்றுமதிக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
3. கூட்டுறவு முறையில் சில்லறை விற்பனைக் கடைகள்மூலம் விற்பனை மேற்கொள்ளுதல் மற்றும் பதனிடப்படும், பதனிடப்படாமலும் உள்ள பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்தல்.

இதுவரையில் 3904 தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் உறுப்பினர் சந்தாவாக ஒரு விவசாயி ரூ.100 செலுத்தி இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

**செயல்பாடுகள்**

தோட்டக்கலை பயிர் வளர்ப்போர்களிடமிருந்து பழங்கள் மற்றும் காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவனங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றிற்கு நியாயமான விலையில் விநியோகம் செய்வதுடன் சில்லறைக் கடைகளிலும் விற்பனை செய்தல்.

தற்பொழுது உழவர் சந்தைகள் மூலமாக விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவிடும் வகையில் உழவர் சந்தையின் பணிகளை ஊக்குவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உயர்தர பழங்கள் மற்றும் காய்கறிகள் இச்சங்க உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்ய 24 சில்லறை விற்பனை கடைகள் (நகரும் /நிலையான) சென்னை நகரில் தொடங்க 2007-2008 ஆம் நிதி ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

## 7. நீர்வள நிலவளத் திட்டம்

தோட்டக்கலைத் துறை, நீர்வள நிலவளத் திட்டத்தினை நடப்பு ஆண்டான 2007-2008-ல் செயல்படுத்த உத்தேசித்துள்ளது. சுமார் 1,700 ஹெக்டேர் பரப்பில் ரூ.529.34 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 9 ஆற்றுப் படுகைகளில் செயல்படுத்தப்படவுள்ளது.





## 8. இலக்கு மற்றும் சாதனை

மாநில அரசுத் திட்டங்கள், மாநில-மைய அரசுப் பகிர்வு முறைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான 2006-2007 ஆம் நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் 2007-2008 ஆம் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

### 8.1. மாநிலத் திட்டங்கள்

நிதி: அலகு: ரூபாய் இலட்சங்களில்

| வ. எண் | திட்டங்களின் பெயர் | அலகு | 2006-07 | | | | 2007-08 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | பொருள் | நிதி |
| | | | இலக்கு | சாதனை 28-2-07 வரை | இலக்கு | சாதனை 28-2-07 வரை | இலக்கு | இலக்கு |
| 1 | ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் | எக். | 16802 | 15529 | 266.340 | 214.106 | 17000 | 280.820 |
| 2 | அரசு தோட்டக்கலை பண்ணை | இலட்சம் எண்கள் | 95 | 58.59 | 593.080 | 505.610 | 96 | 773.000 |
| 3 | தோட்டக்கலை பயிற்சி மையம் | எண்கள் | 2100 | 1970 | 11.050 | 4.236 | 2600 | 20.750 |
| 4 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் | எக். | 896 | – | 40.000 | 0.000 | 900 | 42.640 |
| 5 | மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம் | எக். | 340 | 338 | 59.00 | 23.885 | 400 | 62.630 |
| 6 | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | எக். | 5677 | 4400 | 278.250 | 132.232 | 6000 | 344.930 |
| 7 | தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் | எக். | 735 | 213.2 | 992.95 | 145.130 | 735 | 724.375 |
| 8 | பகுதி-2 திட்டங்கள் | எண்கள் | 11 | 10 | 40.020 | 34.000 | – | 15.000 |
| 9 | நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம் | எண்கள் | 100 | 80 | 3.000 | 2.434 | 100 | 3.000 |
| | மொத்தம் | | – | – | 2284.690 | 1061.633 | – | 2267.145 |

[2007 ஏப்ரல் 3

## 8.2 மத்திய மற்றும் மாநில அரசு பகிர்வு பெறும் திட்டங்கள்

பொருள் அலகு : ஏக்கரில் | நிதி அலகு : ரூபாய் கோடியில்

| வ. எண் | திட்டங்களின் பெயர் | 2006-2007 | | | | 2007-2008 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பொருள் | | நிதி | | பொருள் | நிதி |
| | | இலக்கு | சாதனை 28-2-2007 வரை | இலக்கு | சாதனை 28-2-2007 வரை | இலக்கு | இலக்கு |
| 1 | நுண்ணீர்ப் பாசனம் | 61090 | 15073 | 74.10 | 0.73 | 1,30.100 | 104.00 |

## 8.3. மத்திய அரசு முழு நிதி உதவிபெறும் திட்டங்கள்

பொருள் அலகு: ஏக்கரில் | நிதி அலகு: ரூபாய் கோடியில்

| வ. எண் | திட்டங்களின் பெயர் | 2006-2007 | | | | 2007-2008 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பொருள் | | நிதி | | பொருள் | நிதி |
| | | இலக்கு | சாதனை 28-2-2007 வரை | இலக்கு | சாதனை 28-2-2007 வரை | இலக்கு | இலக்கு |
| 1 | தேசிய தோட்டக் கலை இயக்கம் | 22,506 | 12,924 | 46.00 | 18.37 | 77,300 | 98.00 |

## 9. 2007–2008ஆம் நிதி ஆண்டிற்கான திட்டத்தின் முக்கியக் கோட்பாடுகள் :

(i) நுண்ணீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடுதல் உள்ளிட்ட உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை முறைகள் மேம்படுத்தப்படும்.

(ii) ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை/ ஒருங்கிணைந்த உர மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(iii) உயர் தொழில்நுட்பம்/ திசு வளர்ப்பு மேம்படுத்தப்படும்.

(iv) தோட்டக்கலை சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

(v) மா, திராட்சையில் இடைப் பருவக் காய்ப்பு முறைகள் செயல்படுத்தப்படும்.

(vi) தரமான நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்படும்.

(vii) ஏற்றுமதிக் கண்ணோட்டத்துடன் இயற்கைப் பண்ணையம் மேம்படுத்தப்படும்.



2007 ஏப்ரல் 3].

(viii) குறிப்பிட்ட பயிர்களுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்கப்படும்.

(ix) தனியார் மற்றும் அரசுக் கூட்டுமுறைப பங்களிப்பு ஊக்குவிக்கப்படும்.

(x) ஒப்பந்த மற்றும் கூட்டாண்மைப் பண்ணையம் மேம்படுத்தப்படும்.

(xi) சுற்றுலாவுடன் கூடிய பயிற்சியின்மூலம் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்படும்.

(xii) விரிவாக்க அலுவலர்களுக்கு அதிகத் திறன் கொண்ட பயிற்சியின்மூலம் மனித வளம் மேம்படுத்தப்படும்.

(xiii) அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## இணைப்பு

### அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரம்

| வ. எண் (1) | மாவட்டம் (2) | இருப்பிடம் (3) | பரப்பு (எக்டேர்) (4) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 12.00 |
| 2 | கோயம்புத்தூர் | கல்லார் | 8.72 |
| 3 | கோயம்புத்தூர் | கண்ணம்பாளையம் | 27.66 |
| 4 | கடலூர் | நெய்வேலி | 40.48 |
| 5 | கடலூர் | விருத்தாச்சலம் | 10.53 |
| 6 | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 9.89 |
| 7 | தருமபுரி | ஜீனூர் | 122.38 |
| 8 | திண்டுக்கல் | கொடைக்கானல் | 5.16 |
| 9 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா, கொடைக்கானல் | 8.30 |
| 10 | திண்டுக்கல் | தாண்டிக்குடி | 5.45 |
| 11 | திண்டுக்கல் | ரெட்டியார்சத்திரம் | 5.33 |

[2007 ஏப்ரல் 3

| வ. எண் (1) | மாவட்டம் (2) | இருப்பிடம் (3) | பரப்பு (எக்டேர்) (4) |
|---|---|---|---|
| 12 | திண்டுக்கல் | சிறுமலை | 202.47 |
| 13 | காஞ்சிபுரம் | ஆத்தூர் | 12.24 |
| 14 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் | 22.96 |
| 15 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் | 42.12 |
| 16 | காஞ்சிபுரம் | மேலொட்டிவாக்கம் | 20.36 |
| 17 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 12.80 |
| 18 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை | 6.07 |
| 19 | நாமக்கல் | செம்மேடு | 11.62 |
| 20 | நாமக்கல் | படசோலை | 28.14 |
| 21 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 118.68 |
| 22 | புதுக்கோட்டை | மாபெரும் பழப்பண்ணை, வல்லத்திராக்கோட்டை | 521.20 |
| 23 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் | 53.02 |
| 24 | சேலம் | ஏற்காடு | 10.12 |
| 25 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை, கருமந்துறை | 419.77 |
| 26 | சேலம் | மணியார்குண்டம் | 100.00 |
| 27 | சேலம் | காய்கறி விதை உற்பத்தி மையம், கருமந்துறை | 5.49 |
| 28 | சேலம் | கருமந்துறை | 39.35 |
| 29 | சேலம் | முள்ளுவாடி | 48.20 |
| 30 | சேலம் | சிறுமலை (அறுநாத்துமலை) | 8.10 |
| 31 | சிவகங்கை | தேவக்கோட்டை | 81.20 |
| 32 | சிவகங்கை | நேமம் | 38.77 |
| 33 | தஞ்சாவூர் | ஆடுதுறை | 8.80 |
| 34 | தஞ்சாவூர் | மருங்குளம் | 10.58 |
| 35 | நீலகிரி | பர்லியார் | 6.25 |
| 36 | நீலகிரி | காட்டேரி | 18.96 |
| 37 | நீலகிரி | குன்னூர் | 4.05 |



2007 ஏப்ரல் 3]

| வ. எண். (1) | மாவட்டம் (2) | இருப்பிடம் (3) | பரப்பு (எக்டேர்) (4) |
|---|---|---|---|
| 38 | நீலகிரி | பழவியல் நிலையம், குன்னூர் | 6.52 |
| 39 | நீலகிரி | குன்னூர், சிம்ஸ் பூங்கா | 12.14 |
| 40 | நீலகிரி | தொட்டபெட்டா | 4.00 |
| 41 | நீலகிரி | தும்மனட்டி | 9.80 |
| 42 | நீலகிரி | விஜயநகரம் | 14.40 |
| 43 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா, உதகை | 22.00 |
| 44 | நீலகிரி | நஞ்சநாடு | 85.18 |
| 45 | நீலகிரி | தேவாலா | 80.00 |
| 46 | தேனி | பெரியகுளம் | 9.31 |
| 47 | திருவள்ளூர் | மாதவரம் | 5.76 |
| 48 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 40.43 |
| 49 | திருநெல்வேலி | குற்றாலம் | 14.89 |
| 50 | கரூர் | முதலைப்பட்டி | 23.96 |
| 51 | வேலூர் | தகரக்குப்பம் | 34.40 |
| 52 | வேலூர் | கூடப்பட்டு | 10.40 |
| 53 | வேலூர் | நவ்லாக் | 84.45 |
| 54 | விருதுநகர் | பூவாணி | 9.57 |
| 55 | விருதுநகர் | மாபெரும் பழப்பண்ணை, ஸ்ரீவில்லிபுத்தூர் | 46.27 |
| | | | 2620.70 |

## அத்தியாயம்–4

## வேளாண்மைப் பொறியியல்

### 1. முன்னுரை

தமிழ்நாட்டின் நிலம் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டுள்ளது. வேளாண் உற்பத்தியைத் தொடர்ந்து அதிகரிப்பதற்கான பங்களிப்பில் "நீர்வடிப் பகுதி மேலாண்மை" மற்றும் "பாசன நீர் மேலாண்மை" ஆகியன இத்துறையின் இரு முக்கியக் குறிக்கோள்கள் ஆகும். மேலும், விவசாயிகள் மத்தியில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பயன்பாட்டினைப் பிரபலப்படுத்திட மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது.

### 2. நீர்வடிப் பகுதி மேலாண்மை

#### 2.1. நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் (மத்திய, மாநில அரசுத் திட்டம் 90:10)

நீர்த் தேக்கங்களில் வண்டல் சேர்வதைக் குறைத்திட அண்டை மாநிலங்களுடன் நீர்ப் பங்கீடு உள்ள நதிப் பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தமிழக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய மண் மற்றும் நிலப் பயன்பாட்டு அளவை நிறுவனம் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்தி, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள நீர்வடிப் பகுதிகளில், ஒவ்வொரு நீர்வடிப் பகுதி வாரியாக பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 90:10 என்ற விகிதத்தில், செயல்படுத்தப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நதிப் பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 7,910 எக்டேர் பரப்பில் ரூ.970.85 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2007 வரை, 7,070 எக்டேர் பரப்பில் ரூ.801.30 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை மேற்கண்ட திட்டப் பகுதிகளில் 10,000 எக்டேர் நிலப்பரப்பில் ரூ. 1,250.00 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



#### 2.2. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் (மாநில அரசுத் திட்டம்)

பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளை ஒருங்கிணைத்து முன்னேற்றம் காணும் வகையில் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள ஜவ்வாது மலைப் பகுதி, சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள கல்ராயன் மலைப் பகுதி, சேலம் மாவட்டத்திலுள்ள சேர்வராயன் மலைப் பகுதி, தருமபுரி மாவட்டத்தில் உள்ள சித்தேரி மலைப் பகுதி, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலைப் பகுதி, திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சை மலைப் பகுதி ஆகிய பகுதிகளில் வாழும் பழங்குடி விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இப்பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் நிலச் சமன்பாடு, சம உயர கல் வரப்புகள் தாவர வேலிகள் மற்றும் தடுப்பு அணைகள் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 100 விழுக்காடு அரசு மானியத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், மேம்படுத்தப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்யவும் வழி வகுக்கிறது 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் பழங்குடி விவசாயிகளின் நிலங்களில் 896 எக்டேர் பரப்பில் ரூ.138.00 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2007 வரை 846 எக்டேர் பரப்பில் ரூ. 123.57 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 700 எக்டேர் பரப்பில் ரூ.150.00 இலட்சம் செலவில் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

#### 2.3. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் (மாநில அரசுத் திட்டம்)

ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாடு அடிப்படையில் நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். நீலகிரி மாவட்டம் 75 நீர்வடிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்வடிப் பகுதிகளில், முன்னுரிமை நீர்வடிப் பகுதிகளில், மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் நிலச்சரிவுத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் பயனாளிகளின் பங்காக 10 விழுக்காடு பெறப்படுகிறது. சமுதாயப் பணிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகளின்

பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் 5 விழுக்காடு பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. மீதச் செலவு அரசினால் ஏற்கப்படுகிறது. நிலச்சரிவுத் தடுப்புப் பணிகள் அரசின் 100 விழுக்காடு மானியத்தில் செயல்படுத்தப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ. 395.00 இலட்சம் செலவில் 311 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளவும் 1,093 கட்டுமானங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2007 வரை ரூ. 217.55 இலட்சம் செலவில் 306 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1,000 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.114.86 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 2.4. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் (மாநில அரசுத் திட்டம்)

கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் நீர்வடிப் பகுதி அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் பயனாளிகளின் பங்காக 10 விழுக்காடு பெறப்படுகிறது. சமுதாயப் பணிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன உழவர்களின் பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான செலவில் 5 விழுக்காடு பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. மீதச் செலவு அரசினால் ஏற்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.581.30 இலட்சம் செலவில் 1,561 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளவும் 1,683 கட்டுமானங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2007 வரை ரூ. 129.89 இலட்சம் செலவில் 1,275 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1,489 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 677.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 2.5. மழைநீர் சேகரிப்பு மற்றும் மழைநீர் மேலாண்மைப் பணிகள் (மாநில அரசுத் திட்டம்)

நிலத்தடி நீர் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. கிணற்றுப் பாசனப்



பகுதிகளில் மழைநீரைச் சேகரித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கு நவீன தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்படுகின்றன. நீர்வடிப் பகுதிகளில் மண்ணின் ஈரத்தன்மையைக் காத்து அதிகப் பரப்பில் விவசாயம் மேற்கொள்ளும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 3,321 மழைநீர் சேகரிப்புக் கட்டுமானப் பணிகள் ரூ.16.28 கோடி செலவில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2007 வரை 2,972 மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் ரூ.12.00 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைப்பெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ. 16.54 கோடி செலவில் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.6. நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் மழைநீர் சேகரிப்புப் பணிகள்

நீர்வடிப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பின்மூலம் மண்ணின் ஈரப் பதத்தை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டின் 19 மாவட்டங்களில் 249 நீர்வடிப் பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்ட, ரூ.4,781.47 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு அரசினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1,970 மழைநீர் சேகரிப்புக் கட்டுமானப் பணிகள் ரூ.1,101.00 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

## 3. நீர் மேலாண்மை

### 3.1. பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் (மத்திய, மாநில அரசுத் திட்டம் 50:50)

கால்வாய்மூலம் பாசனம் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் நீர் உபயோகிக்கும் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்சமயம், இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், 50:50 என்ற விகிதத்தில், காவிரிப் பாசனப் பகுதி, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், தாமிரபரணி நீர்த்தேக்கத் திட்டம், கடனா-ராமாநதி நீர்ப்பாசனத் திட்டம், நம்பியாறு ஆற்றுப்படுகைத் திட்டம், பச்சையாறு ஆற்றுப்படுகைத் திட்டம், மணிமுத்தாறு நீர்ப்பாசனத் திட்டம், ஆனைமடுவு திட்டம், சின்னாறு நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் மருதாநதி திட்டம் முதலியன பாசனப் பகுதிகளில்

செயல்படுத்தப்படுகின்றது. 2006-2007 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டுள்ள பாசனப் பகுதிகளில், ரூ.5,588.16 இலட்சம் செலவில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2007 வரை ரூ.1,131,36 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்க, மதகுக்குக் கீழ், பாசனம் பெறும் நிலங்களுக்குப் பாசன நீர் மேலாண்மை உத்திகளை வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்துகின்றது. பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2007-2008-ல், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.

### 3.1.1. புல வாய்க்கால்கள் அமைத்தல்

தலைமடை விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்வதோடு, கடைமடை விவசாயிகளுக்கு உரிய பாசன நீரை வழங்கிடவும் புல வாய்க்கால் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மதகின் கீழ் பாசனம் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் இதன்மூலம் பாசன நீரைப் பங்கிட்டு வழங்கிட வழிவகை செய்யப்படுகிறது. காவிரிப் பாசனப் பகுதி உள்ளிட்ட அனைத்துப் பாசனப் பகுதிகளிலும் புதிய ஆயக்கட்டுப் பகுதிக்கு ஒரு எக்டேருக்கு ரூ.10,000/- வீதம் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. காவிரிப் பாசனப் பகுதியின் பழைய ஆயக்கட்டுப் பகுதியில் எக்டேருககு ரூ.1,100/- வீதம் புல வாய்க்கால் அமைக்கும் பணிகள் செயல்படுததப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் 35,120 எக்டேர் பரப்பில் ரூ. 3,919.17 இலட்சம செலவில் இப்பணிகள் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2007 வரை 29,743 எக்டேர் பரப்பில் ரூ.3,011.22 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 27,620 எக்டேர் பரப்பில் ரூ.3,912.38 இலட்சம் செலவில் இப்பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.

### 3.1.2. புல வடிகால்கள் அமைத்தல்

பாசனப் பகுதியில் அதிகமாகத் தேங்கும் பாசன நீரை வெளியேற்றுவதற்காக வயல்களிலிருந்து பொது வடிகால்கள் வரை புல வடிகால்கள் அமைக்கப்படுகின்றன. இந்த இனத்தின்கீழ் மண்வேலை, வண்டிப் பாதைப் பாலங்கள் போன்ற அமைப்புகளுக்கென அலகுத் தொகையாக எக்டேருக்கு ரூ.1,000/- என்ற அளவில் தொகை



செலவிடப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் 10,000 எக்டேர் பரப்பி ரூ.1,205.00 இலட்சம் செலவில் இப்பணிகள் செயல்படுத்தி திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2007 வரை 10,230 எக்டேர் பரப்பி ரூ. 1,156.15 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 51,800 எக்டேர் பரப்பில் ரூ.1,551.00 இலட்சம் செலவில் இப்பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிடப்படவுள்ளது.

### 3.1.3. சுழற்சி முறை நீர்ப்பாசனம்

சுழற்சி முறை நீர்ப்பாசனம அல்லது வாரபந்தி என்பது, விவசாயிகளின் நிலப் பரப்பிற்கு ஏற்ப நீரைப் பகிர்ந்து பாசனம் செய்வது ஆகும். இந்தச் சுழற்சி முறைப் பாசனத்திற்கான கால அட்டவணை, வேளாண் பொறியியல் துறைமூலம் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் முடிவுற்ற பகுதிகளுக்குத் தயாரிக்கப்பட்டு விவசாயிகளிடம் வழங்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில், கீழ்பவானித் திட்டம், காவிரிப் பாசனப் பகுதித் திட்டம் மற்றும் பெரியாறு வைகை பாசனத் திட்டம் ஆகிய பகுதிகளில் முதன்முதலாகச் சுழற்சி முறை நீர்ப்பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2006-2007 ஆம் ஆண்டில் 44,540 எக்டேர் பரப்பில் ரூ.133.620 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2007 வரை 35,753 எக்டேர் பரப்பில் ரூ.94.06 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 44,540 எக்டேர் பரப்பில் ரூ.133.620 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்படும்.

### 3.1.4. விவசாயிகள் பங்கேற்புடன் பாசன மேலாண்மை

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் விவசாயிகளின் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையில், மதகு அளவில் விவசாயச் சங்கங்கள், பிரிவு கால்வாய் அளவில் விவசாய சபைகள் மற்றும் திட்ட அளவில் விவசாயிகள் பேரவை அமைக்கப்படுகின்றன. இதுவரை 3 விவசாயப் பேரவைகள், 1,136 விவசாய சபைகள் மற்றும் 9,177 விவசாய சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2006-2007 ஆம் ஆண்டில் 110 விவசாய சபைகள் மற்றும் 220 விவசாய சங்கங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 120 விவசாய சபைகளும், 230 விவசாய சங்கங்களும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.1.5. செயல்பாட்டு மானியம்

விவசாய சங்கங்கள், சபைகள் நீண்ட காலம் நிலை பெற்றிருப்பதற்காகவும், உருவாக்கப்பட்டுள்ள கட்டுமானங்களைப் பராமரிக்கவும், சமமான நீர்ப் பங்கீட்டிற்கான சுழற்சிமுறைப் பாசனத் திட்டத்தைத் தொடர்வதற்காகவும் பதிவு செய்யப்பட்ட விவசாய சபைகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.540/- வீதம் செயல்பாட்டு மானியமாக நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிதியுதவியினைப் பெறுவதற்கு விவசாயிகள் எக்டேருக்கு ரூ.60/- வீதம் தங்கள் பங்காகக் கொடுக்க வேண்டும். இதுவரை பதிவு செய்யப்பட்ட 1,136 விவசாய சபைகளில் (Farmers Councils) 771 விவசாய சபைகளுக்கு மார்ச் 2006 வரை செயல்பாட்டு மானியமாக ரூ.1,845.99 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் 150 விவசாய சபைகளுக்கு செயல்பாட்டு மானியமாக ரூ.300.38 இலட்சம் வழங்கத் திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2007 வரை செயல்பாட்டு மானியமாக ரூ.169.92 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு மானியத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 120 விவசாய சபைகளுக்கு செயல்பாட்டு மானியமாக ரூ.250.00 இலட்சம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2. நுண்ணிய நீர்ப் பாசனம் (மத்திய, மாநில அரசுத் திட்டம் 80 : 20)

கிணற்றுப் பாசனத்தின் நெருக்கடியைக் குறைக்கவும், பாசன நீரை முறையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்தவும் தமிழ்நாட்டில் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் வேளாண்மைப் பொறியியல் துறையினால் 1985-1986 ஆம் ஆண்டு முதல் விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றது. 2006-2007 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின்கீழ் அமைந்துள்ள பாசனப் பகுதிகள் மற்றும் நீர்வடிப் பகுதிகளில் மத்திய அரசின் நுண்ணிய நீர்ப்பாசனத் திட்டம் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்குச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு ஆகும் செலவில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.5,300/-லிருந்து ரூ.1,10,500/- வரை, பயிர் இடைவெளிக்கேற்பவும், குறைந்தபட்சம் 0.4 எக்டேர் முதல் அதிகபட்சமாக 5 எக்டேர் வரையிலான நிலப் பரப்பிற்கேற்பவும் மத்திய அரசின் வழிகாட்டுமுறைகளின்படி விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தெளிப்பு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு ஆகும் செலவில் 50 விழுக்காடு



அல்லது அதிகபட்சமாக ரூ.7,500/- வரை மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.3 சிறுபாசனம் (மாநில அரசுத் திட்டம்)

இத்திட்டத்தின்கீழ் நில நீர் ஆய்வுக் கருவி மற்றும் மின்னியல் ஆய்வுக் கருவிகள்மூலம் விவசாயிகளுக்கு, நீர் ஊற்று இருக்குமிடம், கிணறு அமைக்கும் இடம் முதலியன கண்டறியப்படுகிறது. சுழல்விசைத் துளைக் கருவி, சிறுவிசைத் துளைக் கருவி, பெர்குசன் துளைக் கருவி, கைத்துளைக் கருவி, பாறை தகர்க்கும் கருவி மற்றும் நீள்துளைக் கருவி போன்ற சிறு பாசன இயந்திரங்கள்மூலம் பணிகள் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த வாடகையில் மேற்கொள்ளப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2,455 குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2007 வரை 2,631 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் நிலத்தடி நீர்வளம் உள்ள இடங்களில் இத்திட்டம் தொடரப்பட்டு 2,500 குழாய் கிணறுகள் அமைக்கப்படும்.

## 4. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்

### 4.1 வேளாண்மை இயந்திரங்களைப் பிரபலப்படுத்தப்படும் திட்டம் (மத்திய, மாநில அரசுத் திட்டம் 90:10)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பண்ணை இயந்திரங்களை விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், வேளாண்மையில் இயந்திரங்களைப் பிரபலப்படுத்துவதன்மூலம் பண்ணை சக்தியைக் கூடுதலாக வழங்கிடவும், வேளாண் பணியாளர்களின் வேலைப் பளுவைக் குறைத்திடவும், வேளாண் பணிகளை உரிய காலத்தில் முடித்திடவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கிடவும் வேளாண் இயந்திரங்களை வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள், டிராக்டர்கள் போன்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் நாற்று நடும் கருவி, கதிர் அறுப்பான் போன்ற பண்ணைக் கருவிகள் சொந்தமாக வாங்கிட இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விலையில் 25 விழுக்காடு அல்லது ஒவ்வொரு இயந்திரம் மற்றும் கருவிக்கு மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பு மானியம், இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில்,

இத்திட்டத்தின்கீழ் 215 டிராக்டர்கள் 1,080 பவர் டில்லர்கள் மற்றும் 511 வேளாண் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.450.00 இலட்சம் மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2007 வரை 168 டிராக்டர்கள் 1,035 பவர் டில்லர்கள் மற்றும் 273 வேளாண் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.396.38 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 315 டிராக்டர்கள், 2,320 பவர் டில்லர்கள் மற்றும் 692 வேளாண் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.900.00 இலட்சம் மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.2. விவசாயிகளுக்கு இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் (மாநில அரசுத் திட்டம்)

வேளாண்மைப் பொறியியல் துறையில் 91 புல்டோசர்கள், 12 டிராக்டர்கள் மற்றும் 1 நெல் அறுவடை இயந்திரங்கள், வாடகைக் கட்டணத்தில் நில மேம்பாட்டுப் பணிகளுக்கு விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இயங்கி வருகின்றன. இத்திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த இயந்திரங்களின்மூலம் அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும் தரிசு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் பண்படுத்துவதற்கான பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை உறுதுணையாக இருந்து உரிய பங்கினை ஆற்றும்.

### 4.3 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்விளக்கம் (மத்திய அரசுத் திட்டம்)

நவீன வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்திடும் நோக்கத்துடன விவசாயிகளின் நிலங்களில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்விளக்கம் மேற்கொள்ளப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் செயல் விளக்கங்கள் மேற்கொள்ள வேண்டி ரூ. 53.65 இலட்சம் செலவில் எட்டு வகையான பண்ணைக் கருவிகள் வாங்கவும் மற்றும் 801 செயல் விளக்கங்கள் ரூ.18.88 இலட்சம செலவில் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2007 வரை 318 செயல் விளக்கங்கள் ரூ.51.45 இலட்சம் மொத்த செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து



செயல்விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 90.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

### 4.4. வேளாண்மை இயந்திரங்களைக் கையாள்வதில் மற்றும் பராமரித்தலில் விவசாயிகளுக்குப் பயிற்சி (மத்திய அரசுத் திட்டம்)

விவசாயப் பயிர்களின் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் ஆண்டு வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனும், பயிர் உற்பத்திக்கான இடுபொருட்களைப் பாதுகாத்து சேமிக்கும் பொருட்டும், வேளாண்மை இயந்திரமயமாக்குதலில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கும் புதிய தொழில்நுட்பங்களின் மீதான புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதனடிப்படையில், 2006-2007 ஆம் ஆண்டில் இத்துறையின்மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரமயமாக்கல் பிரிவின்கீழ் 180 பயிற்சி வகுப்புகள் ரூ.15.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2007 வரை ரூ. 35.00 இலட்சம் செலவில் 144 பயிற்சி வகுப்புகள் விவசாயிகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.72.00 இலட்சம் செலவில் விவசாயிகளுக்கு 180 பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. சிறப்புத் திட்டங்கள்

### 5.1. களர் நிலச் சீராக்கத் திட்டம் (மத்திய, மாநில அரசுத் திட்டம் 90:10)

களர் நிலங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்கத்துடன் களர் நிலச் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 90:10 என்ற விகிதத்தில், செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தோட்டக்கலைப் பயிர்கள் வளர்ப்பு, தீவனப் பயிர்கள் மற்றும் எரிபொருள் மரங்கள் வளர்ப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 502 எக்டேர் பரப்பில் ரூ.10.00 இலட்சம் செலவில், பணிகள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2007 வரை 333 எக்டேர் பரப்பில் ரூ.10.00 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 333 எக்டேர் பரப்பில் ரூ.10.00 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 3

## 5.2. பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்புசெட்டுகள் வழங்கும் திட்டம் (மாநில அரசுத் திட்டம்)

வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் பழைய பம்புசெட்டுகள் திறனற்றவையாக இருப்பதாலும், தேவைக்கு அதிகமான சக்திவாய்ந்த பம்புகள் பயன்படுத்தப்படுவதாலும், மின் சக்திப் பயன்பாட்டுத் திறன் மிகக் குறைவாக உள்ளது. இதனால் இந்த பம்புசெட்டுகள் உரிய குதிரை சக்திக்குக் குறைவான தண்ணீரையே வெளிக்கொண்டு வருகின்றன. இதைத் தவிர, மின்சாரத் தொடர்புகள், சுவிட்சுகள், இதர சாதனங்கள் முறைப்படி அமைக்கப்படாததாலும் மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, மின்சாரத்தைச் சேமிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு பழைய, திறனற்ற பம்புசெட்டுகளுக்குப் பதிலாக, புதிய பம்புசெட்டுகள் வாங்கவும் மற்றும் பழுதடைந்த மின் சாதனங்களைப் புதுப்பித்துக் கொள்ளவும் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, 5 குதிரைத் திறனுக்குக் கீழ் உள்ள பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்புசெட்டுகள் வாங்குவதற்கு ரூ.2,500/- அல்லது அதன் விலையில் 25 விழுக்காடு இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. 5 மற்றும் 5-க்கு மேற்பட்ட குதிரைத்திறன் உள்ள பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்பு செட்டுகள் வாங்குவதற்கு ரூ.5,000/- அல்லது அதன் விலையில் 25 விழுக்காடு, இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் மின்சார பாகங்கள், வால்வுகள் முதலியன புதுப்பிக்க ரூ.1,500/- அல்லது அவற்றின் விலையில் 50 விழுக்காடு, இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 18,000 பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்புசெட்டுகள் வாங்கிட விவசாயிகளுக்கு ரூ.10.00 கோடி மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டு பிப்ரவரி 2007 வரை 11,120 பழைய பம்பு செட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்புசெட்டுகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.852.50 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.10.00 கோடி மானியத்தில் 18,000 விவசாயிகள் பயனடையும் வகையில் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 3]

## 5.3. உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM)

தமிழ்நாட்டில் பாசன வேளாண்மையினை நவீனமயமாக்கவும், நீர் நிலைகளைச் சீரமைத்து மேம்படுத்திடவும் உலக வங்கிக் கடனுதவியுடன் நீர்வள நிலவளத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. மத்திய அரசு மற்றும் உலக வங்கிக்கிடையே இதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு முதல் 2012-2013 வரை செயல்படுத்தப்படும். இத்திட்டக் காலத்தில் 63 துணை ஆற்றுப் படுகைகளில் பணிகள் மேற்கொள்ள வேளாண்மைப் பொறியியல் துறைக்கு 75.40 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.360 கோடி) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் 9 துணை ஆற்றுப் படுகைகளில் ரூ.36.00 கோடி செலவில் நுண்ணிய நீர்ப்பாசனம், பண்ணைக் குட்டைகள், நீர் சேகரிப்புக் கட்டுமானங்கள், வேளாண்மை இயந்திரமயமாக்கல், பாசனப் பகுதிகளில் நிலத்தடியில் 'பி.வி.சி' குழாய் பதித்து பாசனம் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.

## 6. புவியியல் தகவல் மையம்

நீர்வடிப் பகுதிகளில் திட்டமிடுவதற்கு வரைபடத் தகவல்கள் மிகவும் தேவையான ஒன்றாகும். புவியியல் தகவல் அமைப்பின்மூலம் தேவைக்கேற்றபடி சரியான மற்றும் துல்லியமான தகவல்களைக் கொண்டு வரைபடங்களைத் தயாரிக்கலாம். கணினி மயமாக்கப்பட்ட புவியியல் தகவல் அமைப்பு, வரைபடம் தயாரிக்கும் பணிகள் மற்றும் வரைபடங்கள் இணைப்பு வேலைகளுக்கு எளிதானதாக அமைகின்றது. தொலை உணர்வு தொழில்நுட்பம், இயற்கைவள தகவல்களை அறிந்து, நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் நீர்வடிப் பகுதிகளைத் தேர்வு செய்யவும், நிலையான வளர்ச்சி அடையும் பொருட்டு உரிய பரிந்துரைகளைத் தெரிவிக்கவும், புவியியல் தகவல் அமைப்புடன் ஒருங்கிணைத்து, நீர்வடிப் பகுதி திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்யவும் உதவுகிறது. புவியியல் தகவல் அமைப்பு மையம் இதுவரையில் 25 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்திற்குத் துல்லியமான முறையில் திட்டமிடுவதற்கும் இந்த புவியியல் தகவல் அமைப்பு மையங்கள் உதவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அத்தியாயம் 5

## நீர்வடிப் பகுதி மேம்பாடு

### தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை

### 1. நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலத்தினை இலவசமாக வழங்கும் திட்டம்

2006-2007 ஆம் ஆண்டு மாபெரும் இத்திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் வழங்கப்படும் நில இனங்கள்:

இனம் I : எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள்

இனம் II : சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள்

இனம் III : சிறு மற்றும் விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு பட்டா நிலங்கள்

**திட்டத்தின் நோக்கம்:**

- அரசு தரிசு நிலங்களைக் கண்டறிந்து நிலங்களைத் தக்க முறையில் செம்மைபடுத்தி நிரந்தர வருவாய் மற்றும் இலாபகரமான சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்றி நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கப்படும்.
- இனம் I மற்றும் II-ல் 10 ஏக்கருக்கு மேற்பட்ட தொடர் தொகுப்பு நிலங்கள் மேம்படுத்தப்பட்டு நீர் ஆதாரம் மற்றும் சொட்டு நீர்ப்பாசன வசதி செய்து, தரம் வாய்ந்த கன்றுகள் நடவு செய்து வழங்கப்படும். மேலும், தமிழக மின்வாரியத்தின்மூலம் மின் இணைப்பு இலவசமாக வழங்கப்படும்.
- விருப்பமுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு பட்டா நிலங்கள் சீர்திருத்தப்பட்டு சாகுபடிக்கு உகந்த விளைநிலங்களாக மாற்றி வழங்கப்படும்.

நிலங்களையும் பயனாளிகளையும் வருவாய்த் துறை கண்டறிந்து வழங்கிட வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் இதர அரசு சார்ந்த துறைகள் அனைத்தும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து நில மேம்பாடு மற்றும் தொகுப்பு நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் நிலமேம்பாடு, நீர் ஆதாரம், சொட்டு நீர்ப்பாசன வசதிகள் மற்றும் தரம் வாய்ந்த கன்றுகள் வழங்குவதற்கான நிதி, தொடர்புடைய துறையைச் சார்ந்த மானிய ஒருங்கிணைப்புத் திட்டங்களிலிருந்தும், பயனாளிகள் செலுத்த வேண்டிய பங்குத்தொகை அனைத்தும் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக வழங்கப்படும்.



**நிதி ஒதுக்கீடு விவரம்:**

நில மேம்பாட்டுப் பணிக்கு ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.2,600/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10 ஏக்கருக்கு மேற்பட்ட தொடர் தொகுப்பு நிலங்கள் மேம்பாட்டிற்கு நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பல்வேறு துறையின் ஒருங்கிணைப்புமூலம் பெறப்படும் மானிய நிதியைப் பொறுத்து பயனாளிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகை இம்முகமையின்மூலம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**மானிய விவரம்:**

| பணி பற்றிய விவரங்கள் | ஏக்கருக்கான செலவு விவரம் (ரூபாயில்) |
|---|---|
| அ. நில சீரமைப்புப் பணிகள் | |
| 1. முட்புதர்கள், காட்டுமரங்கள் அகற்றுதல் (1 மணி நேர இயந்திரப் பணி) | 625.00 |
| 2. நிலம் வடிவமைத்தல் (1½ மணி நேர இயந்திரப் பணி) | 937.50 |
| 3. வரப்பு கட்டுதல் (1 மணி நேர இயந்திரப் பணி) (0.3 மீ x 0.3 மீ x 0.9 மீ | 625.00 |
| மொத்தம்<br>நிர்ணயம் செய்யப்பட்ட தொகை | 2,187.50<br>2,000.00 |
| 4. உழவுப் பணிகள் மேற்கொள்ளல் (4 மணி நேர இயந்திரப் பணி) | 600.00 |
| மொத்தம் | 2,600.00 |
| ஆ. 1. மரக்கன்றுகள் மற்றும் கன்றுகள் விலை | மாநில தோட்டப்பண்ணைகளில் அரசு நிர்ணயித்த விலை |
| 2. குழி தோண்டுதல் (1 மீ x 1 மீ x 1 மீ) | 1 குழிக்கு ரூ.15/– வீதம் |
| 3. ஒரு கன்றுக்கான போக்குவரத்துச் செலவு | உரிய தொகை அல்லது ஒரு கன்றுக்கு ரூ.2/– வீதம் – எது குறைவோ |
| 4. உயிர், உரம், நுண்ணூட்டச் சத்து, ஜிப்சம், தொழுஉரம், இயற்கை உரங்கள் | 1 குழிக்கு ரூ.20/– |
| 5. விதை நடவு பணி மேற்கொள்ள (தொழு உரம், உயிர் உரம் மற்றும் ஜிப்சம் கலந்து குழியில் இட்டு மற்றும் குச்சி கட்டுதல்) | 1 குழிக்கு ரூ.4/– |

[2007 ஏப்ரல் 3

| பணி பற்றிய விவரங்கள் | ஏக்கருக்கான செலவு விவரம் (ரூபாயில்) |
|---|---|
| இ. பட்டுப்போன செடிகளைக் களைந்து மாற்றுச் செடிகள் பதித்தல் | ஏக்கருக்கு ரூ.200/- |
| ஈ. நுண்ணிய நீர்ப்பாசனம் சொட்டு நீர்ப் பாசன வசதி மேற்கொள்ளல் | மத்திய அரசு நிர்ணயித்த தொகை |
| உ. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் புதிய பாசன வசதி ஏற்படுத்தல் (புவியியல் ஆய்வு மேற்கொள்ளுதல், ஆழ்துளைக் கிணறு அமைத்தல், குழாய் பதித்தல், மோட்டார் அமைத்தல். | ஏக்கருக்கு ரூ.8,900/- |
| ஊ. சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அடர்ந்த படர்ந்த சீமைக் கருவேல மரங்களை அகற்றுதல்-மேற்காணும் பகுதியில் உள்ள சீமைக் கருவேல முள்மரங்களை வேருடன் அகற்ற வேண்டும். ஒரு ஏக்கரில் சுமார் 50% பரப்பில் உள்ள சீமைக் கருவேல முள் மரங்களை நீக்க JCB இயந்திரம் மூன்று மணி நேரம் இயக்க வேண்டும். ஒரு மணி நேர இயந்திர இயக்க செலவு ரூ.600/- மொத்த நிலப்பரப்பில் மேல் வகை காட்டுக் கருவேல முள் மரங்களை நீக்குவது 10 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டும். மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு மிகையாக ஏற்பட்ட செலவின நேர்வுகளை நேர் செய்வதற்கு உரிய கருத்துருக்களை மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை தமிழ்நாடு நீர்வடிப் பகுதி முகமைக்கு அனுப்ப வேண்டும். | ஏக்கருக்கு ரூ.1,800/- |
| ஏ. ஆழ்துளைக் கிணறு அமைக்க இயலாத நிலங்களில் பண்ணைக் குட்டை அமைத்தல் (15 மீ x 3 மீ x 1.5 மீ) 0.50-1.00 ஏக்கர் வரை ஒரு பண்ணைக் குட்டை 1.01-2.00 ஏக்கர் வரை 2 பண்ணைக் குட்டை. | ஒரு பண்ணைக் குட்டைக்கு ரூ.2,750.00 |

## செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்

*சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக 28 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.*



2007 ஏப்ரல் 3]

## திட்டச் செயல்பாடு

*மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வருவாய்த் துறைமூலம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இலக்கு மற்றும் சாதனை விவரம் கீழ்க்கண்டவாறு:*

| நாள் | செயல்பாடு | இலக்கு (ஏக்கரில்) | சாதனை (ஏக்கரில்) | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 17-9-2006 | முதல் கட்டம் | 26,320.60 | 25,282.11 | 24,358 |
| 17-12-2006 | இரண்டாம் கட்டம் | 27,880.00 | 25,805.53 | 26,749 |
| 17-3-2007 | மூன்றாம் கட்டம் | 25,621.75 | 26,029.61 | 20,648 |
| | மொத்தம் .. | 79,822.35 | 77,117.25 | 71,755 |

### முகமையின் சாதனை:

*15529.92 ஏக்கர் தரிசு நிலத்தைச் சீர்படுத்த ரூ.571.91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இப்பரப்பில் 793.22 ஏக்கர், தொகுப்பு நிலத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளது.*

### செயல் சாதனை:

(பரப்பு ஏக்கரில்)

| இனம் | இலக்கு | சீர்படுத்தத் தேவைப்படும் பரப்பு | சீர்படுத்திய பரப்பு |
|---|---|---|---|
| I | 26,320.60 | 11,266.35 | 10,751.57 |
| II | 27,880.00 | 9,448.15 | 4,638.34 |
| III | 25,621.75 | கணக்கிடப்படுகிறது | 140.01 |
| மொத்தம் | 79,822.35 | 20,714.50 | 15,529.92 |

### நிதி சாதனை

| நிதி ஒதுக்கீடு | நில மேம்பாடு | | தொகுப்பு நில மேம்பாடு | | மொத்த செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஒருங்கிணைப்பின் பங்கு | முகமையின் பங்கு | ஒருங்கிணைப்பின் பங்கு | முகமையின் பங்கு | ஒருங்கிணைப்பின் பங்கு | முகமையின் பங்கு | மொத்தம் |
| 743.07 | 57.66 | 300.87 | 75.62 | 137.79 | 133.28 | 438.66 | 571.94 |

2007-2008 ஆம் ஆண்டில் இப்பணி தொடர்ந்து செயல்படுத்தப் படவுள்ளது.

## II. தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாடு திட்டம் (நவப்ரா)

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2002-2003 முதல் 2006-2007 முடிய திருத்தியமைக்கப்பட்ட தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டச் செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் முறையே 90% மற்றும் 10% என்ற அளவில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டமானது, 755 நீர்வடிப் பகுதிகளில் நீர்பாசன வசதி 30% க்கு குறைவாக உள்ள மற்றும் 8% நிலச் சரிவிற்குக் குறைவாக உள்ள நீர்வடிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு நீர்வடிப் பகுதி என்பது குறைந்தபட்சம் 500 எக்டேர் பரப்பளவு கொண்டதாகும். ஒரு எக்டேருக்கு ரூ.4,500/- வீதம் ஒரு நீர்வடிப் பகுதிக்கு 5 ஆண்டுகளில் ரூ.22.50 லட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### குறிக்கோள்:

- ❖ இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாத்து, பெருக்கி திறம்பட பயன்படுத்துதல்.
- ❖ வேளாண்மை உற்பத்தியை நீடித்துப் பெருக்குதல்.
- ❖ பசுமை தரும் மரங்கள், தாவரங்களை வளர்த்து, நலிவடைந்துள்ள இயற்கைச் சூழலை மேம்படுத்துதல்.
- ❖ மானாவாரி மற்றும் பாசன நிலங்களுக்கிடையே உள்ள மகசூல் வேறுபாட்டினைக் களைதல்.
- ❖ கிராமப்புற வேலைவாய்ப்பைப் பெருக்குதல்.

### திட்டச் செயலாக்கப் பகுதிகள்:

தமிழ்நாட்டில் இத்திட்டமானது தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் சென்னை தவிர இதர மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை வழியாக கிராம அளவில், நீர்வடிப் பகுதி சங்கங்கள்/குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.



### திட்டத்தின் முன்னேற்றம்

இந்தத் திட்டத்தில் இதுவரை அடைந்த நிதி அளவு/பொருளளவு சாதனை விவரம் கீழ்வருமாறு:—

| வ. எண் | ஆண்டு | நிதியளவு (ரூபாய் இலட்சத்தில்) | | | பொருளளவு பரப்பு (எக்டேரில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | ஒதுக்கீடு | செலவினம் | இலக்கு | சாதனை |
| 1 | 2002–2003 | 1,407.067 | 1,407.067 | 1,407.067 | 31,268 | 31,268 |
| 2 | 2003–2004 | 1,525.000 | 1,525.000 | 1,525.000 | 33,888 | 33,888 |
| 3 | 2004–2005 | 2,089.063 | 2,089.063 | 2,089.063 | 46,424 | 46,424 |
| 4 | 2005–2006 | 1,990.160 | 1,990.160 | 1,990.160 | 44.227 | 44,227 |
| 5 | 2006–2007 | 3,738.700 | 3,738.700 | 2056.279 | 83,082 | 45,695 |
| | மொத்தம் | 10,749.990 | 10,749.990 | 9,067.569 | 2,38,889 | 2,01,502 |

### 2007–2008 ஆண்டுத் திட்டம்

2007-2008 ஆம் ஆண்டில் 300 புதிய நீர்வடிப் பகுதிகளில் 15,000 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.6.75 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

## III. நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி நபார்டு

### திட்டத்தின் நோக்கம்:

நபார்டு வங்கி உதவியுடன் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதித் திட்டம், 6 ஆண்டுத் திட்டக் காலத்தில் 2004-2005 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ.60 கோடி மதிப்பீட்டில் 100 நீர்வடிப் பகுதிகளில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### குறிக்கோள்

1. நீர்வடிப் பகுதி பங்கேற்பு தொடர்பான செய்திகளைப் பரப்புவது இதன் முக்கிய நோக்கமாகும்.
2. அரசு, அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களை இத்திட்டத்தில் பங்கேற்கச் செய்தல்.
3. இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளின் தேவைக்கேற்ப நீர்வடிப் பகுதிகளை மேம்படுத்த நீர்வடிப் பகுதி சங்கங்கள் மற்றும் நீர்வடிப் பகுதி குழுக்களைப் பங்கேற்கச் செய்தல்.

### நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதியின் இனங்கள்

1. மூன்றில் ஒரு பகுதி மானியம்
2. 2/3 பகுதி மாநில அரசுக்கு நபார்டு வழங்கும் கடன்
3. வட்டி விகிதம் - 4.5%
4. திருப்பிச் செலுத்தும் காலம் - ஒன்பது ஆண்டுகள்; 3 ஆம் ஆண்டு முதல் திருப்பிச் செலுத்த வேண்டும்.

### திட்டச் செயலாக்கப் பகுதி

இத்திட்டம் கீழ்க்காணும் 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:—

கடலூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், விருதுநகர்.

### திட்ட காலம்

1. கொள்திறன் வளர்ப்பு நிலை-18 மாதங்கள் (50 முதல் 100 எக்டேர்.)
2. திட்டம் செயல்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க - 6 மாதங்கள்.
3. முழு செயலாக்க நிலை-4 வருடங்கள்; மொத்த காலம்-6 வருடங்கள்.

### பல்வேறு இனங்களுக்கு நிலையான நிதி ஒதுக்கீடு

| | | | |
|---|---|---|---|
| 1. ஒரு எக்டேருக்கான செலவு | — | ரூ.6,000.00 | |
| 2. திட்டச் செயலாக்கம் | — | 70% | ரூ.4,200.00 |
| 3. நிருவாகச் செலவு | — | 10% | ரூ. 600.00 |
| 4. நிலமற்ற பெண்களுக்கு வாழ்க்கைத் தர மேம்பாடு | — | 7.5% | ரூ. 450.00 |
| 5. சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பயிற்சித் திட்டம் | — | 12.5% | ரூ. 750.00 |

### திட்டச் செயலாக்க முன்னேற்றம்:

2004-2005 ஆம் ஆண்டில், 56 நீர்வடிப் பகுதி திட்டங்கள் 13 மாவட்டங்களில் 31 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 21 நீர்வடிப் பகுதி தகுதி நிலை/சாத்தியக்கூறு



ஆராய்வு அறிக்கையிலும் மற்றும் 35 முழு செயல்பாட்டு நிலையிலும் உள்ளன. முழு செயல்பாட்டு நிலையில் உள்ள 35 நீர்வடிப் பகுதி திட்டங்களில் 28 கடன் இனத்திலும், 7 மானிய இனத்திலும் உள்ளன. தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை 10 திட்டங்களுக்குக் கடன் தொகையாக ரூ.277.655 இலட்சத்தை விடுவித்துள்ளது. இதுவரையில் 38,125 எக்டேர் பரப்பளவை பண்படுத்தத் திட்டமிட்டதில், 9,671 எக்டேர் பரப்பளவு பண்படுத்தப்பட்டுள்ளது. ரூ.57.433 இலட்சம் 15 புதிய முழு செயல்பாட்டு நிலையில் உள்ள திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

2005-2006 ஆம் ஆண்டில் 68 நீர்வடிப் பகுதிகளில் 61,875 எக்டேர் பரப்பளவை 14 மாவட்டங்களில் 37 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் ரூ.3,975 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் பண்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்பொழுது 35 திட்டங்கள் முழு செயல்பாட்டு நிலையிலும், 5 தகுதி நிலை/சாத்தியக்கூறு ஆராய்வு அறிக்கையிலும் 43 கொள்திறன் வளர்ப்பு நிலையிலும் 41 முன்கொள்திறன் வளர்ப்பு நிலையிலும் உள்ளன. 2007-2008 ஆம் ஆண்டிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தில் இதுவரை அடைந்த நிதி அளவு/பொருளளவு சாதனை விவரம் கீழ்வருமாறு:—

| குறிப்பு | ஆண்டு | நிதி அளவு (ரூ.இலட்சத்தில் | | பொருள் அளவு (பரப்பு எக்டேரில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 29-3-2005 அன்று நிதி பெறப்பட்டது | 2004–2005 | 168.75 | 168.750 | 2,812.5 | 2,347.20<br># 7,323.80 |
| 27-3-2006 அன்று நிதி பெறப்பட்டது. | 2005–2006 | 393.75 | 166.348 | 6,562.5 | 1,551.57 |
| நிதி எதிர்நோக்கப் படுகிறது. | 2006–2007 | 506.25 | | 8,437.5 | |
| | 2007–2008 | 506.25 | | 8,437.5 | |
| | 2008–2009 | 337.50 | | 5,625.0 | |
| | 2009–2010 | 112.50 | | 1,875.0 | |
| மொத்தம் | | 2,025.00 | | 33,750.0 | |

# கொள்திறன் வளர்ப்பு நிலை மற்றும் முழு செயல்பாட்டு (மானியம்) நிலையில் உள்ள திட்டங்களின் சாதனை (இதன் நிதி நபார்டு வங்கி மூலம் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நேரிடையாக வழங்கப்படுகிறது)

[2007 ஏப்ரல் 3

## வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம் 1972-1973 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நீர்வடிப் பகுதிகளிலுள்ள பயிர் உற்பத்தி, நில, நீர் மற்றும் மனித வளம் ஆகியவற்றின் உற்பத்தித் திறன் போன்றவற்றுக்கு வறட்சியினால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளைக் குறைப்பதாகும். இத்திட்டம் நீர்வடிப் பகுதி அணுகுமுறையில், மக்களின் பங்கேற்போடு மத்திய அரசின் வழிக்காட்டியின்படி 1995-1996 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், மற்றும் விருதுநகர் ஆகிய 17 மாவட்டங்களில் உள்ள 80 ஊராட்சி ஒன்றியங்கள் வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகள் என்று மைய அரசால் அறிவிக்கைச் செய்யப்பட்டு, அந்தப் பகுதிகளுக்கு வறட்சியால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு இத்திட்டம்மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திட்டச் செயலாக்க முறைகளில் மாற்றம் செய்யப்பட்டு, அரசுத் துறைகளின்மூலம் செய்யப்பட்டு வந்த பணிகள் தற்போது அரியாலி நெறிமுறையின்படி ஊராட்சி மன்றம் மற்றும் பயனாளிக் குழுக்கள் இணைந்து பணிகளைத் தேர்வு செய்து அவர்கள்மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டச் செயலாக்கத்திற்கான செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் தற்சமயம் 75.25 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் ஏற்கின்றன. இத்திட்டச் செயலாக்கக் காலம் ஐந்தாண்டுகளாகும். ஒரு எக்டேர் மேம்பாட்டிற்கான செலவினத் தொகையாக ரூ.6,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் திட்டச் செலவினத்திலேயே மேற்கொள்ளப்பட்டாலும், பயனாளிகளின் பங்குத் தொகையாக 10 சதவீதம் பெறப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான பங்களிப்பு 5 சதவீதம் ஆகும்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழ்க்கண்ட அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்:—



2007 ஏப்ரல் 3]

***நில மேம்பாடு:*** நிலம் சமப்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், வண்டல் மண் அடித்தல், கல் வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி எடுத்தல்.

***நீர்வள மேம்பாடு:*** கால்நடை குட்டை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், ஊருணி அமைத்தல், குளங்கள் தூர் வாருதல், வரத்துக் கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டை அமைத்தல் மற்றும் குடிநீர் ஆதார மேம்பாடு செய்தல்.

***தாவரவள மேம்பாடு:*** வேளாண் காடுகள் அமைத்தல், பழமரக் கன்றுகள் வளர்த்தல், தீவனப் பயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப் பாத்தி அமைத்தல், சமுதாய நாற்றங்கால் பண்ணை அமைத்தல், சமூகக் காடுகள் வளர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

இத்திட்டத்தின்கீழ் நீர்வடிப் பகுதிகள் மத்திய அரசால் அணிவாரியாக ஒப்பளிப்பு செய்யப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் 12 ஆம் அணியின்கீழ் 17 மாவட்டங்களில் 208 நீர்வடிப் பகுதிகள் மேம்பாட்டிற்காக ரூ.6,240 இலட்சம் மதிப்பீட்டில் 2006-2007 முதல் 2010-2011 வரை செயல்படுத்த மைய அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதுகாறும் இத்திட்டத்தின்கீழ் ரூ.41,650.25 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,622 நீர்வடிப் பகுதிகள் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவற்றில் ரூ.7,801.83 இலட்சங்கள் செலவில் 400 நீர்வடிப் பகுதிகளில் இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் மேம்படுத்தப்பட்ட மொத்த நிலப்பரப்பின் அளவு 1,97,060 எக்டேர்கள் ஆகும். இத்திட்டப் பகுதிகளில் நிலத்தடி நீர் மற்றும் பயிரிடும் பரப்பளவும் அதிகரித்துள்ளது. மீதமுள்ள 1,222 நீர்வடிப் பகுதிகளில் ரூ.33,670 இலட்சம் ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதனால் 6,14,142 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்படும்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் திட்டச் செயலாக்கத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2007 ஆம் மாதம் வரை, மைய அரசு ரூ.2,590.87 இலட்சம், மாநில அரசு தன் பங்காக ரூ. 784.62 இலட்சம் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2007 ஏப்ரல் 3

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (ரூபாய் இலட்சத்தில்)**

| அணி மற்றும் திட்ட காலம் | நீர்வடிப் பகுதிகள் எண்ணிக்கை | திட்டச் செயலாக்கப் பரப்பு (எக்டேரில்) | மொத்த நிதி ஒதுக்கீடு | | | நிதி வழங்கியது (பிப்ரவரி 2007 வரை) | | | பிப்ரவரி 2007 முடிய செலவினம் | பிப்ரவரி 2007 முடிய பயனடைந்த பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | | |
| 5-ம் அணி (1999-2000 முதல் 2003-2004 வரை)** | 299 | 1,50,772 | 4,485.00 | 1,495.00 | 5,980.00 | 4,170.32 | 1,389.77 | 5,560.09 | 5,552.05 (100%) | 1,38,204 |
| 7-ம் அணி (2001-2002 முதல் 2005-2006 வரை)** | 61 | 30,500 | 1,372.50 | 457.50 | 1,830.00 | 860.88 | 286.96 | 1,147.84 | 1,100.34 (96%) | 18,992 |
| 8-ம் அணி (2002-2003 முதல் 2006-2007 வரை) | 144 | 73,457 | 3,240.00 | 1,080.00 | 4,320.00 | 1,795.64 | 584.25 | 2,379.89 | 2,231.47 (94%) | 39,328 |
| 9-ம் அணி (2003-2004 முதல் 2007-2008 வரை) | 160 | 80,413 | 3,600.00 | 1,200.00 | 4,800.00 | 2,062.83 | 656.83 | 2,719.46 | 2,450.86 (90%) | 38,883 |
| 10-ம் அணி (2004-2005 முதல் 2008-2009 வரை) | 160 | 80,000 | 3,600.00 | 1,200.00 | 4,800.00 | 1,591.47 | 503.61 | 2,095.08 | 1,636.50 (78%) | 22,338 |
| 11-ம் அணி (2005-2006 முதல் 2009-2010 வரை) | 190 | 95,000 | 4,275.00 | 1,425.00 | 5,700.00 | 770.01 | 225.05 | 995.06 | 726.74 (73%) | 9,382 |
| 12-ம் அணி (2006-2007 முதல் 2010-2011 வரை) | 208 | 1,04,000 | 4,680.00 | 1,560.00 | 6,240.00 | 702.00 | 234.00 | 936.01 | 29.48 (3%) | திட்ட ஆரம்பக் கட்டப் பணிகள் நடை பெற்று வருகின்றன |
| | 1,222 | 6,14,142 | 25,252.50 | 8,417.50 | 33,670.00 | 11,952.95 | 3,880.47 | 15,833.42 | 13,727.44 (87%) | 2,66,927 |

.குறிப்பு: ** செயலாக்கம் 31-3-2007 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 3]

## ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், தமிழகத்தில் 1993-1994 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படாத வட்டாரங்களில் வனம் அல்லாத தரிசு நிலங்களை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மழைநீரைச் சேமித்து அதன் உதவியுடன் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதாகும்.

ஏப்ரல் 1995 ஆம் ஆண்டு முதல், பொது நெறிமுறையின்கீழ் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் போல், இத்திட்டமும் கொண்டு வரப்பட்டு தற்போது அரியாலி நெறிமுறையின்படி ஊராட்சி மன்றம் மற்றும் பயனாளிக் குழுக்கள் இணைந்து பணிகளைத் தேர்வு செய்து அவர்கள் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டச் செயலாக்க காலம் ஐந்தாண்டுகளாகும். ஒரு எக்டேருக்கான மேம்பாட்டுச் செலவினத் தொகையாக ரூ.6,000/- அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் திட்ட செலவினத்திலேயே மேற்கொள்ளப்பட்டாலும், பயனாளிகளின் பங்குத் தொகையாக 10 சதவீதம் பெறப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான பங்களிப்பு 5 சதவீதம் ஆகும். இத்திட்டச் செயலாக்கத்திற்கான செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் 11:1 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் ஏற்கின்றன.

தற்போது கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், ஈரோடு, தேனி, மதுரை, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 24 மாவட்டங்களில் உள்ள 99 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழ்க்கண்ட அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

**நில மேம்பாடு**: நிலம் சமப்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், வண்டல் மண் அடித்தல், கல் வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி எடுத்தல்.

***நீர்வள மேம்பாடு:*** கால்நடை குட்டை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், ஊருணி அமைத்தல், குளங்கள் தூர் வாருதல், வரத்துக் கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கசிவுநீர்க் குட்டை அமைத்தல் மற்றும் குடிநீர் ஆதார மேம்பாடு செய்தல்.

***தாவரவள மேம்பாடு:*** வேளாண் காடுகள் அமைத்தல், பழமாக் கன்றுகள் வளர்த்தல், தீவனப்பயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப் பாத்தி அமைத்தல், சமுதாய நாற்றங்கால் பண்ணை அமைத்தல், சமூகக் காடுகள் வளர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

இத்திட்டத்தில் இதுவரை ரூ.27,364.21 இலட்சம் மதிப்பீட்டில் 85 திட்டங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 24 மாவட்டங்களில் 4,75,239 எக்டேர் நிலப் பரப்பை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை 5 திட்டங்கள் ரூ.1,086.39 இலட்சம் செலவில் முழுமையாக நிறைவேற்றப்பட்டு 18,151 எக்டேர் நிலப் பரப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. தற்போது செயல்படுத்தப்படும் 80 திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| **செயல்பாட்டிலுள்ள திட்டங்களின் எண்ணிக்கை** | **80** |
| **திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சம்)** | **26,220.31** |
| **மைய அரசு** | **24,241.69** |
| **மாநில அரசு** | **1,978.62** |
| **விடுவிக்கப்பட்ட தொகை (பிப்ரவரி 2007 வரை) (ரூ. இலட்சம்)** | **13,285.43** |
| **மைய அரசு** | **12,403.91** |
| **மாநில அரசு** | **881.52** |
| **செலவுகள் (பிப்ரவரி 2007 வரை) (ரூ. இலட்சம்)** | **10,738.15** |
| **திட்டப் பரப்பளவு (எக்டேரில்)** | **4,57,596** |
| **மேம்படுத்தப்பட்ட பரப்பளவு (பிப்ரவரி 2007 வரை) (எக்டேரில்)** | **1,86,644** |

2006-2007 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி, மதுரை, திண்டுக்கல், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், நாமக்கல், காஞ்சிபுரம் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் 10 திட்டங்கள்மூலம் 50,730 எக்டேர் தரிசு நிலங்களை ரூ.3,043.80 இலட்சம் மதிப்பீட்டில் 2006-2007 ஆம் ஆண்டு முதல் 2010-2011 ஆண்டிற்குள் மேம்படுத்த இத்திட்டச் செயலாக்கத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2007 ஆம் மாதம் வரை மைய அரசு ரூ.2,692.45 இலட்சம், மாநில அரசின் பங்காக ரூ. 219.89 இலட்சம் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



## அத்தியாயம் 6

## வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி

### 1. முன்னுரை

தமிழகத்தின் வேளாண் வளர்ச்சியை தன்னிறைவு நிலைக்குமேல் தக்க வைக்கும் நோக்குடன் தமிழகத்திலுள்ள வேளாண்மை அடிப்படை ஆதார வளங்களைக் கண்டறிந்து, கிராமப்புறப் பொருளாதாரம் மேம்பாடு அடையும் வண்ணம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தனது வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் தீவிர முனைப்புக் காட்டி வருகின்றது. தரிசு நிலங்கள் மற்றும் மானாவாரி நிலங்களில் நுண்ணீர்ப் பிடிப்புப் பகுதிகள் மேம்பாடு, மண் மற்றும் நீர்வளப் பராமரிப்புத் திட்டங்கள், வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். இத்தகைய குறைவான உற்பத்தித் திறன் கொண்ட நிலங்களின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான புதிய பயிர் வகைகள் மற்றும் பயிர் இரகங்களைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் தீவிரப்படுத்தப்படும. உயிர் எரிசக்திப் பயிர்களான காட்டாமணக்கு போன்ற பயிர்களிலும் கவனம் செலுத்தப்படும். நீர்வள மேலாண்மையில் உழவர்களின் பங்கேற்பைச் செம்மைப்படுத்துவதற்கான சமூகப் பொருளியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். தமிழக அரசின் கொள்கைகளான நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்குதல், கூட்டுறவுக் கடன் தள்ளுபடி மற்றும் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்த கொள்கையியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மேற்கொள்ளவிருக்கும் குறிப்பான ஆய்வுத் திட்டங்கள், கல்வி மற்றும் விரிவாக்கப் பணிகள் பின்வரும் பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளன:

### 2. ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தன் கீழுள்ள 10 கல்லூரிகளிலும், 34 ஆராய்ச்சி நிலையங்களிலும், 14 வேளாண் தொழில்நுட்ப விரிவாக்க மையங்களிலும், 5 பயிர்ப் பாதுகாப்பு மையங்களிலும் (இணைப்பு-I), 801 உப ஆராய்ச்சித் திட்டங்களையும், 738 ஆராய்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது. இதற்கான நிதியுதவியினை மாநில அரசு, மத்திய அரசு, வெளிநாட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களும் அளித்து வருகின்றன. உழவர் பெருமக்கள் வேளாண்மைத் தொழிலில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகட்குத் தீர்வு காணும்வகையில், தமிழகத்திலுள்ள ஏழு வானிலை வேளாண் மண்டலங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## எதிர்கால வேளாண் ஆராய்ச்சிக்கான இலக்குகள் மற்றும் திட்டங்கள்

- ❖ வேளாண் உற்பத்தியை அதிகரித்தல், பயிர்களின் வீரிய ஒட்டுக்களை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்துதல், நெல்லில் வெப்ப நிலைக்கேற்ப மலட்டுத் தன்மையை பெறும் டிஜிஎம்எஸ் இரகங்களையும், வீரிய ஒட்டுக்களையும் இருவழி முறையில் உருவாக்குதல் மேலும் புதிய சிஎம்எஸ் மற்றும் ரெஸ்டோரர் இரகங்களையும் உருவாக்குதல்.
- ❖ வேளாண் உயிரியல் தொழில்நுட்பத்தில் முன்னோடி ஆய்வு மையம் அமைத்தல், திசு வளர்ப்பு, அடையாளம் காட்டிகள் (மார்க்கர்) உதவியுடன் கூடிய பயிர் இரகத் தேர்வு, மரபணு மாற்றம், வறட்சி தாங்குதிறனைப் புகுத்துதல், மரபணு குளோனிங் ஆகியனவற்றை மேற்கொள்ளுதல்.
- ❖ அதிநுண் தொழில்நுட்பத்தை (நேனோ டெக்னாலஜி) வேளாண்மையில் பயன்படுத்துதல்.
- ❖ அதிநுண் தொழில்நுட்ப களைக்கொல்லிகளை உருவாக்கி, மேம்பாடு செய்தல்.
- ❖ அதிநுண் உயிர் தொழில்நுட்பம் (நேனோ பயோடெக்னாலஜி) மூலம் மரபணுக் குறியீடுகளை ஆய்வு செய்தல்.
- ❖ உணவுப் பொருட்களில் ஏற்படும் கலப்பட நச்சுக்களை உயிரியல் தொடு உணர்வு அறிவிப்பான்கள் (பயோசென்சார்) மூலமாகக் கண்டறிதல்.
- ❖ கட்டுப்படுத்தப்பட்ட பயிர்ச்சத்து வெளிப்பாடு.
- ❖ அதிநவீன தகவல் தொழில்நுட்ப அறிவை வேளாண்மையில் பயன்படுத்துதல்.
- ❖ வேளாண் தொழில்நுட்பங்களை இணையதளம்மூலமாகவும் வேளாண் பிரச்சினைகளின் தீர்வு காணலை ஒலி மற்றும் ஒளிக் கருந்துக்கள் மூலமாகவும் மேற்கொள்ளுதல்.
- ❖ நீடித்த நிலையான வேளாண்மை
- ❖ ஒருங்கிணைந்த பண்ணைத் திட்ட மாதிரிகளை பல்வேறு வேளாண் சூழல்களுக்கேற்ப அமைத்திடல், உயிர் உரங்களை உற்பத்தி செய்தல் மற்றும் சீரிய பயிர்ச் சத்து மேலாண்மை செய்தல்.
- ❖ மானாவாரி நிலங்களில் வேளாண்மை மற்றும் நீர்ப பற்றாக்குறையை நிருவாகத் திறன் மூலம் சமாளித்தல்.





- ❖ நிலநீர் ஆதாரங்களுக்கேற்ப அதிக நிகர இலாபம் ஈட்டித்தரும் பயிர்களைச் சாகுபடி செய்தல்
- ❖ புதிய நீர்ப்பாசன முறைகள் மற்றும் வறட்சி தாங்கும் பயிர் இரகங்கள் குறித்த ஆய்வுகளை வலுப்படுத்துதல்.
- ❖ பெருகி வரும் அங்கக வேளாண் விளைப்பொருட்களுக்கான தேவையைக் கருத்தில்கொண்டு, அங்கக வேளாண்மையை ஊக்குவித்தல்.
- ❖ தரிசுநில மேம்பாடு
- ❖ அந்தந்தப் பகுதிகளுக்கேற்ப வேளாண் பயிர்களுக்கிடையே மரம் வளர்ப்பு, மரங்களுக்கிடையே புல் சாகுபடி, அந்தந்த இடத்திலேயே மண் மற்றும் நீர் சேமிப்பு மற்றும் பிரச்சினை நிலங்களுக்கேற்ற தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.
- ❖ மிதமிஞ்சிய இரசாயன இடுபொருட்களின் உபயோகத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாடு குறித்த ஆய்வு.
- ❖ அதிக செலவற்ற, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவல்ல உயிரியல் முறையில் பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு மற்றும் உயிரியல் பூச்சிக்கொல்லிகள் தயாரித்தல்.
- ❖ உயிரியல் முறையில் மாசு சீர்த்திருத்தம் செய்யும் முன்னோடி மையம் அமைத்தல்
- ❖ உயிரியல் முறையில் சீர்திருத்திகளாகச் செயல்படும் நுண்ணுயிர்கள் மற்றும் பேருயிரிகளைத் தேர்வு செயதல், கழிவுகளைச் சுத்தப்படுத்தும் நுண்ணுயிரிகள் மற்றும் உயிரியல் பெருக்குத் திறன் கொண்ட பயிர்கள் மற்றும் மரங்களை மதிப்பீடு செய்தல், குறிப்பிட்ட மாசுக்களை, சீர்திருத்த உயிரியல் சீர்த்திருத்தங்களை (பயோரியாக்டர்) உருவாக்குதல்
- ❖ அறுவடைக்குப் பின்செய் தொழில்நுட்ப வளர்ச்சிமூலம் அறுவடைக்குப் பிந்திய பயிர் இழப்பைத் தவிர்த்தல்
- ❖ வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களின் மதிப்புக் கூட்டுத் தொழில்நுட்பம் உருவாக்குதல்
- ❖ அதிக செலவற்ற பதனீட்டு மற்றும் விற்பனைக்குத் தயார் செய்யும் தொழில்நுட்பம்
- ❖ உயிரியல் ஆதாரத் தொழில்நுட்பம்

[2007 ஏப்ரல் 3

- மானாவாரி எரிசக்தித் தொழில்நுட்பம்
- வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் நுண்கலை பயிர்ப் பெருக்கம்
- பயிர்ச் சத்து மற்றும் பயிர் மரபியல் குறைபாடுகளைக் கண்டறிந்து சீர் செய்யும் வழிமுறைகளைக் கண்டறிந்து தொழில்நுட்பங்களை உருவாக்குதல்
- வன உயிரியல் தொழில்நுட்பம்
- பல்கலைக்கழகத்தில் வெளியிடப்படும் புதிய பயிர் இரகங்களின் விதைகளைப் பெருமளவில் உற்பத்தி செய்து, உழவர்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்
- தமிழ்நாட்டில் உள்ள 63 உப வடி நிலங்களில் சுமார் 6.17 இலட்சம் எக்டேர் நீர்ப்பாசனப் பரப்பை மேம்படுத்திட, உலக வங்கி உதவியுடன் பாசன வேளாண்மை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்நிலைகள் புனரமைப்புத் திட்டம் (IAMWARM), வரும் நிதி ஆண்டு (2007) முதல் 2013 வரை ஆறு ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டமானது தமிழ்நாடு பொதுப் பணித் துறையின்கீழ் உள்ள நீர்வள ஆதார அமைப்பின்மூலம் இதர துறைகளான வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனைத் துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடைத் துறை, மீன்வளம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து அமலாக்கப்பட உள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளின்மூலம் விஞ்ஞான நீர்ப்பாசன முறைகளை அமல்படுத்தி பயிர் மகசூல் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது முக்கியமான நோக்கமாகும். சீரிய தொழில் நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடி, கரும்பு, தென்னை, வாழை மற்றும் காய்கறிப் பயிர்களில் துல்லிய பண்ணை முறை, தொழில் நுட்பங்களை அதிக அளவில் கடை பிடிக்கச் செய்தல், பயறு வகைப் பயிர்களில் உற்பத்தியைப் பெருக்குதல், வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலையினை உறுதிப்படுத்துதல், பண்ணைக் கருவிகளைப் பரவலாக அறிமுகப்படுத்துதல் போன்றவை முக்கிய செயல்பாடுகள் ஆகும். மேலும், தரமான விதைகள்/நாற்றுகள் உற்பத்தி செய்தல், விவசாயிகளுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல் மற்றும் இயற்கை வேளாண்மை முறையை அறிமுகப்படுத்துதல் போன்ற செயல்பாடுகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளன.



2007 ஏப்ரல் 3]

### 3. கல்வி

உலகமயமாக்கலின் தேவைக்கேற்ப வேளாண்மை கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கப் பணிகளில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல புதுமைகளைப் புகுத்தி வருகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் உலக வேலைவாய்ப்புச் சந்தையில் போட்டியிடத் தேவையான திறமைகளை வளர்த்துக் கொள்ள தகுந்த கல்வியை அளிக்க பல்கலைக்கழகம் முனைப்புடன் செயல்படுகிறது.

வரும் கல்வி ஆண்டில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் பரிந்துரைக்கேற்பவும், தமிழக வேளாண்மையை முன்னேற்றமடையச் செய்யவும் தகுந்தவாறு பாடத் திட்டம் மறுசீரமைப்புச் செய்யப்படும். இதில் உயிரியல் தொழில் நுட்பம், நேனோ தொழில் நுட்பம், தகவல் தொடர்பு தொழில் நுட்பம், வேளாண் சுயதொழில் மேலாண்மை, அறுவடைக்குப்பின் செய்தொழில்நுட்பங்கள், விளைபொருட்களின் மதிப்புக் கூட்டுதல், இயற்கை வேளாண்மை, பேரழிவு மேலாணமை, சுற்றுச்சூழல் மேலாண்மை, துல்லிய பண்ணையம் ஆகிய பாடங்களுக்கு முதன்மை அளிக்கப்படும். இணைய வழி வேளாண்மைக் கல்வியில இந்தியாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதன்மையாக விளங்குகிறது. நடப்புக் கல்வி ஆண்டில் வேளாண்மைப் பாடத் திட்டங்கள் அனைத்தும் இணைய பாடங்களாக மாற்றப்படும். இளம் அறிவியல் உணவுத் தொழில்நுட்பம், இளம் அறிவியல் தகவலியல், முதுநிலை இயற்கை வேளாண்மை, துல்லிய பண்ணையம், வேளாண் தொழில் மேலாண்மை, நேனோ தொழில் நுட்பம், முனைவர் பட்டப் படிப்பில் பட்டுப்புழு வளர்ப்பு, தகவலியல், வேளாண் வானிலையியல் ஆகிய பாடத் திட்டங்களைப் புகுத்துவதற்கு ஆவன செய்யப்படும்.

முதுகலைப் பட்டயப் படிப்பில் ஏற்றுமதி வேளாண்மை, துல்லிய பண்ணையம், இயற்கைவள வேளாண்மை, மானாவாரி தோட்டக்கலை, வேளாண் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் ஆகிய பாடத் திட்டங்களும், சான்றிதழ் பாடங்களில் மூலிகைப் பயிர்கள் சாகுபடி, கொய்மலர் சாகுபடி, தீவனப் பயிர்கள் சாகுபடி, உயிர் எரிசக்திப் பயிர்கள் ஆகிய பாடத் திட்டங்களும் தொடங்கப்படும். தொலைதூரக் கல்வித் திட்டத்தில் முதுகலை சுற்றுச்சூழல் மேலாண்மை, தகவலியல், உணவு உயிர்த் தொழில்நுட்பம், மூலிகைச் சாகுபடி ஆகிய பாடங்கள் நடத்தப்படுகின்றன. இதில் மேலும் செய்முறை பாடங்கள் அளிக்க வசதிகள் செய்யப்படும்.

[2007 ஏப்ரல் 3

நவீனத் தொழில்நுட்பங்கள் அடங்கிய, மாணவர்கள் பங்கேற்று ஆசிரியர்களுடன் உரையாடத் தகுந்தவாறு விரிவுரைக் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இணைய நூலகம் உருவாக்கப்படும். இளநிலைக் கல்வி முடித்த மாணவர்கள், பல்கலைக்கழகத் தொழில்நுட்ப பூங்காவில் சிறிய அளவில் தொழில் தொடங்க வழி செய்யப்படும். வேளாண் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் தொடங்கப்படும்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் மாணவர், ஆசிரியர் பரிமாற்றம் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும். ஆசிரியர்களுக்கு இணையக் கல்வி, கல்வி தொழில்நுட்பம், மாணவர் திறனறிதல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படும். 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற இலக்குப்படி, ஆசிரியர்கள் நியமனத்திற்கு ஆவன செய்யப்படும். மாணவர்களைச் சிறந்த ஆளுமைத்தன்மை உடையவர்களாக உருவாக்க வேளாண் கல்வியோடு நிறுத்திக்கொள்ளாமல் உடலினை உறுதியாக வைத்துக் கொள்ள விளையாட்டு மைதானத்தில் அனைத்து உள் அரங்கு, வெளி அரங்கு விளையாட்டுக் கூடங்கள் அமைக்கப்படும். மேலும், நீச்சல்குளம், உடற்பயிற்சிக் கூடம் ஆகியவை தொடங்கப்படும்.

தகவல் தொழில்நுட்ப மோகத்தால் மாணவர்கள் கணினிப் பாடத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். அதனால் அறிவியல் மற்றும் குறிப்பாக உயிரியல் பாடத் திட்டங்களில் மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கத் திட்டமிடுவதும் அதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுவதும் வரும் கல்வி ஆண்டின் முதன்மையான நோக்கமாகும்.

## 4. கொள்கை ஆலோசனைகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண்மையில் ஏற்பட்டுவரும் பயிர் மாற்றங்கள், மழைப்பொழிவு அளவு, வேளாண்மையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி போன்றவற்றைக் கூர்ந்து ஆய்ந்து அதன் அடிப்படையில் வகுக்க வேண்டிய திட்டங்களுக்கான கொள்கை மற்றும் கோட்பாடுகளைத் தயாரித்து அரசுக்கு அளித்து வருகின்றது. ஒப்பந்த சாகுபடி முறை, வேளாண் சந்தைகளை மறுசீரமைத்தல், மானாவாரி வேளாண்மையை மேம்படுத்துதல் மற்றும் தமிழக வேளாண்மையின் ஒட்டு மொத்த வளர்ச்சி போன்ற கொள்கை சார்ந்த பிரச்சினைகளில் தமிழக அரசுக்குத் தேவையான ஆலோசனைகளையும் இப்பல்கலைக்கழகம் அவ்வப்போது வழங்கி வருகிறது. தமிழக அரசின் ஓராண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்கள் ஆகியவற்றில் வேளாண் வளர்ச்சிக்கான செயல்திட்டங்களைத் தயாரித்து அளித்து வருகிறது.



2007 ஏப்ரல் 3]

## 5. விரிவாக்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ள புதிய வீரிய இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் புதிய சாகுபடித் தொழில்நுட்பங்கள் தமிழக உழவர்கட்கு உடனுக்குடன் சென்றடையச் செய்வதில் விரிவாக்கக் கல்வி இயக்ககம் கவனம் செலுத்துகின்றது. இதற்காக 11 உழவர் பயிற்சி மையங்கள், 5 பயிர்ப் பாதுகாப்பு மையங்கள், தகவல் தொடர்பு நிலையம் மற்றும் பயிற்சி மையம் ஏற்படுத்தி வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், ஒலி-ஒளிக்காட்சி மற்றும் பத்திரிகைகள் மூலம் உழவர் பெருமக்களைச் சென்றடையும்வண்ணம் சேவை செய்து வருகிறது.

❖ விவசாயம் இலாபகாமான தொழில் என்ற இலக்குடன் செயல்படும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தற்போது உள்ள வேளாண் வளர்ச்சி நிலையைப் பற்றியும் மற்றும் வருங்காலத்தில் வேளாண் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டத்தையும், உழவர்கள், வேளாண் விஞ்ஞானிகள், விரிவாக்க அலுவலர்கள் மற்றும் வேளாண்மைச் சார்ந்த அலுவலகத்தில் பணிபுரிபவர்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

❖ வேளாண் வளர்ச்சித் திட்டங்கள் மேலிடத்திலிருந்து கீழ்நோக்கி வருவதைவிட கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும்வகையில் மாற்றங்கள் செய்யபபடும்.

❖ உற்பத்தியை மையமாகக் கொண்ட வேளாண்மைக்கு மாறாக, சந்தை சார்ந்த வேளாண்மைக்கு மாறுதல் என்ற கருத்துருவிற்கு மாறுவதன்மூலம் விவசாயிகள் தேசிய மற்றும் உலகளவில் போட்டியிட்டு உலகமயமாதலில் பங்கேற்கச் செய்யமுடியும்.

❖ விவசாயிகள் விஞ்ஞான முறையில் நவீன உத்திகளைப் பயன்படுத்தி அதிக வருவாய் ஈட்ட அனைத்து மாவட்டங்களிலும் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.3 கோடி செலவில் துல்லிய பண்ணைத் திட்டம் செ[illegible] இத்திட்டத்தின்கீழ் விளக்கப் பண்ணை[illegible] நவீன உத்திகள் விவுசாயிகளுக்குக் கொண்டு செல்[illegible]படும்.

227653
சென்னை-600 008

[2007 ஏப்ரல் 3

- ❖ ஒருங்கிணைந்த பண்ணைய முறை, குழு பண்ணையம், மண் வளத்தைப் பாதுகாத்தல், நுண்ணீர்ப் பாசன மேலாண்மை, தரமான விதைகள் மற்றும் நடவுக்கான பொருட்களை வழங்குதல் ஆகிய திட்டங்கள்மூலம் ஒரு ஏக்கரில் அதிகபட்ச உற்பத்தி என்ற குறிக்கோளிலிருந்து, ஒரு ஏக்கரிலிருந்து அதிகபட்ச வருவாய் என்ற இலக்கை நோக்கி நகர்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.
- ❖ வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து உழவர்களுக்கு எந்த அளவிற்கு அதிகபட்ச நன்மை கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு ஒருங்கிணைந்து செயல்பட வழிவகைகள் கண்டறியப்படும்.
- ❖ மேற்கூறியபடி வேளாண் வளர்ச்சியை மேலும் உத்வேகப்படுத்தும் வகையில் தொழில்நுட்பம், நிருவாகம் மற்றும் செய்தித் தொழில்நுட்பத் திறமைகளையும் பணித் தகுதிகளையும் வளர்த்துக் கொள்ள வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள் பெரிய அளவில் நடத்தப்படும்.
- ❖ தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் இணைந்து தமிழ்நாட்டில் முதல்கட்டமாக ஒன்பது மாவட்டங்களில் செயல்படுத்தி வருகின்ற வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விரிவாக்கச் சீர்திருத்தங்கள், வரும் 1-1-2007 முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.
- ❖ ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம், அரசு வேளாண்மைத் துறை, வங்கிகள், அரசு சாராத நிறுவனங்கள் மற்றும் தனியார் வேளாண் நிறுவனங்கள் ஆகிய துறைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்பட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## 6. தொலைதூரக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம் ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தொலைதூரக் கல்வித் திட்டம் வாயிலாக சான்றிதழ் பாடங்கள், முதுநிலை பட்டயம் மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகள் பல்வேறு பிரிவைச் சார்ந்தவர்கள் பயன்பெறும்வண்ணம் நடத்தப்படுகின்றன. கிராமப் பகுதிகளில்



2007 ஏப்ரல் 3]

வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஏதுவாகவும் தொலைதூரக் கல்வியில் ஆர்வமுள்ளவர்களுக்குப் பயனளிக்கும் வண்ணம் இப்பாடங்கள் நடத்தப்படுகின்றன. திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக 2007-2008 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட பாடங்கள் நடத்தப்படவுள்ளன :

### சான்றிதழ் பாடங்கள் (6 மாதங்கள் – தமிழ் வழி)

1. தேனீ வளர்ப்பு
2. காளான் வளர்ப்பு
3. திடக்கழிவுகள், மண்புழு உரம் தயாரித்தல் தொழில்நுட்பங்கள்
4. நவீன கரும்பு சாகுபடித் தொழில்நுட்பங்கள்
5. தென்னை சாகுபடித் தொழில்நுட்பங்கள்
6. பருத்தி சாகுபடித் தொழில்நுட்பங்கள்
7. காய்கறி விதை உற்பத்தி
8. பருத்தி மற்றும் மக்காச்சோளம் வீரிய ஒட்டு விதை உற்பத்தி
9. தரிசு நில மேம்பாடு
10. பண்ணைக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பழுதுபார்த்தலும், பராமரித்தலும்
11. பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதப்படுத்துதல்
12. தோட்டக்கலைப் பயிர்களுக்கான நாற்றங்கால் தொழில் நுட்பங்களும் மற்றும் பயிர்ப் பெருக்க முறைகளும்
13. அலங்காரத் தோட்டம் அமைத்தல்
14. மூலிகைப் பயிர்கள்
15. நவீன முறை பாசன மேலாண்மை
16. அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள்

### முதுநிலை பட்டயப் படிப்புகள் (ஒரு வருடம்)

1. மூலிகைப் பயிர் உற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாடு
2. உணவு உயிர் நுட்பவியல்
3. உயிரியல் தகவல் இயல்

### முதுநிலை பட்டப் படிப்புகள் (இரண்டு வருடங்கள்)

1. முதுநிலை வணிக மேலாண்மை
2. முதுநிலை சுற்றுச்சூழல் மேலாண்மை

### எதிர்காலத் திட்டம்

❖ தொலைதூரக் கல்வி கற்போரின் திறமையை மேம்படுத்தும் வண்ணம் வேளாண்மை மற்றும் உப தொழில்களில் தொழில்நுட்பக் குறுந்தகடுகளைத் தயாரித்தல்

❖ நேர்முகப் பயிற்சி மையங்களை இணையதளம்மூலம் இணைத்து தொடர்ச்சியான தொழில்நுட்பப் பரிமாற்றத்துக்கு உதவுதல்.

❖ சுய உதவிக் குழுக்களைத் தொலைதூரக் கல்வியில் சேர ஊக்குவித்து கிராம அளவில் வேளாண்மை சார்ந்த தொழில்களைத் தொடங்க வழிவகைசெய்தல்.

### 7. புதிய பயிற்சிகள்

விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விரிவாக்கப் பணிகளைச் செம்மையான முறையில் மேற்கொள்ளும் வகையில் வேளாண்மைத் துறையின் விரிவாக்க அலுவலர்களுக்கு ரூ.123 இலட்சம் செலவில் 2007-2008 ஆம் ஆண்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இது தவிர கீழ்க்காணும் முக்கிய தலைப்புகளில் உழவர் பெருமக்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்.

❖ ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்

❖ மழைநீர் சேகரிப்பும் தரிசு நில மேம்பாடும்

❖ கிராம அளவில் வேளாண் விளைபொருட்களை மதிப்பூட்டுதல்

❖ அறுவடைக்குப் பிந்திய செய்நேர்த்தி முறைகள்

❖ வேளாண் மகளிரிடையே தலைமைப் பண்புகளை உருவாக்குதல்

❖ கிராமப்புற வடிகால் பண்ணைகளை உருவாக்குதல்



## இணைப்பு 1

### 1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கல்லூரிகள்

| வ. எண் | கல்லூரி | முகவரி |
|---|---|---|
| 1 | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் – 641003 |
| 2 | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் – 641003 |
| 3 | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் – 641003 |
| 4 | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மதுரை – 625 104 |
| 5 | மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மதுரை – 625 104 |
| 6 | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கிள்ளிகுளம் –628 252 |
| 7 | அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | நாவலூர் குட்டப்பட்டு திருச்சி – 620 009 |
| 8 | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | குமுளூர், திருச்சி–621 712 |
| 9 | வனஇயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மேட்டுப்பாளையம்–641 301 |
| 10 | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | பெரியகுளம் – 625 604 |
| | அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள் | |
| 1 | பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | காரைக்கால் – 609 603 |
| 2 | ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி | கலவை, வேலூர்–632 506 |

## 2. ஆராய்ச்சி நிலையங்கள்

1. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் – 628 501
2. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி – 627 701
3. பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிப்புத்தூர் – 626 125
4. மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர் 635 112
5. மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை – 626 107
6. தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியாறுநகர் – 642 101
7. நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம் – 627 401
8. வீரிய ஒட்டுநெல் ஆய்வு மையம், கூடலூர் – 643 212
9. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல் – 624 103
10. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வைகை அணை – 625 512
11. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி – 623 707
12. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை – 629 181
13. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம் – 629 901
14. கடலோர உவர் ஆராய்ச்சி மையம், இராமநாதபுரம் – 623 501
15. நகர்ப்புற தோட்டக்கலை வளர்ச்சி மையம், சென்னை – 600 040
16. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை – 624 602
17. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு – 636 602
18. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம் – 643 001
19. எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் – 602 002
20. கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர் – 607 001
21. கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி – 639 115
22. கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாலத்தூர் – 635 806
23. தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம் – 614 908
24. மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர் – 613 501
25. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் – 632 104
26. நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர் – 602 025
27. மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம் – 606 001
28. தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையம், வம்பன் – 622 303
29. காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர் – 607 102
30. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை – 614 602
31. தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101
32. மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர் - 636 117
33. மக்காச்சோள ஆராய்ச்சி நிலையம், வாகரை–624 613
34. பருத்தி ஆராய்ச்சி நிலையம், பெரம்பலூர் மாவட்டம்



## 3. வேளாண்மை அறிவியல் நிலையங்கள்

1. வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்–641 003.
2. வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை–625 104.
3. வேளாண்மை அறிவியல் நிலையம், மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்–606 001.
4. வேளாண்மை அறிவியல் நிலையம், கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி–639 115.
5. வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர்–636 203.
6. வேளாண்மை அறிவியல் நிலையம், எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்–604 002.
7. வேளாண்மை அறிவியல் நிலையம், மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை–626 107.
8. வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம்–632 104.
9. வேளாண்மை அறிவியல் நிலையம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை–629 161.
10. வேளாண்மை அறிவியல் நிலையம், கடலோர உவர் ஆராய்ச்சி மையம், இராமநாதபுரம்–623 503.
11. வேளாண்மை அறிவியல் நிலையம், தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையம், வம்பன்–622 303.
12. வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல்–611 108.
13. வேளாண்மை அறிவியல் நிலையம், நீடாமங்கலம்–614 404.
14. வேளாண்மை அறிவியல் நிலையம், நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்–602 025.

## 4. பயிர்ப் பாதுகாப்பு மையங்கள்

1. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம்–628 252.
2. பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிப்புத்தூர்–626 125.
3. நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம்–627 401.
4. மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர்–635 112.
5. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்–628 501.

[2007 ஏப்ரல் 3

## அத்தியாயம் 7

## விதைச் சான்றளிப்பு

### 1. முன்னுரை

வேளாண்மை உற்பத்தியில் நிலையான வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஏற்பட, விதை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கப் போதிய அளவு தரமான விதைகளை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கச் செய்வது அவசியம். இதனை அடைய விதைச் சான்றளிப்புத் துறை விதைச் சான்றளிப்பு, விதை தரக் கட்டுப்பாடு, விதைப் பரிசோதனை மற்றும் பயிற்சி முதலிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 2. விதைச் சான்றளிப்பு

விதைச் சான்றளிப்புத் துறை இந்திய விதைகள் சட்டம் 1966 மற்றும் விதை விதிகள் 1968-ன் அடிப்படையில் விதைச் சான்றளிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. எனினும் சான்றளிக்கப்பட்ட விதைகளைப் பயன்படுத்தி சாகுபடி செய்யப்படும் பரப்பு மிகக் குறைவாகவே உள்ளது. மொத்த விதைத் தேவையில் சுமார் இருபது விழுக்காடு சான்றளிக்கப்பட்ட விதைகள் மூலமும் சுமார் பத்து விழுக்காடு உண்மை நிலை விதைகள் மூலமும் நிறைவு செய்யப்படுகிறது. மொத்த சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியில் 64.08 விழுக்காடு தனியார் விதை உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. விதை உற்பத்திக்கும் தேவைக்கும் உள்ள இடைவெளியை நிறைவு செய்ய தனியார் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டும். பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் ஆண்டான 2007-2008-ல் பல்வேறு பயிர்களில் 60,500 மெட்ரிக் டன் விதைகளுக்குச் சான்றளிக்கப்பட்டு விநியோகிக்கப்பட உள்ளது.

### 3. விதை தரக் கட்டுப்பாடு

வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க, உழவர்களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தை விதை தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கை மூலமாக உறுதி செய்ய வேண்டியது முக்கியமானதாகும். புதிய விதைக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தனியார் நிறுவனங்கள் புதிய ஆராய்ச்சி இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுக்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளன. உழவர்களின் நலனைப் பாதுகாக்கவும், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் புதிய மற்றும் வீரிய ஒட்டு



2007 ஏப்ரல் 3]

இரகங்களின் தரத்தை உறுதி செய்ய வேண்டியது அவசியம். விதை விற்பனை நிலையங்களைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்தும், உழவர்களுக்கு விநியோகம் செய்ய இருப்பு வைக்கப்பட்டிருக்கும் விதைக் குவியல்களிலிருந்து தரப் பரிசோதனைக்கு விதை மாதிரிகளை எடுத்து விதை வணிகத்தைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியது அவசியம். விதைகள் சட்டம் 1966, விதை விதிகள் 1968, விதைகள் (கட்டுப்பாடு) ஆணை 1983 மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 ஆகியவற்றின் அடிப்படையில் விதை தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு, விதைகளின் தரத்தை உறுதி செய்கிறது. இவை தவிர விதைகள் (கட்டுப்பாட்டு) ஆணை 1983-ன் கீழ் விதை விற்பனை உரிமங்களும் வழங்கப்படுகிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தரக் கட்டுப்பாட்டுப் பணிகளில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. தற்சமயம் சுமார் 6,300 விதை விற்பனை நிலையங்கள் நமது மாநிலத்தில் உள்ளன. ஒவ்வொரு விதை விற்பனை நிலையமும் ஆண்டு ஒன்றுக்கு 4 முதல் 5 முறை ஆய்வு செய்யப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் 34,500 விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 24,000 விதை மாதிரிகள் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 4. விதைப் பரிசோதனை

நவீன வேளாண்மையில் விதைப் பரிசோதனைத் திட்டம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. இத்திட்டத்தில் விதைகளின் தரத்தை அறிய பிற ரக முளைப்புத் திறன், புறச்சுத்தம், ஈரப்பதம், விதை நலம் மற்றும் கலவன்கள் கண்டறியப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் விதைப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. விதைச் சான்றளிப்பு மற்றும் விதை தரக் கட்டுப்பாட்டுப் பணிகளை உரிய முறையில் செயல்படுத்த விதைப் பரிசோதனைத் திட்டம் அவசியமானது. விதைப் பரிசோதனை நிலையங்களில் சான்று விதை மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வு விதை மாதிரிகள் மட்டுமின்றி உழவர்களிடமிருந்தும், விற்பனையாளர்களிடமிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. விதைகளின் இனத் தூய்மையை அறிய விதைச் சான்று இயக்ககத்திலுள்ள கண்ணாடி ஆய்வகத்திலும், கண்ணம்பாளையம் (கோயம்புத்தூர்) பண்ணையிலும் பயிர் வளர்ப்புப் பரிசோதனை செய்யப்படுகிறது. விதைச் சான்றளிப்புத் திட்டத்தில் சான்றளிப்புக்கு முன், இனத் தூய்மை உறுதி செய்ய வேண்டிய பயிர் விதை மாதிரிகளும், விதை ஆய்வுப் பிரிவிலிருந்து பெறப்படும் விதை மாதிரிகளும் இனத் தூய்மைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 58,500 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. விதைப் பரிசோதனைத் திட்டப் பயன்களை எல்லா மாவட்ட விவசாயிகளும் எளிதில் அடைய ஏதுவாக விதைப்

பரிசோதனை நிலையங்கள் இல்லாத 22 மாவட்டங்களில் புதிய விதைப் பரிசோதனை நிலையங்கள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

**5. பயிற்சி**

தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஊக்குவிக்க இத்துறையின் பயிற்சிப் பிரிவின் மூலமாகக் கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகள் நடத்தப்படுகின்றன:

**5.1 புத்தறிவுப் பயிற்சி**

இத்துறையில் புதிதாகப் பணியேற்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு விதைச் சான்றளிப்பு, விதைப் பரிசோதனை மற்றும் விதை தரக் கட்டுப்பாடு குறித்த நடைமுறைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

**5.2 புத்தாக்கப் பயிற்சி**

இத்துறையில் ஏற்கெனவே பணியாற்றும் அலுவலர்களுக்கு விதை உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய வெளியீட்டு இரகங்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் கண்டறிதல் குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது.

**5.3 விதை உற்பத்தியாளர் பயிற்சி**

விதை உற்பத்தியாளர்களுக்கு விதை உற்பத்தி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி பெரும்பாலும் விதை உற்பத்தி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளை உள்ளடக்கியதாகும்.

**5.4 விதை விற்பனையாளர்களுக்குத் தரக் கட்டுப்பாட்டுப் பயிற்சி**

விதை விற்பனையில் விதை தரம் பேணிக்காத்தல் தொடர்பாகவும், விதை இருப்பு வைப்பதிலும், விற்பனை செய்வதிலும் கையாள வேண்டிய நெறிமுறைகள் குறித்தும், விதைப் பிரிவு, ஒழுங்குபடுத்துதல் தொடர்பான சட்டங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் ஆண்டான 2007-2008-ல் 30,500 நபர்களுக்குப் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**6. மைய அரசுத் திட்டம்**

விதைச் சான்றளிப்புத் துறையின் விதைப் பரிசோதனை நிலையங்களை மேம்படுத்தவும், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கவும் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.185.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரம் உயர ஏதுவாக அமையும்.





**அட்டவணை 1**

**சான்று செய்த விதை அளவு மெ.டன்.**

| வ. எண் | பயிர் | 2006-07 | | 2007-08 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | 28-02-2007 முடிய சாதனை | இலக்கு |
| 1 | நெல் | 44200 | 47933 | 54200 |
| 2 | ரக சிறு தானியம் | 500 | 358 | 350 |
| 3 | வீரிய சிறு தானியம் | 10 | 0 | 10 |
| 4 | ரக பருத்தி | 1200 | 820 | 1200 |
| 5 | வீரிய பருத்தி | 20 | 8 | 20 |
| 6 | பயறு வகை | 1200 | 999 | 1250 |
| 7 | எண்ணெய் வித்து | 3300 | 2687 | 3400 |
| 8 | காய்கறிகள் | 70 | 54 | 70 |
| | மொத்தம் | 50500 | 52859 | 60500 |

**அட்டவணை 2**

**விதை ஆய்வு**

| வ. எண் | விவரம் | 2006-07 | | 2007-08 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | 28-02-2007 முடிய சாதனை | இலக்கு |
| 1 | விற்பனை நிலைய ஆய்வுகள் | 31200 | 29532 | 34500 |
| 2 | விதை மாதிரிகள் எடுத்தது | 23000 | 23553 | 24000 |

**அட்டவணை 3**

**விதைப் பரிசோதனை**

| வ. எண் | விவரம் | 2006-07 | | 2007-08 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | 28-02-2007 முடிய சாதனை | இலக்கு |
| 1 | விதைப் பகுப்பாய்வு | | | |
| | பரிசோதனை செய்தது | 70000 | 51431 | 58500 |

**அட்டவணை 4**

**விதைச் சான்றுப் பயிற்சி**

| வ. எண் | விவரம் | 2006-07 | | 2007-08 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | 28-02-2007 முடிய சாதனை | இலக்கு |
| 1 | பயனாளிகள் | 29000 | 30419 | 30500 |















## இணைப்பு

### விதைச் சான்றளிப்புப் பகுதிகள்

| தொடர் எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கோயம்பத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு |
| 3 | சேலம் | சேலம், தருமபுரி மற்றும் நாமக்கல் |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | விழுப்புரம் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | திருவண்ணாமலை | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |
| | **விதை ஆய்வுப் பகுதிகள்** | |
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு, நாமக்கல் |
| 3 | சேலம் | சேலம் மற்றும் தருமபுரி |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | கடலூர் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |
| | **விதைப் பரிசோதனை நிலையங்கள்** | |
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி |
| 2 | மதுரை | மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், மற்றும் சிவகங்கை |
| 3 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 4 | தருமபுரி | தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 7 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் திருவள்ளூர் |

## அத்தியாயம் 8

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

### 1. எண்ணங்களும் செயல்பாடுகளும்

உலகத்தரம் வாய்ந்த பொருட்களையே விரும்பும் நுகர்வோர் மத்தியில் தற்போதைய போட்டி நிறைந்த சூழ்நிலையில் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்வதே வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் தொலை நோக்கமாகும். இதற்கென இயற்றப்பட்ட சட்டத்தை முறையாகச் செயல்படுத்தி, புதிய தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் அறுவடைக்குப் பின் மற்றும் போக்குவரத்தில் ஏற்படும் சேதாரங்களைக் குறைப்பதுடன், சரியான வகையில் தரம்பிரித்தும், விளைபொருட்களின் மதிப்பினைக் கூட்டுவதன் மூலமும் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்ய, தக்க நடவடிக்கை மேற்கொள்வதுமாகும்.

### 1.1. முன்னுரை

பசுமைப் புரட்சி மூலம் பல முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உணவு தானிய உற்பத்தியை அதிகரித்துத் தன்னிறைவு எய்திட இயன்றது. அதே வேளையில், மாநிலத்தில் வேளாண் விற்பனையை மேம்படுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கிராமங்களின் வளர்ச்சியிலும், நாட்டின் கிராமப் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதிலும், வேளாண் அங்காடிகளின் உள்கட்டமைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விவசாயத்தின் செயல்திறன் மேம்படுவதற்குச் சாகுபடி எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு விற்பனையும் முக்கியமாகத் திகழ்கிறது.

தேசிய வேளாண் குழுவின் அறிக்கையின்படி (12-வது அறிக்கை) வேளாண்மை விற்பனை என்பது ஒரு விளைபொருளை உற்பத்தி செய்திட முடிவெடுக்கும்போதே தொடங்குகிறது. மேலும், வேளாண்மை விற்பனை என்பது அங்காடி முறையில் அனைத்து வேளாண் கூறுகளையும் உள்ளடக்கியது என்பதோடு அறுவடைக்கு முன்னும் பின்னும் செய்கின்ற செய்நேர்த்திகள், விளைபொருளை ஓரிடத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பது, தரம் பிரிப்பது, சேமிப்பது மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வது மற்றும் வழங்குவது ஆகியவற்றையும் கொண்டது ஆகும். இந் நடவடிக்கைகள் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்பினைக் கூட்டுவதுடன் விளைவிப்போருக்குச் சிறந்த விலை கிடைக்க வழி வகுக்கின்றது.



இதனைக் கருத்தில்கொண்டு, வேளாண் விற்பனைக்கான அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கும் பொருட்டும் மற்றும் வேளாண் விளைபொருள் வணிகத்தை ஒழுங்குபடுத்தும் வகையிலும், 'தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 மற்றும் விதிகள் 1991'ஐத் தமிழ்நாடு அரசு உருவாக்கியது. இச்சட்டம் 1959 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்திற்கு மாற்றாகக் கொண்டு வரப்பட்டது.

வேளாண்மை விற்பனை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனைத் துறை 1977 முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருகின்றது. வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதோடு மட்டுமின்றி உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி ஆகிய பொறுப்புகள் கூடுதலாக வழங்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டு முதல் "வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

### வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முக்கியச் செயல்பாடுகள்

1. விவசாயிகள் மற்றும் நுகர்வோர் நேரடியாக முழுப பயன்பெறும் வகையில் உழவர் சந்தைகளை ஏற்படுத்திச் செயல்படுத்துதல்.
2. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குக் காய்கறிகள், பழங்கள் மற்றும் வாசனை மலர்கள் ஆகியவற்றின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெருக்கிடும் வகையில் குழுக்களை ஏற்படுத்திச் விற்பனை வசதிகளை உருவாக்குதல்.
3. விவசாயிகள் நலன் கருதி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி வேளாண் விளைபொருள் விற்பது மற்றும் வாங்குவது போன்ற செயல்களை ஒழுங்குபடுத்துதல்.
4. விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக விற்பனை செய்வதனால் அடையும் பயன்களைப்பற்றி ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல், பயிற்சிகள் அளித்து அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.
5. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வரப்படும் அளவிலான விளைபொருட்கள் மற்றும் பண்ணை விளைபொருட்களைத் தரம் பிரித்து, சிறந்த விலை கிடைத்திட உதவுதல்.

[2007 ஏப்ரல் 3

6. வேளாண் பொருட்கள், கால்நடைகள்மூலம் கிடைக்கும் பொருட்கள் மற்றும் வனப் பொருட்கள் ஆகியவற்றிற்கு நுகர்வோர் பயன்பெறும் வகையில் அக்மார்க் தர முத்திரை வழங்கும் திட்டத்தினை அமலாக்குதல்.

7. வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைப்பதன்மூலம் ஏற்றுமதி செய்யும் வேளாண் விளைபொருட்களின் பரப்பினை அதிகரித்தல், அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய மேலாண்மை குறித்த விவரங்களை அளித்தல், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை எற்படுத்துதல் மற்றும் சர்வதேசச் சந்தையில் நிலவும் விலை விவரத்தை ஒருங்கிணைத்து அளித்தல்.

8. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்குச் சரியான விலை கிடைக்க உறுதி செய்திட, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய குளிர்பதனக் கிட்டங்கிகளை அமைத்தல் (பண்ணையிலிருந்து சந்தை முடிய குளிரூட்டுந் தொடர் அமைத்தல்).

9. உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவப்பட முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

## 1.2 விற்பனைக் குழுக்கள்

தமிழ்நாட்டில் தற்போது 21 விற்பனைக் குழுக்கள் மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன.

## 1.3 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

தமிழ்நாட்டிலுள்ள விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 277 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 சோதனைச் சாவடிகள், 108 ஊரகக் கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

புதியதாக உருவாக்கப்பட்ட நீலகிரி விற்பனைக் குழுவின்கீழ் உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விரைவில் செயல்படவுள்ளது.

நீலகிரி விற்பனைக் குழு மற்றும் நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் ரூ.3.25 கோடி செலவில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான நிலம் மாவட்ட ஆட்சியர்மூலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.



2007 ஏப்ரல் 3]

விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை ஒருசேர விற்பனைக் கூட வளாகத்தில் கூட்டி, விளைபொருட்கள் விற்பனையை முறைப்படுத்தி, மறைமுக ஏலமுறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி அதிகபட்ச விலை பெற்றுத் தருவது, இலவசமாக விளைபொருளின் தரத்தினை விவசாயிகள் அறிந்துகொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களில், விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டு சென்றுதான் விற்பனை செய்ய முடியும். இதற்கென 1 முதல் 2 விழுக்காடு வரை கொள்முதல் செய்யும் வியாபாரிகளிடமிருந்து விற்பனைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

ஆனால், தமிழ்நாட்டில் விவசாயிகள் பயனடையும் வகையில் கொள்முதல் முறை எளிமையாக்கப்பட்டு, 1 விழுக்காடு மட்டுமே நிர்ணயிக்கப்பட்டு விற்பனைக் கட்டணம் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.10 கோடி வசூலிக்கப்படுகிறது.

விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம், அட்டவணை I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.3.1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வழங்கப்படும் சேவைகள்

மின்னணு எடை மேடை மற்றும் எடை தராசு கொண்டு சரியான எடையிடுதல் வசதி, கிட்டங்கி வசதி, வங்கி வசதி, உடனடியாகப் பணம் வழங்கல், அன்றாட அங்காடி விலை விவர நிலவரம் அறிய வாய்ப்பு, விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, குடிநீர் வசதி, வண்டி மாடுகள நிறுத்துவதற்கு இட வசதி, இலவச மருத்துவ வசதி, இடுபொருள் மையம், தொலைபேசி மற்றும் நிகரி வசதி போன்ற பல வசதிகள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மைய அரசின் அக்மார்க் நெட் திட்டத்தின்கீழ் 93 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குத் தொலைபேசி இணையதள வசதியுடன் கூடிய கணினி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாய விளைபொருட்களுக்கு நிலவும் அன்றாட விலை விவரத்தைத் தேசிய தகவல் மையத்திற்கு அனுப்பப்படுவதன்மூலம் விவசாயிகள் விளைபொருட்களுக்குப் பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நிலவும் விலை விவரத்தை அறிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களையும் கணினி ஒருங்கிணைந்த வலைதளம் மூலம் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2007-2008 ஆம் நிதியாண்டில் அக்மார்க் நெட் திட்டத்தின்கீழ் மேலும் 100 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு இவ்வசதி விரிவுபடுத்த திட்டமிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைக் குழு வாரியான உட்கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள், அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 1.3.2. விளைபொருட்கள் அறிவிக்கை செய்தல்

இதுவரை நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 12 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

### 1.4. வணிகமுறைத் தரம் பிரித்தல்

உற்பத்தியாளர்களின் பொருட்களுக்குத் தரத்திற்கேற்ற சிறந்த விலை கிடைக்க உதவும் நோக்கத்துடன் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 96 வணிகமுறைத் தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தித் தரம் பிரிப்பு மையங்கள், 1 புகையிலைத் தரம் பிரிப்பு மையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும், கிராமங்களில் விவசாயிகளின் விளைபொருட்களுக்கும் வணிகத்திற்கும் ஏற்ற முறையில் தரம் பிரிப்பு செய்யப்படுகிறது. இம்மையங்கள் தற்போது "அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்பத் தகவல் மையம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்கள், அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய செய்நேர்த்தி தொழில் நுட்பப் பணி பற்றி விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கின்றார்கள்.

### 1.5. விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன்

சிறு/குறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அறுவடைக் காலங்களில் பாதிப்பு ஏற்படுத்தும் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கிட்டங்கிகளில் 6 மாதம் வரை இருப்பு வைத்து, விளைபொருளின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு வரை பொருளீட்டுக் கடனாக, அதிகபட்சமாக



ரூ.50,000/- வரை பெறலாம். அதேபோன்று வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இதற்காக தற்சமயம் விவசாயிகளிடமிருந்து 8 விழுக்காடு வட்டியும் மற்றும் வியாபாரிகளிடமிருந்து 9 விழுக்காடு வட்டியும் வசூலிக்கப்படுகிறது.

### 1.6 தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள், விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ/நிரந்தர ஊனமுற்றாலோ அல்லது விஷப் பாம்புக் கடியின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ ரூ.1,00,000/- வரை உதவித் தொகை வழங்கப்படும். அதேபோன்று, விபத்தின் காரணமாக இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் அல்லது இரு கண்கள் இழக்க நேரிட்டால், ரூ.75,000/- உதவித் தொகையும் மற்றும் விபத்தின் காரணமாக ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் இழக்க நேரிட்டால் ரூ.50,000/- உதவித் தொகையும், தகுதியுடைய விவசாயிகள்/குத்தகைதாரர்களுக்கு வழங்கபபடும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற தவணைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், ஒருவருக்கு வருடத்திற்குத் தவணைக் கட்டணமாக ரூ.10/-ஐ உரிய விற்பனைக் குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் சம பங்காகச் செலுத்துகின்றன.

### 1.7. அக்மார்க் தரம் பிரித்தல்

"அக்மார்க்" என்பது உணவுப் பண்டங்களின் தரத்திற்கு அளிக்கப்படும் முத்திரையாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதேயாகும். தமிழ்நாட்டில் ஒரு முதன்மை ஆய்வகம் மற்றும் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும், 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 'அக்மார்க்' தரம் பிரிப்பின்கீழ், மையத் தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப் பண்டங்களுக்கும், மையத் தொகுப்பிற்கு உட்படாத உணவுப் பண்டங்களுக்கும், தரம் பிரிக்கும் பணியானது பயிற்சி பெற்ற தொழில்நுட்ப அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டதின்கீழ் உணவுப் பண்டங்கள் தரம் மற்றும் தன்மை

[2007 ஏப்ரல் 3

அடிப்படையில் சிப்பமிடப்படுகின்றன. 'அக்மார்க்' முத்திரைச் சீட்டுகள் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் மேற்பார்வையில் வழங்கப்படுகின்றன.

2006-2007ஆம் நிதியாண்டில் மாநில அக்மார்க் ஆய்வகங்கள் மற்றும் அக்மார்க் தரம்பிரிப்பு மையம் நுகர்வோர்கள் மற்றும் சிப்பம் கட்டுபவர்கள் பயன்பெறும் வகையில் நவீன உபகரணங்கள் அரசின் பகுதி-II திட்டத்தின்கீழ் வாங்கப்பட்டுள்ளன.

## 1.8. கிராமங்களில் உலர் களங்கள் அமைத்தல்

அறுவடைக்குப் பின் ஏற்படும் தானிய இழப்பினைக் குறைக்கும் வகையில் இத்துறையின் மூலமாகக் கிராமங்களில் உலர் களங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும் திட்டமாகும். இது வரை ரூ.21.24 கோடி செலவில் 1,130 உலர் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 2. உழவர் சந்தைகள்

தமிழ்நாட்டில் விவசாயிகள் மற்றும் நுகர்வோர்கள் பயன்பெறும் வகையில் நகரப் பகுதிகளில் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே செயல்பட்டு வந்த 75 உழவர் சந்தைகள் புனரமைக்கப்பட்டும் மற்றும் மூடப்பட்ட 28 உழவர் சந்தைகள் அனைத்தும் திறக்கப்பட்டும் தற்சமயம் மொத்தம் 103 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த சந்தைகள்மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க உறுதி செய்யப்படுவதுடன், நுகர்வோருக்கு வெளிச்சந்தையைக் காட்டிலும் குறைவான விலையில் தரமான, சரியான எடையுள்ள காய்கறிகள், கனிகள், மூலிகைகள், சிறு தானியங்கள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது, சராசரியாக நாளொன்றுக்கு 1,010 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் பழங்கள் ரூபாய் 1.00 கோடி மதிப்பில் 7,500 விவசாயிகள் மூலம் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகின்றன. இதன்மூலம் தினந்தோறும் சுமார் 1,90,000 நுகர்வோர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

## 2.1. உழவர் சந்தையை மேம்படுத்துதல்

உழவர் சந்தைகளில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மின்னணு எடை தராசு, பிளாஸ்டிக் கிரேடுகள், காய்கறிகளை எடுத்துச் செல்ல தள்ளு வண்டிகள், காய்கறி கழிவுகளைச் சேகரித்து அப்புறப்படுத்த பிளாஸ்டிக் கழிவுத் தொட்டி ஆகிய வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.



2007 ஏப்ரல் 3]

இவை தவிர, காய்கறி மற்றும் பழங்களைப் பாதுகாத்திட குளிர்பதன அறைகள், காய்கறிகளை எடுத்துவர குளிரூட்டியுடன் கூடிய மினி வேன் வசதி, கணினி மற்றும் நிகரி வசதி, புதிய ரக வீரிய காய்கறி விதைகள், கன்றுகள், சொட்டு நீர்ப் பாசனக் கருவிகள், இயற்கை வேளாண்மை முறைகள் மற்றும் அறுவடைக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய செய்நேர்த்தி குறித்த பயிற்சிகள் போன்ற வசதிகள் உழவர் சந்தைகளில் ஏற்படுத்தப்பட உள்ளன. இவ்வசதிகள் சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதியின்மூலம் மானியம் பெற்று நிறைவேற்றப்படும்.

## 3. வணிக வளாகம் அமைத்தல்

## 3.1. நெல் வணிக வளாகம்

நெல் பயிருக்கென ரூ.12.60 கோடி செலவில் மதுரையில் விவசாயிகள் மற்றும் வணிகர்கள் பயன்பெறும் வகையில், நெல் வணிக வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில் மொத்தம் 314 கடைகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 143 கடைகள் நெல் வணிகத்திற்கும், 54 கடைகள் இடுபொருள் வணிகத்திற்கும், 100 கடைகள் மலர் வணிகத்திற்கும், 17 கடைகள் அலுவலகப் பயன்பாட்டிற்கும் மற்றும் அஞ்சல் அலுவலகம், தொலைபேசி தொடர்பகம், சிற்றுண்டிச்சாலை, கூட்டுறவுப் பண்டகசாலை ஆகியவற்றிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை 131 கடைகள் நெல் வணிகர்களுக்கும், 44 கடைகள் இடுபொருள் வணிகர்களுக்கும் மற்றும் 104 கடைகள் மலர் வணிகர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## 3.2. மஞ்சள் வணிக வளாகம்

தமிழ்நாட்டில் மஞ்சள் வணிகத்திற்கென ஈரோட்டிற்கு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ.36.32 கோடி செலவில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த மஞ்சள் வணிக வளாகம், இம்மாநிலம் மற்றும் அகில இந்திய விவசாயிகள், வணிகர்கள் பயன்பெறும் வகையில் அமையும். இந்த மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்காக மஞ்சள் வணிகர் சங்கத்தால் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் ஈரோடு விற்பனைக் குழுவிற்கு 17.55 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இதில் ரூ.11.32 கோடி செலவில் பொதுவான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.3. மாங்கனி மற்றும் வெங்காயம் விற்பனைக்கென வணிக வளாகம்

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் பொங்கலூரில் வெங்காயத்திற்கும் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கும் குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் தலா ரூ.2 கோடி வீதம் மொத்தம் ரூ.4 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.4. தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைக்கென குளிர்பதனக் கிட்டங்கி ஏற்படுத்துதல்

திராட்சை உற்பத்தி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைக்கென தரம் பிரித்து, பக்குவப்படுத்தி அட்டைப் பெட்டிகளில் அடைத்து ஏற்றுமதி செய்யத்தக்க வகையில் குளிர்பதனக் கிட்டங்கி ரூ.3.75 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.5. காவேரிப்பட்டணத்தில் நெல் வணிகத்திற்கென விற்பனைக் கூடம் அமைத்தல்:

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் நெல் பயிரிடும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் உலர்களம் மற்றும் கிட்டங்கி வசதியுடன்கூடிய நெல் வணிகத்திற்கென ஒரு விற்பனைக் கூடம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 3.6. விற்பனை முனையங்கள் ஏற்படுத்துதல்

மைய அரசின் நெறிமுறைப்படி அமைத்த அழுகும் பொருட்களான காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றைப் பதப்படுத்தி விற்பனை செய்திட அனைத்து வசதிகளுடன்கூடிய விற்பனை முனையங்கள் (Terminal Markets) சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மூன்று பெரு நகரங்களின் அருகில் உத்தேசமாக ரூ.200 கோடி செலவில் ஏற்படுத்தப்பட உள்ளன.

மேற்கண்ட பெரு நகரங்களின் அருகில் விற்பனை முனையம் ஏற்படுத்த தேவையான இடம் தெரிவு செய்யப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையினை (Detailed Project Report) ஜெய்ப்பூர் தேசிய வேளாண்மை விற்பனை பயிற்சி நிலையம் (National Institute of Agricultural Marketing)



தயாரித்து அளித்திட ஒப்புக்கொண்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனடிப்படையில் பணிகள் தொடங்கப்படும்.

### 4. வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம்

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதில் சந்தையறிவுத் திறம் முக்கியப் பங்கினை வகிக்கின்றது. விவசாயிகள் பல்வேறு சந்தைகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரத்தினை அறிவதன்மூலம், அவர்களின் விளைபொருட்களுக்குக் கூடுதல் விலை பெற ஏதுவாகின்றது. இதனைக் கருத்தில்கொண்டு, அனைத்து வசதிகளுடன்கூடிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்கள் ரூ.15 இலட்சம் செலவில் 11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் இணையதளம் வசதியுடன்கூடிய கணினி மற்றும் மின்னணு தகவல் பலகை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களில் கணினிமூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரப்பெற்ற விளைபொருட்களின் வரத்து மற்றும் அவற்றிற்கு நிலவும் விலை நிலவரம் மற்றும் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து மின்னணு தகவல் பலகையில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒளிப்பரப்பு செய்யப்படுகிறது.

### 5. வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் குறிப்பிட்ட வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக கீழ்க்காணும் மூன்று இடங்களில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்கப்பட்டுள்ளன:

### 5.1. கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களை உள்ளடக்கி ஓசூரில் கொய்மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம்

தமிழ்நாட்டில் கொய்மலருக்கென ஏற்றுமதி மண்டலம் அமைப்பது குறித்து மைய அரசின் நிறுவனமான அபிடா (APEDA)-வுடன் செயலாக்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதற்கென ஓசூரில் 198.73 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ.21.85 கோடி மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனமும், தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள "டான்ஃப்ளோரா" என்ற கூட்டு நிறுவனம், தரம் பிரித்தல், சிப்பம் கட்டுதல் உள்ளடக்கிய மத்திய சிப்பம் கட்டும் கூடம் (Central Pack House), பதப்படுத்தும் நிலையம், குளிரூட்டும் நிலையம் (Cold Storage),

[2007 ஏப்ரல் 3

விற்பனை வசதி ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது. இந்த வசதிகள் அனைத்தும் 2007 இறுதிக்குள் நடைமுறைக்கு வரத்தக்க வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.10 கோடி மதிப்புள்ள 110 இலட்சம் கொய்மலர்கள் ஐரோப்பா, மத்திய மற்றும் தூரக் கிழக்கு நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

## 5.2. நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென ஏற்றுமதி மண்டலம்

நீலகிரி மாவட்டம், ஊட்டியில் மலர்களுக்கென ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் தனியார் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மண்டலம் அமைப்பது குறித்து மைய அரசின் நிறுவனமான அபிடா (APEDA)-வுடன் செயலாக்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்த ஏற்றுமதி மண்டலத்தில் ஏல மையம், நாய்க் கன்று நாற்றங்கால், முன் குளிர்விப்பான், குளிர்பதனக் கிடங்குகள், குளிரூட்டி பொருத்தப்பட்ட ஊர்தி, நவீன மலர் சாகுபடிப் பயிற்சி மையம், விற்பனை வசதிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்படவுள்ளன. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு நவீன மலர் சாகுபடிக்கான தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், சாகுபடிக்குத் தேவையான மலர் செடிக் கன்றுகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, பசுமைக்குடில் மற்றும் நிழல் வலைகள் அமைத்திட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. மேலும், மலர்கள் சாகுபடிக்குத் தேவையான தொழில்நுட்ப விவரம் குறித்த விவரங்களை விவசாயிகள் அறிய ஏதுவாக தகவல் மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட மின்னணு மலர் ஏல மையம் (Electronic Flower Auction Centre) ரூ.11 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 06-02-2007 அன்று திறக்கப்பட்டது. தற்பொழுது விவசாயிகள் இம்மலர் ஏல மையத்திலிருந்து மலர்களை விற்பனை செய்கிறார்கள்.

இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.62.79 இலட்சம் மதிப்புள்ள 9.53 இலட்சம் மலர்கள் மற்றும் ரூ.19.50 இலட்சம் மதிப்புள்ள பதப்படுத்திய உலர்மலர்கள் (Assorted Dry Flowers) மத்திய மற்றும் தூரக் கிழக்கு நாடுகள், சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 3]

## 5.3. தேனி மாவட்டத்தில் மாம்பழத்திற்கென ஏற்றுமதி மண்டலம்

மாம்பழத்திற்கென தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி, வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.21.60 கோடி மதிப்பீட்டில் தனியார் துறை பங்கேற்புடன் அமைக்கப்பட்டுள்ளது. அபிடா நிறுவனமும், தமிழ்நாடு அரசும் இதற்கான செயலாக்க ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த வேளாண் ஏற்றுமதி மண்டலத்தில் மாக்கிரிட்டா (M/S. Maagrita Export Limited) என்ற தனியார் நிறுவனத்தால் சிப்பம் கட்டும் கூடம், சேகரிப்பு மையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள், தரம் பிரிப்புக் கூடம், சுடுநீர் பதப்படுத்தும் இயந்திரம், மின்னணு தரம் பிரிப்பு, கூழாக்கும் நிலையம், உலர்ப்பான், பழக்கூழ் பதப்படுத்தும் நிலையம், போன்ற வசதிகள் நிலக்கோட்டை உணவுப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.33.61 இலட்சம் மதிப்புள்ள 31 மெட்ரிக் டன் மாம்பழங்கள் ரூ.32.35 இலட்சம் மதிப்புள்ள 66 மெட்ரிக் டன் இதர பழங்கள் மற்றும் காய்கறிகள், ரூ.7.74 இலட்சம் மதிப்புள்ள 61,906 தேங்காய்கள் ஆகியவை துபாய், சிங்கப்பூர், மலேசியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

## 5.4. கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கென ஏற்றுமதி மண்டலம்

முந்திரிக்கென கடலூர் மாவட்டத்தில் ரூ.17.00 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாகத் தனியார் துறை பங்கேற்புடன் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான செயலாக்க ஒப்பந்தம் அபிடா நிறுவனத்தாலும், தமிழ்நாடு அரசாலும் செய்து கொள்ளப்பட்டது. இம்மண்டலத்தில் பொது கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட சத்துவா ஏற்றுமதி நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) அந்நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இம்மண்டலத்தில் பொதுவான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட சத்துவா ஏற்றுமதி நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு, அந்நிறுவனத்தால் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கப்பட்டு டிட்கோ நிறுவனத்திடம் அளிக்கப்பட்டது. தற்சமயம் மாநில அரசின் முதற்கட்ட பங்குத் தொகையான ரூ.19 இலட்சம் டிட்கோ நிறுவனத்தால் சத்துவா ஏற்றுமதி நிறுவனத்திற்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்றுமதி மண்டலம் ஏற்படுத்திட, 2005 ஆம் ஆண்டில் செயலாக்க ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருந்தாலும், இதற்கான பணிகள் 2006-2007 ஆம் ஆண்டில்தான் தொடங்கப்பட்டது.

## 5.5. புதியதாக தோற்றுவிக்கப்படவுள்ள வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

### திருச்சி மாவட்டத்தில் வாழைக்கென ஏற்றுமதி மண்டலம்

வாழைக்கென திருச்சி மாவட்டத்தில் ரூ.10.00 கோடி திட்டச் செலவில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின்மூலமாகத் தனியார் துறை பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட உள்ளது. இம்மண்டலத்தில் 8.5 மெ.டன் கொள்ளளவு கொண்ட 5 சேகரிப்பு மையங்கள் 500 மெ.டன். கொண்ட கிட்டங்கி, 1000 மெ. டன் கொள்ளளவு கொண்ட சீதோஷ்ணம் கட்டுப்படுத்தப்பட்ட கிட்டங்கி, நாள் ஒன்றுக்கு 500 மெ.டன் அளவு தரம் பிரிப்பு செய்யக் கூடிய 2 தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் ஆண்டு ஒன்றுக்கு 15,000 மெ.டன் பதப்படுத்தக் கூடிய திறன் கொண்ட பதப்படுத்தும் நிலையங்கள் தனியார் உதவியுடன் அமைக்கப்பட உள்ளன. இம்மண்டலம் அமைப்பதற்கான கருத்துரு மைய அரசின் அபிடா நிறுவனத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 6. குளிர்பதன கிட்டங்கி அமைத்தல்

தமிழ்நாட்டில் 100 இலட்சம் மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள், 65 இலட்சம் மெ.டன் தானிய வகைகள், 3 இலட்சம் மெ.டன் வாசனைப் பயிர்கள் மற்றும் 5 இலட்சம மெ.டன் மலைப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அடுத்த ஐந்தாண்டுகளில் மேற்கண்ட பயிர்களின் விளைபொருள் உற்பத்தி 30 விழுக்காடு கூடுதலாக வாய்ப்புள்ளது. வேளாண் விளைபொருட்களில் குறிப்பாக போதிய சேமிப்பு வசதி மற்றும் குளிர்பதன வசதி இல்லாமையால் மொத்த உற்பத்தியில் 8 முதல் 10 விழுக்காடு தானிய வகைகள், 30 முதல் 35 விழுக்காடு காய்கறிகள் மற்றும் பழங்கள் கெட்டு விடுகின்றன. இதனால் விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு 15 முதல் 25 விழுக்காடு குறைவான விலை பெறக்கூடிய நிலை ஏற்படுகிறது.

காய்கறிகள் மற்றும் பழங்கள், தானிய வகைகள், வாசனைப் பயிர்கள் மற்றும் மலைப் பயிர்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திடும் நோக்கில் இத்துறையின்மூலமாக 15 இடங்களில் தனியார் துறைமூலம் குளிர்பதனக் கிட்டங்கிகள் கிராமிய உள்கட்டமைப்பு நிதியுதவியினை நபார்டு வங்கிமூலம் பெற்றும் தேசிய தோட்டக்கலை



வாரியத்தின் மானியம் பெற்றும் அமைத்திடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்குளிர்பதனக் கிட்டங்கிகள் காய்கறிகள் மற்றும் பழங்கள் அதிக அளவில் விளையக்கூடிய பகுதிகள் விற்பனைப் பகுதிகள் மற்றும் வேளாண் விரிவாக்க மையங்கள் அமைந்துள்ள பகுதியில் அமைக்கப்படும்.

## 7. உணவுப் பதப்படுத்தும் தொழிலகங்கள்

விவசாயிகளுக்கு நிலையான, நியாயமான விலையை உணவுப் பதப்படுத்தும் தொழிலகங்கள் உறுதியளித்தலைத் தொடர்ந்து, உணவுப் பதப்படுத்தும் தொழில் தற்போது வளர்ச்சி பெற்று வருவதுடன், பதப்படுத்தப்பட்ட வகையில் நுகர்வோருக்கு ஆண்டு முழுவதும் உணவுப் பண்டங்கள் கிடைப்பதற்கும் வழிவகை செய்யப்படுகிறது. இதன்மூலம் பெருமளவில் உணவுப் பொருள் இழப்பும் தவிர்க்கப்படுகிறது. விவசாயிகள் பதப்படுத்தலுக்கேற்ப தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்வதன்மூலம் அவர்களுக்குக் கூடுதல் வருவாய் ஈட்ட வாய்ப்பு கிடைக்கின்றது. திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டைத் தொழிற்பேட்டையில் ரூ.13 கோடி செலவில் உணவுப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மத்திய அரசின் உணவுப் பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

2006-2007ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் ரூ.25.17 கோடி முதலீட்டுத் தொகையில் 21 உணவுப் பதப்படுத்தும் தொழிலகங்களுக்கு ரூ.5 கோடி முதலீட்டு மானியத் தொகை பெற மைய அரசின் உணவுப் பதப்படுத்தும் அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டு, இதுவரை 5 திட்டங்களுக்கு ரூ.1.76 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் ரூ.443.88 கோடி முதலீட்டுத் தொகையில் 378 உணவுப் பதப்படுத்தும் தொழிலகங்கள் மற்றும் உணவுப் பதப்படுத்துதலைச் சார்ந்த செயல்பாடுகளுக்காகவும் ரூ. 72.80 கோடி முதலீட்டு மானியத் தொகை பெற மைய அரசின் உணவுப் பதப்படுத்தும் அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டு, இதுவரை 180 திட்டங்களுக்கு ரூ.37.92 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் முக்கியப் பணிகள்.

## 8.1. விளம்பரம் மற்றும் பிரச்சாரம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள மையங்கள்மூலமாக வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்வதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளைச் செய்து வருகிறது.

மேலும், சேலம், திருவாரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மையங்களில் இப்பணி விரிவுபடுத்தப்பட்டு உள்ளது.

## 8.2. பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்

சேலத்தை மையமாகக் கொண்டு, மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் சுமார் 2.25 ஏக்கர் நிலப் பரப்பில் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறைப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் தேவைகளை நிறைவு செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின்மூலம் தரம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சி மையத்திலிருந்து தரம் பிரிப்பாளர் பயிற்சி, ஆண்டு ஒன்றுக்கு 3 அணி வீதம் விற்பனைக் குழுவில் பணிபுரியும் பணியாளர் 60 நபர்களுக்கு 30 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதேபோன்று விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி, ஆண்டு ஒன்றுக்கு 1 அணி வீதம் 20 நபர்களுக்கு 28 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், விவசாயிகளுக்கான நேரடித் தொடர்புத் திட்டம் குறித்த பயிற்சி, ஆண்டு ஒன்றுக்கு 5 அணிகளாக 1 அணிக்கு 20 விவசாயிகள் வீதம் மொத்தம் 100 விவசாயிகளுக்கு 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இது தவிர, வேளாண்மை உதவி இயக்குநர் (விளம்பரம் மற்றும் பிரச்சாரம்) சென்னை, மதுரை, மற்றும் கோயம்புத்தூர் மையங்கள் மற்றும் வேளாண்மை அலுவலர் (விளம்பரம் மற்றும் பிரச்சாரம்) திருச்சி மையம்மூலமாக அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலேயே வைத்து ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு மையத்திலிருந்தும் 180 விவசாயிகள் வீதம் மொத்தம் 1,920 விவசாயிகளுக்கு நேரிடையாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



## 8.3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விற்பனை அறக்கட்டளை அறிவுப் பீடம் அமைத்தல்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக் கல்வி மையத்திற்கு ரூ.50 இலட்சம் வைப்பு நிதியாக அளித்து ஓர் அறக்கட்டளை அறிவுப் பீடம் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியிலிருந்து பெறப்படும் வட்டியின்மூலம் பல ஆராய்ச்சிகளும், பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.

இந்த அறக்கட்டளையின்மூலம் இதுவரை 29 ஆராய்ச்சிகளும் மற்றும் 19 பயிற்சிகளும் இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## 8.4. கட்டுமானப் பணிகள்

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், உலரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணம் வழங்கல் அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உட்புறச் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச் சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2006-2007 ஆம் நிதியாண்டில் உழவர் சந்தைகளின் மராமத்துப் பணிகள் ரூ.12 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு புதுப் பொலிவுடன் உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன.

## 8.5. விற்பனை மேம்பாட்டு நிதி

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், தமக்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை வாரியத்திற்குப் பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50 விழுக்காடு, சந்தை மேம்பாட்டு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அதிலிருந்து விற்பனை மேம்பாடுகளுக்கான விளம்பரம் மற்றும் பிரச்சாரம் பயிற்சி போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

## 8.6. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத் திறம், தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்துதல்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் ரூ.32 இலட்சத்தில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பங்களிப்புடன் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத் திறம், தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரிவு சர்வதேச சந்தையில் முக்கிய விளைபொருட்களுக்கான முந்தைய தற்போதைய விலை விவரங்களைச் சேகரித்து அவற்றை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் எதிர்கால ஏற்றுமதிக்கான விலையை முன்னறிவிப்பு செய்தல், ஏற்றுமதிக்கு உகந்த நாடுகளைக் கண்டறிதல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது. சர்வதேச மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் விளைபொருட்களுக்கு எதிர்வரும் மாதங்களில் நிலவக்கூடிய விலை விவரங்களைக் கண்டறிந்து, அவ்விவரங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யப்படுகிறது. இது தவிர, அண்டை மாநிலங்களில் முக்கிய விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரங்களை அறிந்து விவசாயிகளுக்குத் தெரிவிப்பதன் மூலம், விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களுக்கு நல்ல விலை பெறவும், பருவத்திற்கேற்ற பயிர்களைத் தேர்வு செய்யவும், அவர்களுடைய விளைபொருட்களை குறித்த நேரத்தில் விற்பனை செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பிரிவு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை தகவல் மையங்களுடன் இணையதளம் வாயிலாக இணைக்கப்பட்டு, விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரங்கள் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் அறியும் வகையில் தெரிவிக்கப்படுகிறது.

## 9. தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு

தமிழகத்தில் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பூட்டுதல் முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்து அதன்மூலம் வேளாண் வணிகத்தில் அவர்களை ஈடுபடுத்த ஏதுவாக பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து, "தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு" உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு அரசு, தனியார் துறை, விவசாய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.



2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.847.13 இலட்சம் முதலீட்டுத் தொகையில் 5 நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக ரூ.70.57 இலட்சத்திற்கு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பின்மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ரூ.789.65 இலட்சம் முதலீட்டுத் தொகையில் 6 நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையினை, சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பின்மூலம் ஒப்புதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 10. நீர் வள, நில வளத் திட்டம் (IAMWARM)

ஒருங்கிணைந்த நவீன வேளாண்மை மற்றும் நீர்வள ஆதார மேலாண்மைத் திட்டம் (Irrigated Agriculture Modernisation and Water bodies Restoration Management) என்பது, உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தும் திட்டமாகும். மேற்படி திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட 63 உப வடிநிலங்களில் ஆறு வருடங்களில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் முதற்கட்டமாக 9 உப வடிநிலங்களில் ரூ.8.83 கோடி செலவிலும், மொத்தம் 63 உப வடிநிலங்களில் தோராயமாக ரூ.24.84 கோடி செலவிலும் செயல்படுத்தபட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் உப வடிநிலங்களில் உலர்களம், சேமிப்புக் கிட்டங்கி, சேகரிப்பு மையம், சிப்பம் கட்டும் அறை, வேளாண் வணிக மையம், சரக்கு ஆட்டோ, மினி லாரி, கிரேட்ஸ், டன்னேஜ், தார்பாலின், எடையிடும் கருவி, ஈரமானி போன்றவைகள் பாசன நீர் உபயோகிப்போர் விவசாயிகள் சங்கத்திற்குச் செய்து கொடுக்கப்படும்.

## அட்டவணை—1

**மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், சோதனைச் சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிகமுறைத் தரம் பிரிப்பு மையங்கள், பருத்தித் தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலைத் தரம் பிரிப்பு மையம் குறித்த விவரங்கள்.**

(எண்களில்)

| தொ. எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | சோதனைச் சாவடிகள் | ஊரகக் கிட்டங்கி | வணிக முறைத் தரம் பிரிப்பு மையம் | பருத்தி தரம் பிரிப்பு மையம் | புகை யிலை தரம் பிரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 14 | 2 | 5 | 7 | —— | —— |
| 2 | வேலூர் | 12 | —— | 4 | 5 | —— | —— |
| 3 | திருவண்ணா மலை | 16 | —— | 7 | 10 | —— | —— |
| 4 | கடலூர் | 10 | —— | 3 | 6 | —— | —— |
| 5 | விழுப்புரம் | 18 | —— | 9 | 13 | 1 | —— |
| 6 | சேலம் | 19 | —— | 2 | 6 | —— | —— |
| 7 | தருமபுரி | 16 | 2 | 4 | 5 | —— | —— |
| 8 | கோவை | 18 | —— | 11 | 2 | 3 | —— |
| 9 | ஈரோடு | 25 | 1 | 9 | 10 | 2 | 1 |
| 10 | திருச்சி | 19 | 4 | 10 | 4 | —— | —— |
| 11 | தஞ்சாவூர் | 13 | 2 | 4 | 3 | —— | —— |
| 12 | புதுக்கோட்டை | 10 | 1 | 2 | 2 | —— | —— |
| 13 | மதுரை | 6 | —— | 2 | 2 | —— | —— |
| 14 | இராமநாதபுரம் | 20 | 1 | 10 | 6 | 1 | —— |
| 15 | திருநெல்வேலி | 20 | —— | 12 | 6 | 3 | —— |
| 16 | கன்னியாகுமரி | 6 | 2 | 5 | 2 | —— | —— |
| 17 | தேனி | 7 | —— | 2 | 1 | 1 | —— |
| 18 | திண்டுக்கல் | 8 | —— | 4 | 4 | —— | —— |
| 19 | நாகப்பட்டினம் | 8 | —— | 1 | 1 | —— | —— |
| 20 | திருவாரூர் | 8 | —— | 2 | 1 | —— | —— |
| 21 | நீலகிரி | 4 | —— | —— | —— | —— | —— |
| | மொத்தம் | 277 | 15 | 108 | 96 | 11 | 1 |



## அட்டவணை—2

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள உள்கட்டமைப்பு வசதிகள் (எண்களில்)**

| தொ. எண் | விற்பனைக் குழுக்கள் | சொந்த நிலம் | கிட் டங்கி | ஊரகக் கிட் டங்கி | பரிவர்த் தனைக் கூடம் | உலர் களம் | விவசாயி கள் ஓய்வறை | சுகாதார வசதி | குடிநீர் வசதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7 | ... | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2 | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3 | திருவண்ணா மலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4 | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5 | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6 | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | ... | 4 | 3 |
| 7 | தருமபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 58 | 11 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9 | ஈரோடு | 14 | 12 | 9 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10 | திருச்சி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11 | தஞ்சாவூர் | 10 | 11 | 4 | 17 | 7 | 6 | 9 | 9 |
| 12 | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13 | மதுரை | 4 | .. | 2 | 1 | 3 | 3 | 2 | 3 |
| 14 | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15 | திருநெல்வேலி | 15 | 3 | 12 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16 | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| 17 | தேனி | 4 | .. | 2 | 3 | 6 | 1 | 3 | 4 |
| 18 | திண்டுக்கல் | 6 | 1 | 4 | 6 | 7 | .. | 5 | 5 |
| 19 | நாகப்பட்டினம் | 1 | 1 | 1 | 2 | 1 | .. | 1 | 1 |
| 20 | திருவாரூர் | 1 | .. | 2 | 1 | 1 | 2 | 1 | 1 |
| 21 | நீலகிரி | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| | மொத்தம் | 167 | 129 | 108 | 194 | 158 | 68 | 171 | 143 |

## அட்டவணை—3

### விற்பனைக் குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

| 1. காஞ்சிபுரம் | 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
|---|---|---|
| காஞ்சிபுரம் | வேலூர் | திருவண்ணாமலை |
| திருத்தணி | திருப்பத்தூர் | ஆரணி |
| திருவள்ளூர் | ஆற்காடு | வந்தவாசி |
| செங்குன்றம் | அரக்கோணம் | சேத்துப்பட்டு |
| மதுராந்தகம் | வாணியம்பாடி | செய்யார் |
| உத்திரமேரூர் | காவேரிப்பாக்கம் | போளூர் |
| பொன்னேரி | குடியாத்தம் | செங்கம் |
| திருக்கழுக்குன்றம் | கலவை | புதுப்பாளையம் |
| சுங்குவார்சத்திரம் | அம்மூர் | வானாபுரம் |
| பள்ளிப்பட்டு | காட்பாடி | வேட்டவலம் |
| ஊத்துக்கோட்டை | ஆம்பூர் | தெள்ளார் |
| அச்சிறுப்பாக்கம் | திமிரி | மங்கல மாமண்டூர் |
| கும்மிடிப்பூண்டி | | தேசூர் |
| நசரத்பேட்டை | | பொரணமல்லூர் |
| | | தூசி |
| | | கீழ்பெண்ணாத்தூர் |

| 4. கடலூர் | 5. விழுப்புரம் | |
|---|---|---|
| விருத்தாசலம் | திண்டிவனம் | மணலூர்ப்பேட்டை |
| கடலூர் | திருக்கோவிலூர் | அவலூர்ப்பேட்டை |
| பண்ருட்டி | உளுந்தூர்ப்பேட்டை | மரக்காணம் |
| திட்டக்குடி | விழுப்புரம் | விக்கிரவாண்டி |
| காட்டுமன்னார்கோவில் | சின்னசேலம் | அனந்தபுரம் |
| சிதம்பரம் | கள்ளக்குறிச்சி | வளத்தி |
| குறிஞ்சிப்பாடி | செஞ்சி | மூங்கில்துறைப்பட்டு |
| சேத்தியாதோப்பு | தியாகத்துருகம் | கிளியனூர் |
| ஸ்ரீமுஷ்ணம் | சங்கராபுரம் | |
| புவனகிரி | திருவெண்ணெய்நல்லூர் | |



| 6. சேலம் | 7. தருமபுரி | 8. கோயம்புத்தூர் |
|---|---|---|
| சேலம் | தருமபுரி | திருப்பூர் |
| ஆத்தூர் | கிருஷ்ணகிரி | அவிநாசி |
| நாமக்கல் | ஒசூர் | சேவூர் |
| இராசிபுரம் | கெலமங்கலம் | அன்னூர் |
| திருச்செங்கோடு | பாலக்கோடு | காரமடை |
| சங்ககிரி | பெண்ணாகரம் | கோயம்புத்தூர் |
| கொங்கணாபுரம் | போச்சம்பள்ளி | சூலூர் |
| கொளத்தூர் | காவேரிப்பட்டணம் | பல்லடம் |
| வேலூர் | ஊத்தங்கரை | உடுமலைப்பேட்டை |
| மேச்சேரி | அரூர் | ஆனைமலை |
| வாழப்பாடி | பாப்பிரெட்டிப்பட்டி | பொள்ளாச்சி |
| தம்மம்பட்டி | கொளத்தூர் | மலையடிப்பாளையம் |
| நாமகிரிப்பேட்டை | பர்கூர் | நெகமம் |
| தலைவாசல் | இராயக்கோட்டை | கிணத்துக்கடவு |
| ஓமலூர் | தென்கனிக்கோட்டை | தொண்டாமுத்தூர் |
| காடையம்பட்டி | பாப்பாரப்பட்டி | மடத்துக்குளம் |
| கெங்கவல்லி | | பெதப்பம்பட்டி |
| கருமந்துறை | | பொங்கலூர் |
| சோளக்காடு | | |

| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| ஈரோடு | ஜெயங்கொண்டம் | அதிராம்பட்டினம் |
| அவல்பூந்துறை | கரூர் | அம்மாப்பேட்டை |
| கொடுமுடி | அரியலூர் | பூதலூர் |
| சிவகிரி | மணப்பாறை | கும்பகோணம் |
| சித்தோடு | ஆண்டிமடம் | மதுக்கூர் |
| பவானி | துறையூர் | ஒரத்தநாடு |
| பூதப்பாடி | பெரம்பலூர் | பட்டுக்கோட்டை |
| அந்தியூர் | லால்குடி | பாபநாசம் |
| மயிலம்பாடி | திருச்சிராப்பள்ளி | பேராவூரணி |
| கவுந்தம்பாடி | தொட்டியம் | தஞ்சாவூர் |
| கோபி | மண்ணச்சநல்லூர் | வல்லம் |
| நம்பியூர் | குளித்தலை | திருப்பனந்தாள் |
| வெள்ளக்கோவில் | துவரங்குறிச்சி | பாப்பாநாடு |
| சத்தியமங்கலம் | இரும்பூதிப்பட்டி | |

[2007 ஏப்ரல் 3

| 9. ஈரோடு—தொடர்ச்சி | 10. திருச்சிராப்பள்ளி—தொடர்ச்சி. | |
|---|---|---|
| புஞ்சைபுளியம்பட்டி | சின்னதாராபுரம் | |
| தாளவாடி | புள்ளம்பாடி | |
| பெருந்துறை | தாத்தையங்கார்பேட்டை | |
| குன்னத்தூர் | மேலணைக்குழி | |
| காங்கேயம் | அரும்பாவூர் | |
| வெள்ளாங்கோவில் | | |
| தாராபுரம் | | |
| மூலனூர் | | |
| அலங்கியம் | | |
| முத்தூர் | | |
| ஏழுமாத்தூர் | | |

| 12. புதுக்கோட்டை | 13. மதுரை | 14. இராமநாதபுரம் |
|---|---|---|
| ஆலங்குடி | திருமங்கலம் | விருதுநகர் |
| அறநாதாங்கி | உசிலம்பட்டி | இராஜபாளையம் |
| புதுக்கோட்டை | மேலூர் | சாத்தூர் |
| கந்தர்வக்கோட்டை | மதுரை | அருப்புக்கோட்டை |
| ஆவுடையார்கோவில் | டி. கல்லுப்பட்டி | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| கீரனூர் | வாடிப்பட்டி | வத்திராயிருப்பு |
| கீரமங்கலம் | | வெம்பக்கோட்டை |
| பொன்னமராவதி | | சிவகங்கை |
| இலுப்பூர் | | திருபுவனம் |
| கறம்பக்குடி | | மானாமதுரை |
| | | சிங்கம்புணரி |
| | | காரைக்குடி |
| | | இளையான்குடி |
| | | தேவகோட்டை |
| | | இராமநாதபுரம் |
| | | பரமக்குடி |
| | | கமுதி |
| | | திருவாடானை |
| | | இராசசிங்கமங்கலம் |
| | | முதுகுளத்தூர் |



2007 ஏப்ரல் 3]

| 15. திருநெல்வேலி | 16. கன்னியாகுமரி | 18. திண்டுக்கல் |
|---|---|---|
| கோவில்பட்டி | ஈத்தாமொழி | திண்டுக்கல் |
| சங்கரன்கோவில் | வடசேரி | ஒட்டன்சத்திரம் |
| தூத்துக்குடி | களியக்காவிளை | பழனி |
| புதூர் | திங்கள்சந்தை | நத்தம் |
| கடம்பூர் | குலசேகரம் | வத்தலகுண்டு |
| கழுகுமலை | தொடுவட்டி | கோபால்பட்டி |
| தென்காசி | | வடமதுரை |
| அம்பாசமுத்திரம் | 17. தேனி | வேடசந்தூர் |
| வள்ளியூர் | தேனி | |
| ஸ்ரீவைகுண்டம் | கம்பம் | |
| திருநெல்வேலி | போடிநாயக்கனூர் | |
| விளாத்திகுளம் | சின்னமனூர் | |
| கடையநல்லூர் | ஆண்டிப்பட்டி | |
| திசையன்விளை | உத்தமபாளையம் | |
| பாவூர்சத்திரம் | பெரியகுளம் | |
| திருவேங்கடம் | | |
| எட்டையபுரம் | | |
| சிவகிரி | | |
| ஆலங்குளம் | | |
| சாத்தான்குளம் | | |

| 19. நாகப்பட்டினம் | 20. திருவாரூர் | 21. நீலகிரி |
|---|---|---|
| கீழ்வேளூர் | வலங்கைமான் | உதகமண்டலம் |
| குத்தாலம் | கொரடாச்சேரி | குன்னூர் |
| மயிலாடுதுறை | மன்னார்குடி | கோத்தகிரி |
| நாகப்பட்டினம் | பூந்தோட்டம் | கூடலூர் |
| செம்பனார்கோவில் | வடுவூர் | |
| சீர்காழி | குடவாசல் | |
| வேதாரண்யம் | திருவாரூர் | |
| திருப்பூண்டி | திருத்துறைப்பூண்டி | |

## அட்டவணை–4

## தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| தொ. எண் | மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|---|
| 1 | சென்னை | வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் அலுவலகத்தில் அமைந்துள்ள முதன்மை ஆய்வகம், சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு). |
| 2 | வேலூர் | வேலூர் |
| 3 | கடலூர் | கடலூர் |
| 4 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி–1, திருச்சிராப்பள்ளி–2 |
| 6 | கரூர் | கரூர் |
| 7 | மதுரை | மதுரை–1, மதுரை–2 |
| 8 | தேனி | தேனி |
| 9 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10 | விருதுநகர் | விருதுநகர் |
| 11 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13 | கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14 | சேலம் | சேலம் |
| 15 | தருமபுரி | தருமபுரி |
| 16 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17 | ஈரோடு | பெருந்துறை, ஈரோடு–1, ஈரோடு–2, காங்கேயம்–1, காங்கேயம்–2, வெள்ளக்கோவில், சித்தோடு |



## கோரிக்கை 5 வேளாண்மைத் துறை

## 2007–2008 செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2007–2008 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 1,087,96,32 | 81,28,94 | .. | 1,169,25,26 |
| மொத்த தொகை–சாட்டியது | 3 | .. | .. | 3 |

நிகர செலவு (ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்கு தலைப்பு | | 2005–06 கணக்குகள் | 2006–07 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2006–07 திருத்த மதிப்பீடு | 2007–08 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 1,19,98 | 1,98,92 | 1,98,92 | 208,92 |
| 2202 | பொதுக் கல்வி | 30,00 | 60,00 | 30,00 | 30,00 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 525,89,44 | 639,42,40 | 637,33,57 | 744,42,75 |
| 2402 | மண் வள நீர் வளப் பாதுகாப்பு | 68,84,01 | 103,42,73 | 128,92,77 | 125,41,63 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் | 71,11,38 | 81,32,07 | 90,43,38 | 110,64,95 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 34,03,53 | 42,06,34 | 43,62,46 | 55,64,28 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 5,30,18 | 7,25,00 | 13,00,00 | 725,00 |
| 2551 | மலைப் பகுதிகள் | 4,76,38 | 4,18,59 | 437,35 | 426,48 |
| 2702 | சிறு பாசனம் | 6,20,07 | 803,81 | 683,64 | 939,22 |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | 15,96,61 | 18,50,21 | 18,68,09 | 21,06,28 |
| 3451 | தலைமைச் செயலகம்–பொருளாதாரப் பணிகள் | 3,62,93 | 479,21 | 518,58 | 515,07 |
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 39,31 | 134,54 | 184,28 | 30,09 |
| 4402 | மண் வள நீர் வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 10,33,81 | 24,31,26 | 33,48,79 | 40,07,81 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | .. | 450.01 | 450,01 | 742,20 |
| 4551 | மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 6,53,40 | 964,52 | 934,52 | 904,52 |
| 4705 | பாசனப் பகுதி மேம்பாடு மூலதனச் செலவு | 24,45,76 | 24,44,32 | 24,44,32 | 24,44,32 |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 16,34,25 | .. | 255,20 | .. |

## கோரிக்கை 5 வேளாண்மைத் துறை

## 2007–2008 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 05 01 | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 14,40,07 | .. | .. | 14,40,07 |
| 05 02 | வேளாண்மை இயக்ககம் | அனுமதித்தது | 702,64,83 | 10,60,61 | .. | 713,25,44 |
| 05 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 35,84,69 | 742,20 | .. | 432,68,9 |
| 05 04 | விதைச் சான்று இயக்ககம் | சாட்டியது | 1 | .. | .. | 1 |
| | | அனுமதித்தது | 13,42,87 | .. | .. | 13,42,87 |
| 05 05 | தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 1 | .. | .. | 1 |
| | | அனுமதித்தது | 58,08,84 | 15,02 | .. | 58,23,86 |
| 05 06 | வேளாண் பொறியியல் பணிகள் | சாட்டியது | 1 | .. | .. | 1 |
| | | அனுமதித்தது | 156,13,32 | 63,11,11 | .. | 219,24,43 |
| 05 07 | வேளாண் பொறியியல் துறை | அனுமதித்தது | 23,13 | .. | .. | 23,13 |
| 05 08 | தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் கோயம்புத்தூர் | அனுமதித்தது | 107,18,57 | .. | .. | 107,18,57 |
| | மொத்தம் | சாட்டியது | 3 | .. | 3 | |
| | | அனுமதித்தது | 1,087,96,32 | 81,28,94 | .. | 1,169,25,26 |



## 2007–2008 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| | **தலைமைச் செயலகம்** | |
| 1. | கணினிகள் மற்றும் சதுரவடிவ சிறு அறைகளுடன் வேளாண்மைத் துறையை நவீனப்படுத்துதல் | 18.00 |
| | மொத்தம் | 18.00 |
| | **பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | |
| | **வேளாண்மைத் துறை** | |
| 2. | 5 புதிய விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் வாங்குதல் | 15.00 |
| 3. | விதை சுத்திகரிப்பு பிரிவுகளைப் பழுதுபார்த்து வலுப்படுத்துதல் | 10.00 |
| 4. | விதை சுத்திகரிப்பு பிரிவுகள், வேளாண் விரிவாக்க மையங்கள் ஆகியவற்றிற்கு பை தைக்கும் கருவிகள் வழங்குதல் | 3.00 |
| | மொத்தம் | 28.00 |
| | **தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை** | |
| 5. | தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையாளர் அலுவலகத்தில் பணி அமைவிடம் ஏற்படுத்தி, அடிப்படை உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல் | 15.00 |
| | மொத்தம் | 15.00 |
| | **விதைச் சான்றுத் துறை** | |
| 6. | விதைச் சான்றளிப்பு இயக்ககத்திற்கு டிஜிட்டல் ஒளிநகலி மற்றும் டிஜிட்டல் கையடக்க ஒளிப்பதிவுக் கருவி வாங்குதல் | 2.00 |
| | மொத்தம் | 2.00 |

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| | **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்** | |
| 7. | துல்லிய பண்ணைத் திட்டம் பற்றிய தொழில்நுட்ப செயல்முறை விளக்கம் அளித்தல் | 308.00 |
| 8. | வேளாண்மை வளர்ச்சி மற்றும் உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, விரிவாக்கப் பணியாளர்களின் தொழில்நுட்ப மேலாண்மை–தகவல் தொடர்பு உத்திகள் பற்றிய திறனை மேம்படுத்துதல். | 122.50 |
| 9. | தென்னைப் பயிரில் இலைத்தின்னும் புழு மற்றும் காண்டா மிருக வண்டுகளைக் கட்டுப்படுத்தும் முறையை விளக்குதல் | 6.00 |
| 10. | சர்க்கரைப் பயிர்களிலிருந்து எரிசாராய உற்பத்தி செயவதற்கான முன்னோடி சாதனம் உருவாக்குதல் | 12.60 |
| | மொத்தம் | 449.10 |
| | மொத்தம்–திட்டத்தில் சேராதது | 18.00 |
| | மொத்தம்–திட்டப் பணிகள் | 494.10 |
| | பெரு மொத்தம் | 512.10 |

ஊஊஊஊ

V21, 31P07 P07.24.2
227653

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.